
வாசமலர்த் தேனே



ஜெய்சக்தி



வாசமலர்த்தேனே...!

1



'நல்ல வேளையாக முன்பே வந்து விட்டோம்' என்று எண்ணிக் கொண்டாள் சந்தியா.

கடிகாரத்தைப் பார்த்தாள். இரயில் புறப்படுவதற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது.

இருபத்தியிரண்டு வயதில் இருந்தாள். அது தங்கமா இல்லையா என்று கண்டுபிடிக்க முடியாத அளவில் வேலைப்பாடுள்ள ஒரு முத்து மாலை கழுத்தில் அணிந்

திருந்தாள். அது அவளுக்கு மிகவும் அழகாகப் பொருந்தியது. கையில் இரண்டு மெல்லிய தங்க வளையல்கள். இருபது கையில் வாங்கிப் பார்த்த மாத்திரத்தில் ஒரு எளிமை தெரிந்தது. ஆனால் பெரிய இடத்துப் பெண் போன்ற ஒரு கம்பீரமும் தெரிந்தது.

இப்போதெல்லாம் பெண்கள் அது கிராமமாக இருந்தாலும் சரி. நகரமாக இருந்தாலும் சரி. நன்றாக உடை உடுத்துக் கொள்கிறார்கள். கம்பீரமாக நடமாடுகிறார்கள். அது கல்வி தந்த தன்னம்பிக்கையோ என்னவோ! அது போலத்தான் சந்தியாவும் அந்த அழகான சந்தன நிற சுடிதாரில் அழகாக இருந்தாள்.

இரயிலில் அமர்ந்திருந்தாள். இரண்டாம் வகுப்புப் பெட்டி. ஆனால் முன்பதிவு செய்யப்பட்ட கம்பார்ட்மென்ட் சென்னைக்குப் புறப்படுற ட்ரெயின். ஈரோட்டிற்கு ஒரு வேலையாக வந்திருந்தாள். இரயில் புறப்படுவதற்கு அரைமணி நேரம் இருக்கிறதே என்று கையில் இருந்த புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டாள்.

சந்தியாவுக்குப் பிடித்த கதாசிரியரின் புத்தகம். அவர் கதை இலக்கியம், ஆன்மீகம் என்று எல்லாவற்றையும் கலந்து கட்டி எழுதுகிற விதம் அவளுக்குப் பிடிக்கும். தன்னை மறந்து புத்தகத்தில் ஆழ்ந்து விட்டாள்.

எப்போதுமே இரயிலில் அமர்ந்தால் கொஞ்சம் வேடிக்கை பார்ப்பாள். பரபரப்பான விற்பனையாளர்கள், ஒல்லியும், குண்டுமாக விதவிதமான மனிதர்கள். மூட்டைகளும், முடிச்சுகளும் பரபரப்பும், என்று விதவிதமாய் அவர்கள் இரயில்களில் பயணிக்கிற விதம், காதில் விழுகிற பேச்சுக்கள் என்று எல்லாவற்றையும் ரசிப்பாள்.

இன்றைக்கு ஆனால் அந்தப் புத்தகம் அவளை உள்ளே இழுத்துக் கொண்டது.

இருபது நிமிடம் ஓடி விட்டது!

அவள் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்தாள். எதிர்ப்புற இருக்கையில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி வந்து அமர்ந்தாள். ஜன்னலோரமாக ஒரு இளைஞன் அநேகமாக இருபதுகளின் பிற்பகுதியில் இருந்தான். அவன் நின்று பேசினான்.

''ஏம்மா...! நோக்கு இந்தப் பாடு! என் ஆம்படையா உன்னைச் சரியா வேலை வாங்கறா. கவனிக்கறதும் இல்லை. பேசாம சந்தர்கிட்டேயே இருக்கலாமில்லே! அவன்தான் வச்சுக்கறேங்கறானே... நாலு மாசத்துக்கொரு தரம் வீடு மாறிகிட்டு..'' என்றான்.

''பாவம்டா! சௌந்தரு! நான் அங்கயே இருந்தா.. அவன் எல்லா வேலைகளையும் செய்யறான். என்னை ஒரு வேலை செய்ய விடறதில்லை. வேலைக்கும் போயிட்டு அவன் படற பாட்டைப் பாத்தா.. நேக்கு பாவமாயிருக்கு..! அது மட்டுமில்லடா.. அவன் வேலைக்குன்னு கிளம்பிப் போயிட்டா.. நேக்கு ரொம்ப போரடிக்குது. இங்கயானா குழந்தைகளுக்கு வேணுங்கறது செய்யக் கொண்டு பொழுது நல்லாப் போயிடுது...''

''என்னமோ.. போ..! அப்பா ஏதாவது சொத்துன்னு வச்சுட்டுப் போயிருந்தா நோக்கும் மரியாதையிருக்கும். இப்படி எங்காத்துக்கும், கல்யாணராமன் ஆத்துக்கும், சந்தராத்துக்குன்னும் நீ அல்லாடறே...'' என்றான் சௌந்தரராஜன்.

''என்ன செய்றது? எங்க காலத்துல அவர் ஒத்தரோட சம்பளத்தை வச்சுண்டு உங்களையெல்லாம் நன்னாப்

படிக்க வக்கறதுக்குள்ளேயே உன்னப்புடி, என்னைப் புடின்னு ஆயிடுத்து. ஏதோ அவன் கையை, இவன் காலைன்னு புடிச்சி உத்தியோகம் வாங்கிக் கொடுத்தாரே அதுவே பெரிசுன்னு நினைச்சுக்கோங்க..'' என்றார் கனகேஸ்வரி.

''ஆமா! என்கிட்டே வக்கணையாப் பேசு! மங்களா அந்தப் பாடு படுத்தறாளே... அவகிட்டே பேச வேண்டியதுதானே..''

''பேசிட்டுப் போறா.. விடுப்பா! நான் ஏதோ நாலு மாசத்துக்கு வந்து இருந்துட்டுப் போறேன். நான் ஏதோ சொல்லப் போக உங்கம்மா.. இப்படிப் பேசினாளேன்னு உன்னைப் புடிச்சுண்டுடுவள'' என்றார் கனகேஸ்வரி.

''அதுவும் சரிதான்! அம்மா... லோயர் பர்த்துதான்.. நன்னா சௌகரியமாப் படுத்துக்கோ...! புளிசாதம் கொடுத்திருக்காளே.. சாப்பிட்டுக்கோ..!'' என்றான் மகன்.

டிரெயின் புறப்படுவதற்கான ஆயத்தங்கள் தெரிந்தன. இந்த இடைவெளிக்குள்ளாக கனகேஸ்வரி சந்தியாவைப் பார்த்து சிநேகமாக ஒரு முறை புன்னகைத்துவிட்டார்.

சந்தியாவும் குறை வைக்காமல் ஒரு புன்னகையை பதிலாகக் கொடுத்தாள்.

''இதோ... இந்தப் பொண் இருக்காளே! இந்தப் பொண்ணுகிட்டே கொஞ்ச நேரம் பேசிட்டிருந்தேன்னா... பொழுது ஓடிடாதோ...!'' என்றார்.

சௌந்தரராஜன் சங்கோஜத்துடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''நீங்களும் சென்னையா?'' என்றான்.

''ம்...!'' என்றாள்.

''கொஞ்சம் பாத்துக்கோங்க...! ஸ்டேஷன்ல என் பிரதர் வந்துடுவான்'' என்றான்.

''ம்...!'' என்றாள்.

புகைவண்டி புறப்பட்டது. எல்லாரும் அவரவர் இருக்கையில் அமர்ந்து விட்டார்கள். எட்டு மணிக்கே புறப்படுகிற ட்ரெயின் என்பதால் உடனே படுக்க வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

''என் பேரு கனகேஸ்வரி'' என்று புன்னகைத்தார் எதிர் ஜன்னல் அம்மாள்.

''நான் சந்தியா..!'' என்றாள் சந்தியா.

''வந்துட்டுப் போறானே.. என்னோட மூத்த மகன். ரெண்டாவது மகன் சேலத்துல இருக்கான். கல்யாண ராமன். அவனுக்கு ரெண்டு குழந்தைகள். மூணாமத்தவன் சென்னையில இருக்கான். நாங்க சென்னையில தான் இருந்தோம். இவங்க ரெண்டு பேரும் டிரான்ஸ்ஃபர்ல வந்துட்டா..! ஒவ்வொருத்தர் ஆத்துலயும் நாலுமாசம், நாலு மாசம் மாறி மாறி இருப்பேன்...'' என்றார்.

சந்தியா கூர்ந்து கேட்டாள். ஆனால் தன்னைப் பற்றி ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை.

மனதில் மட்டும் தோன்றியது. ஐம்பதைத் தாண்டிய இந்த வயதுக்குப் பின் காடாறு மாசம், நாடாறு மாசம் என்பது போல் ஒவ்வொரு நாலு மாதத்துக்கும் வீடுகள் மாறுகிற அந்தம்மாவைப் பார்க்கிற போது அவள் மனம் உருகியது.

''பசங்களுக்கெல்லாம் வச்சுக்கணும்தான் ஆசை! ஆனா மாட்டுப் பொண்கள் - ஒத்துவரணுமே! என்னமோ சொத்து பத்துன்னு நாலு காசு சேத்து வச்சுக்கணும்னு எங்களுக்குத் தோணலை. இவங்களையெல்லாம் நல்லபடியா வளர்த்தாப் போதும்னு நினைச்சோம்'' என்றார்.

ஒரு பெருமூச்சு விட்டார்.

சந்தியாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

''உங்க மூணாவது மகன்னு சொன்னேளே! அவருக்குக் கல்யாணமாயித்தா'' என்று கேட்டாள்.

''இல்லை...! பெண் பாக்கலாம்ன்னு கேட்டா கோபிச்சுக்கறான். மூத்தது ரெண்டுகிட்டயும் நீ படறது போதாதா? இன்னொருத்திகிட்டயும் சிக்கணுமாங்கறான். என் மேல பாசம். அதுக்காகக் கல்யாணம் பண்ணாம இருக்க முடியுமா? பாக்கணும்'' என்றார்.

டிக்கெட் பரிசோதகர் வரவும் பேச்சுத் தடைப்பட்டது எல்லாரும் அவரவர் மூட்டைகளைப் பிரித்து சாப்பிட்டார்கள்.

சந்தியாவும் தான் கொண்டு வந்திருந்த உணவைச் சாப்பிட்டாள். பத்து மணி ஆகி இருந்தது.

எல்லாரும் அவரவர் படுக்கையில் சாய்ந்தார்கள்.

நடுத்தரக் குடும்பங்களின் இன்றைய மாற்றங்கள் குறித்துப் பெருத்த சிந்தனைகள் அவளுக்குத் தோன்றியது.

அன்றைக்கு அவளுக்கு தெரியவில்லை. கனகேஸ்வரியும் அவள் மகன் பாலச்சந்திரனும் தன் வாழ்க்கையில்

வந்து போகிற பயணிகளாக மட்டும் இருக்கப் போவதில்லை என்று.

சிந்தனையுடன் படுத்திருந்தாள்.

* * *

ஐந்து மணிக்கெல்லாம் சலசலப்பு ஆரம்பித்து விட்டது!

பயணிகள் எழுந்து பல்துலக்கவும் ஆடை திருத்தவும், டீ, காபி என்று வாங்கிப் பருகவும் ஆரம்பித்து விட்டார்கள்.

சந்தியாவும் விழித்தாள். எப்படியும் இனிமேலும் படுத்திருக்க முடியாது. எழுந்தாள்.

இரவிலும் கூட இரண்டு முறை விழித்தாள். விழித்த போதெல்லாம் எதிர் சீட்டில் பெண்மணியைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்துக் கொண்டாள்.

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். அதனால் அவளும் நிம்மதியாகப் படுத்துக் கொண்டாள். ஏனோ அம்மாவின் நினைவும், பெரியம்மாவின் நினைவும் வந்தது.

ஐம்பது வயது போயிருக்கும். இந்த வயதில் மூன்று வீடுகளுக்கும் மாறி மாறி அலைகிற கொடுமை அவள் நெஞ்சில் அடைத்தது. முகம் தெரியாத மருமகள்களின் மேல் கோபம் வந்தது.

இப்போதைய தலைமுறையினர் பெரியவர்களை வைத்துக் கொள்ள வேண்டும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றாலே அச்சப்படுகிறார்கள் போல இருக்கிறது. அவரவர் குடும்பம் அவரவருடையது என்று நினைக்

கிறார்கள் போல் தோணுகிறது என்று எண்ணிக் கொண்டாள்.

இந்தியக் கலாச்சாரத்தின் சிறப்பே இந்தக் குடும்பங்கள்தானே என்று எண்ணிக் கொண்டாள்.

''அம்மா... காபி சாப்பிடறேளா?'' என்று வாங்கிக் கொடுத்தாள்.

அவளும் பருகினாள். நல்ல வேளையாக இன்றைக்கு ட்ரெயின் பேசின்பிரிட்ஜ் அங்கே, இங்கே என்று எல்லாம் வண்டி நிற்கவில்லை.

பொலபொலவென்று விடிகிற நேரத்துக்கும் வண்டி சென்டிரல் ஸ்டேஷனுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

''கூட்டமெல்லாம் இறங்கட்டும்மா!'' என்றாள்.

''சரிம்மா..!'' என்று அவரும் அமர்ந்து கொண்டார்.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

''பாலச்சந்தரைக் காணோமே..'' என்று முணுமுணுத்தார்.

''டோண்ட் வொரிம்மா! உங்க மகன் வரவரைக்கும் நான் கூட இருந்து அனுப்பிக் குடுத்துட்டுப் போறேன்'' என்றாள்.

''ரொம்பத் தாங்க்ஸ்ம்மா!'' என்றார் மகிழ்ச்சியாக.

எல்லாரும் இறங்கிய பின்பு இறங்கினார்கள். சுற்றுமுற்றும் பார்த்தார்கள்.

இரயில் நிலையம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. கூட்டம் கூட்டமாக மக்கள் 'வெக்கு வெக்கென்று' போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருந்தார்கள்.

''அம்மா நடுப்புறமா போயிரலாம். முட்டித் தள்ளிடு வாங்க'' என்றாள்.

அவளது சின்ன ஏர்பேக்தான். கனகேஸ்வரி அம்மாவின் சின்னப் பெட்டியையும் அவளே எடுத்துக் கொண்டாள்.

ஓரளவு கூட்டம் வடிந்துவிட்டது. இன்னமும் அவரது மகனைக் காணோம்.

''சரி.. வாங்கம்மா...! கொஞ்ச தூரம்.. நடக்கலாம்'' என்று அவள் பெட்டியைக் தூக்குகிற நேரத்தில் கொஞ்ச தொலைவில் சற்றே வேக நடையுடன் அவர்கள் நின்ற இடம் நோக்கி ஒரு இளைஞன் வருவது தெரிந்தது.

கன்கேஸ்வரி அம்மாவின் சாயல் தெரிந்தது. சந்தியாவுக்கு அவன்தான் பாலச்சந்திரன் என்பது புரிய திரும்பிப் பார்த்தாள். அதற்குள் கனகேஸ்வரி,

''வந்துட்டாம்மா...!'' என்றார்.

''அம்மா!'' என்று பாசமாகத்தான் வந்தான் மகன்.

''சாரிம்மா! நேத்து அவசரமா ஒரு கணக்கை முடிக்க வேண்டியிருந்தது. லேட்டாத்தான் தூங்கினேன். கண்ண சந்துட்டேன்'' என்றான் விளக்கம் போல.

''பரவால்லைடா..!'' என்றார் அம்மா.

சந்தியாவிடமிருந்து பெட்டியை வாங்கிக் கொண்டான்.

''இந்தப் பொண்ணுதான்.. நன்னாப் பாத்துண்டா...'' என்றார்.

''தாங்க்ஸ்... மேடம்...!'' என்றான்.

''இவன் இங்கயே இருன்னுதான் சொல்றான்.. நேக்குத்தான்..'' என்றவர் மென்று விழுங்கினார்.

''அம்மா!'' என்றான் பாலச்சந்தர்.

'வீட்டு விஷயமெல்லாம் எதுக்கு அன்னியர்கிட்டே சொல்றே...!' என்ற எச்சரிக்கை உணர்வு அதிலே தெரிந்தது.

''இல்லை...! நான் ஒண்ணும் சொல்லலே! சௌந்தர் பேசிண்டிருந்தானோன்னா... அதைக் கேட்டுண்டிருந்தா..'' என்றார் விளக்கம் போல.

''பை தி பை... நான் சந்தியா..!'' என்றாள் சந்தியா.

''ஐ ம் பாலச்சந்திரன்'' என்றான்.

''உங்க பிரதர் நேத்து ரிக்வெஸ்ட் பண்ணிண்டார். அதான் வெயிட் பண்ணினேன்'' என்றாள்.

''தாங்க்ஸ் மேடம்..'' என்றான் சொல்லிக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தவன் கண்கள் ஏனோ அந்த முகத்திலேயே ஓரிரு நிமிடங்கள் தங்கின.

அவள் பார்வையும் மோதியது. இரண்டு பேருமே ஓரிரண்டு நிமிடங்கள் பார்வையை விலக்கிக் கொள்ள முடியாதவர்களாய் தவித்தார்கள் போல இருந்தது. பிறகு வலுக்கட்டாயமாக விலக்கிக் கொண்டார்கள்.

''சரி... வரட்டுமா?'' என்பது போல் அவன் கத்தரித்துக் கொண்டு கிளம்புவதை அவள் ஒருவிதச் சுவாரசியச் சிரிப்புடன் பார்த்தாள்.

தாயும், மகனும் இயல்பான வேகத்தில் நடந்து செல்ல அவள் வேண்டுமென்றே பின் தங்கினாள்.

''நல்ல பொண்ணுடா... பாலு! நன்னா கவனிச்சுண்டா..!'' என்றார் கனகேஸ்வரி.

''ம்..!'' என்றான் பாலச்சந்திரன்.

''என்னத்துக்கு இந்தப் பொழப்பு! என்னமோ அவாத்துல தாங்கறா மாதிரி.. பேசாம இங்கயே இரேன்னா.. கேட்க மாட்டேங்கறே...'' என்றான் புலம்பல் போல.

'ஆமடா...! நான் உட்கார்ந்துட்டேன்னா.. சுமை பூராமையும் உன் தலையே தாங்கட்டும்னு. விட்டுட்டு அக்கடான்னு உட்காந்துக்குவாங்கடா..' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டார் கனகேஸ்வரி. ஆனால் சொல்லவில்லை.

''நேக்கும் அவாளையெல்லாம் பாக்கணும். அவாளோட இருக்கணும்னு தோணாதா..! அது கிடக்கிறது விடு.. என்னமோ நான் மட்டும்தான் நீ சொன்ன பேச்சுக் கேட்கறது. இல்லேங்கறயே! நீயும்தான் நான் சொன்ன பேச்சைக் கேட்க மாட்டேங்கறே'' என்றார்.

''ஏன்? நீ என்னத்தை அப்படிச் சொல்லி நான் கேட்காம விட்டுட்டேன்...'' என்றான் பாலச்சந்திரன்.

''இன்னைக்கு ரயில்ல வந்தாளே.. ஒரு பொண்ணு அவளை மாதிரி ஒரு நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோன்னா.. கேட்க மாட்டேங்கறே...!''

''நன்னா... ஆச்சு... போ! யாராவது ஒரு பொண்ணு கொஞ்சம் சுமாரா உன் கண்ல பட்றப் படாதே! உடனே இந்தப் பாட்டு பாட ஆரம்பிச்சர்றே...!'' என்றான்.

''ம்...! நான் சொன்னா... மட்டும் கேட்கப் போற யாக்கும்'' என்று அம்மா முணுமுணுக்கையில் அவன் அந்தப் பெண் பின்னால் வருகிறதே என்று அவள் காதில் விழுந்து விடப்போகுது என்ற எண்ணத்துடன் திரும்பிப் பார்த்தான்.

கொஞ்சம் தள்ளித்தான் வந்து கொண்டிருந்தாள்.

வெளியே வந்த பிறகும் தன்னையும் அறியாமல் அவன் அந்த திசையைப் பார்த்தான்.

'பாவம்..! வசதியில்லாத பெண் போலத்தான் இருக்கிறது' என்று எண்ணிக் கொண்டான்.

டாக்ஸி கிளம்பியவுடன் 'வரேண்டியம்மா!' என்று கன கேல்வரி தலையை அசைத்தார்.

அவளும் புன்னகையுடன் தலையாட்டினாள். அவர்கள் டாக்ஸி கிளம்பியவுடன் அவள் ஏதோ ஒரு திசையைப் பார்த்துத் தலையை அசைக்க கார் ஒன்று வந்து நின்றது.

கப்பல் போல என்பார்களே அது மாதிரி ஒரு கார்!

டிரைவர் இறங்கி பவ்யமாகக் காரைத் திறந்துவிட்டான்.

2



''மணி... மணி..!'' என்று கத்திக் கொண்டிருந்தான் இராமநாதன்.

''வர்றேன்...'' என்று அடுப்படியிலிருந்து அவசர அவசரமாகக் கையை புடவைத் தலைப்பில் துடைத்தபடி வந்தாள் மணிமாலா.

''என்னத்துக்கு இப்படிக் கத்தறேள்! அதுவும் என்னமோ நாய்க்குட்டியைக் கூப்பிடறாப்போலே... மணி.. மணின்னுட்டு..!'' என்றாள் புகார்போல.

இராமநாதன் சுற்று முற்றும் பார்த்தான். ''என் செல்ல நாய்க்குட்டி...டி.. நீ..'' என்று கன்னம் கிள்ளினான்.

மணிமாலாவின் முகம் சிவந்தது.

''சித்த சும்மா... இருங்கோ..'' என்றாள்.

''இல்லடி! சந்தியா ஊர்ல இருந்து வர்ற நாளாச்சோ..! வரக் காணலியே!'' என்றான் இராமநாதன்.

''அதெல்லாம் வந்துடுவா! அதெல்லாம் பெரியப்பா காரை அனுப்பியிருப்பார்'' என்றாள்.

''ஆமா.. அனுப்பினார். இதோ வந்துட்டேன் பாருங்கோ..'' என்று வந்து நின்றாள் சந்தியா.

''வந்துட்டியா.. சந்தியா!'' என்று உற்சாகமானான் இராமநாதன்.

பெட்டி படுக்கைகள் எல்லாம் காரில் வைத்து விட்டு ஒரு பெட்டியுடன் இறங்கியிருந்தாள்.

''மன்னி! பெரியப்பா.. காத்துண்டிருப்பார்! உங்களுக்காக ஈரோட்டிலேயிருந்து சேலை வாங்கிட்டு வந்தேன் அண்ணா.. நோக்கு லுங்கி.. அம்மா.. எங்கே?'' என்றாள்.

''அம்மா.. கோயிலுக்குப் போயிருக்கா!'' என்றாள் மணிமாலா.

''சரி... இதை அம்மாவுக்கு கொடுத்துடுங்கோ..! நூல் புடவை! நான் கிளம்பறேன்... சாயங்காலம் வர்றேன்'' என்றாள்.

ஓடினாள்.

அவளை வழியனுப்பி விட்டு உள்ளே வந்த மணி மாலா சொன்னாள்.

''என்னதிது? கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போகப்படாதா? ஒரு காபி கொடுத்திருப்பேன்'' என்றாள்.

''நீ வேற.. அங்க பெரியப்பாவும், பெரியம்மாவும் இவளுக்காக பரிதவிச்சுண்டு இருப்பா...! அவளுக்குப் போடறதா நினைச்சுண்டு நேக்கு ஒரு செகண்ட் டோஸ் காபி குடேன்.''

''ஏன்... உங்களுக்குக் போடறதா நினைச்சுண்டு... போடறேனே!''

''வேண்டாம்..!''

''ஏன்னா.. இப்படிச் சொல்றேள்!''

''இல்லடி... மணி நீ அவளுக்குப் போடறச்சே.. ரொம்ப அக்கறையாப் போடறியா... கொஞ்சம் டேஸ்ட் கூடுதலா இருக்கு தெரியுமா?''

மணிமாலா முறைத்தாள்.

''இந்தக் கிருத்திரியம்தானே வேண்டாங்கறது'' என்றாள்.

''இல்லடி! நாத்தி கொழுந்திக்கு அக்கறையாக் காபி போட்டுக் குடுக்கறவா.. லோகத்தில் உண்டோ! உன்னைப் பாராட்டினேண்டி..!'' என்றான்.

''நன்னா.. சமாளிச்சேள்..!'' என்றாள் மணிமாலா. அதற்குள்ளாக அம்மா வந்தாள்.

ஹாலில் இருந்தே ''வந்துட்டியாடி'' என்றபடி.

பெட்டிகளைப் பார்த்துவிட்டு,

''கோயில்லே இருந்து பறந்து கட்டிட்டு ஓடி வரேன்... அதுக்குள்ளே.. வந்துட்டுப் போயிட்டாளா?'' என்றார் யசோதா.

''சாயங்காலமா... வரேன்னா...!'' என்றான் இராம நாதன் சமாதானம் போல.

''அம்மா... காபி போடறேன். உங்களுக்கும் ஒரு டோஸ் போடவா..!'' என்றாள்.

''ம்...!'' என்றார் யசோதா.

அதே நேரம்!

அந்தப் பெரிய வீட்டின் முன்பாகக் கார் போய் நின்றது. காம்பவுண்டிற்கும் வீட்டிற்குமே நிறைய இடைவெளி இருந்தது. பெரிய தோட்டம் சுற்றிலும் இருந்தது. நகரின் மையமாக இடத்தில் அவ்வளவு இடம் இருந்தது.

காரில் இருந்து இறங்கிய சந்தியாவை வரவேற்க காத்துக் கொண்டிருந்தார்கள் இரண்டு பெரியவர்கள். கோமதியம்மாவும், சந்திரமௌலியும்.

''வாடி.. பொண்ணே!'' என்றார் கோமதி ஆர்வமாக.

''வர்றேன்.. பெரியம்மா!'' என்று உற்சாகமாக இறங்கினாள்.

பெட்டி படுக்கைகளையெல்லாம் உள்ளே கொண்டு போனார்கள்.

''போடி... பொண்ணே! நீ..! என்னதான் பிரண்டு கல்யாணம்னாலும் இப்படியா ஒரு வாரம் டேரா போடுவடி..! நேக்குப் பொழுதே போகலை.. போ..'' என்றார் கோமதி.

சந்தியா பெரியப்பாவைப் பார்க்க இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

''என்னம்மா... செய்றது? ஸ்கூல்ல இருந்து ஒண்ணாப் படிச்சோம்..!'' என்றாள்.

''பிரயாணம் சௌகரியமா இருந்துச்சோ? துணைக்கு யாரையானும் அழைச்சுட்டு போன்னா.. வேண்டாம்னுட்டே..'' என்றார் கோமதி மறுபடியும்.

''விடு! அதான் சேஃபா வந்துட்டாளோ இல்லையோ! போம்மா.. குழந்தே... குளிச்சுட்டு வா. நிறைய ஆபீஸ் வொர்க் பெண்டிங் இருக்கு.''

''சித்த சும்மா.. இருங்கோ! அவ மத்தியானம்தான் ஆபீசுக்கு.. வரா..! கொஞ்ச நேரமாவதும் என்னோட பேசிண்டிருக்கணும்'' என்றாள் கோமதி.

பெரியப்பாவும், மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சந்தியா சட்டென பெரியம்மாவைக் கட்டிக் கொண்டாள்.

''அம்மா! ஒண்ணு செய்வோம். நான் காலமே ஆபீசுக்குப் போயி அவசரமான பெண்டிங் மேட்டர் எல்லாம் முடிச்சுண்டு லஞ்சுக்கு சீக்கிரமா வந்தர்றேன்!''

பெரியம்மாவின் முகம் வாடுவதைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''கோபிச்சுக்காதீங்கோ... பெரியம்மா! லஞ்சுக்கு வரச்சே.. கொஞ்ச நேரம் கூடவே இருக்கேன். பேசின்டிருப்போம்... சரியா!'' என்றாள்.

பெரியம்மாவின் முகம் மலர்ந்தது.

சந்தியா உண்மையில் இராமநாதனின் தங்கை. அம்மா யசோதா. ஆனால் யசோதாவின் சகோதரியான கோமதிக்கும் அவள் கணவருக்கும் குழந்தைகள் இல்லை. கோமதியின் கணவன் வகையிலும் நிறைய உதவிக்காரர்கள் இருந்தார்கள். இருந்தாலும் கோமதி சந்தியாவை தன் வீட்டில் வைத்துக் கொண்டாள்.

யசோதாவும் கோமதியின் குழந்தை ஏக்கத்தின் காரணமாக விட்டுக் கொடுத்தார்.

யசோதாவும், கோமதியும் திருமணத்தின் போது கிட்டத்தட்ட கீழ் நடுத்தரக் குடும்பத்திற்கே வாழ்க்கைப் பட்டார்கள். ஆனால் யசோதாவின் அதிர்ஷ்டம் சந்திரமௌலியின் வாழ்க்கையில் கை கொடுத்தது போலும்.

இரண்டு மூன்று விதமான ஏஜென்சிகளை எடுத்தார். மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்தார். இப்போது சொந்தமாக ஆபீஸ் போட்டு ஐம்பது பேரை வேலைக்கு வைத்துக் கொண்டு நடத்துகிறாற் போலத் தொழில் வளர்ந்தது.

யசோதாவின் கணவன் ஒரு சின்ன கம்பெனியில் குமாஸ்தாவாக இருந்தார். பூஜை புனஸ்காரங்கள் என்று நியமமான வாழ்க்கை நடத்தினார். பொருளாதாரம் வைத்துக் கொள்ளவில்லை. அதனால் இருப்பதற்கு ஒரு வீடு மட்டும் செய்ய முடிந்தது.

கோமதியின் குடும்பத்தாரிடம் இருந்து எந்த உதவியும் எதிர்பார்க்கமாட்டார். தன் குழந்தையை அவர்கள் வளர்க்க அனுமதித்த போதும் மகளிடம் நேரம் கிடைக்கும் போதெல்லாம் சொல்வார்.

''அம்மா... அடுத்தவா சொத்து மேல ஆசை வச்சு டாதே! சந்திரமௌலி பக்கமும் நிறைய சொந்தம் பந்தம்ன்னு இருக்கு..! யாருக்குக் கொடுப்பாரோ கொடுக்கட்டும். நோக்கு அந்த வீடு தங்குமடம்தான். ஞாபகம் வச்சுக்கோ..'' என்பார். அதனாலோ என்னவோ சந்தியா எப்போதுமே அவர்கள் வசதிகளைப் பெரிதாக நினைத்ததே இல்லை.

எளிமையாகவே இருப்பாள். அதிலும் அப்பா தன் அறுபத்தி ஐந்தாவது வயதில் இயற்கை எய்திய பிறகும் கூட சந்தியா அப்பாவின் வார்த்தைகளை மறக்கவே யில்லை. எளிமையாகவே இருந்தாள்.

''சரிம்மா.. குழந்தே..! நீ போய் ரெடியாகு... போ..'' என்றார்.

பல்துலக்கி விட்டு வந்த சந்தியாவுக்கு சமையற்காரர் காபி கொண்டு வந்து கொடுக்க அவள் அதை தன் அறைக்கு எடுத்துக் கொண்டு போகவும் பார்த்த சந்திர மௌலி தன் மனைவியிடம் சொன்னார்.

''நீ என்ன சொன்னாலும் சரி இன்னும் அவ முழு மையா ஒட்டலையே.. கோமதி'' என்று.

கோமதி புன்னகைத்தார்.

''நம்ம மனசுல ஒட்டிண்டுட்டா! அது மட்டுமில்ல! நம்ம மேலே கொள்ளப் பாசம் வச்சிருக்கா! ஆனா நம்ம பணத்து மோதால் ஒட்டுதல் வச்சுக்கலே...'' என்றார்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத் துக் கொண்டார்கள்.

* * *

''ஏம்மா... நேரத்துக்கு சோறாவது வடிச்சுக் கொட் டினாளா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான் பாலச் சந்தர்.

அம்மா கனகேஸ்வரி நேரடியாகப் பதில் சொல்ல வில்லை.

''என்னடா.. சோறு வடிச்சாளா? துணிமணி தந் தாளான்னு? நேக்குன்னு என்ன தனியாவா வடிச்சுக் கொட்டறா. ஏதோ, எல்லாருக்கும் செய்யறச்சே.. நேக்கும் கிடைக்கும். அவளைக் குத்தம் சொல்லணும்னே நினைகக்காதே..'' என்றார்.

''அம்மா! ரொம்ப கெட்டிக்காரத்தனம் பண்றதா நினைப்பாக்கும். அண்ணா.. எல்லாம் போன் பண்ணிச் சொன்னான். இனிமேக் கொண்டு யாராத்துக்கும் போக வேண்டாம். புரியறதா?'' என்றான் காட்டமாக.

''அது சரிடா! இங்கயானா.. நீ எந்த வேலையும் செய்ய விட மாட்டேங்கறே. நீ சிரமப்படறதை நான் பாத் துண்டே இருக்க முடியுமா? நேக்கு என்ன இப்ப உடம்பு நல்லாத்தானே இருக்கு! ஏதானும் வேலை செய்ய விடேண்டா..!'' என்றார்.

''சரி.. முடிஞ்சதச் செய்! கஷ்டப்படுத்திக்காதே! வேணும்னா... அந்த மாமி வந்து வேலை கேட்டுண்டே இருந்தாளே.. அவளையும் சேத்துக்கோ. ஆனா.. இனிமேக் கொண்டு இந்தக் காடாறு மாசம் நாடாறு மாசம் ஐடியாவ விட்டுடு'' என்றான்.

''ஏண்டா.. நீ வாங்கற சம்பளத்துல வேலைக்காரிக்கு வேற குடுக்க முடியுமா?'' என்றார் அம்மா.

''எல்லாம்.. குடுக்கலாம். இப்போ நேக்கு ஆபீஸ்ல இன்க்ரிமெண்ட் குடுத்திருக்கா தெரியுமோ?''

''அதுசரி.. போ! எல்லாத்தையும் ஆத்து செலவுக்கே செஞ்சுட்டா.. நோக்குன்னு ஏதும் சேமிப்பு வேண்டாமா?'' என்றார்.

''என்னத்துக்கு சேமிப்பு?!''

''என்னடா.. இப்படிக் கேட்கறே! கல்யாணம் பண்றதா... ஐடியாவே இல்லையா?''

''சந்தர்.. அம்மா.. சொல்றதைக் கேளேம்ப்பா.. சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கோ. வர்ற பொண்ணு நல்லவளா இருந்தா... நான் ஏன் அவாத்துக்கெல்லாம்.. போறேன்...'' என்றார்.

மகன் நிமிர்ந்து பார்த்தான்.

''வர்றவ மட்டும்.. உன்ன நல்லா வச்சுப்பான்னு என்ன நிச்சயம். மங்களா மன்னியும் நீரஜா மன்னியும் கவனிச்சது போதாதாக்கும். நேக்கு ஒரு பொண்டாட்டி வந்து அவ உங்களை கவனிக்கணுமாக்கும்...'' என்றான்.

''இங்க.. பாரு! வர்றவ எப்படியிருந்தாலும் நான் அட்ஜஸ்ட் பண்ணிண்டு போயிக்குவேன். நோக்கும் இருபத்தேழு முடியப்போறது. நேக்கு ரொம்ப உறுத்தலா இருக்குடா..'' என்றார்.

அம்மாவின் முகத்தில் தெரிந்த ஆர்வமும், கவலையும் அவனைக் கொஞ்சம் உறுத்தியது போலும்.

''அம்மா...! அநேகமா.. இன்னும் ரெண்டு மூன்று மாசத்துல ப்ரொமோஷன் குடுக்கறேன்னிருக்கா..! அப்புறம் பார்ப்போம்.''

''அப்பப் பொண் பார்க்க ஆரம்பிக்கட்டுமா?''

''சரி.. பாரு! வேண்டாம்னு சொன்னாக் கேட்கவா.. போறே..! ஆனா... ஒரு கண்டிஷன் பொண் ரொம்ப வசதியானவளா இருக்கக்கூடாது. அப்பத்தான் நமக்கு அடங்கி இருப்பா..!''

''என்னத்துக்கடா... அடங்கி இருக்கறது...''

''அடங்கின்னா.. நான் அடக்குமுறைங்கற சென்ஸ்ல சொல்லலே.. நம்ம குடும்பத்துல அட்ஜஸ்ட் பண்ணிண்டு போவாங்கறேன்'' என்றான்.

''ஏண்டா.. எப்படிப் பொண்ணு பாக்கலாம். நேத்திக்கு ரயில்ல பாத்தமே.. அந்தப் பொண்ணு மாதிரிப் பார்ப்போமா?'' என்றார் அம்மா ஆர்வமாக.

பாலச்சந்தருக்கும் கூட அந்தப் பெண்ணின் முகம் இரண்டு நாட்களாகத் தொல்லை தந்து கொண்டுதான் இருந்தது.

''அது சரி.. போ! ரயில் பயணத்துல பார்த்த அந்தப் பொண்ணை எப்படிக் கண்டு பிடிப்பே...?'' என்றான் ஆச்சர்யமாக.

''அதெல்லாம் கண்டு பிடிக்கலாம். எங்கயோ மயிலாப்பூர் பக்கம்தான் இருக்கறதாச் சொன்னா.''

''அப்ப... சரி.. வீடு வீடாப் போய் கதவை தட்டிக் கேப்பமா.. இல்லே பேப்பர்ல விளம்பரம் கொடுக்கலாமா?'' என்றான் கிண்டலாக.

அம்மா சிரித்தார். ''இத பார்றா.. சுந்தர்! பிரபஞ்ச சக்தின்னு ஒண்ணு இருக்கு. பெரியவா எல்லாம் சொல்றா. நோக்கு அந்தப் பொண்தான்னு இருந்ததுன்னு வச்சுக்கோ... யாராலயும் தடுக்க முடியாது எங்கயானும் எப்படியானும் கண்ணுல படுவா..'' என்றார் அம்மா.

''சரிம்மா! நேக்கு நாழியாகுது. நான் புறப்படறேன்'' என்று குளிக்கப் போனான்.

இத்தனை பேச்சுக்கு நடுவிலும் அந்தப் பெண் வேண்டாம் என்று மகன் சொல்லவில்லை என்பதை கவனித்துக் கொண்ட அம்மா தனக்குள் சிரித்துக் கொண்டார்.

குளிக்கப் போன பாலச்சந்தரும் கூட அதையே நினைத்துக் கொண்டான்.

அந்தப் பெண்ணிடம் ஏதோ ஒரு ஈர்க்கும் விஷயம் இருந்தது. இத்தனைக்கும் எளிமையாகத்தான் இருந்தாள். ரொம்ப கம்பீரமும் இல்லை. ரொம்பத் தன்னடக்கமும் இல்லை. இயற்கையாக, எந்த விதமான செயற்கை பாவனைகளும் இல்லாமல் அவள் நடந்து வந்த விதமே அழகாக இருந்தது. காலிபர் என்று சொல்வார்களே அதுபோல அவளிடத்தில் ஒரு அழகு இருந்தது.

யாரும் அவ்வளவு சீக்கிரம் அவளை வேறு விதமான பார்வை பார்த்து விட முடியாது. அப்படி ஒரு தன்மை. அவன் மனம் சொன்னது.

'ஆனாலும் அம்மாவுக்கு ஆசைதான். இதெல்லாம் சினிமாவிலதான் நடக்கும். ஏன் நடக்கக்கூடாது? இங்கே

மயிலாப்பூர் என்றுதான் சொன்னாளாமே...' என்று மனதில் எண்ணம் ஓடியது.

வெளியே வந்து புறப்படுவதற்குள்ளாகவே இரண்டு மூன்று போன் கால்கள் அலுவலகத்தில் இருந்து வந்து விட்டது.

''சந்தர்... அந்த ஃபைல் எங்கேய்யா? இந்த ஃபைல் எங்கேய்யா..'' என்று.

''சார்... பத்து நிமிஷத்துல வந்தர்றேன்'' என்று புறப்பட்டான்.

அலுவலக நேரம் பத்து மணிக்குத்தான் என்றாலும் சில நேரம் முதலாளி சீக்கிரம் வந்து விடுவார். கணக்கு வழக்குகளில் நிலுவை வைக்கவே கூடாது. மிகவும் கண்டிப்பும் எதிர்பார்ப்பும் நிறைந்தவர். ஆனால் அவர் எதிர்பார்ப்புக்கு மேலாகவே பாலச்சந்தரும் வேலை செய்வான். அதனால் அவனை மிகவும் பிடிக்கும்.

தன்னைக் காட்டிலும் படித்தவர்கள் அலுவலகத்தில் இருந்தார்கள். ஆனால் விஷயங்களை தெரிந்து கொள்வதில் அவன் காட்டுகிற ஆர்வம் அவருக்கு மிகவும் பிடித்தமான விஷயம்.

அலுவலகத்துக்கு அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடினான். அங்கே போனவுடனே வேலைகளில் முழுகி விட்டான். இரயிலில் பார்த்த பெண்ணை மறந்தே போனான். ஆனால் காலம் வேறு விதமாகக் கணக்கு வைத்திருந்தது.

3



பாலச்சந்தர் அலுவலகத்தில் இருந்து கிளம்பினான். மணியைப் பார்த்தான். ஆறுமணியாக இருந்தது.

திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது அலுவலகத்தில் வேலை இருந்தால் சில நேரம் ஏழு மணி கூட ஆகிவிடும். ஆனால் அன்றைக்கு என்னவோ சீக்கிரமே வேலை முடிந்துவிட்டது.

''சரி... கோயிலுக்குப் போகலாமே?'' என்ற எண்ணம் தோன்றியது.

உடனே மயிலாப்பூர் கோவில்தான் நினைவுக்கு வந்தது. 'அலுவலகத்துக்குப் போகிற வழிதானே.. கோயிலுக்குப் போய்விட்டே போகலாம்' என்று எண்ணிக் கொண்டான்.

மயிலாப்பூர் கோவில் அவன் தாய்க்கு மிகவும் பிடித்த மான கோவில். 'திருஞானசம்பந்தர் பாடிய தலம்பா' என்பார்.

அந்தக் கோயில் பற்றிய திருஞானசம்பந்தருடைய பாடல்களைப் படிக்கும் போதெல்லாம் அவனுக்கு ஒன்று தோன்றும்.

நம்முடைய முன்னோர்கள் ஒவ்வொரு பௌர்ணமி நாளையும் விசேஷ நாளாக்கி இருக்கிறார்கள். அந்த

நாட்களில் மனவெழுச்சி அதிகமாக இருக்கும் என்பதை விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. அந்த நாட்களில் வீட்டிற்கு வெளியே மக்கள் ஒன்று கூடி விழாக்கள் எடுப்பது என்பதை ஒரு நல்ல சமுதாய விஷயமாகச் செய்திருக்கிறார்கள். சித்ரா பௌர்ணமி, வைகாசிவிசாகம் என்று மனதுக்குள் பட்டியல் போட்டுப் பார்த்துக் கொண்டான்.

திருஞான சம்பந்தர் என்கிற சைவச்செம்மலின் வாழ்வில் நடந்த அந்தக் கதையும் நினைவுக்கு வந்தது. மயிலாப்பூருக்கு... அந்தக் காலத்தில் திருமயிலை என்று பெயராம். திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்காக என்றே ஒரு பெண்ணை ஒருவர் வளர்த்து வந்தாராம்.

அந்தப் பெண்ணுக்குப் பூம்பாவை என்று பெயராம். ஆனால் அந்தப் பெண் துரதிர்ஷ்டவசமாகப் பூக்கள் தொடுத்து கொண்டிருக்கும்போது பாம்பு கடித்து இறந்து போனாளாம். அவளுடைய தந்தையார் அந்தப் பெண்ணை எரித்த சாம்பலைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்.

திருஞானசம்பந்தர் மயிலை என்ற அந்தத் தலத்திற்கு வந்த போது பூம்பாவையின் தந்தை அந்தச் சாம்பலை திருஞானசம்பந்தரிடம் ஒப்படைத்து ''உங்களுக்காகவே வளர்ந்த பெண். இப்படியாகி விட்டது'' என்று சொல்லி வருத்தப்பட்டாராம்.

திருஞானசம்பந்தரும் ஒவ்வொரு பௌர்ணமித் திரு விழாவையும் குறிப்பிட்டு அந்த விழாவைக் ''காணாமல் போதியோ பூம்பாவாய்'' என்று பதிகம் பாடினாராம்.

அந்தப் பெண் சாம்பலிலிருந்து உயிர்த்தெழுந்து வந்த தாக அவரது வரலாறு கூறுகிறது. ஆனால் தானே உயிர் கொடுத்ததனால் ''மகள்முறை'' என்பதனால் திருமணம் செய்யக் கூடாது என்று ஆசிர்வதித்தும் சென்றாராம்.

சிந்தனை ஓடிக் கொண்டிருக்க வண்டியும் ஓடிக் கொண்டேதான் இருந்தது. அம்மா சின்ன வயதில் தன் சகோதரர்களையும், தன்னையும் அமர்த்திச் சொன்ன ஆன்மீகக் கதைகள் எல்லாம் அவ்வப்போது நினைவுக்கு வரும். ஆனால் எங்கே தவறு நிகழ்ந்தது? அம்மாவை முறை வைத்துக் கொண்டு எங்களோடு தங்கு என்று சொல்கிறார்களே இந்த அண்ணன்கள் என்று கோபமும் கூட வந்தது.

ஒவ்வொரு நான்கு மாதத்திற்குள் ஒருமுறை அம்மா ரயிலேறிப் போகும் போதும், ஒவ்வொரு குடும்பத் திற்கும் ஏற்ப பழக்கங்களை மாற்றிக் கொள்ள அம்மா எவ்வளவு கஷ்டப்படுவார்கள்.. பாவம் அம்மா...! இந்த முறை அம்மாவிடம் சொல்லிவிட வேண்டும். இனி மேல் நீ எங்கேயும் போக வேண்டாம்.. என்று அம்மா தான் ஆயிற்றே.. உடனே நீ கல்யாணம் செய்து கொள்... என்கிறார்.

வண்டி கோயிலுக்கு முன்னாலே வந்து நின்றது. எப்போதாவதுதான் கோயிலுக்குப் போவான். ஆனால் போய் விட்டால் அவசர சல்யூட் அடித்துவிட்டு வெளியே வருகிற வழக்கம் கிடையாது. எங்காவது பக்க வாட்டு மண்டபத்தில் அமர்ந்து சற்று நேரம் தியான மனப்பாங்கில் இருந்துவிட்டு வருவான்.

மயிலாப்பூர் கோவிலின் வெளிப் பிரகாரம் சுற்றி விட்டு வந்து உள்ளே போய் பிரார்த்தனை முடித்துக் கொண்டு வெளிப்பிரகாரத்தில் ஒரு பக்கமாக அமர்ந் தான்.

எண்ணத்தில் திடீரென்று அந்தப் பெண்ணின் நினைவு வந்தது. அதுதான் ரயிலில் பார்த்தானே அந்தப் பெண்.

பெரிய அழகென்று சொல்ல முடியாது. ஆனால் ஏதோ ஒன்று அவனைக் கவர்ந்தது... ''என்னைப் பார்'' என்று கண்களை சுண்டியிழுக்கிறவளாக இல்லாமல், அதே சமயம் ''தேமே'' என்று நடமாடுகிற பெண்ணாக வும் இல்லாமல் இயல்பாக இருந்தாள்.

அம்மாவிற்காக அவள் துணைக்கு நின்ற விதம் பிடித்தது. பொறுப்பெடுத்துக் கொண்ட விதம் பிடித்தது. ஆனால் அதற்காகவெல்லாம் ஒரு பெண்ணை கல் யாணம் பண்ணிக் கொள்ள முடியுமா? நல்ல வேடிக்கை யடா சாமி... இது.

கண்டதும் காதல் சமாச்சாரமா என்ன? அதுவும் யார் எவர் என்று தெரியாத பெண்.. என்று எண்ணிக் கொண் டான்.

திரும்பினான். நண்பன் ஒருவன் தன் குடும்பத்தோடு வந்து கொண்டிருந்தான் ரங்கராஜன்.

''ஹாய்.. பாலு'' என்று உற்சாகமாக குரல் கொடுத் தான்.

''டேய்...! ரங்கு..!'' என்று உற்சாகமானான் பாலச் சந்தர். அருகில் வந்த ரங்கராஜன் செல்லமாக முறைத் தான்.

''என்னடா... ரங்கு...! ராஜன்னு அழகாக கூப்பிட லாமில்லே!'' என்று.

''ஓஹோ... உன்னைக் கூப்பிடறதே.. பெரிசு! அதுல ஸ்டைலா வேற கூப்பிடணுமாக்கும்?!'' என்றான். திரும்பி ரங்கராஜன் மனைவியிடம் ''நீங்க தப்பா நினைச்சுக்காதீங்க...'' என்றான்.

ரங்கராஜனின் மனைவி புரிந்து கொண்டாற்போல் 'நடத்துங்க.. நடத்துங்க' என்றாற்போல புன்னகைத் தாள்.

''அப்புறம்பா..! கோயில் பக்கமெல்லாம் வந் துருக்கே..'' என்றான் ரங்கராஜன்.

''சும்மாதான்பா! வழக்கமா ஆபீஸ்ல இருந்து கிளம் பறப்பவே மணி ஏழாயிரும் இன்னைக்கி.. சீக்கிரம் வொர்க் முடிஞ்சுது. அதான்..'' என்றான்.

''என்ன.. வேண்டுதல்? எப்பதான்.. கல்யாண சாப் பாடு போடப்போறே.. எண்ணம் இருக்கா...! பாரு! எனக் கெல்லாம் வாரிசே வந்தாச்சு..'' என்று தன் கையில் வைத்துக் கொண்டிருந்த தன் மகனுக்கு ஒரு முத்தம் கொடுத்து நிமிர்ந்தான்.

அந்தக் காட்சி பார்க்கத் தான் நன்றாகவே இருந்தது.

''செய்யலாம்பா! குடும்ப வாழ்க்கை எங்கே போகுது?''

''எங்கயும் போகாது. ஆனா.. அதுக்கு ஒரு நேரம் இருக்கில்லே! முப்பத்தைஞ்சல கல்யாணம் பண்ணி ஐம்பது, ஐம்பத்தஞ்சு வயசுல பதிமூணு, பதினைந்து வயசுல ரெண்டு மூன்று இருக்கும்.''

''என்னடா.. வம்பாப் போச்சு.. வீட்ல அம்மாதான் கல்யாணம் கல்யாணம்ங்கறாங்கன்னு.. கோயிலுக்கு

வந்தா..'' என்று இழுக்க ரங்கராஜன் செல்லமாக அடி போட்டான்.

''நாங்கள்ளாம் சொல்லாம... வேறு யாரு... சொல்வா?'' என்றான்.

அவன் அமர்ந்திருந்த இடத்திலேயே அவர்களும் அமர்ந்தார்கள். தேங்காயை உடைத்துத் துண்டு போட் டுக் கொடுத்தான் ரங்கராஜன்.

தேங்காயை ரங்கராஜன் எடுத்து உடைக்கிற அந்த இடைவெளியில் அவன் பார்வை சற்று தூரத்தில் அவளைப் பார்த்தது.

அதே பெண்!

பாலச்சந்தரின் உள்மனத்தில் சுவாரசியம் கிளம்பியது.

* * *

''ஏண்டி... பொண்ணே... ஏன்.. இப்படி டிரஸ் பண்றே. நன்னா.. டிரஸ்.. பண்ணிக்கப்படாதா?'' என்றார் கோமதி.

''பெரியம்மா.. என்னை நன்னாப் பாருங்கோ! இந்த டிரஸுக்கு என்ன குறைச்சல்..!'' என்று அரை வட்ட மடித்துக் காட்டினாள் சந்தியா.

உண்மைதான் விலை குறைவான புடவையாக இருந்தாலும் அவள் கட்டுகிற நேர்த்தியிலும், பரா மரிக்கிற விதத்திலும் உயர்வாகவே தெரியும்.

''என்னமோடி.. நீ இன்னும் எங்காத்து மனுஷின்னு ஒட்டவே மாட்டேங்கறியோன்னு நேக்கு இருக்குடி..'' என்றார் கோமதி.

''பெரியம்மா.. தப்பா... நினைச்சுக்காதீங்கோ. பணம் காசுன்னு ஆனவுடனே யசோதா குடும்பமே ஆளாளுக்கு மொட்டையடிக்கறான்னு உங்க பக்கத்து மனுஷா பேசிடப்பிடாது.. பாத்தேளா?'' என்றாள் சந்தியா.

''யாரு பேசுவா? பேசறவாளுக்கென்ன? அன்னைக்கு நாங்க நடுத்தெருவில நின்னப்ப யாரு உதவி செஞ்சா...! யசோதாதானே கழுத்துச் செயினையும் கையிலிருந்த வளையலையும் கழற்றிக் கொடுத்தா. அத்திம்பேரா இருக்கக் கொண்டு குடு யசோதான்னு தாராளமாச் சொன்னா... அதைக்கொண்டு ஆரம்பிச்ச பிஸினஸ் தானே இன்னைக்கு இப்படி வளர்ந்து நிக்கறது?''

''அதுக்குத்தான் எங்களுக்கு வேணும்கறதை செய்ய றேளே.. என்னைப் பாசமா வளர்த்திருக்கேள்.. படிக்க வச்சிருக்கேள்..'' என்றாள் சந்தியா.

''இத பார்றி..! அது வேற.. இது வேற.. எங்களுக்கு குழந்தையில்லேங்கற குறை தீர்க்க வந்த தெய்வம்டி... நீ...''

''அதுசரி..! பெரியப்பா மனுஷா இதுக்கெல்லாம் ஒத்துக்கணுமே!''

''பாரு.. சந்தியா! நான் ஒண்ணும் உன்னத்தான் வளர்த்தாகணும்னு மல்லுக் கட்டலே! அவா.. பக்கத் துலயும் ரெண்டு குழந்தைகள் வேண்ணாலும் வளர்க்கத் தயாராகத்தான் இருந்தேன். பெரியப்பாதான் வேண்டாம் னுட்டார்..''என்றார் கோமதி.

''பெரியம்மா.. ப்ளீஸ் இப்ப எதுக்கு இந்த அனாலிசிஸ் எல்லாம் எப்பவுமே நான் உங்காத்துப் பொண்ணு தான்.''

''நீ ரொம்ப பெரியவளாயிட்டேடி! இந்த ஹால் முழுக்க ஓடிப் படுத்தின குழந்தையாடி.. ரொம்ப உலகம் தெரிஞ் சுண்டுட்டே! ரொம்பப் பேசறடி..!'' என்றார் கோமதி லேசான மனத்தாங்கலுடன்.

சந்தியா உடனே பெரியம்மாவைக் கட்டிக் கொண் டாள்.

''இப்பவும் நான் உங்களோட அதே செல்ல நாய்க் குட்டிதான்.''

''ஆனா.. அப்பக் கூட நீ உயர்ந்த ஜாதி நாய்க்குட்டி... புரிஞ்சுக்க'' என்றார் கோமதி.

''ஓ.கே... அக்செப்பட்டட்.. போதுமா..?'' என்று கலகலவென்று சிரித்தபடி கிளம்பினாள் சந்தியா.

கோமதி போர்ட்டிக்கோ வரை வந்து வழியனுப்பினார்.

சந்தியா தன்னுடைய ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். கோமதிக்கு ஒரு வகையில் பெருமையாக இருந்தது.

சகோதரி யசோதாவைப் போலவே மகளும் யாரிடமும் எதையும் எதிர்பார்க்கிற குணம் இல்லாதவளாக இருந் தாள். அவளுக்குத் தேவையான அன்பு இந்த வீட்டில் கிடைத்தது. அதுவே போதும் என்ற மனப்பான்மையி லேயே வளர்ந்தாள்.

பெரியப்பா வகையில் கொஞ்சம் நெருங்கிய உறவி னர்கள் இருந்தார்கள். சந்தியா எப்போதும் நினைத்துக் கொள்வாள். 'நல்ல வேளையாக பெரியப்பாவின் வகையில் சகோதரிகள் என்று யாருமில்லை. சகோதரிகள் என்று இருந்து அவர்கள் வீடுகளில் தன் வயதுக்

கேற்றாற்போல இளைஞனும் இருந்து வீட்டிருந்தால்.. தன் பாடு திண்டாட்டம்தான். சொத்துக்காகத் தன்னை வளைத்துப் போடும் முயற்சிகள் ஆரம்பித்திருக்கும். ஆரம்பித்திருக்கும்..! தன்னைப் படாத பாடு படுத்தி யிருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள். பெரியப் பாவும், பெரியம்மாவும் அவளுக்கென்று நகைகள் பரிசளித்திருந்தாலும் அவை மொத்தமாகவே பத்திருபது பவுன்களுக்கு மேல் போகாத அளவில் பார்த்துக் கொண் டாள்.

கழுத்தில் ஏதாவது மெல்லிய நெக்லஸ். கைகளில் சன்னமான வளையல்கள் என்றுதான் அணிவாள்.

கோமதியம்மாவிடம் அடிக்கடி சொல்வாள்.

''பெரியம்மா..! நீங்கள்கறதுனால நான் இப்படி யெல்லாம் நடந்துக்கலை. ஒருவேளை எங்க அம்மா, அப்பா.. இதே அளவுக்கு வசதியா இருந்தாலும் நான் இப்படித்தான் நடப்பேன். இதெல்லாம் பெரியப்பா வோட சுய சம்பாத்தியம். இதையெல்லாம் அனுபவிப்ப தற்கான முதல் உரிமை உங்களுக்கெல்லாம் நீங்க பாத்துக் குடுக்கறதே போதும். ஆயுசுக்கும் உங்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அவசியம்'' என்பாள்.

''அது சரிடி..! ஏதோ கொஞ்சம் சொத்தாவது உன் பேர்ல எழுதி வைக்கலாம்கறார் பெரியப்பா..!'' என்றார் கோமதி.

''பெரியம்மா..! அது இன்னும் ஆபத்து..! எனக்கே நாளைக்கு மாப்பிள்ளையா வர்றவன் அந்த சொத்துக் களுக்காக வர்றவனா இருந்தா என் வாழ்க்கை என்ன

ஆகும்? என்னை எனக்காகவே பார்த்து என்னைக் கல்யாணம் செய்யறவராத்தான் எனக்கு வேணும்..!'' என்பாள்.

''அப்ப.. மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கலாமா?'' என்று ஆர்வமானாள் பெரியம்மா.

''உடனே இப்படி ஆரம்பிச்சுருவியே! நான் சொல் றப்ப மாப்பிள்ளை பார்க்கலாம்.''

''இத பார்றி.. பொண்ணே..! நீ சொல்றப்ப.. என்ன.. நீ சொல்ற மாப்பிள்ளையையே கூடப் பண்ணி வைக்க நாங்க தயார். ஜாதி உட்பிரிவு ஏன் மதம் எல்லாம் கூட இப்ப மலையேறிப் போச்சு..'' என்றார் கோமதியம்மாள்.

''ஐய்யோ! என்ன பெரியம்மா.. இப்படிப் போடெல் லாம் போடறே..! எனக்கே திறந்த வாய் மூடாத அளவுக்கு ஆச்சரியம் பொங்கிப் பொங்கி வர்றது..'' என்று சிரித்தாள் சந்தியா.

''சில பேர் மாதிரி இல்லடி.. நீ! நீ வாயைத் திறந்துண்டே நடமாடினாலும் நன்னாத்தான் இருக்கும் கேட்டியோ..!'' என்றார் பெரியம்மா..!

அடிக்கடி தன்னிடம் பெரியம்மா இப்படியெல்லாம் பேசுவதை எண்ணி மனசுக்குள் சிரித்தபடியே மயி லாப்பூர் கோயிலுக்குள் நுழைந்தாள். அவளுக்கு அடிக் கடி தோன்றும் நம் தமிழ் நாட்டில் உள்ள அளவுக்குக் கோயில்கள் உலகத்தில் எங்கேயும் இருக்காது. அந்தக் காலகட்டங்களில் விஞ்ஞானமே வளராத அந்தக் காலங்களில் எப்படி இவ்வளவு பெரிய கோயில்களை நிர்மாணித்தார்கள்! எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய சாதனைகள். இவை பற்றிய முழுமையான

விவரங்கள் உலகத்துக்குக் கொண்டு செல்லப்பட வில்லை என்று தோன்றியது. இன்னொரு விதமாகச் சொன்னால் உலகத்தின் பார்வை வெளிச்சம் இன்னமும் தமிழ்நாட்டுக் கோயில்கள் மீது படவில்லை என்று தோன்றியது. இந்த மயிலாப்பூர் கோவிலையே எடுத்துக் கொண்டால் நம்ம ஊர்க் கோயிலாக இருந்தாலும் கூட இந்தக் கோபுரங்களை முழுமையாக நின்று பார்த்திருக்கிறோமோ.. என்று எண்ணிக் கொண்டே உள்ளே நுழைந்தவளுக்கு வலது புறமாகப் பார்வை திரும்பியது.

அங்கே!

அந்த இளைஞன்.. பாலச்சந்தர்.. அமர்ந்திருந்தான். அவளுக்கும் கூட இரயில் நிலையத்தில் அவனைப் பார்த்த நாளிலே இருந்து அவனுடைய முகம் மனக் கண்ணில் தோன்றிக் கொண்டேயிருந்தது.

இன்றைக்கு அம்மாவுக்காக வருகிறார். நாளை ஒரு வேளை 'ஏம்மா.. அண்ணாவாத்துலயே இன்னும் ரெண்டு மாசம் இருந்துட்டு வந்திருக்கப்படாதோ..' என்பானோ..!

உண்மையான அக்கறை செலுத்த ஆளில்லாத முதுமை எத்தனை கொடுமையானது. தானும் பிரிந்து சென்றுவிட்டால் பெரியம்மாவும், பெரியப்பாவும் தனிமையில் தவிப்பார்களோ! பெரியப்பாவாது வேலைகளில் ஆழ்ந்து நேரத்தைப் போக்கிவிடுவார்.

பெரியம்மா..! முடிந்தவரை கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டும்.

எண்ணம் என்னவோ இப்படிப் போய்க் கொண்டிருந்தாலும் கால்கள் அவனை நோக்கி இழுத்துச் சென்றன.

அந்த இளைஞனை நோக்கித்தான்..! அவளே எதிர்பாராத ஆச்சரியம் அது..!

4



தேங்காயை உடைப்பதற்காகத் தூக்கிய கை ஒரு வினாடி நின்று பிறகு இறங்கியது.

பார்வை அவள் தன்னை நோக்கித்தான் வருகிறாள் என்று புரிந்து கொண்டாற்போல அவள் மேல் நிலை குத்தி நின்றது.

இயல்பான நடை கையிலே தேங்காய் பழக்கூடை. அந்தப் பெண்ணிடம் ஏதோ ஒரு கம்பீரம் இருக்கிறது. அவன் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை படர்ந்தது.

எதிரே இருந்த ரங்கராஜன் அவன் பார்வை போன இடம் பார்த்துத் தானும் தன் பார்வையைத் திருப்பினான்.

ஒரு பெண் வருவதைப் பார்த்து சுவாரசியமானான். கண்ணாலேயே கேள்வி எழுப்பினான்.

'பொறு பார்ப்போம்!' என்பது போல பாலச்சந்தரும் கண்ணசைத்தான்.

சந்தியா அவனருகில் வந்தான். ''ஹல்லோ.. சார்!'' என்றாள்.

''ஹல்லோ..!'' என்று தேங்காயை ரங்கராஜனிடம் நீட்டி விட்டுச் சிரித்தான் பாலச்சந்தர். திரும்பி ரங்க ராஜனிடம் சொன்னான்.

''மேடம்தான் அம்மா இந்தத் தடவை ஊர்ல இருந்து வர்றப்ப.. நல்லாப் பாத்துகிட்டாங்களாம்'' என்றான்.

''ஓஹோ..!'' என்றான் ரங்கராஜன்.

''மேடம்! ஐ ஆம் ரங்கராஜன். திஸ் இஸ் மை வைஃப்'' என்றான்.

ரங்கராஜனின் மனைவியும் புன்னகைத்தாள்.

''நீங்க... கோயிலுக்குள்ளே போயிட்டு வந்தாச்சா?'' என்றாள் சந்தியா.

''ம்..'' என்றான் பாலச்சந்தர்.

''வாங்களேன்.. இன்னொரு ரவுண்ட் போயிட்டு வர் லாம்..'' என்றாள்.

'இதென்ன பிளேகிரவுண்டா.. இன்னொரு ரவுண்ட் போக..' என்று அவன் நினைப்பதற்குள்ளாக ரங்கராஜன் குறுக்கிட்டான்.

''போயிட்டு வாயேண்டா! மேடம் தனியாப் போறதுக்கு கஷ்டப் படறாங்க.. போயேண்டா'' என்று தள்ளிவிட்டான்.

''சரிடா.. நாங்க கிளம்பறோம்'' என்று கிளம்பினான் வரதராஜன்.

அந்த இடைவெளிக்குள்ளாகவே அவன் கை தேங் காத் துண்டுகளை பாலச்சந்தரிடம் ஒன்று எனவும் சந்தியாவிடம் ஒன்று எனவும் கிடைத்தது. அவர்களும் வாங்கி வாயில் போட்டுக் கொண்டார்கள்.

வேறு வழியில்லாமல் போகிறவனைப் போல பாலச் சந்தர் சந்தியாவுடன் போக.

''ஆஹா..! மாட்டிவிட்டாச்சா! உங்களுக்கு இன் னைக்கு நல்லாவது தூக்கம் வருமே..'' என்று ரங்க ராஜனின் மனைவி கேலி செய்ய அவன் சிரித்தான்.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்..!'' என்றான்.

''தப்பிச்சீங்க..!'' என்றாள் அவள்.

''ஏன்..?!'' என்று ரங்கராஜன் கேட்க ''யாம் பெற்ற துன்பம்ன்னு மட்டும் சொல்லியிருந்தீங்க மூன்று நாளைக்கு வெறும் கஞ்சிதான்'' என்று அவள் சிரிக்க,

''தெரியுமில்ல! அதான் நாங்க சிந்திக்கிறதில்லே..!'' என்றான் ரங்கராஜன்.

அதே நேரம்.

''சாரி சார்! அனாவசியமா உங்களுக்குத் தொந்தரவு குடுத்துட்டேனா..!'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் சந்தியா.

''இல்லல்லே..! ஒண்ணும் பிராப்ளம் இல்லே!'' என் றான் பாலச்சந்தர். தொடர்ந்து சொல்லலாமா கூடாதா என்று யோசிக்காமலே,

''எங்க அம்மா இந்த ரெண்டு மூணு நாளா ஒரே தொணதொணப்புத்தான். உங்களை ரொம்பப் பிடிச் சுருந்தது. அந்தப் பொண்ணைப் பாரு.. அது மாதிரி ஒரு பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கடான் னுட்டு...'' என்று சிரித்தான்.

அவள் தன் முகம் சிவப்பதைக் கஷ்டப்பட்டு மறைத் துக் கொண்டாள்.

''கல்யாணம் நல்ல விஷயம்தானே?'' என்றாள்.

''நல்ல விஷயம்தான்! ஆனா.. எங்க ரெண்டு மன்னி களும் எங்க அம்மாவை அலைய விடறதைப் பார்த்தா.. எனக்குக் கல்யாணம் பண்ணிக்கற ஆசையே வரமாட் டேங்கறது..'' என்றான் வருத்தத்துடன்.

அவள் என்ன செய்வது எனத் தெரியாமல் மௌன மாக அவனோடு நடந்தாள்.

''அம்மாவும் என்னோடவே இருந்துருன்னு சொன் னாக் கேட்க மாட்டேங்கறா..'' என்றான்.

''அதுக்காக.. நீங்க கல்யாணமே பண்ணிக்காம இருக்க முடியுமா? எங்கம்மாவை ஆயுசுக்கும் பாத்துக்கறவளாத் தான் வேணும்ங்கற மாதிரி கண்டிஷன் போட்டு ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறது?'' என்றாள் சந்தியா.

''அப்படியெல்லாம் இந்தக் காலத்துல கண்டிஷன் போட முடியுமா? அப்படியே பண்ணினாலும் வந்ததுக் கப்புறம் அம்மாவுக்குத் தொந்தரவு குடுத்தா என்ன பண்றது?'' என்றான்.

''அதனால கல்யாணமே பண்ணிக்காம இருந்துடப் போறேளா?''

''அப்படித்தான் யோசிக்கறேன்.''

''அப்படியெல்லாம் யோசிக்காதேள். அப்புறம் ஒரு பொறுப்பான மனிதனைக் கல்யாணம் பண்ணிக்கிற பாக்கியம் கிடைக்க வேண்டிய பெண் ஏமாந்துடப் போறாள்'' என்றாள்.

அவள் தனக்குள்ளே பேசுவது போலத் தொடர்ந் தாள்.

''அப்படியே பண்ணினாலும் நமக்குக் குறைவாத்தான் பார்த்துப் பண்ணனும்'' என்றான்.

சட்டென்று சந்தியாவுக்கு அது உறைத்தது. இது என்ன? இரண்டாவது முறையாகப் பார்க்கிற இதுவரை பழகியிராத ஒரு ஆணிடம் தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி ரெகமண்ட் செய்து கொண்டிருக் கிறோம். அவரும் என்னவோ தனக்கு இப்படிப்பட்ட பெண்தான் வேண்டும் என்று தன்னிடம் விளக்கிக் கொண்டிருக்கிறார் என்று தோன்றியது.

ஒரு வேளை நான் கல்யாணம் செய்யப் போகிற பெண்ணுக்கு இன்னன்ன மாதிரித் தகுதிகள் இருக்க வேண்டும். அது உன்னிடம் இருந்தால் முயற்சி செய்யலாம் என்று சொல்லாமல் சொல்கிறானோ என்று தோன்றியது.

அவனும் திடீரென்று அதை உணர்ந்தான் போலத் தோன்றியது.

''கல்யாணம் கிடக்கட்டும் மேடம். உங்களைப் பற்றிச் சொல்லுங்க..'' என்றான் பாலச்சந்தர்.

''என்னப்பற்றி சொல்ல என்ன இருக்கு? சாதாரணக் குடும்பத்துப் பொண்ணு..! எங்க பெரியப்பா வீட்ல உதவியா இருக்கேன்..'' என்றாள் சந்தியா.

கோவில் கருவறைப் பகுதிக்குப் போனவுடன் ஆண் பெண் பகுதிகளுக்குப் போனார்கள். ஆனால் மீண்டும் இணைந்து கொண்டார்கள். பேசிக் கொண்டிருந்த கொஞ்ச நேரத்திற்குள்ளாக அவனுக்கு தன் கம்பெனி யில் எவ்வளவு நல்ல பெயர் என்பதை அவன் சொல்லி முடித்து விட்டான். அவளும் பெரியப்பாவுக்குத் தான்

இல்லாவிட்டால் எதுவும் ஓடாது என்பதையும் சொல்லி முடித்திருந்தாள்.

இலகுவாக நட்பு தங்களுக்குள்ளே விரிந்தது இரு வருக்குமே ஆச்சரியமாக இருந்தது போலும். வெளியே இருந்த மண்டபத்தில் சற்று நேரம் அமர்ந்தார்கள். பிடித்தது பிடிக்காதது பற்றியெல்லாம் பகிர்ந்து கொண்டார்கள்.

விடைபெற்றுக் கொண்டபோது இனிமையான தொரு நட்புணர்வு பூத்திருந்ததை இருவருமே உணர்ந் தார்கள்.

''வரட்டுமா... சந்தியா மேடம்!'' என்று இரண்டு மூன்று முறை தலையசைத்து விட்டு அவன் பைக்கை ஓட்டத் துவங்கினான். அவளும் நின்று தலையசைத்து விட்டுத் தன் ஸ்கூட்டியை எடுத்தாள்.

மிகப் பிடித்த இனிப்பை உண்டபின் வெகு நேரம் அதன் சுவை நாக்கில் இருக்கிறாற் போன்ற உணர் வுடனேதான் இருவரும் பிரிந்தார்கள்.

* * *

''டீ.. மணிமாலா! இன்னைக்கு மழை பேயாதாம். கண்டிப்பா.. நீ வடாம் போடலாம்டி'' என்று சிரித்துக் கொண்டிருந்தான் இராமநாதன்.

''சாதம் மீந்தாத்தான் வடாம் போடறதுக்கு..!'' என்று தன் பங்குக்கு தானும் புன்னகைத்தாள் மணிபாலா.

''அம்மா..! என்னமோ நேத்தைக்கு நம்ம சந்தியா வருவாள்ன்னு பாத்தேன். வரக் காணோம்'' என்றான் இராமநாதன்.

''ஆமடா! நானும் அக்காவுக்கு போன் போட்டுக் கேட்டேன்டா.. என்னமோ கோயிலுக்குப் போறேன்னு போனாளாம்'' என்றாள் யசோதா.

''அம்மா..! நேத்திக்கு அந்த கோபால் இல்லே அவன் நம்ம சந்தியாவை கோயில்ல பாத்தானாம். அதைச் சொல்லிட்டு ஒரு மாதிரியாச் சிரிச்சான். என்னடா.. விஷயம்னேன்.. இல்லே.. யாரோ ஒரு இளவட்டத் தோட சுவாரசியமாப் பேசிண்டு போயிட்டிருந்தாளாம். போடா! அவ பெரிய கம்பெனியையே நிர்வகிக்கறவ. அப்படியெல்லாம் ஆண் பிள்ளைகளைக் கண்டாலே ஒதுங்கிப் போகிற ரகம் இல்லேன்னேன்..'' என்றான் இராமநாதன்.

''அம்மா..!'' என்று ஓடிவந்தாள் மீரா இராமநாதனின் குழந்தை.

''என்னடா.. ராசாத்தி..!'' என்றான் இராமநாதன்.

''எங்க மிஸ் நிறைய ஹோம்வொர்க் குடுத்திருக்கா..'' என்றாள்.

''செஞ்சுடலாம்டா.. கண்ணா!'' என்றான் இராம நாதன்.

''இதபாருங்கோ..! நீங்களே கணக்கைப் போட்டுக் குடுத்துட்டா அவ எப்பக் கத்துக்கறது? அவளே போடட் டும். போடறதுக்கு மட்டும் சொல்லிக் கொடுங்கோ..'' என்றாள் மணிமாலா.

''பெரியவா.. சொன்னா.. ஒத்துக்க வேண்டியதுதான்'' என்றான் இராமநாதன். பேசிக் கொண்டே திரும்பியவன் அம்மாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். யசோதா வின் முகத்தில் சிந்தனை தெரிந்தது.

''என்னம்மா..?'' என்றான் வாஞ்சையாக.

''இல்லடா! சந்தியாவுக்குக் கல்யாணம் செஞ்சுட லாம்டா..'' என்றார் யசோதா.

''நான் தான் ஒரு வருஷமாச் சொல்லிண்டிருக் கேன்..'' என்றான் இராமநாதன்.

''அவதான்.. கண்டிஷன் மேல கண்டிஷன் போட றாளே!'' என்றார் யசோதா.

இராமநாதன் சற்று நேர மௌனத்திற்குப் பிறகு சொன் னான்.

''அம்மா.. அவ சொல்றதுதான்.. சரி..! நன்னா.. யோசிச்சுத்தான் சொல்றா..! பெரியப்பா வசதிக்காக வர்ற மாப்பிள்ளைகள் பணத்துலதான் குறியாயிருப்பா! நம்ம வசதிக்கேத்த மாப்பிள்ளையா வேணும்கறா..'' என் றான்.

அம்மாவும், மணிமாலாவும் மௌனமாகக் கேட்டுக் கொண்டார்கள். ''அவ சொல்றதுலயும் நியாயம் இருக்கு. நாளைக்கே பெரியப்பாவுக்கு மனசு மாறி அவா பக்கத்து மனுஷாளுக்கு சொத்தை எழுதி வச்சுட்டா..'' என்றான் இராமநாதன்.

யசோதா ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார். ''அவா.. அப்படியெல்லாம் செய்ய மாட்டா! அப்படியே செஞ்சாலும் நாம அதைப் பத்திக் கவலைப்படத் தேவை யில்லே..'' என்றார்.

அதே நேரத்தில் வாசலில் தயங்கி நின்ற அந்தப் பெண்மணியைப் பார்த்தார்கள். கையில் ஒரு சின்னத் துணிப்பையுடன் தயங்கி நின்றார்.

''வாங்கோ..! யார் வேணும்!'' என்று வரவேற்றார் யசோதா.

''சந்தியா.. வீடு.. இதானே..!'' என்றார் அந்தம்மா.

''ஆமா.. வாங்கோ..! உள்ளே வாங்கோ!'' என்று மணி மாலாவும் வரவேற்க உள்ளே வந்தார்.

அவர்கள் காட்டிய இருக்கையில் தயக்கத்துடன் அமர்ந்தார்.

''நான் கனகேஸ்வரி..! போன வாரத்துல கோயமுத் தூர்ல இருந்து டிரெயின்ல வரச்சே.. சந்தியாவும் வந்தா..'' என்றார்.

''ஓ..! நீங்கதானா.. அது! சந்தியா உங்களைப் பத்திச் சொன்னா..'' என்றார் யசோதா.

''என்ன சாப்பிடறேள்.. காபி..!'' என மணிமாலா உபசரித்தாள்.

''இருக்கட்டும்.. பரவால்லே..!'' என்று அவர் தயங்க மணிமாலா காதில் வாங்காதவள் போல அடுக்களைக் குள் போனாள்.

''நல்ல.. பொண்ணு சந்தியா..'' என்றார் கனகேஸ்வரி.

இராமநாதனும் யசோதாவும் ஒருவரையொருவர் பெருமையுடன் பார்த்துக் கொண்டார்கள்.

கனகேஸ்வரி தன் குடும்பத்தைப் பற்றிச் சொன்னார். அவர்களும் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டார்கள். அதற்குள்ளாக மணிமாலா காபி கொண்டு வந்து கொடுத்தாள். பருகிய கனகேஸ்வரிக்கு ''காபி அமிர்தமா இருக்கு..!'' என்று மெச்சிக் கொண்டார்.

மணிமாலா கொஞ்சம் வெட்கத்துடன் மாமியாரைப் பார்த்தாள்.

''நான் போடற காபியே நன்னாருக்குங்கறேள். அம்மா.. போட்டா இன்னும் நன்னா இருக்கும்..'' என்றாள்.

மாமியார், மருமகளுக்கிடையே சுமுகமான உறவு பூத்திருப்பதை??? அந்த இன்பமே கனகேஸ்வரிக்கு மிகவும் பிடித்தது. மறுபடியும் கனகேஸ்வரி விஷயத்துக்கே வந்தார்.

''பரவால்லே! உங்களுக்கு நல்ல மகன், மருமகள், பொண்ணு வாச்சிருக்கா..'' என்றார்.

''ஆமா.. எல்லாம் அவரோட ட்ரெயினிங்'' என்றார் யசோதா.

மறைந்த கணவரின் நினைவில் ஒரு கணம் மௌனம் சாதித்தார்.

''நான் ஒரு முக்கியமான விஷயம் பேசலாம்னு வந்தேன்'' என்று கனகேஸ்வரி தயங்கினார்.

''பரவால்லே.. சொல்லுங்கோ!'' என்றார் யசோதா.

''ஒண்ணுமில்லே..! சந்தியாவைப் போன வாரம் ட்ரெய்ன்ல பாத்தப்பவே நேக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது. நேக்கு மூணாவது பையன் பாலச்சந்தர் அவன் கூட நேத்துக் கோயில்ல சந்தியாவைப் பாத்தானாம். பேசிண்டிருந்தாளாம். அவனுக்கும் அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு. அதான்.. ஜாதகம் கொண்டு வந்தேன்..'' என்றார்.

இராமநாதனும், யசோதாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். யசோதா பட்டென்று சொன்னார்.

''இராமநாதா.. வாங்கிக்கோடா..! நல்ல விஷயம்!'' என்று.

இராமநாதனும் வாங்கிக் கொண்டான்.

5



''பெரியப்பா ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்கோங்கோ'' என்று மிகவும் ஆதங்கத்தோடு சொல்லிக் கொண்டிருந்தாள் சந்தியா.

''நான் சொல்றதை நீ அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்கம்மா..'' என்று அவரும் அதே ஆதங்கம் நிறைந்த குரலில் சொன்னார்.

சந்தியா எப்படி அவருக்குச் சொல்வது? அவர் மனம் புண்படாமல் சொல்வது என்ற தவிப்பிலே இருந்தாள். பெரியப்பா முகம் வாடி நிற்பதைக் காண அவள் மனம் வாடியது. ஆனால் வேறு வழியில்லை.

''நம்ம வசதிக்கேற்ப மாப்பிள்ளை பார்த்து ஜாம் ஜாம்னு கல்யாணம் பண்ணலாம்னு நானும் உங்க பெரியம்மாவும் எவ்வளவோ கனவு வச்சுண்டிருந்தோம்..'' என்றார் பெரியப்பா.

''அதான் பெரியப்பா.. பிரச்சினையே! நீங்க தாம் தூம் செய்தேள்ன்னு வச்சுக்கோங்கோ.. உங்க பக்கத்து மனுஷா வேற மாதிரி பேச ஆரம்பிச்சுடுவா.''

''எவன் என்னத்தைப் பேசறது? எல்லாம் என் சுயசம்பாத்தியம்மா..!'' என்றார் சந்திரமௌலி.

அந்தப் பாயிண்ட்டுக்கு அவர் போனவுடனே அவளுக்கு மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியவில்லை. வேறு விதமாகச் சொன்னாள்.

''பெரியப்பா! நன்னா.. யோசிச்சுப் பாருங்கோ? வசதியோட வர்ற மாப்பிள்ளை எனக்கும் வசதியிருக்கணும்தானே எதிர்பார்ப்பா..! அப்படியில்லாம என்னை எனக்காகப் பண்ணிக்கற மாப்பிள்ளைதான் பெரியப்பா.. நேக்கு வேணும்..'' என்றாள்.

சந்திரமௌலி சமாதானமடைந்தவராக அவளைப் பார்த்தார்.

அவள் மேலும் தொடர்ந்தாள்.

''எவ்வளவு பெரிய வீடானா.. என்ன பெரியப்பா..! நாம இருக்கப் போறது என்னமோ ஒரு ரூம்ல! தேவைக்கு அளவா வசதிகள் இருந்தாப் போதாதா? அதுவும் இல்லாம..'' என்று நிறுத்தியவள்,

பெரியப்பாவின் முகம் பார்த்துச் சொல்ல முடியாதவள் போல மேலேயும் பக்க வாட்டுச் சுவர்களிலும் தரையிலும் மாற்றி மாற்றிப் பார்வையைச் செலுத்தினாள்.

பெரியப்பா புரிந்து கொண்டார். தன்னை மறந்து கடகடவெனச் சிரித்தார்.

''அது சரிம்மா..! புரிஞ்சுது..!'' என்றார் சிரிப்பினூடே.

சந்தியாவின் முகம் மேலும் சிவந்தது.

''இந்தப் பாயிண்டுக்கப்புறம் வேற எதைப் பேச முடியும்.. சொல்லு..!'' என்றார்.

ஒரு வழியாகப் பெரியப்பாவைச் சமாளித்து முடித்தாள் சந்தியா.

திருமணத்திற்கு முதல் நாள் ரிசப்ஷனில் நின்று கொண்டிருக்கும்போது இத்தனை எண்ணங்களும் மனதில் ஓடி மறைந்தன.

பக்கத்தில் நிற்கிற பாலச்சந்தரைப் பார்த்தாள். ஏதோ நம்ப முடியாத அதிசயத்தைக் கண்டவள் போல நின்று கொண்டிருந்தாள்.

திருமணத்தில் பெரியப்பா கொஞ்சம் அடக்கியே வாசித்தார். நடுத்தரக் குடும்பங்களில் நடப்பதைப் போலவே ஓரளவு செய்தார்.

''ரொம்பவும் செலவு செய்யாதீங்க.. பெரியப்பா.. அப்புறம்.. எல்லா உறவுக்காரங்க கண்ணையும் உறுத்தும்'' என்று திரும்பத் திரும்ப கெஞ்சுகிறாற் போல சொல்லியிருந்தாள் சந்தியா.

கல்யாணராமனுக்கும், சௌந்தரராஜனுக்கும் அம்மாவும் தம்பியும் தாங்களாகவே பெண்ணை முடிவு செய்து விட்டதில் கொஞ்சம் வருத்தம்தான். கொஞ்சம் கூட மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் என்ற பந்தா காட்ட முடியாமல் போய் விட்டதே என்ற கவலைதான். ஆனால் இன்னொரு வகையில் மகிழ்ச்சி. அலைச்சல் நிச்சமாகி விட்டதே என்று எண்ணிக் கொண்டார்கள்.

மங்களாவுக்கும் கிரிஜாவுக்கும் வேறு விதமான குறு குறுப்பு. ''இது லவ் மேரேஜா? அரேன்ஜ்ட் மேரேஜா? லவ் மேரேஜ்ன்னாக்கா எத்தனை காலமாக இவர்களுக்கு பழக்கம். ஆனால் கல்யாண் என்னவென்றால் ரயிலில் அம்மாவுக்குப் பார்த்துப் பழக்கமான பெண் என்று சொல்கிறார்கள். நடக்கட்டும். என்னவோ நடக்கட்டும். வசதியில்லாத பெண் மாதிரியும் தெரிகிறது. ஆனால்

பெரியப்பா வீட்டில் வளர்ந்தாள் என்கிறார்கள் பெரி யப்பா வீட்டில் வளர்ந்தாளா இல்லை வளர்ப்பு மகளா? என்றும் தெரியவில்லை.

சௌந்தரராஜனின் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம்தான். அது அப்பா இருக்கிற காலத்திலேயே நடைபெற்றது. ஆனால் கல்யாணராமனின் திருமணம் காதல் திருமணம். நீரஜா வடக்கத்திப் பெண்.

அவனது பழக்க வழக்கங்கள் வேறு. மங்களா ஒரு விதமாக மாமியாரை வாதிப்பாள் என்றார் அவள் வேறு மாதிரி.

மங்களா மாமியார் தன்னிடம் தங்கியிருந்த சமயங் களில் வேண்டுமட்டும் ஊர் சுற்றுவாள். காலை நேரங் களில் கணவன் இருப்பான் என்பதால் அடக்கி வாசிப் பாள். ஆனால் மாலை நேரங்களில் எங்கேயாவது கிளம்பி விடுவாள். அதிலும் குழந்தைகள் பள்ளியில் இருந்து வருவதற்கு முன்பாகவே கிளம்பி விடுவாள். சரியாகக் குழந்தைகள் வரும் நேரம் போன் வரும். குளிர்ச்சியாகப் பேசுவாள்.

''அம்மா..! நான் இங்கே கொஞ்சம் ஹெல்ட் அப். சுரேஷும், ரம்யாவும் வந்தாக்கா ஹார்லிக்ஸும் பாலும் கலக்கித் தந்துடறேளா? அப்படியே முடிஞ்சா.. ஏதானும் டிபன் பண்ணிக் குடுத்துடுங்கோ..'' என்பாள்.

ஐம்பத்தைந்து வயதுக்கு மேலே காலில் வலி என்று அல்லாடிக் கொண்டிருந்த மாமியாரை வேலை வாங்கு கிறோமே என்று நினைக்க மாட்டாள். ''சரி.. டிபன்தானே! செய்து கொடுத்துவிட்டால் போகிறது'' என்று செய் வார்.

சுரேஷுக்கும், ரம்யாவுக்கும் அவர் செய்கிற டிபன் வேறு பிடிக்கும்.

''பாட்டி..! நீங்களே தினமும் செய்து கொடுத் துடுங்கோ..'' என்பார்கள்.

கனகேஸ்வரியின் மனமெல்லாம் குளிர்ந்து போகும். ஆனால் மங்களா மகிழ்ச்சியாக மாட்டாள். வந்தவுடன் பாத்திரங்கள் இருந்தால்,

''அம்மா! ஒண்ணு ரெண்டு பாத்திரம்தானே.. கழு விடப்பிடாதா? கொஞ்சம் வேலை கீலைன்னு இருந் தாத்தான் உடம்புக்கு நல்லது..'' என்பாள்.

வார்த்தைகள் சாட்டையடி போல் தாக்கும். ஆனாலும் தாங்கிக் கொள்வார். மகனிடமும் சொல்ல மாட்டார். ஆனால் குழந்தைகள் சொல்லி விடுவார்கள். மகன் எதுவும் மனைவியிடம் கேட்க மாட்டான். ஆனால் அம்மாவிடம் தனியாகச் சொல்வார்.

''அம்மா..! இதுக்குத்தான் பேசாம தம்பியோட இருங்கறது.. ஒண்ணு செய். அங்கே நல்ல வேலைக்காரி வச்சுக்கோ. வேலைக்காரிக்கு சம்பளம் நான் தரேன்'' என்பான்.

சொல்வதோடு சரி.. தரமாட்டான் என்று கனகேஸ் வரிக்குத் தெரியும். அவரும் அதைச் சொல்லாமல்,

''இல்லடா.. கண்ணா! நேக்கு உன்னோடவும் குழந்தை களோடவும் கொஞ்ச நாள் இருக்கணும்னு ஆசையா இருக்கறது...'' என்பார்.

நீரஜா வீட்டில் வேறு மாதிரி.. அவர் முழுக்க முழுக் கத் தன் வீட்டில் வடக்கத்திப் பழக்க வழக்கங் களையேதான் பின்பற்றினாள். குழந்தைகளுக்குக் கூட

''ரோஷ்ணி, முகேஷ்'' என்றுதான் பெயர் வைத்திருந்தாள். ஆனால் கனகேஸ்வரியிடம் வேலை வாங்க மாட்டாள். வேலைக்காரியும் இருந்தாள். ஆனால் கனகேஸ்வரி தனக்கு ஏதாவது தனி விருப்பம் இருந்தால் அவர்தான் சமைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு குடும்பங்களுமே தன்னைக் குடும்பத்தில் ஒருத்தியாகக் கருதவேயில்லை என்று அவருக்கு வருத்தம் என்றால் பாலச்சந்தருக்கு அதில் கோபம். அதனால் தான் தன் மனம் கவர்ந்த சந்தியாவிடம் திருமணத்துக்கு முன்பே அவன் சொன்னான்.

''சந்தியா.. அம்மா ஆயுசுக்கும் நம்மோட இருப்பாங்க! என்னோட தேவைகள் உன்னோட தேவைகள் நிறை வேறலேன்னாக் கூட பரவால்லே! அம்மாவோட தேவைகள் நடக்கறாப் போல நீ பாத்துக்கணும். அதனாலதான் வசதியெல்லாம் பாக்காமக் குடும்ப கஷ்டம் தெரிஞ்ச பொண்ணாப் பாத்து உன்னை செலக்ட் பண்ணியிருக்கேன்'' என்றான்.

''கவலையே படாதீங்கோ! நேக்கு மூணு அம்மான்னு வச்சுக்கறேன்.''

''மூணா?''

''ஆமா..! அம்மா.. பெரியம்மா. அப்புறம் உங்கம்மா.. போதுமா?'' என்றாள்.

அவன் புன்னகைத்தான். அவள் மேலும் தொடர்ந்தாள்.

''இன்னொரு விஷயம் தெரியுமோ. இப்பவே எங்கம்மா, பெரியம்மாவுக்கும் நம்ம அம்மாவண்டை ஒரு

பிரண்ட்ஷிப் டெவலப் ஆயிடுத்து. அவா ஒருத்தருக் கொருத்தர் ஆதரவா இருந்துப்பா...'' என்றாள்.

''அதென்னமோ.. நிஜம்தான்..'' என்றான் பாலச்சந்தர்.

சந்தியா குறும்புப் புன்னகையுடன் தொடர்ந்து கேட்டாள்.

''அதென்னமோ.. இதுக்காகத்தான் செலக்ட் பண்ணினேன்னு சொல்றேளா?'' என்று.

அவன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு அவள் கன்னம் கிள்ளினான். பிறகு சொன்னான்.

''சும்மா பந்தா விடறதுதான். மயிலாப்பூர் கோயில்ல வச்சு அம்மிணி நேரா எனக்காவே வந்தியோன்னா.. அப்பவே ஐயா சரண்டர் ஆயாச்சு'' என்றான்.

கணவர் தன்னிடம் மிக இயல்பாகப் பேசும் போதும், பழகும் போதும் அவள் உள்ளத்தில் ஓரத்தில் ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது. எதிர்காலத்தில் அந்த விஷயத்தால் எப்படியும் ஒரு பிரச்சினை வரும் என்று தோன்றியது.

''அது சரி.. மனதளவில் மிகவும் நல்லவர்.. அப்போது சமாளிக்கலாம்..'' என்ற எண்ணமும் தோன்றியது.

* * *

மங்களாவும், நீரஜாவும் சுற்று முற்றும் பார்த்தபடி நெருங்கினார்கள்.

''தீதி...!'' என்றாள் நீரஜா பாசமாக. மங்களாவும் அதற்கு மேல் பாசம் பொழிந்து புன்னகைத்தாள்.

''என்ன நீரு?'' என்றாள்.

''தீதி.. எல்லாமே ஒரே சஸ்பென்ஸா இருக்கு இல்லே..!'' என்றாள் நீரஜா.

''எதைச் சொல்றே!'' என்றாள் மங்களாவும் சுவாரசிய மாக.

''இல்லே..! பொண்ணு புவர்ன்னு சொல்றாங்கோ? ஆனா பெரியம்மா வீட்ல வளர்ந்துச்சும்னு சொல் றாங்கோ. பெரிம்மா ரிச்சா இருக்காங்கோ..!'' என்றாள்.

மங்களாவும் அதிசயித்தாள். ''ஆமா.. நீரு! நேக்கும் ஒரே ஆச்சரியம்தான். நேத்திக்கு என்ன நடந்தது பாத் தியோ.. அந்தக் காசு மாலை மட்டும் பதினைஞ்சு பவு னாவது இருக்கும். ஆனா.. என்னுது இல்லே.. பெரி யம்மாவோடதுங்கறா.. நேக்கு என்னமோ எல்லாருமா நாடகமாடறான்னு தோண்றது..'' என்றாள் மங்களா.

முதல் நாள்!

சந்தியா மணப் பெண்ணாக அமர்ந்திருந்த அறையை எட்டிப் பார்த்தார்கள் மங்களாவும், நீரஜாவும்.

திருமணம் எல்லாம் முடிந்திருந்தது. பிற்பகல் நேரம் பாலச்சந்திரன் நண்பர்களின் நடுவில் அமர்ந்து அளவ ளாவிக் கொண்டிருந்தான்.

சந்தியா அறையில் ஓய்வெடுக்கிறேன் என்று இருந் தாள். அவள் எவ்வளவு தடுத்தும் கேளாமல் பெரியம்மா அவளுக்கு நிறைய நகைகளைப் பூட்டியிருந்தார். சந்தி யாவுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. அதிலும் குறிப் பாகத் தன் ஓரகத்திகளின் பார்வை தன்னைத் துளைத் தெடுப்பதை அவள் கவனித்திருந்தாள்.

''உள்ளே வர்லாமோ?'' என்று குரல் கொடுத்தாள் நீரஜா.

படுக்கையில் அமர்ந்து லேசான களைப்பில் உயரமாக அடுக்கியிருந்த தலையணைகளின் மேல் சாய்ந்திருந்த

சந்தியா சுறுசுறுப்பாக நிமிர்ந்து வாங்கோக்கா..'' என் றாள்.

மங்களாவும் உடன் வந்தாள். அவள் எழுந்து அவர் களை உபசரித்தாள்.

''நாமெல்லாம்.. ஒரே ஆத்துக்கு வந்த மாட்டுப் பொண்களாயிட்டோம்'' என்றபடி அமர்ந்தாள் மங்களா.

சந்தியா அளவாகப் புன்னகைத்து வைத்தாள்.

''ஒண்ணும் வித்தியாசமா நினைச்சுக்காதே! எங்க ரெண்டு பேரையும் உன்னோட ஒன் சிஸ்டர்ஸாவே நினைச்சுக்கோ.. என்ன?!'' என்றாள் மறுபடியும்.

சந்தியா மறுபடியும் தலையாட்டினாள்.

''இந்த டிரெஸ் ரொம்ப நன்னா இருக்கு..'' என்றாள் நீரஜா.

சந்தியா அழகான இளம் ரோஸ் வண்ணத்தில் உடை அணிந்திருந்தாள்.

''பெரியம்மாகிட்டேயிருந்து கிஃப்ட்'' என்றாள் சந்தியா. அவள் அணிந்திருந்த காசு மாலையை எடுத்துப் பார்த்தாள்.

''ஓ! பெரியம்மாவோட பிரசண்ட்டோன்னு நினைச் சோம்'' என்றாள் மஞ்சுளா.

உண்மையில் அந்தக் காசுமாலையை பெரியம்மா அவளுக்கென்றுதான் செய்திருந்தார்கள். ஆனால் இப் போதைக்கு அது எதையும் வாங்கப் போவதில்லை என்று சந்தியா முடிவாக இருந்தாள். அவளிடம் பதில் வருமா வென்று மேலும் கிண்டி கிண்டிப் பார்த்து விட்டு எதுவும் பெயராத சோகத்தில் நகர்ந்தார்கள் மங்களாவும் நீரஜாவும்.

சந்தியா தனக்குள் சிரித்துக் கொண்டதை அவர்கள் அறியவில்லை. இப்போது நேற்றைய விஷயத்தைத் தான் பகிர்ந்து கொண்டார்கள் மங்களாவும் நீரஜாவும்.

''நீரு..! இன்னும் ஒரு விஷயம் தெரியுமோ?''

''என்ன?'' என்றாள் நீரஜா ஆர்வமாக.

''நம்ம பாலு இருக்கானே அவன் பொண்ணுகிட்டே ஒரு கண்டிஷன் போட்டிருக்கானாம் தெரியுமோ?''

''என்னது?''

''ஆயுசுக்கும் அவா அம்மாவை இப்ப வந்திருக்கற மாட்டுப் பொண் நன்னாப் பாத்துக்கணுமாம்..'' என்றாள்.

நீரஜா கிளுகிளுவென்று சிரித்தாள். ''தீதி..! நம்ம ஹஸ்பென்ட் கூட எங்க மேரேஜப்ப அப்படித்தான் சொல்லுச்சு. நானும் தலையை ஆட்டுச்சு. இப்ப என்ன ஆச்சு? விடுங்கோ தீதி..'' என்றாள்.

''நீரு.. ஏன் அப்படிச் சொல்றே! அப்படி வச்சுண்டுட்டா.. நமக்கு நல்லதுதானே..! நோக்கு உங்கம்மா ஹெல்ப் இருக்கு. நேக்கு எங்கம்மா ஹெல்ப் இருக்கு. அப்புறம் என்ன? அந்தப் பொண்ணு அம்மா பெரியம்மா இத்தனை பேர் இருக்காளோ இல்லியோ! எல்லாருமா.. நம்ம மாமியாரைப் பாத்துண்டுடட்டுமே..'' என்றாள் மங்களா.

நீரஜாவின் மனம் உறுத்தியதோ என்னமோ மெல்லிய குரலில் சொன்னாள்.

''தீதி..! நம்ம அம்மா பாவம் நல்லவாதான்'' என்று.

மங்களா உடனே சுதாரித்துக் கொண்டாள்.

''ஆமா.. மா..! நல்லவாதான்'' பேச்சை மாற்றி விட்டு நகர்ந்தார்கள். ஆனால் அப்போது அவர்கள் நினைக்கவே

யில்லை. நிலைமை தலைகீழாக மாறும் தாங்களே வேறு விதமாகப் பேசப் போகிறோம்..'' என்று.

6



''சித்த சும்மாருங்கோன்னா..!'' என்று சிணுங்கினாள் சந்தியா.

பாலச்சந்தர் ஒரு விதமாகச் சிரித்தான்.

''நீயும் ஒரு மாசமா இப்படித்தான் சொல்லிண்டிருக்கே. அதுக்காக நான் சும்மாயிருந்திருந்தேன்னு வச்சுக்க. நீயே வேற விதமா பேசிட்டிருந்திருப்பே'' என்றான்.

''உங்ககிட்டே பேசி ஜெயிக்க முடியுமா?'' என்றாள் சந்தியா சிரிப்புடன்.

''அதான் ஆளையே ஜெயிச்சாச்சே.. பேச்சுலயானும் நான் ஜெயிச்சுக்கறேன்..'' என்றான்.

''இருங்கோ அம்மாவுக்கு காபி கொடுத்துட்டு வரேன்'' என்று போனாள்.

கனகேஸ்வரி கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். ஏழு மணி வாக்கில் கோவிலுக்குக் கிளம்பிப் போய் விடுவாள். தனக்கும் மன அமைதி கிட்டினாற் போல விடுவாள். தனக்கும் மன அமைதி கிட்டினாற் போல ஆயிற்று. கணவன் மனைவிக்கும் தனிமை கொடுத்தாற் போல ஆயிற்று என்று.

மருமகள் கொடுத்த காபியை வாங்கி ரசித்துக் குடித்தார். உண்மையாகவே இந்த ஒரு மாதமாக மிகவும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தார். சந்தியா உண்மையாகவே அவரை ஒரு தாயைப் போலவே நடத்தினாள்.

''அன்பா இருக்கறதுல என்ன கஷ்டம்? அதே நிறைய்ய நிறைய்ய நமக்குத் திருப்பிக் கிடைக்குமே?'' என்று தன் கணவனிடம் அடிக்கடி சொல்லிக் கொண் டிருந்ததைக் கேட்டு அவள் மனம் நிறைந்தது.

தன் பங்குக்குத் தானும் தன்னால் முடிந்ததைச் செய்வார். ஆனால் சந்தியா விட மாட்டாள். மருமகள் வந்ததும் மாலையில் மட்டும் ஒரு காபி போட்டுக் கொடுப்பார். இப்போது அவருக்குத் தனிமையும் இருக்க வில்லை. யசோதா, கோமதி இவர்களில் யாராவது மாறி மாறி அவரைப் பார்த்தார்கள். கோவில்களுக்குப் போகும் போது அவரையும் அழைத்துக் கொண்டார்கள்.

அம்மா முகத்தில் நிலவுகிற அமைதியையும் மகிழ்ச் சியையும் பாலச்சந்திரனும் மிகவும் ரசித்துக் கொண் டான். இத்தனையும் தன் மனைவியினால்தானே என்ற எண்ணத்தினால் தன் நன்றியையும் அன்பையும் வேறு வேறு விதங்களில் அவளிடம் காட்டினான். அதனால் சந்தியாவின் முகம் மலர்ந்துதான் இருந்தது.

''இன்றைக்கு என்ன சமையல்?'' என்று அவளருகில் வந்து எட்டிப் பார்த்தான்.

''அதைத்தான் நானும் கேட்கிறேன். என்ன வேணும் சொல்லுங்கோ..!'' என்றாள்.

''தேங்காய் சாதம் செய்யேன் சந்தியா..'' என்றான் பாலச்சந்தர்.

மளமளவென்று அவள் காரியங்களில் இறங்க அவனும் கூட இருந்து உதவி செய்வான். கணவனும் மனைவியுமாகக் களம் இறங்கினால் ஒன்றரை மணி நேரத்தில் சமையல் முடிப்பார்கள். அம்மாவுக்கு ஹாட் பேக்கில் எடுத்து வைத்து விட்டு அவனுக்குக் கட்டிக் கொடுப்பாள். அவள் மட்டும் இடையிடையில் பகல் நேரங்களில் பெரியம்மா வீட்டில் சாப்பிடுவாள்.

''சந்தியா..!'' என்றான் பாலச்சந்தர் காய்கறி நறுக்கிக் கொண்டே.

''ம்..!'' என்றாள்.

''எங்காவது ஒரு நாலு நாள் போலாமா?'' என்றான்.

''ஆமான்னா..! போகணும். பெரியப்பா கூட எங்கே போகணும் சொல்லுங்கோ டிக்கெட் எடுத்துத் தரேன்னு சொல்லிண்டேயிருக்கார்..'' என்றாள்.

''அப்படியா.. சொல்றார்? அப்படீன்னா.. ஃப்ளைட் டிக்கெட்டை எடுத்துத் தரச் சொல்லு.. எங்கானும் டில்லி, ஆக்ரான்னு போகலாம்..'' என்றான்.

அவள் வியப்பாய்த் திரும்பிப் பார்த்தாள். ''ஆமான்னா.. அவரும் கூட இதேதான்.. சொன்னார்.. என்றாள்.

அவன் புன்னகைத்தான். ''சும்மா சொன்னேன்.. சந்தியா..'' என்றான்.

சந்தியா அன்புடன் அவனைப் பார்த்தாள்.

''பெரியப்பா கிட்டே ஒண்ணும் அன்ஈஸியா ஃபீல் பண்ண வேண்டியதில்லைன்னா! அப்படி அவர் ஏதானும் எக்ஸ்டிரா ஆர்டினரியாப் பண்ற மாதிரி இந்தா நானே வேண்டாம்னுடுவேன்..'' என்றாள்.

''அப்ப சரி. போகலாம்'' என்றான்.

நறுக்கிய காயை எடுத்து நீட்ட அவன் தட்டை அவள் வாங்கிக் கொண்டாள்.

''அப்புறம் சந்தியா.. சௌந்தர் அண்ணாவும் கல்யாணும் வேறு கூப்பிட்டுண்டே இருக்கா. எப்பப் போலாம்'' என்றான்.

''ம்..'' என்று யோசித்தாள் சந்தியா. ''ஏன்னா.. இப்படிச் செய்வோமா? இந்த மாசத்துக்குள்ளே அவா ரெண்டு பேர் வீட்டுக்கும் போயிட்டு வந்தர்லாம். அடுத்த மாசம் நம்ப டெல்லி டூர் வச்சுண்டுடலாமா? என்றாள்.

''ஆமா.. நேக்குக் கூட நெக்ஸ்ட் மன்த்ன்னா.. மொத்தமா ஒரு நாலைஞ்சு நாள் லீவு கிடைக்கும்'' என்றான்.

அப்படியே செய்தார்கள்.

* * *

முதலில் சௌந்தரராஜன் வீட்டில் தங்கினார்கள்.

மங்களா நன்றாக உபசரித்தாள். மங்களாவின் பிறந்த வீட்டினர் ஓரளவு வசதியாக இருந்தனர். அதனாலோ என்னவோ கொஞ்சம் 'கெத்'தாகவே இருந்தாள்.

''பாத்தியா.. சந்தியா.. இந்த சோபா இந்த இண்டீரியர் டெகரேஷன் செலவு எல்லாமே எங்க அம்மா வீட்ல இருந்து செஞ்சா..'' என்றாள் பெருமையாக.

''உங்க வீட்ல இருந்து என்ன செய்வாங்க அல்லது என்ன செய்யப் போறாங்க?'' என்று போன்ற மறைமுகக் கேள்விகள் அவள் சொல்லுகிற வாக்கியங்களில் தொக்கி நின்ற போதும் சந்தியா லாவகமாக அந்த மாதிரி

வலைகளில் இருந்து கழன்று கொண்டாள். அதோடு நிற்கவில்லை.

''எங்க பெரியப்பா எல்லாம் செய்யறதுக்குத் தயாரா இருக்கார். அண்ணா கூட ஏதோ செய்யணும்னுதான் சொல்லிண்டிருந்தார். ஆனா.. உங்க மச்சினர்தான் ஆச்சே..! நான் உன்னை மட்டும்தான் உங்காத்துல இருந்து எதிர்பார்க்கறேன். இன்னைக்கு ஏதோ கொஞ்சத்தை மாமனார் ஆத்துல இருந்து வாங்கிண்டா.. நாளைக்கு அவா வரச்சே அசடு வழிஞ்சுண்டு நிக்கணும். சுய மரியாதை இல்லாமப் போயிடும்கறாரே'' என்றாள் புன்னகையுடன்.

மங்களா 'கப்'பென்று வாயை மூடிக் கொண்டாள். அடுத்த சோபாவில் அமர்ந்து கொண்டிருந்த சௌந்தர ராஜன் லேசாக முகம் சிறுத்துப் போனவனாக எழுந்து ஏதோ அவசர வேலை இருக்கிறாற்போல எழுந்து போனான்.

கணவன் ஏதும் கோபித்துக் கொள்வானோ என்பது போலத் திரும்பிப் பார்த்தாள். அவனோ கோகுல கிருஷ்ணன் மாதிரி 'வெல் ஸெட்' என்பது போலக் குறுஞ்சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தான்.

பெண்கள் இருவரும் சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருக்கையில் மங்களா சொன்னாள்.

''நம்ம புக்காத்துல பெருசா... குறை சொல்லிக்கறாப் போல ஒண்ணும் இல்லைதான் ஆனா... மாமியார் இத்தனை காலம் பொழைச்சுப் பொழைச்சு என்ன சாதிச்சிருக்கார்? சொத்து கித்துன்னு ஏதாவது இருக்க வேண்டாமோ? அட்லீஸ்ட் காஷாவாவது ஏதானும் இருக்கணுமோல்லியோ? என்ன, மனசால நல்லவர். அது

ஒண்ணுனாலதான் எங்காத்துல கொஞ்சம் மரியாதை'' என்றாள்.

சந்தியா அமைதியாக வாங்கிக் கொள்வது போல வாங்கிக் கொண்டு பிறகு சொன்னாள்.

''நீங்க சொல்றதும் சரிதான்க்கா...! ஆனா அவா காலத்துல சொற்ப சம்பளத்தை வச்சுண்டு எல்லாரையும் நன்னாப் படிக்க வச்சிருக்காளே. அதுவே பெரிய விஷயம்தான்'' என்றாள்.

மங்களா ஒரு விஷயம் நன்றாகப் புரிந்து கொண்டாள். சந்தியா... யாரையும் எந்த இடத்திலும் விட்டுக் கொடுத்துப் பேசமாட்டாள் என்பதுதான் அது.

அங்கே இருந்த இரண்டு நாட்களுக்குள்ளாகவே பெரியப்பாவிடம் இருந்தும் பெரியம்மாவிடம் இருந்தும் அவள் அம்மா அண்ணன் என்று மாற்றி மாற்றி அழைத்துப் பேசியதைக் கேட்டாள் மங்களா என்றால் அவள் பிஸினஸ் தொடர்பான விஷயங்களில் பெரியப்பாவிடம் பேசுகிற தோரணை பார்த்து சௌந்திரராஜன் கூட அவளோடு ''மார்க்கெட் நிலவரம்'' பற்றியெல்லாம் பேசினான்.

கண்களில் மரியாதை தெரிந்தது. இரண்டு நாட்களிலும் அவள் கவனித்துப் பார்த்த விதத்தில் எந்த விதத்திலும் அவள் ஊர் வம்பு பேசாதவள் என்பதும் புரிந்தது.

பாலச்சந்தரும் கூட அவளைப் பற்றிய வேறு வேறு பரிமாணங்களை அங்கே தெரிந்து கொண்டான். பெருமையும், பெருமிதமுமாக ஒரு ஆழ்ந்த அமைதியில் அவன் அந்த நாட்களைக் கழித்தான்.

குழந்தைகளோடும் கூட அவள் இயல்பாக ஒன்றிக் கொண்டாள். கணவன், மனைவி இருவருக்குமாகத் துணி மணிகள் வைத்துக் கொடுத்தார்கள்.

பாலச்சந்தரும், அவளும் கடைக்குக் குழந்தைகளைக் கூட்டிச் சென்று அவர்களுக்குத் துணிமணிகள் எடுத்துக் கொடுத்தார்கள்.

வார விடுமுறையைக் கழித்து விட்டு ஆழ்ந்த அன்பு உணர்வுடன் அவர்கள் விடைபெற்றுக் கொண்டார்கள்.

என்ன சொன்னாலும் கேட்கமாட்டேன் என்று பெரியப்பா கார் வசதி செய்து கொடுத்திருந்தார். அதனால் பயணம் இனிமையாகவே கழிந்தது.

விடைபெற்றுப் புறப்படும்போதும் சரி, பயணத்தின் போதும் சரி அவளுக்குள்ளே ஒரு கேள்வி இருந்து கொண்டே இருந்தது. அவள் தன் கணவனிடம் கூட அதைப் பகிர்ந்து கொள்ளவில்லை.

* * *

''நான் உன்னைச் சோட்டுன்னுதான் கூப்பிடும். ஓ.கே.வா?'' என்றாள் நீரஜா.

சந்தியா சிரித்தாள். ''நம்மாத்துலதான் சோட்டுக்கள் நிறைய இருக்காங்களே?'' என்றாள்.

''ஸோ வாட்? நம்ம மூணுபேத்தில நீதான் சோட்டு. அதனால உன்னை நான் சோட்டுன்னுதான் கூப்பிடுவேன்!'' என்றாள் மறுபடியும்.

''உங்க இஷ்டம்'' என்றாள் சந்தியா. கல்யாணும், பாலச்சந்தரும் ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள்.

சந்தியா எல்லாரிடமும் இயல்பாகவும் பழகுவதில் பாலசந்தருக்கு சந்தோஷம் மட்டுமல்ல ஆச்சரியமும் கூட.

''எப்படி நீ இவ்வளவு ஈஸியாப் பழகறே?'' என்று கேட்டான் தனிமையில்.

''சிம்பிள்.. அவங்கவங்களை நான் அப்படியே ஏத்துக் கறேன். நான் ஒரு எதிர்பார்ப்பு வச்சுண்டு அதுக்கேற்ப நடந்தாத்தானே வம்பு...'' என்றாள்.

''சரி... அவங்க உன்கிட்ட எதிர்பார்ப்பு வச்சுண்டா..?'' என்றான் சிரித்துக் கொண்டே.

''எது முடியும் முடியாதுன்னு நாசூக்கா சொல்லிட வேண்டியதுதான்'' என்றாள்.

அந்தப் பேச்சு நினைவுக்கு வர மனைவியை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். நீரஜா தொடர்ந்து பேசினாள்.

''யு ஸ்பீக் ஹிந்தி?'' என்றாள் சந்தியாவிடம்.

''தோடா தோடா மாலும் ஹை!'' என்றாள் சந்தியா.

பாலச்சந்தர் இடையிலே குறுக்கிட்டு ''அதெல்லாம் நன்னாப் பேசுவா!'' என்றான்.

''அப்பாடா!'' என்றாள் நீரஜா... பிறகு தன் ஓரகத்தியைப் பார்த்துப் புன்னகையுடன் ''நம்மோ புக்காத்துல வாட் ஐ வாஸ் மிஸ்ஸிங் வாஸ் ஹிந்தி...'' என்றாள்.

''அதுசரி... உங்க மேரேஜ் என்ன லவ் மேரேஜாமே...'' என்றாள் சந்தியா ஆர்வத்துடன்.

நீரஜா முகம் சிவக்க கணவனைப் பார்த்தாள். கல்யாண் சிரித்தான்.

''அப்படியும் சொல்லலாம் உங்க மாதிரித்தான். அவா வடக்கே இருந்தவர்ருனாலும் நம்ம மனுஷாதான். ரொம்ப காலத்துக்கு முன்னாலே அங்கே செட்டிலானவா. இப்பத்தான் பத்து வருஷத்துக்கு முன்னாடிதான் இங்க வந்திருக்கா. நான் ஒரு கல்யாணத்துல வச்சு இவளைப் பார்த்தேன். புடிச்சிருந்தது. அப்புறம் அங்க இங்கயுமா ரெண்டு மூணு இடத்துல பார்த்தோம். அவப்பாவுக்கு என்னைப் பார்த்தவுடனே இவனை மாதிரி இளிச்சவாயன் கிடைக்க மாட்டான்னு தோணிடுத்து. நேரடியா வந்து பேசி முடிச்சார்'' என்றான்.

''ஆமா...! இவர் இளிச்சவாயரா? யார் நம்புவா?'' என்றாள் நீரஜா பொய்க் கோபத்துடன்.

''யாரையும் கேட்க வேண்டாம் நம்மாத்து வாண்டுகளைக் கேளு. அதுகளே சொல்லும்...'' என்றான் கல்யாண்.

சந்தியாவும், பாலச்சந்தரும் சிரித்துச் சமாளித்தார்கள் சந்தியா கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

முதல்நாள்தான் ரோஷ்ணியும், முகேஷும் அவளிடம் தனியாகக் கிசுகிசுத்திருந்தார்கள்.

''சித்தி...! அப்பா.. ரொம்ப ஏமாளி..'' என்று.

கல்யாணராமன் என்கிற கல்யாண் மேலும் தொடர்ந்தான்.

''எப்படியோம்மா.. இந்த ரெண்டு நாளா நம்மாத்து சமையல் சாப்பிட்டேன். இவளும் பாவம் ரொம்ப ட்ரை பண்ணுவா ஆனா.. வடக்கத்தி சமையல்தான் அவளுக்கு

நன்னா வர்றது'' என்றான் மனைவியையும் விட்டுக் கொடுக்காமல்.

''ஆமா...! அத்திம்பேர்... நேத்து ஒரு ''சப்ஜி'' செஞ்சிருந்தாளே.. சூப்பர்...'' என்றாள் சந்தியா.

''சாரிம்மா...! பொதுவா விருந்துக்கு வந்தவாளை நாங்கன்னா சரியா கவனிக்கணும். ஆனா... இங்க என்ன நீ எங்களுக்கு சமைச்சுப் போடறே...!'' என்றான் கல்யாண்.

''அத்திம்பேர்! ப்ளீஸ் தப்பாப் பேசாதீங்கோ! இப்படி யெல்லாம் பேசி என்னை அன்னியப்படுத்தாதேங்கோ! நம்மாத்துல செய்யறதுல நேக்கு சந்தோஷம்தான். இன்னும் சொல்லப் போனா அக்காவும், நீங்களும் ஒரு பத்து நாளாவது லீவ் போட்டுண்டு வந்து எங்களோட தங்கினா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்'' என் றாள்.

''வரோம்மா...! வரணும்.. உன் சமையலுக்காகவே வரணும்...'' என்றான் கல்யாண்.

இங்கேயும் தன் வசியக் கலையை மெல்லக் காட்டு கிற தன் மனைவியை தன் ஆசைமிகு பார்வையில் பருகிக் கொள்வான் பாலச்சந்தர்.

நீரஜாவிடம் அந்த இரண்டு நாட்களிலும் பேசும் போதும் மங்களாவின் கருத்தையே அவளும் பங்கு போட்டுக் கொள்வதை உணர்ந்தாள் சந்தியா.

ஊருக்கு வந்த பிறகும் அவ்வப்போது சிந்தனையில் ஆழ்ந்து விடுகிற மனைவியிடம் கேட்டான் பாலச்சந்தர். ''என்னதிது அடிக்கடி யோசனை?''

''சும்மா... தான்..'' என்று சிரித்துச் சமாளித்தாள் சந்தியா. அது ஒன்றும் யோசனையில்லை என்று அப் போதைக்கு பாலச்சந்தருக்குப் புரியவில்லை.

7



''ஆத்துல யாரும் இல்லையா?'' என்று குரல் கேட்டவுடனே சந்தியா எட்டிப் பார்த்தாள்.

காலை நேரம்! பரபரப்பாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கணவனுக்கு டிபன் கட்டிக் கொண்டிருந் தாள்.

'யார் இவர்? இதுவரை வீட்டுக்கு வந்தவர் இல் லையே?' ஆனாலும் வரவேற்றாள்.

''வாங்கோ! யார் வேணும்?'' என்றாள்.

''கனகேஸ்வரியோட ரிலேடிவ். கனகேஸ்வரி இல் லையோ? புள்ளையாண்டான் பாலச்சந்தர் இல்லையோ?'' என்றார் வந்தவர்.

நடுத்தர வயதைத் தாண்டியிருந்தார் அறுபதுகளின் ஆரம்பத்தில் இருக்கிறார் என்று தோன்றியது.

''இருக்கார்.. உள்ளே வாங்கோ... நான் பாலச்சந்தரின் வைஃப்தான். அவர் குளிச்சுண்டிருக்கார். அம்மா கோவி லுக்குப் போயிருக்கா. இப்ப வந்துடுவா...'' என்றாள்.

உள்ளே வந்தவுடன் சோபாவில் அமரச் செய்தாள். பெரியப்பா வற்புறுத்தி வாங்கிக் கொடுத்த வகையறாக்களில் அந்த சோபா செட்டும் அடக்கம்.

''இருங்கோ! காபி சாப்பிடுவேளோன்னா'' என்றபடி உள்ளே போனாள்.

''பேஷா! காபி கிடைச்சா.. நன்னாத்தான் இருக்கும்! என்றார் வந்தவர். அவரது யதார்த்தமான பதில் அவள் முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்தது.

''நான் பட்டாபி! கனகேஸ்வரிக்கு ஒண்ணு விட்ட அண்ணன்'' என்று தொடர்ந்து பேசினார் வந்தவர்.

''கல்யாணத்துல உங்களைப் பார்க்கலையே'' என்றாள் சந்தியா காபியைத் தயாரித்தபடி.

''எப்படிப் பார்ப்பேள்? நீங்கதான் என்னை அழைக்கவே இல்லையே!'' என்றார் அவர்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று சந்தியாவுக்கு தெரியவில்லை.

''ஓ..!'' என்றாள். ஆனால் பட்டாபியே தொடர்ந்தார்.

''ஆனா... கனகாவையும் தப்பு சொல்லப்படாது. நான்தான் ஆத்துல இருக்கமாட்டேனே! ஊர் சுத்திண்டேயிருப்பேன். தபால்ல அனுப்பியிருக்கா. நேக்குக் கிடைக்கலே...'' என்றார்.

அதற்குள்ளாக பின்கட்டில் இருந்து பாலச்சந்தர் ''சந்தியா...! யார் வந்திருக்கா?'' என்று குரல் கொடுத்தான்.

சந்தியா பதில் சொல்லு முன்பாகவே ''நான்தாண்டா பட்டாபி மாமா வந்திருக்கேன்.''

''ஓ...! வாங்கோ! வெயிட் பண்ணுங்கோ. வந்துடறேன்.''

''பேஷா.. வெயிட் பண்றேன். உன்னோட ஆத்துக்காரி அருமையா ஒரு காபி போட்டுக் கொடுத்திருக்காளோ... இல்லியோ.. குடிச்சுண்டிருக்கேன் தேவாமிர்தமா இருக்கு நீ மெதுவா வா...'' என்றார்.

''உங்களை என்னன்னு அழைக்கணும்?'' என்று கேட்டாள் சந்தியா.

''சித்தப்பான்னு கூப்பிடேன்'' என்றார். சந்தியா பேசிக் கொண்டே டிபன் பாக்ஸ்ல கணவனுக்கு வேண்டிய பகலுணவை எடுத்து வைப்பதை வேடிக்கை பார்த்தபடி அவர் காபியை பருகினார்.

கனகேஸ்வரி காலையிலேயே கோயிலுக்கு நிம்மதியாகப் போயிருக்கிறாள் மருமகள் நல்ல மருமகளாக இருக்க வேண்டும் என்பது புரிந்து தொடர்ந்து நிறுத்தாமல் பேசினார்.

''கனகா... ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கா. ஆரம்ப காலத்துல குழந்தைகள்ளாம் தோளுக்கு மேலே வளர்ந்து நிக்கறச்சே ஆத்துக்காரர் போயிட்டார். பெரியவன் வேலைக்கு வந்துட்டான். இருந்தாலும் கஷ்டப்பட்டா பாவம் உன் ஆம்படையான் ரோஷக்காரன். யாரையும் எதிர்பார்க்காம பார்ட் டைம் வேலை பார்த்துண்டே படிச்சான் தெரியுமோ?'' என்றார்.

''ஆமா..! எல்லாமும் பேசிண்டா...'' என்றாள் சந்தியா.

''ஆமா...! எங்க சொந்தக்காரா எல்லாம் பாவம் கனகா! இப்பத்தான் நிம்மதியா இருக்கான்னு பேசிக்கறா'' என்றார் பட்டாபி.

சந்தியா அவரைப் பார்த்து இயல்பாகப் புன்னகைத் தாள். அதே நேரம் பாலச்சந்தர் பின்கட்டிலிருந்து வந்தான்.

''மாமா! வாங்கோ! நீங்க ஏன் கல்யாணத்துக்கு வர்லை?'' என்றான் பாலச்சந்தர்.

கணவனுக்காக மேஜையில் உணவை எடுத்து வைத் தாள். பாலச்சந்தர் திரும்பி பட்டாபியை பார்த்தான்.

''அது சரி.. நீங்க சாப்பிடலையோ!'' என்றான்.

''சாப்பிடணும்...'' என்றவர் ''கல்யாண சமயத்துல நான் காசியில இருந்தேண்டா..!'' என்றார்.

''நேத்துதான் வந்தேன். லாட்ஜில் ரூம் போட்டிருக் கேன்'' என்றார்.

பாலச்சந்தர் திரும்பிப் பார்த்தான் ''என்னதிது புது வழக்கம்!'' என்றான்.

''இல்லே! முன்னேன்னா... வேற! இப்போ...''

''சித்தப்பா...! அப்படியெல்லாம் வித்தியாசம் பாக்கா தேள்! போய் முதல்ல பெட்டி படுக்கையை எடுத்துண்டு வாங்கோ...'' என்றாள் சந்தியா.

''ஆகட்டும்மா...!'' என்றார் மகிழ்ச்சியாக. அதற்குள் ளாக கனகேஸ்வரியும் வந்து சேர்ந்தார்.

''அண்ணா...'' என்னண்ணா... ஆளையே காண மேன்னு நினைச்சுண்டிருந்தேன். கல்யாணத்துக்கும் வரலை.''

''ஆமம்மா! நான் காசிக்கு டூர் போயிருந்தேன். நேக்கு இனிமே என்னம்மா இருக்கு? ஆசிரமங்கள் கோயில்ன்னு டூர் அடிச்சுண்டிருக்கேன்...'' என்றார்.

கனகேஸ்வரியும் பட்டாபிராமனும் சற்று நேரம் அளவளாவினார்கள். பேச்சு பாட்டுக்கு பேச்சாக இருக்க பாலச்சந்தரும் சந்தியாவும் கிளம்பினார்கள்.

''மாமா! லாட்ஜில போய் வெகேட் பண்ணிட்டு வந்துருங்கோ...! நான் சாயங்காலம் உங்களை வந்து பார்க்கறேன். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. உட்கார்ந்து ஆற அமரப் பேசறேன்'' என்று கிளம்பினான் பாலச்சந்தர்.

''சரிப்பா... நீ கிளம்பு'' என்றார் பட்டாபி.

''ஏம்மா... புது மாட்டுப் பொண்ணு... எப்படி? பொதுவா புதுத் துடைப்பம் நன்னாத்தான் கூட்டும்பா...'' என்று இழுக்க.

''இல்லண்ணா...! நல்ல சுபாவம். நுடிப்புன்னா நாலு நாள்ல வெளுத்துடும். பொண்ணு நல்ல பொண்ணா.. இருக்கு. நம்ம வீட்டைப் போல நடுத்தரக் குடும்பத்துல பொறந்தாலும் பெரிய இடத்துல வளந்திருக்கா..! அத னால எங்கே எப்படி நடக்கணும்னு அவளுக்குத் தெரி யறது'' என்றார் கனகேஸ்வரி.

''நல்லதம்மா...! பெரிய மாட்டுப் பொண்கள் ரெண்டு பேர்கிட்டயும் அல்லாடிட்டே! இனிமேலாது கொஞ்சம் நிம்மதியா இருப்பியாம்'' என்றார் பட்டாபி.

''அப்புறம் என்னண்ணா.. ஊர் சங்கதி..'' என்றார் கனகேஸ்வரி.

ஊர் சங்கதியையெல்லாம் சற்று நேரம் பரிமாறிக் கொண்டிருந்து விட்டு ஒரு வேறொரு சங்கதியையும் பட்டாபி சொன்னார். உண்மையாகவே கனகேஸ்வரி நம்ப முடியாமல் அமர்ந்துவிட்டார்.

* * *

''என்னதிது ஆத்துல யாரையும் காணல்லியே!'' என்றபடி உள்ளே நுழைந்தார் கோமதி.

''வாங்கோ... வாங்கோ...'' என்றபடி உற்சாகமாக வர வேற்றார் கனகேஸ்வரி.

''எப்பவும் அஞ்சு மணிக்கு ஒரு நடை வந்து எட்டிப் பார்த்துட்டுப் போவாளே.. சந்தியா இன்னிக்குக் காணல்லியேன்னுட்டு வந்தேன்'' என்றார்.

''அப்படியா? என்னவோ இன்னைக்கு நேரமே வந்துட்டா...'' என்றார்.

உள்ளே சமையல் வேலையாக இருந்த சந்தியா ''பெரியம்மா!'' என்று உற்சாகக் குரல் எழுப்பியபடி வெளியே வந்தாள்.

''இப்பத்தான் நினைச்சேன் பெரியம்மா நோக்குப் பிடிச்ச வெங்காய பஜ்ஜி செஞ்சேன்.

''சூடா.. இருந்தா பெரியம்மா ஆசையா சாப்பிடு வாளேன்னு நினைச்சுண்டே இருந்தேன். வந்துட்டே நூறாயுசு போ...'' என்றாள் அன்புடன்.

''போதுண்டியம்மா...! நூறாயுசை வச்சுண்டு என்ன பண்ணப் போறேன்'' என்றார். குரல்கள் கேட்டுப் பின் பக்கத்தில் இருந்த பட்டாபி வந்தார்.

''சித்தப்பா...! இவாதான் எங்க பெரியம்மா'' என்று அறிமுகப்படுத்தினாள் சந்தியா.

பெரியம்மாவிடம் திரும்பி ''பெரியம்மா! இவங்க அம்மாவோட ஒண்ணு விட்ட அண்ணா...'' என்றாள்.

''அப்படியா...! சந்தோஷம்!'' என்றார்கள். அமர்ந்து சற்று நேரம் அளவளாவினார்கள்.

''எங்கே... உங்களை கல்யாணத்தின் போது காணோம்!'' என்றார் கோமதி.

''நான் எப்பவும் கோவில் கோவிலா சுத்திண்டிருப் பேன். என்னமோ கல்யாணத்துல இன்ட்ரஸ்ட் இல்லை. பண்ணிக்கலை. அதனால நான் ஃப்ரீ...'' என்றார் சிரித் தார்.

நிர்மலமான சிரிப்பு.

''சரி... கண்டிப்பா.. எங்காத்துக்கு வரணும்'' என்று அழைத்தார் பெரியம்மா.

சந்தியா பெரியம்மாவுக்கும் மற்றவர்களுக்குமாக பஜ்ஜி கொண்டு வந்து தட்டில் பரிமாறினாள்.

''சித்தப்பா.. வந்திருக்காரே.. அதான் வாய்க்கு ருசியா எதானும் டிபன் குடுக்கலாம்னுதான் சீக்கிரமே வந்துட் டேன்'' என்றாள்.

''நல்லது...'' என்று சிரித்தார் கோமதி.

பட்டாபி அதற்குள்ளாக முகபாவத்தை தீவிரமாக்கிய படி.

''அம்மா... நானே உங்களண்டை பேசணும்னு இருந் தேன். ஒரு நல்ல விஷயம்'' என்றார்.

கனகேஸ்வரி குறுக்கே புகுந்து ''அண்ணா.. அவசரப் பட வேண்டாம். நன்னா யோசிச்சுக்கோங்கோ'' என்றார் எச்சரிப்பது போல்.

''யோசிக்கறதுக்கென்னம்மா... நான்தான் முடிவு பண் ணிட்டேனே...'' என்றார்.

கனகேஸ்வரி தவிப்புடன் சொன்னார்.

''இருங்கோண்ணா... பாலச்சந்தர்கிட்டேயும் பேசிட லாம்'' என்றார்.

''ஒண்ணும் வேண்டாம்! நான் யாரண்டையும் கருத்துக் கேக்கறதா இல்லை. நான் முடிவு பண்ணிட் டேன்...'' என்றார்.

''இல்லண்ணா... உங்களுக்கே நாளைக்குத் தேவை வந்தா...''

''இருக்கும்மா. நேக்குத் தேவையான அளவுக்கு வச்சிருக்கேன்'' என்றார்.

உறுதியான முகபாவத்துடன் திரும்பி கோமதியைப் பார்த்தார்.

''அம்மா.. நன்னாக் கேட்டுக்கோங்கோ! நேக்குக் கல்யாணம் ஆகலை. வாரிசுகள் கிடையாது. என் கையில பணம் இருக்கு. நான் என்னோட சேமிப்புக்கு கொஞ்சம் வச்சுண்டுட்டேன். இப்ப ஒரு தொகை கனகேஸ்வரி பேர்ல போடலாமான்னு இருக்கேன்'' என்றார்.

'இதில் என்னிடம் சொல்வதற்கு என்ன இருக்குது?' என்பது போலப் பார்த்தார் கோமதி.

''இல்லம்மா! இவாளுக்கு மட்டுமில்லாமல் பெரியவா ஒண்ணு ரெண்டு பேருக்கு இந்த விஷயம் தெரியறது நல்லதோன்னா...'' என்று விளக்கம் சொன்னார் பட் டாபி.

''சரி... சொல்லுங்கோ...'' என்றார் கோமதி.

கனகேஸ்வரி.. குறுக்கே புகுந்து ''நேக்கு இந்த ஐடி யாவே பிடிக்கலை. ஏன்னா.. அவர் சொல்வது பெரிய தொகை!'' என்றார்.

''ஓஹோ!'' என்றார் பெரியம்மா.

''ஆமாங்க! பத்து லட்சம் ரூபாய் போடறாராம்....'' என் றார்.

கோமதியே கொஞ்சம் ஆடித்தான் போனார்.

''கொஞ்சம் பெரிய தொகையாத்தான் தெரியறது'' என்றார்.

''இருக்கட்டும்மா...'' நேக்குப் பின்னாடி இந்தப் பணத்துக்கு யார் யார் அடிச்சுக்கப் போறாளோ..! ஆனா நேக்கும் ரைட்ராயலான வாரிசுன்னு யாரும் இல்லே!'' அதான்...'' என்றார்.

கனகேஸ்வரியின் தயக்கத்தை ஆழ்ந்து ஒரு விதமான ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சந்தியா.

''என்னடி இப்படிப் பார்க்கறே!'' என்று பெரியம்மா கண்ணாலேயே கேட்க அவள் புன்னகைத்தாள்.

''பெரியம்மா! அம்மாவைப் பாத்தேளா! யாரானும் இப்படி ஒரு தொகை இப்படிக் கிடைக்கறதுன்னா.. இப் படிக் கலங்குவாளோ! வாயைப் பிளந்துண்டு ''லபக்'' குன்னு தாவி லபக்கிக்க மாட்டாளோ!'' என்றாள்.

கனகேஸ்வரி அதே தீவிரமான முகபாவத்தோடு திரும்பி மருமகளைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

''இத பாரும்மா! அது நம்ம உழைப்பிலே வந்த பண மில்லே! நமக்கு உரிமையா வர வேண்டிய பணமு மில்லே'' என்றார்.

கோமதி ''குபுக்''கென்று சிரித்தார்.

''என்னடி... இது...! உங்கம்மா மாதிரியே இவளும் பேசறா...'' என்றார்.

சந்தியா புன்னகைத்தாள். அதற்குள்ளாக பட்டாபி குறுக்கே புகுந்தார்.

''ஏன் நோக்கு உரிமையில்லே! உங்கம்மாவும், எங்கம் மாவும் சொந்த சிஸ்டர்ஸ்தானே..! இது என்னோட சுய சம்பாத்தியம்...! நாளைக்கு நேக்கு ஏதானும்ன்னா பாலச்சந்தரும். நீயும்தான் பாத்துப்பேள்ன்னு நேக்கு ஒரு நம்பிக்கை!

''அண்ணா... பணம் இல்லேன்னாலும் பாத்துப் போம்'' என்றார் கனகேஸ்வரி.

''பாத்துப்பேன்ம்மா...! சரி விடு இதென்னது இத் தனை பேச்சு! நீ சம்மதம் குடுத்தாலும் இல்லேன் னாலும் உன் பேர்லதான் போடப் போறேன்'' என்றார் உறுதியாக.

சந்தியா ஏனோ இதில் தடையிடவேயில்லை கன கேஸ்வரி அவளை நோக்கி.

''என்னம்மா... இது...! நோக்கு உலக நடப்பு தெரி யுமோ. இல்லியோ...! நீ தலையிட்டு ஏதாவது சொல்லப் படாதோ'' என்றார்.

அவள் புன்னகைத்தாள்.

''அம்மா...! நேக்கு உலக நடப்புத் தெரியும். அத னாலதான் நான் தலையிடாம பாத்துண்டிருக்கேன். நீங்க ளாச்சு.. உங்க பிரதராச்சு...'' என்றாள்.

பட்டாபி தான் சொன்ன மாதிரியே செய்தார். பாலச் சந்தருக்கே கூட ஆச்சர்யம் தாங்கவில்லை. ஆனால் அதற்குப் பின்னால் நடந்த விஷயங்கள் அவனைக் கவலையில் ஆழ்த்தின.

8



''ஏய் என்ன.. எப்பப் பாரு! ஓட்டத்துலயே இருக்கே? கைக்கே சிக்க மாட்டேங்கறே...!'' என்று சந்தியாவின் கைகளைப் பிடித்து இழுத்தான் பாலச்சந்தர்.

அலமாரியில் எதையோ குடைந்து கொண்டிருந்த சந்தியா திரும்பி கணவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்னத்துக்கு சிக்கணும்?!'' என்று சிரித்தாள்.

''இதுக்குத்தான்!'' என்று அருகில் இழுத்தான். மெல்லக் குனிந்து தன் முத்திரையைப் பதித்தான் அவளும் இணைந்து கொடுத்தாள்.

அந்த நேரம் போன் மணி ஒலித்தது!

திடுக்கிட்டு விலகினார்கள். அவர்கள் அறையிலும் ஒரு எக்ஸ்டென்ஷன் இருந்தது.

''ஹல்லோ!'' என்று மங்களாவின் குரல் ஒலித்தது. சந்தியா இதை எதிர்பார்க்கவில்லை.

''சொல்லுங்கோ.. அக்கா'' என்றாள். ''யார்?'' என்று ஜாடை செய்த கணவனிடம் ''மங்களா அக்கா!'' என்று பேப்பரில் எழுதி காட்டினாள். அவன் முகத்தில் கடுப்புத் தெரிந்தது. நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தான்.

நேரம் இரவு ஒன்பதரை மணி!

''ஹாய் சந்தியா! டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?'' என்று கேட்டாள்.

'ஆமா! என்றா சொல்ல முடியும்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட சந்தியா செயற்கையாகச் சிரித்துக் கொண்டு.

''இல்லக்கா! சொல்லுங்கோ!'' என்றாள்.

''உன்னோட ஸ்டே ரொம்ப நன்னா இருந்துச்சு. மறு படியும் எப்ப வரே?'' என்றாள்.

''அக்கா.. இப்போதைக்கு முடியாதுன்னு தோண்றது.''

''ம்...! அப்புறம்.. அம்மா.. எப்ப வரா?'' என்றாள்.

சந்தியா சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை.

''ஓ!'' என்றாள் சுருதி இறங்கியவளாக...

''என்ன?!''

''இல்லே! அதைப் பத்தி பேச்சே இல்லையே! அம்மா.. எங்களோடவே இருக்கட்டுமே! சும்மா எப்ப வானும் விசிட் மாதிரி வேண்ணா வரட்டுமே?'' என்றாள்.

''என்ன இப்படிச் சொல்றே? நீ அம்மாவை கூப்பிடு...'' என்றாள்.

''இருங்கோ.. அவரண்டை தர்றேன்'' என்றாள். சட்டென்று ரிசீவரைக் கணவன் கையில் கொடுத்து விட்டாள். அவனிடமும் அதே தொனியில் பேசினாள்.

''மன்னி! நாளைக்குள் எப்பவாவது பேசுவோமே! அம்மா தூங்கப் போயிட்டா?'' என்று சொல்லிப் பார்த்தான்.

''இல்ல... தம்பி! குடுங்கோ! நான் பேசறேன்!'' என்றாள்.

பாலச்சந்தர் கொஞ்சம் டிஸ்டர்பான உணர்வுடன் அம்மாவின் அறையில் போனை எடுத்துப் பேச செய்தான்.

''அம்மா! என்ன இந்த தரம் இங்கே வரமாட்டேளா? சின்ன மாட்டுப் பொண்ணே போதும்னு முடிவு பண்ணிட்டேளா? நாங்களும் எங்க கடமையைச் செய்ய வேண்டாமா?'' என்றாள்.

அம்மா சட்டென்று ''பட்டாபி அங்கே வந்திருந்தாராக்கும்!'' என்று கேட்க அது காதில் விழுந்த பாலச்சந்தரும், சந்தியாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மங்களா பேசி முடித்ததற்குப் பிறகு அம்மா தங்கள் அறைக்கு வரக் கூடும் என்று காத்திருந்தார்கள். அம்மா வந்தார்.

''டேய்! இவாளுக்கு என்ன வேலை! இப்பதான் நிம்மதியா இருக்கேன். இனிமேற்கொண்டு அலையறதா இல்லை...!'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

சற்று முன்னே இருந்த ''மூட்'' மாறிப் போனான் பாலச்சந்தர். ''என்னடா எலி.. இப்படிப் போறதேன்னு யோசிச்சேன்'' என்று முணுமுணுத்தான்.

''எல்லாம் பத்து லட்ச ரூபா டெபாசிட் பண்ற வேலை?'' என்று முணுமுணுத்தான்.

''ஏன்.. சந்தியா நீ என்ன நினைக்கிறே?'' என்றான்.

சந்தியா எதுவும் சொல்லவில்லை. மௌனமாகப் புன்னகைத்தாள்.

''ஆஹா... நீ ரொம்ப டிப்ளமாடிக் இல்லே!'' என்றான் கடுப்பாக.

''அப்படி இல்லன்னா! அம்மா நம்மோட இருக்கறது தான் நேக்கு சந்தோஷம் ஆனா.. முடிவு நீங்கதான் எடுக் கணும்'' என்றாள்.

பாலச்சந்தருக்கும் அது சரியென்று பட்டது. இப்போது சந்தியாவே அவனிடம் நெருங்கி அமர்ந்தாள்.

''பாருங்கோ! குடும்பம்னா.. இதெல்லாம் வரத்தான் செய்யும்'' என்று சிரித்தாள். மெல்ல அவன் தலையை இழுத்து மார்பில் சாய்த்துக் கொண்டான்.

''நன்னா... வந்துச்சு... போ...!'' என்றான்.

அவன் மேற்கொண்டு அவளைப் பேசவிடவில்லை.

அதே சமயம்!

சௌந்தரராஜன் மனைவியை ஆச்சர்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னடி... இது! இந்த நேரத்துல பாசம் வழியறது?'' என்றான்.

''சும்மாயிருங்கோ.. இத்தனை நாள் பாத்துக்கலையா?'' என்றாள் சற்றே கோபம் போல்.

அம்மாவின் பேரிலும் கொஞ்சம் பணம் இருக்கிறது என்றவுடனே சௌந்தரராஜனுக்கும் கொஞ்சம் துணிவு வந்தது போலும்.

''இதுக்குத்தாண்டி சொல்றது? எப்பவும் ஒரே மாதிரி இருக்கணும்னு அம்மாவை என்னத்த பாத்துண்டே... நீ! பாத்திரம் கழுவாம வேலை வாங்காம ஒரு நாளாவது சோறு போட்டிருப்பியா நீ!'' என்றான் காட்டமாக.

''என்னன்னா! நம்மாத்து மனுஷா.. நம்மாத்து வேலை. இதையெல்லாம் கணக்குப் பேசறேளே'' என்றாள்.

''போதுண்டி! கிழடு வந்துடுச்சுன்னு எத்தனை தரம் உங்கம்மாவண்டை நீ பேசியிருக்கே! இப்பவும் சொல் றேன். எங்கம்மா காலத்துக்கப்புறம்தான் அந்தக் காசு கிடைக்கும். அந்தக் காசை நினைச்சுண்டு எதுவும் பண்ணாதே...'' என்று.

முதல் முறையாக தன்னிடம் ஓங்கிப் பேசுகிற கண வனைப் பற்றி அவளுக்குக் கோபமும், ஆச்சரியமும் தான். ஆனால் அவளால் பேச முடியவில்லை. இப் போதெல்லாம் அவளது பிறந்த வீட்டில் தம்பி மனைவி கொஞ்சம் முரண்டு பிடிக்க ஆரம்பித்திருந்தாள். அடிக் கடி அங்கேயும் போக முடியவில்லை. சந்தியாவின் பெரியப்பா, பெரியம்மா வேறு வசதியானவர்களாக இருந்தார்கள். கொஞ்சமாவது அவர்களது சொத்துக்கள் பாலச்சந்தருக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருந்தது. கொஞ்சம் ''ஐஸ்'' வைத்துக் கொண்டால் மாமியாரிட மிருந்து குழந்தைகளின் படிப்புக்கு அல்லது ஏதாவது ஒரு சிறிய செலவுக்கென்று வாங்கலாம்.

சந்தியா கூட தாராளமானவளாகத்தான் இருந்தாள். ''அக்கா...! மூணு குக்கர் பிரசன்ட்டா வந்திருக்கு... வேண்ணா... நீங்க ஒண்ணு எடுத்துக்கோங்கோ'' என்று சாமான்கள் கூடக் கொடுத்தாள். நம்மைக் காட்டிலும் நீருஜா வசதியாகத்தான் இருக்கிறாள். என்ன கொடுத்திருக் கிறாள்'' என்று பலதும் யோசித்து தான் மாமியாருக்கு ''அழைப்பு'' விடுத்திருந்தாள். இப்போது கணவனிடம் சொன்னாள்.

''பாருங்கோ! அம்மா மேலே நேக்கு கொஞ்சம் கோபம்தான். பொழச்சுப் பொழச்சு சொத்துன்னு ஒண்ணும் இல்லாம் போச்சேன்னு. இப்ப என்ன அதுக்கு?'' இனிமே நான் பிராயச்சித்தம் செஞ்சுடறேன்'' என்றாள்.

''பிராயச்சித்தம்'' என்ற வார்த்தையில் அசந்தே போனான். 'யம்மா! எப்பேர்ப்பட்ட திருகிணி பீரங்கிடி நீ' என்று எண்ணிக் கொண்டான். மனதுக்குள்தான். ஆனால் அம்மா நேர்மாறான நிலையை எடுத்த போது அவனுக்கும் கொஞ்சம் வருத்தமேற்பட்டது மங்களா மறைமுகமாக என்னென்ன செய்யப் போகிறாள் என்று அவனுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

* * *

''என்னடா.. பாலச்சந்தர்.. பிஸியா இருக்கியா'' என்றான் சௌந்தரராஜன்.

கணக்கு வழக்குகளில் கொஞ்சம் தொகை உதைக்கவே அதில் ஆழ்ந்திருந்தான் பாலச்சந்தர். திடீரென்று சௌந்தரராஜனிடம் இருந்து அழைப்பு வரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அதிலும் அலுவலக நேரத்தில் அழைக்கிற பழக்கமும் இல்லை. எனவே ''யார்?'' என்றான்.

''நான்தாண்டா.. சௌந்தரராஜன் பேசறேன்'' என்றான்.

''அண்ணா...!'' என்றான் உற்சாகமாக.

''பிஸியா இருக்கியா? டிஸ்டர்ப் பண்றேனா?'' என்றான்.

''பிஸிதான்! ஆனா.. பரவால்லே! இதோ வெளியே வர்றேன்'' என்று செல்போனை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

''என்னண்ணா.. விஷயம்?'' என்றான்.

''என்னடா..! நேத்து தர்மபத்தினி அழைச்சாப் போல இருக்கு...'' என்றான்.

''ஆமாண்ணா!'' என்றான் பாலச்சந்தர்.

''அம்மாவை விட பத்து லட்சத்திற்குத்தான் மதிப்புப் போலே'' என்றான் குரலில் வருத்தத்துடன்.

''.....''

''என்னடா... ஆச்சர்யம்! பட்டாபி மாமா என்ன திடீர்ன்னு பனங்காய்ச்சி மரம் மாதிரி ஆயிட்டார்?''

''அதாண்ணா.. நேக்கும் புரியலே! கேட்டா கும்பகோணத்துல ஒரு வீடு, தஞ்சாவூரில் ஒரு வீடுன்னு ரெண்டு இருந்துதோன்னா.. ஒண்டிக்கட்டைக்கு என்னத்துக்கு ரெண்டு வீடுன்னு கும்பகோணத்து வீட்டை வித்துட்டேங்கறார்...'' என்றான்.

''தஞ்சாவூர்ல வீடு தெரியும். கும்பகோணத்துல வீடு இருந்ததா... என்ன?'' என்றான் சௌந்தரராஜன்.

''தெரியலியேண்ணா..'' என்றான்.

''அது சரி..! சந்தியா.. என்ன சொன்னா? அனுப்ப றேங்கறாளா?'' என்ன?

''இல்லண்ணா... சந்தியாவுக்கு அம்மாவை அனுப்பப் பிரியமேயில்லை. போற போக்கைப் பாத்தா.. இது வேற ஒரு இஷ்யூ... ஆயிடும் போல இருக்கு...!'' என்றான் பாலச்சந்தர்.

''ஆமடா! இந்தப் பொம்மனாட்டிகளைப் பாத்தியா! அம்மாவிடம் இங்க இருக்கச்சே... எதுவுமே சொல்ல மாட்டா! நேக்குத் தோணுதுடா...! அம்மாகிட்டே காசு

இல்லேனுதானே இவா ரெண்டு பேரும் அம்மாவை இளப்பமா... நினைச்சா... அம்மா இங்க வரணும். அம்மாவை என் ஆம்படையா விழுந்து விழுந்து கவனிக் கறதைப் பாக்கணும்னு தோண்றதுடா...'' என்றான்.

பாலச்சந்தரின் முகத்தில் புன்னகை அரும்பியது. அண்ணனே தொடர்ந்தான்.

''இத்தனை பாட்டுக்கு பொண்டாட்டியை அடக்கி வக்கப்படாதோண்ணு தோண்றதா? என் முன்னாலே ரொம்ப நல்லா நடிச்சுப்பாடா...! ஆனா.. மத்த விஷயத் துல... என்னைக் கவனிக்கறதுல. குடும்பத்தை நிர்வாகம் செய்யறதுல... எல்லாம் கெட்டி!'' என்றான்.

''அண்ணா.. நேக்கென்னவோ, சந்தியாவும் அம்மா வும் இழைஞ்சுக்கறதைப் பார்த்தா... சந்தியா அம்மாவை அனுப்ப மாட்டாள்னுதான் தோன்றது!

''ம்...!'' என்று பெருமூச்சுவிட்டான் சௌந்தர ராஜன்.

''இருக்கட்டும்.. அம்மாவுக்கும் அப்படியும் ஒரு காலம் இருக்கட்டும்...'' என்றான்.

''அண்ணா... சுரேஷும், ரம்யாவும் எப்படி இருக்கா?'' என்றான் பாலச்சந்தர்.

''அதுகளுக்கென்ன? ரெண்டும் நன்னாப் படிக்கற துகள். துறு துறுன்னு இருக்கறதுகள்...'' என்றான்.

திடீரென்று நினைவு வந்தவன் போல ''என்ன... இன்னும் நீரஜா கிட்டேயிருந்து அழைப்பு வர்லையே?'' என்றான்.

''இல்லையே...!'' என்றான் பாலச்சந்தர்.

''வரும் பாரு! இன்னைக்குள்ளேயே வரும் பாரு!'' என்று சிரித்தான் சௌந்தரராஜன். மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு போனை வைத்தான்.

வந்தது!

நீரஜாவிடமிருந்து அழைப்பு வந்தது!

அன்றிரவு!

நேற்றுப் போலவே இரவு எட்டு மணி வாக்கில் அழைப்பு வந்தது.

''சோட்டு...! இருக்குதா?'' என்றாள்.

பாலச்சந்தர் ''ஹேய் சோட்டு! இந்தா நோக்குத்தான்'' என்று குமிழ்சிரிப்புடன் போனைக் கொடுத்தான்.

''சொல்லுங்கோ.. நீரு... அக்கா!'' என்று சந்தியா உற்சாகமாகப் பேசுவதை வேடிக்கை பார்த்தான்.

''நன்னா..இருக்கேளா?''

''நன்னா.. இருக்கோம்க்கா! அங்க ஆத்துல எல்லாம் நன்னா.. இருக்கேளா?''

''எல்லாம்.. நன்னா. இருக்கோம். என்னது கல்யாண மாகி ரெண்டு மாசம் ஆயிடுத்து.. ஏதும் விசேஷம் இல் லையா?''

''விசேஷம்... இல்லாம.. என்ன? தினமுமே விசேஷம் தான்...''

''நான் அதைக் கேக்கலைடி...!'' என்று சிரித்தாள் நீரஜா.

''அக்கா...! அதெல்லாம் பகவான் சித்தம்...'' என்றாள் சந்தியா.

''பகவான் என்னடி... பண்ணுவார்? நீங்கதான் பிளான் பண்ணனும்!'' என்று மறுபடியும் சிரித்தாள் நீரஜா.

''போங்கோ.. அக்கா!'' என்றாள் சந்தியா.

''சரி.. அது இருக்கட்டும்'' அம்மா... எங்காத்துக்கு எப்ப வரா?'' என்றாள்.

சந்தியா கொஞ்சம் திகைத்துத்தான் போனாள். கண வனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் குறும்புச் சிரிப் புடன் விட்டத்தைப் பார்த்தான்.

''அக்கா..!'' என்று இழுத்தாள் சந்தியா.

''ம்.. சொல்லு!'' என்றாள் நீரஜா.

''அக்கா...'' அம்மாவை நாங்க இப்போதைக்கு அனுப் பறதாயில்லை. அவா.. இப்பத்தான் கோயில் குளம்னு ஏதோ போயிட்டு வரா.. கொஞ்ச நாள் போகட்டும்...'' என்றாள்.

''சரி... சரி! கொஞ்ச நாள் கழிச்சானும் அனுப்பு வேளோ இல்லியோ...!'' என்றாள்.

''அப்புறம்.. குழந்தைகள்ளாம் எப்படி இருக்கா!'' என்று சந்தியா பேச்சை மாற்றினாள்.

சந்தியா போனை வைத்தவுடன் ''சௌந்தர் அண்ணா... ஆபீஸுக்கு போன் பண்ணினான்'' என்றான்.

''ஓஹோ...!'' என்றாள் சந்தியா.

''பட்டாபி... மாமா! வந்துட்டுப் போனாலும் போனார். அம்மாவுக்கு திடீர் கிராக்கி... போ...!'' என்றான்.

சந்தியா புன்னகைத்தாள்.

''அதென்ன.. அம்மாவை அனுப்பறதாயில்லைன்னு சொல்ல வேண்டியதுதானே. கொஞ்ச நாள் கழிந்து அனுப்பறோம்கறே!'' என்றான் புகார் போல.

''இத பாருங்கோ! ரெண்டு பேரும் ஓரகத்திகள்! அவா எண்டை போய் நான் அனுப்ப மாட்டேன்னு எப் படிண்ணா சொல்ல முடியும். நீங்கதான் சொல்லணும்!'' என்றாள்.

''ஆகட்டும் அடுத்த தரம் பேசறச்சே நான் ஸ்ட் ராங்கா.. சொல்லிடறேன்'' என்றான்.

சந்தியா அதற்கு ''நீங்க சொல்லி என்ன செய்யறது? அம்மா சொல்லணும்...'' என்றாள்.

பாலச்சந்தர் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனான். மனைவியின் முகத்தை ஆழ்ந்து பார்த்தான். ஆனால் அவளோ அவன் முகத்தை நேரடியாகப் பார்க்க மறுத் தாள்.

9



''வாங்கோ... வாங்கோ...'' என்று வரவேற்றார் கோமதி. புன்னகைத்தபடி உள்ளே நுழைந்தார் கனகேஸ்வரி.

''சும்மா... கோவிலுக்கு வந்தேன் அப்படியே உங் களையும் பாத்துட்டு போலாம்னு வந்தேன்.''

''பேஷா... வாங்கோ... நானே உங்காத்துக்கு வர் லாம்னு இருந்தேன்.''

''ஆமா... பாத்து ஒரு வாரமாச்சோ இல்லியோ...'' என்றார் கனகேஸ்வரி.

சற்று நேரம் அளவளாவி விட்டு கோமதி சொன்னார்.

''கனகா...! ஒரு விஷயம் சொல்றேன் கேளுங்கோ நம்ம ஏரியா பொம்மனாட்டிகள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் நடத்தறோம் தெரியுமோ.. இல்லியோ..'' என்றார்.

''ஆமா...! ரொம்ப நாளைக்கு முன்னயே என்னக் கூட சங்கத்தில சேரச் சொல்லிக் கேட்டா. அப்ப வேற நம்ம பாலு படிச்சுண்டிருந்தான். ஆத்துல ரொம்பக் கஷ்டம் அவா வேற இல்லியோன்னா... நான் சந்தாவெல்லாம் கட்ட முடியாதுன்னு சொல்லிட்டேன்'' என்றார்.

''ஒஹ்! போறது போங்கோ! இப்ப எங்காத்துக்காரர் நம்ம எல்லாத்துக்கும் சந்தா கட்டிடறாராம். நான், நீங்க யசோதா எல்லாரும் சேர்ந்துக்கறதாம். அப்பப்போ.. கொஞ்சம் வெளிய போயிட்டு வந்தாத்தான் நல்லதாம் கறார்.''

''ஓஹோ...!'' என்றார் கனகேஸ்வரி மேற்கொண்டு என்ன சொல்வதென்று தெரியாமல்.

''கட்டிடுங்கோன்னு.. சொல்லிட்டேன். ஆனா நேத்து சந்தியா வந்தா, என்னமோ ரெண்டு மாட்டுப் பொண்களும் மாறி மாறிக் கூப்பிடறாளமே! சொல்லிண்டிருந்தா...'' என்றார்.

''ஆமா...! அவாளுக்கென்ன வேலை...!'' என்றார் கனகேஸ்வரி.

''அதான்.. நானும் சொன்னேன். ஆனா.. சந்தியா என்ன சொன்னா.. தெரியுமோ.. தெரியலே! அம்மா என்ன முடிவெடுப்பாளோ.. தெரியலே! போகாதேன்

னும் நாம சொல்ல முடியாது. போங்கோனும் சொல்ல முடியாது.. அப்படீங்கறா...'' என்றார்.

கனகேஸ்வரியின் முகத்தில் சிந்தனையின் சாயல் தெரிந்தது. சம்மந்தியம்மாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார்.

''போங்களேன்'' என்ற பாவம் தெரிகிறதோ என்று ஆழ்ந்து கவனித்தார்.

கோமதியின் முகத்தில் யதார்த்த பாவம்தான் இருந்தது. கனகேஸ்வரியின் உள்ளத்தில் குழப்பம் தெரிந்தது.

''அதற்குள்ளாக தன் பெரியம்மாவிடம் வந்து சொல்லியிருக்கிறாளே...'' என்ற எண்ணமும் தோன்றியது. ஆனால் அதற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்க அவருக்கு அவகாசம் இருக்கவில்லை.

''பாத்தி... என்ன பண்ணிண்டிருக்கே!'' என்று ஓடி வந்தாள் மீரா.

இராமநாதனின் மகள்.

''ஐயோ! செல்லக் குட்டி.. ராஜாத்தி.. ஓடி... வா...!'' என்று அள்ளிக் கொண்டார் கோமதி.

''பாத்தி...! நாங்கள்ளாம் கோவிலுக்குப் போறோம் வர்றீயா?'' என்றார்.

''அப்படியா! எந்தக் கோவிலுக்கு?'' என்றார் கோமதி.

''மாங்காடு.. மயிலாப்பூர்... எல்லாம்தான்'' என்றான் பின்னாலேயே வந்த இராமநாதன்.

''எங்கயும் வெளியே கூட்டிண்டு போக மாட்டேன்டிருந்தது புலம்பிண்டிருந்தா.. இவா...! சரி.. போலாம்

வா...! எங்கே போகலாம்னு.. கேட்டா.. மாங்காடுங் கறா...'' என்றார் இராமநாதன்.

''இல்லன்னா...! நேக்கு ஒரு வேண்டுதல்... இருக்கு'' என்றாள் மணிமாலா.

''என்னவாம்!'' என்றார் கோமதி.

''நம்ம சந்தியாவுக்கு நல்லபடியா.. வரன் அமைஞ்சா.. மாங்காட்டுக்கு வரேன்னு.. வேண்டியிருந்தேன்'' என் றாள் மணிமாலா.

கனகேஸ்வரிக்கு மணிமாலா ஒரு ஆச்சர்யமாகத் தெரிந்தாள். தன் புக்காத்து மனிதர்களிடம் மிகவும் இயல்பாக அவள் ஒட்டிக் கொள்வதைப் பார்த்தாள். பொறாமை, போட்டி என்ற குணங்களெல்லாம் அவ ளிடத்தில் இருப்பதேயில்லை. அதிலும் சந்தியாவும், மணிமாலாவும் சகோதரிகள் போல பழகுவதில் இன்னும் ஆச்சர்யம். தன் மருமகள் மணிமாலாவைப் போலத்தான் தங்கள் வீட்டில் பழகுகிறாள் என்பது புரிந்தது.

திடீரென்று மனம் மற்ற மருமகள்களை நினைத்தது. அவர்கள் இப்படியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக் கும்? ஆனால் இப்போது மட்டுமென்ன இரண்டு நாட்களாக வருந்தி வருந்தியழைக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் பட்டாபியண்ணாவின் பணம் அவ ருடையதுதான் அது தார்மீக நீதியாகத் தான் சொந்தம் கொண்டாட முடியாத பணம் என்று எப்படிப் புரிய வைப்பது? அவரை மேற்கொண்டு யோசிக்கவிடாமல் மணிமாலா கேட்டாள்.

''அம்மா! நான் பேசிண்டேயிருக்கேன். ஏதோ யோச னையில் இருக்கேள் போல இருக்கு...'' என்றாள்.

''ம்... ம்...! என்று திடுக்கிட்டு விழித்தாற் போலத் தேறினார் கனகேஸ்வரி.

''ம்.. என்ன.. கேட்டே?!'' என்றார்.

''இல்ல.. நீங்களும்.. கோவிலுக்கு வாங்கோளேன்...'' என்றாள்.

''நானா? ஆத்துல சொல்லிக்கலையே?'' என்றார் தாக்கமாக.

''என்னத்தை சொல்றது'' பாலு ஆபீஸ் போயிருப் பார். நம்ம பாலுவுக்கு நான் சொல்லிடறேன்'' என்றார் இராமநாதன்.

சொல்லவும் செய்தான். பாலச்சந்தர் சந்தோஷமாக சம்மதித்தான்.

இரண்டு கார்களில் கிளம்பினார்கள். போகும் வழியில் பத்து நிமிடங்களில் கனகேஸ்வரி உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

கோவில்களுக்கு சென்றதில் குழந்தை மீராவோடு பேசிக் கொண்டு சென்றதில் மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டார். ஆனால் வீட்டில் இறங்கியதற்குப் பின்பு யோசனையில் இருந்தார்.

மகன் மாலை ஆறு மணிக்கு ''என்னம்மா! எப்படிப் போச்சு... கோயில் ட்ரிப்!'' என்றான்.

''ரொம்ப நன்னாருந்துச்சுடா..!'' அதிலயும் அந்த குழந்தை மீரா இருக்காளோன்னா.. ரொம்ப சமத்து...! நன்னாப் பேசறது.. பாடறது... அழகாப் பேசறது.. நன் னாப் பொழுது போச்சு'' கோவில்ல எல்லாம் தரிசனம் வேற நன்னா.. இருந்துச்சு..'' என்றார்.

மகனுக்கு காபி போட்டுக் கொடுத்தார் பேச்சினூடே.

''என்னமோ.. தெரியலடா! என்ன.. ரெண்டு மருமகள்களும்.. மாறி மாறிக் கூப்பிடறளாமே..ன்னு கோமதியம்மா... கேட்டா'' என்றார்.

''ம்...!'' என்று மகன் சாதாரணம் போல உள் வாங்கிகொண்டாலும் அது அவன் உள்ளத்திலேயும் ஒரு கேள்வியை எழுப்பியது.

அதற்குள்ளாக அம்மா மறுபடியும்,

''ஏண்டா...! நான் வேண்ணா... வழக்கம் போல போகட்டுமா?'' என்றார்.

''வேண்டாம்...!'' என்றான் சுருக்கமாக.

''இல்லடா...! உன் வொய்ஃப்புக்கு ஏதும் பர்டனா.. இருப்பேனோ...'' என்றார்.

''சேச்சே..! அப்படியெல்லாம் நினைக்க மாட்டா!'' என்றான் பாலச்சந்தர் தீர்மானமாக.

கனகேஸ்வரி யோசித்தார். பிறகு தீர்மானமாக சொன்னார்.

''சரி...! நான் ஒண்ணு... செய்யறேன்! எதுக்கும் பத்து.. பத்து... நாள் இருந்துட்டு வந்துடற மாதிரிப் போறேனே...'' என்றார்.

பிடிவாதமாக அவர் முடிவெடுத்த போது பாலச்சந்தருக்கும் கொஞ்சம் வருத்தம் என்றாலும் சந்தியா பெரிதாக ஆட்சேபிக்காதது அவன் மனதில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது.

* * *

வேலையில் ஆழ்ந்திருந்தான் பாலச்சந்தர்.

செல்போன் சங்கீதம் பாடியது. யார் எனப் பார்க்காமலே இடது கையில் எடுத்து இடது காதுக்குக் கொடுத்தான்.

''என்னன்னா பிஸியா இருக்கேளா?'' என்ற குரல் ஒலித்தது சந்தியா உற்சாகமாகப் பேசினாள்.

ஒரு கணம் பாலச்சந்தரின் மனத்தில் ''குப்''பென்று மகிழ்ச்சி பொங்கியது. ஆனால் உடனே வடிந்தது.

நேற்றிலிருந்தே ஒரு நெருடல் அம்மா ஊருக்குப் போகிறேன் என்று புறப்பட்ட போது சந்தியா பெரிதும் ஆட்சேபிக்காதது மட்டுமல்ல பாக்கிங்கிலும் உற்சாகமாக உதவி செய்தாள்.

அம்மாவை ஸ்டேஷனுக்குக் கொண்டு விடக் கார், மற்ற வசதிகள் எல்லாமும் செய்து கொடுத்தாள். அது மட்டுமல்லாமல் ''அம்மா! இதுல இரண்டாயிரம் ரூபாய் பணம் வச்சிருக்கேன். செலவுக்கு வச்சுக்கோங்கோ...'' என்றாள்.

''நேக்கெதுக்கு.. அத்தனை?'' என்று அம்மா தடுத்த போது ''இருக்கட்டும்மா! சின்னச் சின்னச் செலவுக்கெல்லாம் அவாளை எதிர்பார்க்க வேண்டாமே! நீங்களும் குழந்தைகளுக்கு ஏதானும் வாங்கிக் கொடுங்கோ...? மேற்கொண்டுப் பணம் வேணும்னாலும் தயங்காமக் கேளுங்கோ.. மணியார்டர் பண்ணிடறேன்'' என்றாள்.

அம்மா மகனின் முகத்தை ஜாடையாப் பார்த்தார். அவன் முகம் வாடி இருந்தது. தனியாகச் சந்தர்ப்பம் கிடைத்த போது சொன்னான்.

''கவலைப்படாதடா! அவா வருத்தி வருந்திக் கூப் பிடறக்கே அனுப்பலேன்னா. தன்னைத் திட்டுவாளோன்னு அவளுக்கு பயம் போலே. இருக்கட்டும்டா! அவளுக் கும் உன்னோட கொஞ்சம் தனியா இருக்கணும்னு இருக்குமோல்லியோ...!'' என்றார்.

மகன் கொஞ்சம் சமாதானமானான். அம்மா மேலும் சொன்னார்.

''பத்துப் பத்து நாள்தானேடா..! இருக்கப் போறேன்! ஓடி வந்துடறேன்...'' என்றார்.

அம்மா தன்னைச் சமாதானப் படுத்த வெகுவாக முயற்சி செய்வது கண்டு அவனுக்கும் மகிழ்ச்சி பொங் கியது.

''சரிம்மா! இனிமேலாவது ஊர் ஊராப் போற அலைச் சல் மிச்சமோனு பார்த்தேன்.''

''பரவால்லைடா! எடுத்தவுடனே... நிறுத்த வேண் டாம். கொஞ்சம், கொஞ்சமா குறைச்சுண்டுக்கறேன்'' என்றார்.

''சரிம்மா!'' என்றான்.

என்ன இருந்தாலும் மனைவியின் மேல் ஏற்பட்ட வருத்தத்தின் தாக்கம் குறையவில்லை. இப்போதும் அது மனத்துக்குள்ளே ''திண்''னென்று வந்து உட்கார்ந்து கொண்டது.

''ஆமா...! என்ன விஷயம் சொல்லு..!'' என்றான்.

''இன்னைக்கு ஆத்துக்கு சீக்கிரமே வந்துடறேளா? நானும் பர்மிஷன் போட்டுண்டு வந்துடறேன்'' என்றாள்.

''உனக்கென்ன... கிட்டத்தட்ட முதலாளியம்மா மாதிரி. எப்ப வேண்ணா... பர்மிஷன் போடலாம். நேக்கு

அப்படியெல்லாம் கிடைக்காது. பொண்ணே?'' என் றான்.

''ஓ!'' என்றாள் உற்சாகம் குன்றியவளாக. அவன் மேனேஜரிடம் கேட்டால் பர்மிஷன் கிடைக்கும். அவன் தேவையில்லாமல் பர்மிஷன் போட மாட்டான் என்பது தெரியும். ஆனாலும் இப்போது போனால் சந்தியாவிடம் ஏதாவது கேட்டு விடுவோமோ என்று பயமாக இருந்தது. கொஞ்சம் கோபம் ஆறட்டும் என்று எண்ணினான். அதனால்தான் எதுவும் சொல்லவில்லை.

''சரிடா...!'' என்றான் சமாதானம் போல.

''ஓக்கே! பரவாயில்லை!'' என்று போனை வைத்தாள் சந்தியா. அப்போது பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அடுத்தடுத்து நடந்த நிகழ்ச்சிகள் அவள் மனதில் சிந்தனைகள் தோற்றுவித்தன.

மறுநாளும் தாமதமாகவே வந்தான் பாலச்சந்தர். திருமணமானதில் இருந்து கிடைத்த அந்தத் தனி மையை தங்களுக்கேற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்ளவுமில்லை.

சாதாரணமாகத் தனியறையில் இருக்கும்போது கூட மெல்லிய குரலில் விளையாட்டாக ஏதாவது பேசுவான். அம்மா வெளியே போயிருக்கும்போதோ அல்லது கோயிலுக்குப் போயிருக்கும்போதோ வெளிப்படை யாகவே சீண்டி விளையாடுவான். ஆனால் கடந்த இரண்டு நாட்களில் அப்படி எதுவும் நிகழாதது அவ ளுக்கு முதலில் புரியவேயில்லை.

இரண்டாம் நாள் மாலை ''ஏன்னா...'' சினிமாவுக்குப் போகலாமா?'' என்றாள்.

''ஆமா! என்னத்தைப் பாக்கறது போ! எப்படியும் ஒரு வருஷத்துக்குள்ளே டி.வி.யிலயே போட்டுடப் போறா.. அதுக்குள்ளே.. தியேட்டர்ல போய் கசகசப்பிலே உட்கார்ந்துண்டு.. பார்க்கணுமா?'' என்றான்.

''அதுவும் சரிதான்..'' என்றாள் சந்தியா. ஆனால் இரண்டு கட்டாக ஃபைல்களைக் கொண்டு வந்து அதில் ஆழ்ந்து போகவும்தான் அவளுக்குள் பொறி தட்டியது.

இரண்டாம் நாள் நளினமாக அவன் கைகளில் இருந்த ஃபைல்களை நகர்த்தினாள்.

''என்னது.. இப்படி பிஸியா இருக்கேள்? என்னோட பேச மாட்டேளா?'' என்றாள்.

அவன் தனது மனது வருத்தத்தையெல்லாம் ஒரு பக்கம் வைத்து விட்டு.

''என்ன பேசணும்?'' என்றான்.

அவள் திகைத்துப் போனாள்.

''உங்களுக்கு என் மேலே ஏதோ கோபம் போல இருக்கே!'' என்றாள்.

''நேக்கு என்ன கோபம்?'' என்றான். சொல்லும் போதே கோபம் தொனித்தது.

''இத பாருங்கோ! மனசுல ஏதும் இருந்தா நேரடியாப் பேசிடுங்கோ..'' என்றாள்.

''எல்லாரும் நேரடியாவா.. நடத்துக்கறா?'' என்றான்.

''யாரைச் சொல்றேள்?''

''யாரையும் சொல்லலே..'' என்று ஃபைல்களை மறுபடியும் எடுக்க முயற்சித்தான்.

''இல்லே..! யாரையும் குறிப்பிட்டுச் சொல்லலேனாலும்.. அது என்னமோ நேக்கு உறுத்தலா.. இருக்கு...'' என்றாள்.

அவன் திரும்பி தீர்க்கமாக அவளைப் பார்த்தான்.

''நோக்கு ஏன் உறுத்தணும்!'' என்றான்.

''உறுத்தறது. நீங்க ஏதோ என்னைத் தப்பாப் புரிஞ்சுண்ட மாதிரித் தோண்றது.''

''எது தப்பு.. எது சரின்னு தீர்மானம் பண்றது?'' என்றான். குரலில் கொஞ்சம் காட்டம் தெரிந்தது. ஆனால் அவளை நேராகப் பார்க்கவில்லை.

''ஏன்னா.. என்னை நேராப் பாருங்கே...!'' என்றாள்.

பார்த்தான்.

''இத பாருங்கோ! உங்களுக்கு என் மேல கோபம்ன்னா... நேரடியாக் காட்டுங்கோ! பேசித் தீர்த்துக்கோங்கோ! மனசுல வச்சுண்டு புழுங்கப்படாது.. தெரியறதோ?'' என்றாள்.

அவன் சற்று நேரம் கட்டிலின் மேல் இருந்த படுக்கையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''சந்தியா! நாம சந்திக்கறதுக்கு அம்மாவே ஒரு காரணம். நேக்கு உன் மேல அட்ராக்ஷன் வந்ததுக்கு முக்கிய காரணமே நீ அம்மா மேல காட்டின அக்கறை தான்..'' என்று இழுத்து நிறுத்தினான்.

அவள் புன்னகையுடன் நேர்ப்பார்வை பார்த்தாள். அவன் முதலில் சற்றுத் திணறினான். ஆனால் தொடர்ந்தான்.

''ஆனா.. அம்மாவை ஊருக்கு அனுப்பறதுல.. ரொம்ப ஆர்வமா..'' என்று நிறுத்து முன்னே அவள் குறுக்கிட்டாள்.

''இத பாருங்கோ..! இத்தனை நாள் அம்மா அவாத்துக்கு மாறி மாறிப் போயிண்டிருந்தா. நீரஜா அக்காவும், மங்களா அக்காவும் மாறி மாறிக் கூப்பிடறா..! என்னை என்ன பண்ணச் சொல்றேள்?''

''ம்... அவா.. எதுக்குக் கூப்பிடறா...! அம்மாகிட்டே இப்பப் பணம் இருக்கு! அதனால ரொம்ப வருத்திக் கூப்பிட்டுத் தாங்கறா..'' என்றாள்.

அப்போதுதான் அந்த வார்த்தைகளைச் சொன்னாள் சந்தியா.

''என்ன சொன்னே?!'' என்றான் பாலச்சந்தர் ஆர்வமாக.

அவள் மறுபடியும் சொன்னாள். அவன் கண்கள் தெறித்து விழுகிறாற் போல அவளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்துவிட்டான்.

10



''அம்மா... இன்னைக்கு குழந்தைகளுக்கு வேன் வராதாம். நான்தான் கொண்டு விடணும்'' என்றாள் மங்களா.

''சரிம்மா.. போயிட்டு.. வா! நீ வர்றதுக்குள்ளே நான் பாத்திரம் கழுவிடறேன்'' என்றார் கனகேஸ்வரி.

''ஐயோ.. அம்மா! சும்மாயிருங்கோ...! நீங்க ஒண்ணும் செய்ய வேண்டாம். நான் வந்து பாத்துக்கறேன்'' என்றாள் மங்களா.

''இருக்கட்டும்மா...! என்ன ஒரு பத்துப் பாத்திரம் இருக்கும்.. அவ்வளவுதானே..'' என்றார் கனகேஸ்வரி.

''இல்லம்மா.. ப்ளீஸ்! நீங்களே ரெஸ்ட் எடுக்கணும்னு வந்திருக்கேள். உங்களைத் தொந்தரவு செஞ்சு... நன்னாருக்காது...'' என்று பரபரவென்று பேசிக் கொண்டு நகர்ந்தாள் மங்களா.

கனகேஸ்வரி சலிப்புடன் சோபாவில் அமர்ந்தார். எவ்வளவு நேரந்தான் சும்மா இருப்பது. முன்பெல்லாம் தன் சக்திக்கு மீறிய அளவுக்கு வேலை கொடுப்பாள் மருமகள். திக்கித் திணறி முடித்து வைத்தால் அதிலும் குற்றம் சொல்வாள். இப்போதெல்லாம் விரும்பி விரும்பி வேலை செய்கிறேன் என்றாலும் வேண்டாம் என்கிறாள்.

நியாயப்படி கனகேஸ்வரிக்கு மகிழ்ச்சி ஏற்படவேண்டும். ஏற்படவில்லை. அது மட்டுமல்லாமல் இது தனக்கான மரியாதை அல்ல தன் பணத்துக்கான மரியாதை என்று தோன்றியது.

இப்போது பணம் இருக்கிறது என்ற மகிழ்வு கூட ஏற்படவில்லை. ஏனென்றால் இது தன்னுடைய பணமல்ல. பட்டாபி என்ற பைத்தியக்காரன் தன்மேல் கட்டிவிட்டுப் போன சுமை என்று தோன்றியது. அதனால் மருமகளின் உபசரிப்பு ஒன்றும் ரசிக்கவில்லை.

யாரோ வருகிறாற்போல இருக்கவே நிமிர்ந்து பார்த்தார். மகன் வந்திருந்தான்.

''என்ன இந்த நேரத்துல?'' என்று ஆச்சரியத்துடன் பார்த்தார்.

''சும்மாதாம்மா! ஆபீஸ்ல பர்மிஷன் போட்டுட்டு வந்தேன்'' என்றான்.

''அப்படியா?'' என்றார் ''காபி போடட்டுமா?'' என்றார்.

''போடும்மா..! ரெண்டு பேரும் காபியைக் குடிச்சுண்டே விச்ராந்தியாப் பேசலாம்'' என்றான்.

அம்மா எழும்போதே ''மங்களா குழந்தைகளைக் கூட்டிண்டு வரப் போயிருக்காளாக்கும்?'' என்றான்.

மகன் தெரிந்து கொண்டுதான் வந்திருக்கிறான் என்று தோன்றியது.

அம்மாவின் கைக்காபியை ருசித்துக் குடித்துக் கொண்டே அம்மாவை அன்புடன் பார்த்தான்.

''என்னம்மா... இந்தத் தரம்.. உபசரிப்பெல்லாம் பலமா இருக்கோ?'' என்றான்.

''ஆமப்பா...!'' என்றார் அம்மா ரியாக்ஷனை அடக்கி வாசித்தபடி. ஏனென்றால் மகன் எந்த விதமான ரியாக்ஷனை எதிர்பார்க்கிறான் என்று தெரியவில்லை.

மகன் சிரித்தான். அதில் ஒருவிதமான கேலியும் கலந்திருந்தது.

''உலகமே இப்படித்தாம்மா..!'' என்றான்.

அம்மா ஒன்றும் பேசவில்லை. ஓரிரு வினாடிகள் அமைதியில் கழிந்தது. பிறகு மகன்,

''என்ன திடீர்ன்னு.. பட்டாபி மாமாவுக்கு இப்படித் தோன்றியது...'' என்றான்.

கனகேஸ்வரி உச்சுக் கொட்டினார்.

''அம்மா... அது பத்திப் பேசத்தான் வந்தேன்'' என்றான்.

இதற்குள்ளாக கனகேஸ்வரியும் மகன் அது பத்திப் பேசத்தான் வந்திருக்கிறான் என்று புரிந்து கொண்டார். அவனே பேசட்டும் என்று காத்திருந்தார்.

''அம்மா.. சொல்றேன்னு நினைக்காதே! மங்களா அந்தப் பணத்துக்குத்தான் அடிப்போடறா! இப்போ அவாத்திலயும் பெரிய சப்போர்ட் இல்லே! அவளோட தம்பி வைஃப் இவளை அண்ட விடறதில்லே. அதனால கொஞ்சம் அரண்டுதான் போயிருக்கா. பெரிய அளவுக்கு வசதியில்லேன்னாலும் ஏதோ நம்மோட சூழ்நிலைக்கு ஒத்து வருவான்னு நினைச்சேன். ஆனா அவ அம்மா.. நன்னா... தூபம் போட்டுப் போட்டுப் புண்ணியத்தைக் கட்டிண்டா..! இப்ப இந்தப் பக்கம் சாயறா.. அதுலயும் இப்போ நோக்கும் பணம் வேற இருக்கோன்னா..'' என்றான்.

கனகேஸ்வரி அமைதியாகவே கேட்டார்.

''நியாயப்படி.. நான் நோக்கு ஏதாவது செய்திருக்கணும். ஆனா.. வருமானம் வாய்க்கும், கைக்குமா ஏதோ டீசன்ட் லைஃப் நடத்தற அளவுக்குத்தான் இருந்துச்சு. அதனாலதான் எப்பவுமே இல்லைன்னாலும் அம்மா நம்மோட நாலு மாசமாவது இருந்தாத் தேவலைனு தோணிருச்சு. கஷ்ட நஷ்டம் இருந்தாலும் அம்மா

நம்மோட இருக்கணும்னு ஒரு திருப்தி இருந்துச்சு. இனிமே அப்படி வரமாட்டேனு தோண்றது. அதான் இப்ப இத்தனை பேசறேன்'' என்றான் சௌந்தரராஜன்.

அவனிடம் ஒரு குற்ற உணர்ச்சி தென்படவே கனகேஸ்வரி குறுக்கிட்டுப் பேசினார்.

''நீ என்னவோ.. வருத்தப்படறா மாதிரித் தோண்றது. வேண்டாம்ப்பா...! எல்லாருக்கும் அவா அவா கஷ்டம் இருக்கத்தான் செய்யும். நேக்கு எந்த வருத்தமும் இல்லே! குடியும் குடித்தனமுமா இருங்கோன்னு நானே கல்யாணம் பண்ணி வச்சுட்டு. அதைக் கெடுக்கப் படாதோன்னா.. உன்னால முடிஞ்ச மட்டும் நீயும் பாத்துண்டயே! விடு இப்பத்திக்கு எதுக்கு அதை யெல்லாம் பேசிண்டு..'' என்றார் ஆறுதலாக.

சௌந்தரராஜன் அம்மாவைப் பெருமையாகப் பார்த்தான். பிறகு சொன்னான்.

''அம்மா நீ எப்பவுமே பெருந்தன்மையானவ.. ஆனா.. லோகத்தையும் கொஞ்சம் புரிஞ்சுண்டு நடந்துக்கோ! பட்டாபி மாமா முழுக்க முழுக்க உன் பேர்ல பணத்தைப் போட்டிருக்கார்ன்றதையும், நீ எப்ப வேண்ணா.. அதிலேயிருந்து பணத்தை எடுக்கலாம் கறதையும் நான் மங்களாவுக்கு சொல்லலே. பட்டாபி மாமா அம்மாவுக்குனு பணம் கொடுத்திருக்கார். ஆனா ஜாயிண்ட்டாத்தான் போட்டிருக்கு. மாமாவும் ஒத்துண்டாதான் எடுக்க முடியும். ஆனா.. மாமா.. இடையில எடுக்கப்படாதுங்கறதுக்காக ஃபிக்ஸட்ல போட்டுருக்கார்ன்னு.. சொல்லி வச்சிருக்கேன் புரியறதா?'' என்றான்.

கனகேஸ்வரி கொஞ்சம் ஆச்சர்யப்பட்டுப் போனார். எப்போதிருந்து மகன் இந்த அளவுக்கு புத்திசாலியானான் என்று ஆச்சர்யம்தான்.

''ஆமம்மா! எல்லாருக்கும் எல்லாமும் வேண்டாம்! இன்னொருத்தரோட பணம் நோக்குப் பாதுகாப்பா இருக்கு.. அப்படீங்கற மாதிரியே இருக்கட்டும்... என்ன?'' என்றான்.

''சொன்னாலும்... சொல்லாட்டாலும் அப்படித்தானேப்பா! இப்ப நேக்கு எதுக்காக பட்டாபி இப்படிப் பணத்தைக் கொடுத்தான்னு கவலையா இருக்கு. இனி இது மாதிரி வேற எதிர்பார்ப்புகள் வருமோன்னா..!'' என்றார் கொஞ்சம் வருத்தத்துடன்.

''பரவால்லைம்மா...! இருக்கட்டும். அந்த தொகை இருக்கக் கொண்டுதானே இப்போ நோக்கு உபசரிப்பெல்லாம்... பலப்படறது'' என்றான்.

கனகேஸ்வரி மையமாகப் புன்னகைத்து வைத்தார். மகன் தொடர்ந்து சொன்னான்.

''உபசரிப்பெல்லாம் வேண்டாங்காதே! நன்னா.. அனுபவிச்சுக்கோ! ஆனா.. பண விஷயத்துலே மட்டும் நான் சொன்ன ஸ்டாண்ட்லயே நிக்கணும் தெரியுதா?'' என்றான்.

வந்த மாதிரியே இல்லாமல் வெளியே போய்விட்டு மனைவி வந்ததற்குப் பின்தான் வந்தான்.

மகன் இப்படியெல்லாம் தனக்காகப் பரிந்து பேசுவது மகிழ்ச்சியாக இருந்தாலும் மனைவிக்குத் தெரியாமல் தானே பேசுகிறான் என்றும் தோன்றியது. திருமணம் என்று ஒன்று ஆகிவிட்டாலே மகன்கள் பெற்றோருக்கு

முழுமையாக இல்லாமல் போய் விடுகிறார்களோ என்றும் தோன்றியது. கூடவே பாலச்சந்தரின் நிலைமை என்னவாக இருக்குமோ என்ற கவலையும் தோன்றியது.

* * *

''நன்னா இங்கிலீஷ் பேசறியேடி... ராஜாத்தி...! ஆனா நேக்கு அப்படியெல்லாம் பேசத் தெரியாது தெரியுமோ?'' என்றான் பாலச்சந்திரன்.

''அச்சச்சோ...! அப்படியா? என்றாள் மீரா. இராமநாதனின் குழந்தை. மிகவும் கவலையுடன் அவனைப் பார்த்தாள்.

''அப்ப... என்ன செய்யலாம்?'' என்றாள்.

''நீதான் ஏதாவது செய்யணும்?'' என்றான் பாலச்சந்தரும் அதே தீவிரமான முகபாவத்துடன்.

''சரி.... எங்க ஸ்கூல்ல சேர்ந்துக்கறேளா? நன்னா இங்கிலீஷ் சொல்லித் தருவா!'' என்றாள்.

இராமநாதனும், மணிமாலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்தார்கள்.

''குட்.. ஐடியா.. நன்னா.... இருக்கே! சரி.. எப்ப சேத்து விடறே..!'' என்றான் பாலச்சந்தர்.

''நாளைக்கே.. சேர்க்கலாம்'' என்றாள் மறுபடியும் ஒற்றை விரலால் கன்னத்தை தட்டிக் கொண்டு யோசித்தாள்.

''என்ன பிரச்சனை?'' என்றான் பாலு.

''இல்லே! நீ ரொம்ப உயரமா இருக்கியே!''

''ஆமா..'' என்றான்.

''வேண்ணா... உன்னை ஃபோர்த் ஸ்டாண்டர்ல சேர்க்கலாம்'' என்றாள்.

பாலச்சந்தருக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான்.

''ஃபோர்த்தன்னா.. பிரச்சினை இல்லையா?''

''இல்லைதான் ஆனா.. அங்கயும் நீ மண்டி போட்டுண்டுதான் வரணும்.''

''வரலாம்.. ஆனா.. பாண்ட் கிழிஞ்சுடுமே..!'' என்றான் பாலச்சந்தர்.

''போதும்டி..'' என்று மகளை அள்ளிக் கொண்டாள் மணிமாலா.

எல்லாரும் கலகலவென்று சிரித்தார்கள்.

''எதுக்கு எல்லாரும் சிரிக்கறேள்?''என்றாள் சற்றே கோபத்துடன்.

''மாமா.. உன்கிட்டே சும்மா கலாட்டா பண்றார். அவருக்கு இங்கிலீஷ் எல்லாம் நன்னாத் தெரியும்'' என்றான் இராமநாதன்.

''போங்கோ.. மாமா! என்னை ஏமாத்தறேளா?'' என்றாள் சின்னவள்.

''அப்புறம்.. மாமி.. எங்கே?'' என்றான் பாலச்சந்தர்.

''பெரியம்மாவும், அம்மாவும் எங்கயோ.. போயிட்டு வரேன்னு கிளம்பினா..'' என்றாள்.

''ஆபீஸ் விஷயமா வந்தேன். அப்படியே உங்களைப் பாத்துண்டுப் போலாம்னு வந்தேன்'' என்று சிறிய ஸ்வீட் பாக்கெட்டை நீட்டினான் குழந்தையிடம்.

பேசிக் கொண்டே மளமளவென்று போண்டா செய்து காபி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள் மணி மாலா.

''எங்கம்மாவுக்கு உங்க ஃபாமிலின்னா ரொம்ப இஷ்டம். அதுலயும் மணிமாலாக்காவை எப்பவும் பாராட் டிண்டே இருப்பா...!'' என்றான் பாலச்சந்தர்.

இராமநாதன் முகத்தில் கொஞ்சம் பெருமிதம் தெரிந்தது.

''ஆமா..! எங்காத்துல நான் ஒத்தையாத்தான் வளர்ந்தேன். அதனால இங்கே இவரும், சந்தியாவும் போடற சண்டையை ரொம்ப ரசிப்பேன்'' என்றாள் மணிமாலா.

''ம்ஹூம்.. சந்தியா.. சண்டையெல்லாம் போடு வாளா.. என்ன?'' என்றான் ஆச்சர்யமாக.

''இல்லல்லே! இவரண்டை சும்மா பொய்ச் சண்டை போடுவா..'' என்றாள் மணிமாலா அவசரமாக.

''ஈவ்னிங்ல ஒரு விசிட் அடிப்பாளே! எப்ப வருவா?'' என்றான் பாலச்சந்தர்.

''இப்ப வருவா!'' என்றான் இராமநாதன்.

நேற்று வரை மனைவி மேல் கோபமாக இருந்தான் பாலச்சந்தர். அம்மாவை பூப்போல காப்பாள் என்று எண்ணியிருக்க. அம்மாவை அண்ணன் வீட்டுக்கு அனுப்புவதிலே ஆர்வம் காட்டினாளே என்று வருத்தம்.

பிற்பகல் அம்மா பேசியபோது அவனுக்கு ஆச்சர்யம் என்றால் நேற்று மனைவி சொன்ன பதில் பெருத்த ஆச்சர்யம்.

முதல் நாள் இரவு அவன் வருத்தத்துடன் பேசியதைக் கேட்டுவிட்டு அவள் சற்று நேரம் மௌனம் சாதித்தாள்.

பிறகு சொன்னாள்.

''இவ்வளவுதானா.. நீங்க என்னைப் புரிஞ்சுண்டது?'' என்பது போல் பார்த்தாள். பிறகு படுக்கையைப் பார்த்த படி சொன்னாள்.

''இத பாருங்கோ! அவா வருந்தி வருந்தி அழைச் சப்போ... மறுக்க முடியாதுங்கறது ஒரு காரணம். இன் னொரு காரணம் என்ன தெரியுமோ? நான் அம்மாவை ரயில்ல வைத்துத்தான் முதலில் பார்த்தேன். அப்போ உங்கண்ணாவும் வந்திருந்தார். அவா ரெண்டு பேரும் பேசிண்டதிலே நேக்கு ஒரு விஷயம் தெரிஞ்சுது. அம்மா அவாத்துல கஷ்டப்படறாங்கற வருத்தமும் ஆனா தன்னால பெருசா.. எதுவும் செய்ய முடியலேங்கற வருத்தமும் இருந்தது. ஆனா... இப்ப வருந்தி வருந்தி அழைக்கறா. நேக்கு முதல்லே கோபமாத்தான் இருந்துச்சு. ஆனா.. அப்புறமா யோசிச்சேன். அப்பத்தான் தோணித்து அம்மாவை இவாள்ளாம் எப்பவும் இளப்ப மாத்தானே நடத்தியிருக்கா. அதுக்கு அவா என்ன காரணம் சொல்றா.. தெரியுமா! பணம் சொத்துன்னு என்ன வச்சிருக்கா.. மாமியார்! இப்போ அம்மாவண்டை பணம் இருக்கறது. தெரிஞ்சா உபசரிப்பாளோ.. இல்லையோ! இத்தனை நாள் உதாசீனம் மட்டும்தானே அம்மா பட்டுண்டிருந்தா.. இப்போவாவது அவாளுக்கு உபசரிப்பு கிடைக்கட்டுமேன்னு நினைச்சேன்...'' என்றாள்.

இந்த விளக்கம் கேட்டு பாலச்சந்தர் ஓரளவு சமா தானம் ஆனாலும் முழுமையாக மனம் ஒப்பவில்லை.

இருந்தாலும் ஏற்றுக்கொண்டவன் போல் அவளிடம் நெருங்கி அமர்ந்தான். ஆனால் அவள் அவனை வெறுமையாக பார்த்தாள்.

புரிந்து கொண்டாற் போலவோ என்னவோ அவனும் ஒதுங்கிக் கொண்டான்.

மறுநாள் காலை!

மௌனமாகவே வேலைகள் நடந்தன. பேசிக் கொண்டார்கள் என்றுமில்லை. பேசவில்லை என்றும் இல்லை. ஆனால் அலுவலகத்திற்குப் போன பின்பு அம்மாவிடம் இருந்து போன் வந்தது. மங்களா மன்னி செய்கிற உபசரிப்பை எல்லாம் அம்மா விலாவாரியாக விளக்கினார். கொஞ்சம் நகைச்சுவையோடும் கூட.

''டேய்! பாலு! அவா எவ்வளவுதான் உபசரித்தாலும் நேக்கு என்னமோ பாங்கல இருக்கிற பணத்துக்குத்தான் இந்த உபசரிப்பெல்லாம்னு தோணிண்டேயிருந்தது'' என்றார்.

போனை வைத்தற்குப் பிறகு மனைவி சொன்னதிலும் நியாயம் இருக்கிறதோ என்று தோன்றியது உடனே ஆர்வமாக மனைவியின் அலைபேசிக்கு தொடர்பு கொடுத்தான். அவளோ மிகவும் சுருக்கமாக ''முக்கியமான மீட்டிங்ல இருக்கேன். அப்புறம் பேசறேன்'' என்று துண்டித்தாள்.

ஒரு மணி நேரம் கழிந்தது மறுபடியும் அழைத்தான். இந்த முறை சுத்தமாக ஸ்வீட்ச் ஆஃப் செய்து விட்டாள். கோபமாகக் கூட வந்தது. ஆனால் மனைவி தன்னிடம் உரிமையோடு கோபப்படுவது பிடித்தும் இருந்தது.

எப்பவும் மாலை நேரம் தன் வீட்டுக்கு ஒரு ஃப்ளையிங் விசிட் அடிப்பாள் என்று தெரியும் அதனால்தான் அவளுக்கு ஆச்சர்யம் கொடுக்கலாம் என்று வந்து காத்துக் கொண்டிருந்தான்.

செல்போன் மணி ஒலித்தது எடுத்தான் பாலச்சந்தர். ''சாரி.. நேக்குத் தவிர்க்க முடியாத வேலை அதான் ஸ்வீட்ச் ஆஃப் செய்திருந்தேன்'' என்றாள்.

''பரவாயில்லை..! சீக்கிரம் வந்து சேரு..'' என்றான்.

''வந்துடறேன்! நேத்து அம்மாவாத்துக்குப் போகலையோன்னா.. சும்மா... தலையைக் காட்டிட்டு ஓடி வந்துடறேன்'' என்றாள்.

''சரி..!'' என்றான் சிரிக்காமல்.

இராமநாதனும் மணிமாலாவும் மெல்லச் சிரித்துக் கொண்டார்கள்.

அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்த சந்தியா தன் கணவனை அங்கு பார்த்து ஆச்சர்யப்பட்டு போனாள்.

11



''என்னத்துக்கு மஸ்கா போடறேள்'' என்றாள் சந்தியா பொய்க் கோபத்துடன்.

''இதென்னடா.. வம்பாப் போச்சு.. புதுசாக் கல்யாண மானவன் என்னத்துக்கு மஸ்கா போடுவான்..''

சந்தியா செல்லமாக முறைத்தாள். ''அப்படீன்னா.. இந்த வாரமெல்லாம் என்னத்துக்கு முகத்தைத் தூக்கி வச்சுண்டேள்'' என்றாள் மறுபடியும்.

''ம்... இதைக் கேட்டா.. நியாயம் பதில் சொல்லு வேன்..'' என்றான்.

டிரஸ்ஸிங் டேபிளின் முன்னால் நின்றபடி வலக்கை யால் அவள் வலத் தோளைத் தடவியபடி பின்னா லிருந்து தழுவிக் கொண்டான். அவள் வலத்தோளில் தன் முகம் பதித்துக் கொண்டான்.

''எதுக்குன்னா...?'' என்று ராகம் பாடினான்.

''ம்..!'' என்று அவளும் ராகம் பாடினாள்.

''கல்யாணம்கறச்சேயே.. நான் ரெண்டு விஷயத்துல முடிவா இருந்தேன். ஒண்ணு... எங்க ஸ்டேட்டஸுக்கு என்ன பெரிய ஸ்டேட்டஸ்... ஒண்ணுமில்லாத மாதிரித் தானே.. அதே மாதிரி நிலைமையில இருக்கற குடும் பத்துல இருந்துதான் பொண்ணெடுக்கணும். இரண்டா வது வர்றவள் கண்டிப்பா.. அம்மாவை நன்னாப் பாத் துக்கணும். ரெண்டுதான் நான் எதிர்பார்த்தது. ஆனா.. நீ என்னடான்னா.. மன்னிங்க ரெண்டு பேரும் கூப்பிட் டாளேன்னு அம்மாவை ஊருக்கு அனுப்ப நினைச்ச யோன்னா.. அந்தக் கோபம்...''

''நான்தான் விளக்கம் சொன்னேனே...'' என்றாள் சந்தியா சற்றே மனத்தாங்கலுடன்.

''சொன்னாய்தான். ஆனாலும் ஒரு பக்கம் வருத்தம் தான். ஆனா.. இன்னைக்கு அம்மா போன்ல பேசினாளோ

இல்லையா அப்பத்தான் நேக்கு புரிஞ்சுது..'' என்றான் மன்னிப்புக் கேட்பது போல.

''பரவால்லே! லேட்டாவானும் புரிஞ்சுதே..'' என் றாள்.

''லேட்டா.. வந்தாலும் லேட்டஸ்டா.. வருவேண்டி'' என்றான் பாலச்சந்தர்.

''சரி.. வந்துட்டேள்! அதுக்கு இப்ப என்னங்கறேள்?'' என்றாள்.

''என்ன சாதாரணமாகக் கேக்கறே! இந்த நாலு நாளா அம்மிணிகிட்ட சரியாப் பேசலே..! அப்புறம்.. சரியா.. ம்...ம்...'' என்று அவன் உள்ளே இழுக்கவும் அவள் சிரித்தாள்.

''இதுக்குத்தான்.. இந்த மஸ்காவெல்லாம்...'' என்று அவள் காதுகளைத் திருகினான்.

அவளும் இசைந்து கொடுத்தாள்.

சந்தியா கணவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் இடம் கொடுத்தாலும் உள்ளூர ஒரு அச்சம் ஓடிக் கொண்டே யிருந்தது.

* * *

''இப்படியெல்லாம் உபசரிப்பா?!'' என்று விழுந்து விழுந்து சிரித்தான் பாலச்சந்தர்.

''ஆமடா! மங்களா என்னைப் பாத்திரம் அலம்பற துக்கே விடலேன்னா.. நீரஜா பெட் காபியெல்லாம் கொண்டு வந்து கொடுத்தாள்னா.. பாரேன்'' என்று மறுபடியும் சிரித்தார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஊர் திரும்பியிருந்தார். இந்த ஒரு மாதத்திலும் மருமகள்களின் உபசரிப்பில் கிட்டத் தட்ட மூச்சு திணறிப் போயிருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

சந்தியா இந்த விஷயங்களில் தலையிடாமல் புன்ன கையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். வேலை பாட்டுக்கு வேலை நடந்து கொண்டிருந்தது.

அம்மாவும், மகனும் சிரித்து ஓய்ந்த பின் சற்று நேரம் மௌனம் நிலவியது.

அம்மா உள்ளடங்கிய குரலில் சொன்னார். ''ஆனா.. பாலு இத்தனை உபசரிப்புக்கு நடுவிலயும் என் மனசுல ஒரு வருத்தம் ஓடிண்டே இருந்துச்சு.. தெரியுமா?'' என்று.

பாலச்சந்தர் அம்மாவின் முகத்தை ஆழ்ந்து பார்த் தான்.

''இந்த உபசரிப்பெல்லாம் மாமியாருக்கு.. இல்லே! மாமியாருக்குப் பின்னே இருக்கிற பணத்துக்காக. அது வும் கூட அவளோட பணம் இல்லே...!'' என்றார்.

பாலுவும் வருத்தமான முகபாவத்தோடு மௌன மாகத் தலையாட்டினான்.

''அதை விட வருத்தம் என்னன்னா.. ரெண்டு பிள்ளை களும் ஆத்மார்த்தமா என்னோட பேசணும்னாக் கூட வைஃப் இல்லாத நேரத்துலதான் பேசறா. மகன்கள் நமக்கில்லாமப் போயிட்டாளோன்னு தோண்றது..'' என்றார்.

பாலு ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான். பிறகு சொன்னான்.

''ஆமா! இப்பல்லாம் உறவுகள் அப்படித்தான் போயிண்டிருக்கு! ரொம்ப அனலைஸ் பண்ணாதேள்! வரதை அப்படியே ஏத்துக்குவோம். மத்ததை ஆண்ட வன் பாதத்துல போடுவோம்'' என்றான்.

சற்று நேரம் வேறு பேச்சுக்குத் தாவி அம்மாவை உற்சாகமூட்டினான். இவர்கள் இதுவரை பேசிய எதுவுமே காதில் விழாதவன் போல இந்தப் பேச்சில் மட்டும் சற்று உற்சாகமாகக் கலந்து கொண்டான்.

அலுவலகத்தில் நடைபெற்ற வேடிக்கைகளைச் சொல்லிச் சொல்லி சிரித்தான்.

* * *

''ஏண்டி.. சனியன்களா! இப்படி மேலே விழுந்து புடுங்கறேள்'' என்று குழந்தைகளுக்கு இரண்டு மொத்து வைத்தாள் மங்களா.

'நீரஜா மாமியாரை ரொம்பவுமே உபசரித்தாளாம். அவளுக்கென்ன வசதியான பார்ட்டிதானே? மாமியார் பணத்தின் மேல் கண் வைக்கவில்லையென்றால் என்னவாம்!' என்று கோபம் கிளம்பியது.

எப்படியவாது மாமியாருக்கு மஸ்கா போட்டு மகள் பெரியவளாகும்போது அவளுக்கென்று ஒரு டெபாசிட் போட்டு விட வேண்டுமென்று எண்ணியிருந்தாள்.

அப்போதுதான் போன் வந்தது. அவளது ஒன்றுவிட்ட சகோதரன் ஒருவன் பேசினான். பேசி முடித்த பின்பு நெற்றியில் முடிச்சுகள் விழ அமர்ந்திருந்தாள்.

கணவனின் வரவுக்காகக் காத்திருந்தாள்.

சௌந்தரராஜன் அதிசயமாக அன்று சீக்கிரமாகவே வந்திருந்தான்.

''மங்களா! கோயிலுக்குப் போலாமா? இன்னைக்கு பிரதோஷம்'' என்றான்.

'ஆமா..! அது ஒண்ணுதான் குறைச்சல்' என்று சொல்ல வாயெடுத்தவள் மனதை மாற்றிக் கொண்டாள்.

''போனாப் போச்சு!'' என்று புறப்பட்டாள். கோவிலுக்குப் போய் விட்டு வந்தார்கள்.

''இன்னமே போய் டிபன் செய்யாட்டி என்ன? ஹோட்டல்ல சாப்பிட்டர்லாம்'' என்றான்.

ஆச்சர்யமான புன்னகையுடன் மங்களா ஒத்துக் கொண்டாள்.

தாயை நன்கு உபசரித்தாளே மனைவி என்று அவனுக்கு சந்தோஷம். ஆனால் அவளிடம் அதைச் சுட்டிக் காட்டினால்.

''ஓஹோ! இத்தனை நாள் இப்படியெல்லாம் கூட்டிண்டு போகத் தோணித்தா?'' என்று பிடித்துக் கொள்வாளே என்று தயங்கிக் கொண்டிருந்தான்.

வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் தூங்கி வழிந்த குழந்தைகளைப் படுக்கையில் கிடத்தினான்.

''அப்பாடா!'' என்று சோபாவில் சாய்ந்து அமர்ந்தான் சௌந்தரராஜன்.

மெல்ல அருகில் வந்து அமர்ந்தாள் சகதர்மிணி மெதுவாகக் கேட்டாள்.

''ஏன்னா.. அந்த பட்டாபி மாமா.. இருக்காரே.. அவர் எப்படி நம்ம அம்மாவுக்கு சொந்தம்?''

''ஏன்?!'' என்று திரும்பிப் பார்த்தான் சௌந்தரராஜன்.

''சொல்லுங்கோளேன்!'' என்றாள் மங்களா.

''அவரோட அம்மாவும் எங்க பாட்டியும் கூடப் பொறந்தவா..!'' என்றான் சௌந்தரராஜன்.

''ம்..! அது சரி! பட்டாபி மாமா இத்தனை பெரிய தொகையைக் கொண்டு வந்து போடற அளவுக்கு வசதியானவரா என்ன?''

''இல்லே! அப்படி சொல்றதுக்கில்லே..! ஆனா.. கும்பகோணத்துலயே ரெண்டு வீடு இருக்கு! அதுல ஒரு வீட்டை வித்தாராம். அந்தத் தொகையாம்..!''

''ஏன்னா..! எங்க உறவுக்காரா.. சொல்றா சமீப காலத்துல அவர் எந்த வீட்டையும் விக்கலையாம். நேக்கென்னமோ... பணம் சரியான விதத்துல வந்த பணமாத் தெரியலே! ஏதோ வரக் கூடாத விதத்துல வந்த பணமா இருக்கக் கொண்டுதான் அம்மா தலையில கட்டிட்டாரோன்னு தோண்றது..!'' என்றாள்.

சௌந்தரராஜன் திடுக்கிட்டுப் போய் மனைவியைப் பார்த்தான்.

''நான் சொல்றதைச் சொல்லிட்டேன்.. அப்புறம் உங்க இஷ்டம்..!'' என்று எழுந்து போனாள் மங்களா.

சௌந்தரராஜன் முகம் வெளிறிப் போக யோசனையில் ஆழ்ந்தான்.

* * *

''இன்னொரு இட்லி வைக்கட்டுமா?'' என்றாள் சந்தியா.

''ம்..!'' என்றான் பாலச்சந்தர்.

ஒரு கணம் நெற்றி சுருங்கி விரிந்தது சந்தியாவுக்கு. நொடியில் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டாள்.

''அநேகமா.. ரெண்டு மூணு நாள் வெளியூர் போவேன்னு நினைக்கறேன்..'' என்றான் பாலச்சந்தர்.

''ம்..!'' என்றாள் சந்தியா.

கணவனுக்கு மனைவி பரிமாறுகிற நேரத்தில் பெரும் பாலும் அவர்களுக்குத் தனிமை கொடுத்துச் சென்று விடுவார் கனகேஸ்வரி.

இப்போதும் அப்படித்தான். பூஜைக்கு பூ பறிக்கிறேன் என்று பின்னால் பக்கம் போயிருந்தார்.

''ஆபீஸ் விஷயமாவா?'' என்றாள் சந்தியா.

''ம்..!'' தஞ்சாவூர்ல ஒரு ஆடிட்டர் இருக்கார் அவர் கிட்டே ஏதோ ஃபைல்ஸ் கொடுக்கணுமாம். கான்ஃபி டென்ஷியல் மேட்டராம். அதனாலே நீயே போகணும் கறா..'' என்றான்.

''போயிட்டு வாங்கோ! அவா அவ்வளவு தூரம் உங்க மேலே நம்பிக்கை வச்சிருக்கச்சே.. நீங்க போகத்தான் வேணும்'' என்றாள் சந்தியா.

இரண்டு நாட்களாகவே யோசனையில் இருந்தான் பாலச்சந்தர்.

பணம் கிடைத்தது என்பதற்காக வாங்கிக் கொண் டிருக்கக் கூடாதோ? அதன் நதிமூலம், ரிஷிமூலம் விசாரித்திருக்க வேண்டுமோ?

மங்களா மன்னி பொறாமைக்காகவே சொல்லியிருந் தாலும் கூட ஒதுக்கி விடுகிற மாதிரி சந்தேகம் இல் லையே!

அதற்குப் பிறகுதான் முடிவெடுத்தான் உண்மையா கவே தஞ்சாவூரில் அவர்கள் கம்பெனியில் முக்கிய

விஷயங்களை சொத்து பத்து விவகாரங்களைக் கவனிக் கிற ஒரு ஆடிட்டர் இருந்தார். அவரிடம் போக வேண்டிய வேலையும் இருந்தது. என்ன.. கொஞ்சம் அவசரமில் லாமல் செய்யக் கூடிய வேலைதான். இப்போது அவனே மறைமுகமாக அந்த வேலையைக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

அண்ணன் எழுப்பிய சந்தேகத்தை அம்மாவிடம் சொல்லாமா என்று நினைத்தான். வேண்டாம் அம்மா சுத்தமாக பயந்து விடுவார்.

மெதுவாக முடிச்சை அவிழ்த்து விட்டுப் பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண் டான்.

இரண்டு நாட்களும் பிற்பகலுக்குள்ளாக ஆடிட்டர் ஆபீஸ் வேலையை முடித்துவிட்டுக் கும்பகோணம் போய் விடலாம் என்று முடிவு செய்து கொண்டான்.

திடீரென்று நினைவுக்கு வந்தவன் போல.

''உன்னையும் அழைச்சுண்டு போலாம்னு நினைச் சேன். ஆனா.. இந்தத் தரம் வேலையே சரியா இருக்கும் போல இருக்கு. வேலை குறைவா இருக்கச்சே.. போவோம். இல்லேன்னாலும் ரெண்டு மூன்று மாசம் கழிச்சு நாலைஞ்சு நாள் லீவு போட்டுட்டுப் போயிட்டு வரலாம்.. என்ன?'' என்றான்.

மனைவியைப் பார்த்துப் புன்னகைத்தான். அவளும் மனம் நிறையப் புன்னகைத்தாள்.

''தஞ்சாவூர் பக்கம் எல்லாம் நிறையக் கோயில்கள் உண்டோ இல்லியோ? நேக்கும் ஆற அமர அந்தக்

கோயில்களையெல்லாம் பாக்கணும்னு ஆசை!'' என்றாள்.

''போகலாம்'' என்றான்.

''ஏன்னா? எந்த டெக்னாலஜியும் இல்லாத காலத்துல எப்படின்னா அவ்வளவு பெரிய கோயில்களையெல்லாம் கட்டினா? நூல் பிசராம அளவு வச்சு பிரகாரங்கள் ஒவ்வொரு தூண்களும் எத்தனை வேலைப்பாடு! நேக்குத் தோண்றதுன்னா.. நம்ம கோயில்களையெல்லாம் நாம சரியான முறையில பிராபல்யப் படுத்தலேன்னு.''

''ஆமா..! நேக்கும் கூடத் தோண்றது உண்டு.''

''அட்லீஸ்ட் மெயின்டெயின் பண்ணலாம். நிறையப் பெரிய கோயில்கள்ல வெளவால் பறக்கறது. நாமக்கல் கோயிலுக்கும் ஒரு வாட்டிப் போயிருந்தேன் மலையைக் குடைஞ்சுன்னா கட்டியிருக்கா? திருச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயில் பிள்ளையார் பட்டி விநாயகர் கோயில், குன்றக்குடி முருகன் கோயில் இப்படி மலையைக் குடைஞ்சு கட்டின கோயில்களெல்லாம் பாக்கறச்சே ஆச்சரியப்பட்டு நின்னுடறேன்னா..'' என்றாள்.

''ஆமா..! இந்தக் கலைப் படைப்புக்களெல்லாம் நம்ம நாட்டுக்கே உள்ள பொக்கிஷங்கள்தான். ஒரு ஞானி சொல்றார் மேற்கத்திய நாட்டுக்காரா வெளியுலகம் பற்றி ஆராய்ச்சி செய்யறா. ஆனா.. நம்ம நாட்ல உள்ளுலகம் பத்தி அந்தக் காலத்துலயே ஆராய்ச்சி செஞ்சிருக்கா.. அப்படின்னு..!''

''ஆமா..! நம்ம ஞானிகள் மனம்ன்னு ஒண்ணு இல்லவே இல்லைங்கறா..!'' அந்த நிலையை அடைய நம்மால முடியுமா என்ன?!'' என்றாள் சந்தியா.

''எல்லாருமே முயற்சி செஞ்சா அடையலாம். ஆனா.. இப்பத்திக்கு மனம்ன்னு ஒண்ணு இல்லாத நிலையை அடையதுல நேக்கு இன்ட்ரஸ்ட் இல்லப்பா..'' என்றான் பாலச்சந்தர்.

கண்களில் குறும்பு கூத்தாடியது.

''ஏனாம்..?''

''ஏன்னா..!'' என்றான். அவன் அவளது கை விரல்களை மெல்ல வருடியது. ''அப்புறம்.. உன்னை நினைக்க முடியாதோன்னா..'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

''எப்ப கிளம்பறேள்?'' என்றாள் சந்தியா.

''நாளைக்கு நைட்ல..!'' என்றான். அடுத்த நாளில் கணவர் ஊருக்குப் போகிறான் என்பதால் கணவனை அன்று எல்லாவிதத்திலும் கவனித்தாள் சந்தியா.

திரும்பி வரும்போது கணவனின் நடத்தையில் மாற்றம் இருக்கும் அதனால் தன் வாழ்க்கையிலும் குழப்பங்கள் ஏற்படும் என்று அப்போது அவளுக்குப் புரியவில்லை.

12



''அடியே! பூ...ங்..கொடி..! எப்பத்தான் சாப்பாடு.. போடுவே..'' என்று நீட்டி முழக்கினாள் நாச்சம்மாள்.

கோயில்களையெல்லாம் பாக்கணும்னு ஆசை!'' என்றாள்.

''போகலாம்'' என்றான்.

''ஏன்னா? எந்த டெக்னாலஜியும் இல்லாத காலத்துல எப்படின்னா அவ்வளவு பெரிய கோயில்களையெல்லாம் கட்டினா? நூல் பிசராம அளவு வச்சு பிரகாரங்கள் ஒவ்வொரு தூண்களும் எத்தனை வேலைப்பாடு! நேக்குத் தோண்றதுன்னா.. நம்ம கோயில்களையெல்லாம் நாம சரியான முறையில பிராபல்யப் படுத்தலேன்னு.''

''ஆமா..! நேக்கும் கூடத் தோண்றது உண்டு.''

''அட்லீஸ்ட் மெயின்டெயின் பண்ணலாம். நிறையப் பெரிய கோயில்கள்ல வெளவால் பறக்கறது. நாமக்கல் கோயிலுக்கும் ஒரு வாட்டிப் போயிருந்தேன் மலையைக் குடைஞ்சுன்னா கட்டியிருக்கா? திருச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயில் பிள்ளையார் பட்டி விநாயகர் கோயில், குன்றக்குடி முருகன் கோயில் இப்படி மலையைக் குடைஞ்சு கட்டின கோயில்களெல்லாம் பாக்கறச்சே ஆச்சரியப்பட்டு நின்னுடறேன்னா..'' என்றாள்.

''ஆமா..! இந்தக் கலைப் படைப்புக்களெல்லாம் நம்ம நாட்டுக்கே உள்ள பொக்கிஷங்கள்தான். ஒரு ஞானி சொல்றார் மேற்கத்திய நாட்டுக்காரா வெளியுலகம் பற்றி ஆராய்ச்சி செய்யறா. ஆனா.. நம்ம நாட்ல உள்ளுலகம் பத்தி அந்தக் காலத்துலயே ஆராய்ச்சி செஞ்சிருக்கா.. அப்படின்னு..!''

''ஆமா..! நம்ம ஞானிகள் மனம்ன்னு ஒண்ணு இல்லவே இல்லைங்கறா..!'' அந்த நிலையை அடைய நம்மால முடியுமா என்ன?!'' என்றாள் சந்தியா.

''எல்லாருமே முயற்சி செஞ்சா அடையலாம். ஆனா.. இப்பத்திக்கு மனம்ன்னு ஒண்ணு இல்லாத நிலையை அடையதுல நேக்கு இன்ட்ரஸ்ட் இல்லப்பா..'' என்றான் பாலச்சந்தர்.

கண்களில் குறும்பு கூத்தாடியது.

''ஏனாம்..?''

''ஏன்னா..!'' என்றான். அவன் அவளது கை விரல்களை மெல்ல வருடியது. ''அப்புறம்.. உன்னை நினைக்க முடியாதோன்னா..'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

''எப்ப கிளம்பறேள்?'' என்றாள் சந்தியா.

''நாளைக்கு நைட்ல..!'' என்றான். அடுத்த நாளில் கணவர் ஊருக்குப் போகிறான் என்பதால் கணவனை அன்று எல்லாவிதத்திலும் கவனித்தாள் சந்தியா.

திரும்பி வரும்போது கணவனின் நடத்தையில் மாற்றம் இருக்கும் அதனால் தன் வாழ்க்கையிலும் குழப்பங்கள் ஏற்படும் என்று அப்போது அவளுக்குப் புரியவில்லை.

12



''அடியே! பூ...ங்..கொடி..! எப்பத்தான் சாப்பாடு.. போடுவே..'' என்று நீட்டி முழக்கினாள் நாச்சம்மாள்.

''அத்தே.. இன்னும் அஞ்சே நிமிஷம்'' என்றாள் பூங் கொடி.

''நானெல்லாம் எங்க மாமியார் சாப்பாடுன்னு வாய் திறந்து கேட்கற மாதிரி வச்சுகிட்டதேயில்லை தெரி யுமா?''

''நீங்கள்ளாம் வீட்லயே இருந்தீங்க..! நாங்க அப் படியா வேலைக்கும் போகணும் இல்லே'' என்றாள் பூங்கொடி.

''ஆமா.. பொல்லாத வேலை! எட்டாயிரம் ரூபா சம் பளத்துக்கு என்னமோ... பெரிய மகாராஜா வீட்டு வேலை மாதிரிப் பேசறியே..!'' என்று மறுபடியும் நீட்டினாள் நாச்சம்மாள்.

மகன் உள்ளே வந்தது தெரிந்தும் சுருதி குறைந்தது. ஆனாலும் மகன் நாகராஜன் காதில் அம்மாவின் பேச்சு விழுந்தது போலும். நேரடியாக அம்மாவிடம் எதுவும் பேசாமல் மனைவியிடம் திரும்பி.

''இந்தா பூங்கொடி..! அரைமணி நேரத்தில் கிளம் பினீன்னா.. டிராப் பண்றேன்... இல்லன்னா.. கஷ்டம் தான்..'' என்றான்.

பூங்கொடி அவனைப் பார்த்து விழித்தாள். ''இன்னும் ரசம் ஆகலே! நான் குளிக்கலே...'' என்றாள்.

''என்ன இப்ப ஒரு நாளைக்கு ரசம் இல்லேன்னா.. என்ன ஆயிடும்? ஏம்மா... நீதான் அந்த ரசத்தை வைக்கக் கூடாதா?'' என்றான் கடுப்புடன்.

''நான் என்ன மாட்டேன்னா... சொல்றேன்?'' என்று முணுமுணுத்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந் தாள் நாச்சம்மாள்.

எரிச்சலை அடக்கிக் கொண்டு குளிக்கப் போனாள் பூங்கொடி. அவளும் மாமியாரைத் திருப்திப் படுத்த எவ் வளவோ முயற்சி செய்கிறாள். ஆனால் அவர் திருப்திப் படுவதாகவே இல்லை.

''அந்தக் காலத்துல எங்க மாமியாரை நான் எப்படிப் பாத்துட்டேன்... தெரியுமா?'' என்ற பல்லவிதான் எப் போதும்.

அவருடைய காலத்தில் நிலைமை வேறுவிதம் இப்போது வேறு விதம் என்பதை அவர் புரிந்து கொள்ளத் தயாராகவேயில்லை.

உட்கார்ந்து சாப்பிடுகிற அளவில் அன்றைக்கு சொத்து வைத்துக் கொண்டு இடுப்பில் சாவிக் கொத்தை வைத்துக் கொண்டு சுழன்று சுழன்று அதிகாரம் செய்த மாமியார்கள் காலம் வேறு. இன்றைக்கு நடுத்தரக் குடும்பத்தில் கணவனும், மனைவியுமாக வேலைக்குப் போனால்தான் வாழ்க்கையில் கொஞ்சமாவது முன்னேற முடியும் என்ற நிலைமையில் வாழ்க்கை முறைகள் வேறு என்று அவருக்குப் புரிய வைக்க அவளும் எவ்வளவோ முயன்றாள் ஆனால் அவர் புரிந்து கொள்ளத் தயாராகவே இல்லை.

போகும் வழியில் பைக்கின் பின்னால் அமர்ந்து கொண்டு ''ஏங்க.. அத்தை..!'' என்று அவள் ஆரம்பிக்க. ''அம்மா.. அப்படித்தான்..! அந்தக் காலத்து மனுஷி..! நீ தான் அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்..''என்று கத் தரித்து விட்டான் நாகராஜன்.

நாச்சம்மாள் மகனும், மருமகளும் கிளம்பிப் போனதும் கணவரை சாப்பிட அழைத்தார். அவரும் வந்து அமர்ந் தார்.

''ஏண்டி... நாச்சா! அந்தப் பொண்ணு அரக்கப் பரக்கக் கிளம்பிப் போகுதே! நீதான் கொஞ்சம் உதவி பண்ணக் கூடாதா?'' என்றார்.

''சும்மாயிருங்க! நானெல்லாம் உங்க அம்மாவுக்கு வேதடிக்கலையா? உட்கார்ந்த இடத்துலயே டீ காபி கொண்டு போய்க் குடுக்கறதென்ன? கால் அமுக்கி விடறதென்ன? அப்பல்லாம்.. நீங்க ஒண்ணும் பேசக் காணமே!''

''அந்தக் காலம் வேற..! இந்தக் காலம் வேறடி..''

''என்ன காலம் வேற..? நாமளும் ஒண்ணும் சும்மா.. சாப்பிடலியே! உங்களுக்கும் பென்ஷன் வருது! எனக்கும் வீட்டில் பணம் வருது..! சுளையா.. மாசம் அஞ்சாயிரம் எண்ணிக் குடுக்கறமே..!'' என்றார் நாச்சம்மாள்.

''இத பார்றி! நாம குடுக்கற அஞ்சாயிரத்தை வச்சுண்டு நாம தனியா எங்கயும் பொழப்பு நடத்த முடியாது தெரியுமா?''

''ஏன்.. வீடு நம்முதுதானே! குழந்தை வேற வளர்த்துக் கொடுக்கப் போறோம்.. அதுக்கெல்லாம் ஆள் போட்டா எவ்வளவு ஆகறது?''

''அடிப்பாவி! அது நம்ம பேரனோ பேத்தியோ தாண்டி..! நம்ம பேரனை வளர்த்துக் குடு... வேண்டியது கடமைடி..''

''அதே மாதிரி.. நம்மளையும் பாத்துக்க வேண்டியதும் அவங்க கடமைதான்'' என்றாள் நாச்சம்மாள்.

''என்னமோ... நாச்சா.. நீ பேசறது ஒண்ணும் அவ்வளவு நல்லாயில்லே..!'' என்றார் கணவர் மெய்யப்பன்.

ஆனால் மேற்கொண்டு பேச்சை வளர்த்தவில்லை. அதனால் ஆகப்போவது ஒண்ணுமில்லை என்று புரிய சாப்பிட ஆரம்பித்தார்.

* * *

வானளவு உயர்ந்த கோபுரங்கள் கொண்ட கோவில்கள் கும்பகோணம் பகுதியில் நிறையக் கிடந்தனவே!

அப்படி ஒரு கோயில் போய் விட்டு அறைக்கு வந்தான் பாலச்சந்தர். நடுத்தரமான ஹோட்டல் கீழேயே உணவுக்கான வசதியும் இருந்தது.

எப்போதுமே கும்பகோணம் பகுதியில் கிடைக்கிற காபியில அவனுக்கு ஆசை அதிகம். பக்கோடாவும் காபியுமான அந்த மாலை நேரத்தை அனுபவித்து விட்டு அறைக்கு வந்தான்.

இன்றைக்குத்தான் கும்பகோணம் வந்தான். இன்று காலை வரையிலும் கூட தஞ்சாவூரில் அவனுக்கு வேலை இருந்தது. அந்த வேலையை முடித்து விட்டு பிற்பகலில்தான் கிளம்பினான்.

மாலை வந்து இந்த ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கினான். காபியை முடித்துவிட்டு பிறகு பட்டாபி மாமா வீட்டு விலாசத்தை வைத்துக் கொண்டு தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் சென்னையைப் போலப் பெரிய ஊரில்லை. ஆனாலும் தேட வேண்டுமே என்று ஆயாசமாக இருந்தது.

வேண்டுமென்றால் இன்றைக்கு ஓய்வு எடுத்துக் கொண்டு காலையில் ஆரம்பிக்கலாமா என்று நினைத்தான். மனம் ஒப்பவில்லை. வேண்டாம் இன்றைக்கே ஆரம்பித்து விடுவோம் என்று எண்ணிக் கொண்டான்.

மெதுவாக கிளம்பினான். போகிற வழியில் இன்னொரு பெரிய கோவில் இருந்தது. நுழைந்து மூல வரைப் பார்த்து விட்டுக் கோயிலை நாளைக்கு முழுவதுமாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு கட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

சற்றுத் தொலைவில் ஒரு பெட்டிக்கடையில் நிற்கிற ஒருவரைப் பார்த்தால் பட்டாபி மாமா மாதிரியே தோன்றியது.

'சரிதான்! பாலு! யாரைப் பார்த்தாலும் பட்டாபி மாமா மாதிரியே தெரிகிறதே?' என்று தனக்குள் புன்னகைத்துக் கொண்டான்.

அந்த உருவம் மெல்லத் திரும்பியது.

பட்டாபி மாமாவே தான்..!

''மாமா..!'' என்று குரல் கொடுத்தான். பட்டாபி திரும்பினார். ஆனால் ஏனோ தன்னைக் கண்டதும் முகத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாக திகைப்பும் அதிர்ச்சியும்தான் தோன்றினாற் போல இருந்தது.

பாலச்சந்தர் ஏமாற்றமாக உணர்ந்தான். ஆனாலும் அவரை நோக்கிப் போனான்.

''மாமா..!'' என்று உற்சாகமாக அவரை நோக்கிப் போனான்.

''அம்பி..!''என்று அவர் இப்போதுதான் ஆச்சர்யத்தை வெளிக்காட்டினார்.

'' மாமா... ! ஆபீஸ் வேலையா தஞ்சாவூர் வந்தேன். ஒரு நாள் டைம் இருந்துச்சு. அதான் கும்பகோணம் வந்து ரெண்டு கோயிலைப் பாத்துட்டுப் போலாம்னு வந்

தேன். நல்ல வேளையா நீங்க கிடைச்சேள்.. !'' என்றான்.

''ம்... ஹா.. அப்படியா?'' என்று பம்மினார் மனிதர்.

''என்ன மாமா.. ! ஆத்துக்குக் கூப்பிடமாட்டேளா?'' என்றான் குறுகுறுப் பார்வையுடன்.

''பேஷா ! போலாமே ! எங்கே...பொட்டி படுக்கையெல்லாம்... '' என்று இழுத்தார்.

''ஹோட்டலிலே... ரூம் போட்டுட்டேன்'' என்றான்.

''ஹோட்டல்லியா? என்னதுக்கு..?'' என்று இப்போதுதான் மனிதர் நனவுலகம் வந்தாற் போல ஆரம்பித்தார்.

''எந்த ஹோட்டல்?'' என்றார்.

சொன்னான்.

''சரி... வா ! இதுதான் நம்மாத்துக்குப் போற வழி'' வந்து பாரு ! சௌகரியம் போதும்னா... ரூமைக் காலி பண்ணிடலாம்...'' என்று அழைத்துப் போனார்.

வீடு சிறிய தொட்டிக் கட்டு வீடு !

அக்ரஹாரப் பகுதியில் இருந்தது. இரண்டு அறைகள், ஒரு கூடம், சமையலறை என்று இருந்தது.

இவரை முதலிலே பார்த்திருந்தால் ரூம் போட்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது.

''நீங்க மட்டும்தான் இருக்கேளா?'' என்றான்.

''அடிக்கடி ஷேத்திராடனம் கிளம்பிடுவேனே... ! இருக்கச்சேயும் நளபாகம் நம்முதுதான். ஒண்டிக் கட்டைக்கு என்ன வேண்டியிருக்கு..!'' என்றார்.

''அதானே.... !'' என்று பாலச்சந்தர் பட்டாபி எடுத்துப் போட்ட நாற்காலியில் அமர்ந்தபடி புன்னகைத்தான்.

''என்ன சாப்பிடறே?'' என்றார் வாஞ்சையாக.

''இப்பத்தான் காபி சாப்பிட்டேன். வாங்களேன் ஏதேனும் ரெண்டு கோயிலுக்குப் போலாம் !'' என்றான்.

''பேஷாப் போலாம். இந்த ஏரியாவுலதான் கோயில்லாம் கொட்டிக் கிடக்கிறதே.. !'' என்றார்.

''ஆமா... ! எங்கம்மா..... சொல்லுவா... திருத்துறைப் பூண்டிப் பக்கம் அம்மாவுக்கு சொந்தக்காரர் யாரோ இருந்தாளாம். நாலு வீட்டுக்கு ஒரு குளம்னு இருக்குமாமே.. !'' என்றான்.

''ஆமா...!'' என்று பெருமூச்சு விட்ட பட்டாபி. ''அதெல்லாம்... ஒரு காலம்! இப்போ எப்போ காவேரி கருணை வைப்பான்னு காத்துண்டிருக்க வேண்டியிருக்கு...'' என்றார் பட்டாபி.

அவர் போட்டுக் கொடுத்த காபியை மறுக்காமல் வாங்கிக் கொண்டான். பட்டாபியின் சமையல் பற்றி அம்மா அடிக்கடி சொல்லுவார்.

''இது நாள் வரை ஜீவனம் எப்படியோ ஓடிண்டிருந்தது. இப்பத்தான்..'' என்று அவர் முடிக்குமுன்னே அவன் குறுக்கிட்டான்.

''தஞ்சாவூர் வீட்டை வித்துட்டேளா?'' என்றான்.

''இல்லியே... விக்கலியே.... !'' என்று சொன்ன பட்டாபி சட்டென்று மாட்டிக் கொண்டாற் போல விழித்தார்.

பாலச்சந்தரைப் பார்த்து அசடு வழியச் சிரித்தார்.

''பாத்தயோ.. பழைய ஞாபகத்துல உளறிண்டிருந்தேன். அதுதான் கையை விட்டுப் போயிருத்தே...'' என்றார்.

பாலச்சந்தர் மேற்கொண்டு அதைப் பற்றிக் கிளறாமல் பேச்சை மாற்றினான். ஆனால் உண்மையைக் கண்டு பிடிக்காமல் ஊருக்குப் போவதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டான்.

கோவிலுக்குப் போய் விட்டு அப்படியே ஓட்டலுக்குப் போய் அறையைக் காலி செய்து விட்டு வந்தார்கள்.

இரவு உணவையும் வெளியிலே பார்த்துக் கொண்டார்கள். நெருஞ்சி முள் போல நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்த விஷயம் மட்டும் இல்லாதிருந்தால் அந்த மாலைப் பொழுது அவனுக்கு இனியதாகக் கழிந்திருக்கும்.

உறங்குகிற நேரம் வந்தவுடன் பெரிய ரெண்டு மரக் கட்டில் கூடத்திலே இருந்தது. அதை ஒழுங்கு படுத்திக் கொடுத்தார் பட்டாபி.

சுகமாய்ச் சாய்ந்து கொண்டான் பாலச்சந்தர்.

பட்டாபி தனக்கென்று ஒரு கயிற்றுக் கட்டிலைக் கொண்டு வந்து போட்டுக் கொண்டார்.

''என்னமோப்பா.... ! எல்லா ஊரிலே இப்ப முன்ன மாதிரி இல்லை ! முன்னயெல்லாம் ஒவ்வொரு ஊர்லயும் கட்டிடக் கலை வித்தியாசமா இருக்கும். வீடுகள்லாம் வித்தியாசமா... இருக்கும். ஆனா... இப்பல்லாம்

''அதானே.... !'' என்று பாலச்சந்தர் பட்டாபி எடுத்துப் போட்ட நாற்காலியில் அமர்ந்தபடி புன்னகைத்தான்.

''என்ன சாப்பிடறே?'' என்றார் வாஞ்சையாக.

''இப்பத்தான் காபி சாப்பிட்டேன். வாங்களேன் ஏதேனும் ரெண்டு கோயிலுக்குப் போலாம் !'' என்றான்.

''பேஷாப் போலாம். இந்த ஏரியாவுலதான் கோயில் லாம் கொட்டிக் கிடக்கிறதே.. !'' என்றார்.

''ஆமா... ! எங்கம்மா..... சொல்லுவா... திருத்துறைப் பூண்டிப் பக்கம் அம்மாவுக்கு சொந்தக்காரர் யாரோ இருந்தாளாம். நாலு வீட்டுக்கு ஒரு குளம்னு இருக்கு மாமே.. !'' என்றான்.

''ஆமா...!'' என்று பெருமூச்சு விட்ட பட்டாபி. ''அதெல்லாம்... ஒரு காலம்! இப்போ எப்போ காவேரி கருணை வைப்பான்னு காத்துண்டிருக்க வேண்டி யிருக்கு...'' என்றார் பட்டாபி.

அவர் போட்டுக் கொடுத்த காபியை மறுக்காமல் வாங்கிக் கொண்டான். பட்டாபியின் சமையல் பற்றி அம்மா அடிக்கடி சொல்லுவார்.

''இது நாள் வரை ஜீவனம் எப்படியோ ஓடிண்டிருந்தது. இப்பத்தான்..'' என்று அவர் முடிக்குமுன்னே அவன் குறுக்கிட்டான்.

''தஞ்சாவூர் வீட்டை வித்துட்டேளா?'' என்றான்.

''இல்லியே... விக்கலியே.... !'' என்று சொன்ன பட்டாபி சட்டென்று மாட்டிக் கொண்டாற் போல விழித்தார்.

பாலச்சந்தரைப் பார்த்து அசடு வழியச் சிரித்தார்.

''பாத்தயோ.. பழைய ஞாபகத்துல உளறிண்டிருந் தேன். அதுதான் கையை விட்டுப் போயிருத்தே...'' என்றார்.

பாலச்சந்தர் மேற்கொண்டு அதைப் பற்றிக் கிளறாமல் பேச்சை மாற்றினான். ஆனால் உண்மையைக் கண்டு பிடிக்காமல் ஊருக்குப் போவதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டான்.

கோவிலுக்குப் போய் விட்டு அப்படியே ஓட்ட லுக்குப் போய் அறையைக் காலி செய்து விட்டு வந் தார்கள்.

இரவு உணவையும் வெளியிலே பார்த்துக் கொண் டார்கள். நெருஞ்சி முள் போல நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்த விஷயம் மட்டும் இல்லாதிருந்தால் அந்த மாலைப் பொழுது அவனுக்கு இனியதாகக் கழிந் திருக்கும்.

உறங்குகிற நேரம் வந்தவுடன் பெரிய ரெண்டு மரக் கட்டில் கூடத்திலே இருந்தது. அதை ஒழுங்கு படுத்திக் கொடுத்தார் பட்டாபி.

சுகமாய்ச் சாய்ந்து கொண்டான் பாலச்சந்தர்.

பட்டாபி தனக்கென்று ஒரு கயிற்றுக் கட்டிலைக் கொண்டு வந்து போட்டுக் கொண்டார்.

''என்னமோப்பா.... ! எல்லா ஊரிலே இப்ப முன்ன மாதிரி இல்லை ! முன்னயெல்லாம் ஒவ்வொரு ஊர் லயும் கட்டிடக் கலை வித்தியாசமா இருக்கும். வீடுகள் லாம் வித்தியாசமா... இருக்கும். ஆனா... இப்பல்லாம்

கான்கீரிட் கட்டிடங்கள் ஒரே மாதிரியா...'' என்று பேசிக் கொண்டே போனார் பட்டாபி.

சிந்தனையோடு இருந்த பாலச்சந்தர் இடையிலே நுழைந்தான்.

''மாமா...! எங்க மன்னி இருக்காளோனா.. மங்களம்... மன்னி..! அவாளோட நெருங்கின பந்துக்கள் யாரோ... உங்களுக்கு உறவுக்காராளாமே...'' என்றான்.

''யாரு...?''

''அதான்.. மாமா...! சௌந்தரம்மா... என்னமோ... சொன்னா?''

''ம்... ஆமாமா!'' என்றார் பட்டாபி.

''அவாதான்... மன்னிகிட்டே சொன்னாளாம். பட்டாபி மாமா... தஞ்சாவூர் வீட்டை விக்கவே இல்லையே அப்படீன்னு'' என்றான் லேசு போல.

பட்டாபியிடம் ஒரு திடுக்கிடல் தெரிந்தது.

''ஓ...! அவாளுக்கு தெரியலயோ... என்னமோ?'' என்றார் சுரத்தேயில்லாமல்.

''அது... தெரியலை மாமா! ஆனா ஏற்கனவே மங்களம் மன்னி குணம்தான் தெரிந்ததாச்சே! ''வீடே விக்கலைன்னா.. எப்படி பட்டாபி மாமாவுக்கு இத்தனை பணம் வந்து. அதுவும் அது நல்ல பணமோ... கெட்ட பணமோ.. தெரியலையே..''னு என்னென்னமோ கொளுத்திப் போட்டுட்டா...! எங்கண்ணா... ரொம்ப வெக்ஸ் ஆயிட்டான். அது என்னென்னமோ சொல்லி என்னை கலக்கிவிட்டுட்டான்.''

பட்டாபியிடம் ஒரு அசௌகரியமான மௌனம் தெரிந்தது.

பாலச்சந்தர் எழுந்து உட்கார்ந்தான். அவரும் எழுந்து அமர்ந்தார்.

''மாமா...! உங்களுக்கு அம்மா மேல ரொம்ப பிரியம்! அது நன்னாத் தெரியும் நேக்கு..! ஆனா... இத்தனை பணம்கறது லேசான விஷயம் இல்லே! அதுவும் வீட்டை வேற நீங்க விக்கலைங்கறச்சே...! நேக்கு ரொம்ப பயமாயிருக்கு...! அந்தப் பணம் வந்த விதத்தை நேக்குச் சொல்லுங்கோளேன். ப்ளீஸ்....!'' என்றான்.

பட்டாபி சற்று நேரம் மௌனம் சாதித்தார். ''அம்பி...! நல்ல விதமா... வந்த பணம்ன்னா... அதோட விடு வாயோ..!'' என்றான்.

''கண்டிப்பா.. விட மாட்டேன். இன்னும் அம்மா கிட்டே நான் பேசலே! பேசினா... ரொம்ப பயந்துடுவா...!''

பட்டாபி ஒரு பெருமூச்சுக்குப் பிறகு வாயைத் திறந்தார்.

''அம்பி! சொல்றதில்லேன்னு வாக்கு கொடுத்திருக் கேன்'' என்றார் தயக்கத்துடன்.

''இல்லே... மாமா! நேக்குத் தெரிஞ்சாகணும் ஒண்ணு சொல்லுங்கோ. இல்லே டெபாசிட்டை வித்ட்ரா... பண்ணுங்கோ....'' என்றான்.

யாரிடம் இருந்து வந்த பணம் என்று சொன்னார்.

பாலச்சந்தர் திகைத்துப் போய் அமர்ந்துவிட்டான்.

* * *

13



''வேலையெல்லாம் நல்லபடியா முடிஞ்சுடுத்தாடா !'' என்றார் கனகேஸ்வரி.

''ம்...'' என்றான் பாலச்சந்தர்.

முன்பெல்லாம் எப்போது வெளியூர் போனாலும் வந்ததற்குப் பிறகு. தான் அந்த ஊரில் பார்த்த இடங்களைப் பற்றித் தொணதொணப்பான். ஆனால் இந்த முறை ஏனோ தான் சென்று வந்த இடங்களைப்பற்றிப் பேசவே மாட்டேன் என்கின்றானே என்று எண்ணிக் கொண்டார் கனகேஸ்வரி.

ஏதோ சிந்தனையிலேயே இருந்தான். மனைவியிடம் கூட கலகலப்பாகப் பேசக் காணோமே என்ற எண்ணம் உள்ளே ஓடிக் கொண்டே இருந்தது.

''என்னடா... ஏதும் பிரச்சினையா?'' என்று கேட்டார்.

டைனிங் டேபிளின் முன் அமர்ந்திருந்தான். சந்தியா தோசை வார்த்து எடுத்து வந்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''பிரச்சினைன்னு ஒண்ணும் இல்லே. ஆனா... ஆபீஸ்லதான் ஏதோ ஃபைல் காணோம்னு சொல்லிண்டிருந்தா... அந்த சிந்தனையிலே இருக்கேன்'' என்றான்.

''உனக்கும் அதுக்கும் ஏதானும் சம்பந்தம் இருக்கா? உன் மேல ஏதும் நடவடிக்கைன்னு வருமா'' என்றார்.

''என் மேல வராது. என் செக்ஷனும் இல்லே. ஆனா... அந்த ஃபைல் இல்லேன்னா நிறைய வொர்க் பெண்டிங் ஆகும்'' என்றான்.

''ஓ... !'' என்றார் கனகேஸ்வரி ''அதுசரி... மனசுக்குக் கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா சொல்றேன்னு தப்பா நினைக்கதே. ஆபீஸ் கவலையை வீட்டுக்கும் எடுத்துண்டு அலையப்படாது தெரியறதோ?'' என்றார்.

''எனக்கும் தெரியறது. ஆனா... நான் வேணும்னா செய்யறேன்... அது துரத்திண்டே வர்றதே...'' என்றான்.

மென்மையாகப் புன்னகைத்தான். உள்ளே மட்டும் ''அம்மா அது வீட்டு விஷயமா இல்ல போச்சு...'' என்று எண்ணிக் கொண்டான்.

சந்தியாவும் இரண்டு நாட்களாகவே கணவனிடம் மாறுதலை உணர்ந்திருந்தாள்.

'சரி... ஏதோ... ஆபீஸ் பிரச்சினை போல' என்றுதான் அவளும் எண்ணிக் கொண்டாள். ஆனால் பாலச்சந்தரின் உள்ளத்தில் பெரிய எரிமலையே உள்ளது எப்படி அவள் அறியவில்லை.

''ஏன்... சந்தியா... நீ உங்க ஆபீஸுக்கு லீவே போட மாட்டியா?'' என்று திடீரென்று கேட்டான்.

சந்தியா வேலையில் ஆழ்ந்திருந்தவள் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனாள். பிறகு சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

''ஏன்... கேக்கறேள்?'' என்றாள்.

''சும்மா.. தான் ! ரொம்ப ஐடியலா இருக்கியே...'' என்றான்.

''அவசியம்னா... எடுக்கலாம். ஏன் நீங்க ஏதாவது ப்ரோகிராம் போடறதா... இருந்தால் சொல்லுங்கோ... லீவு போடறேன்'' என்றாள்.

''போடணும்... நெக்ஸ்ட் மன்த் பிளான் பண்ணிக் கலாம்..'' என்றான்.

''ம் ... கேட்கணும்... தான் ஞாபகம் வருதா? நாளைக்கு அந்த ரக்ஷா.. வந்து நம்மளை அழைச்சாளே... அவளுக்குக் கல்யாணம். ஒரு ஹாஃப் டே லீவு எடுக்கலாம்னு இருக் கேன்'' என்றாள்.

'' ம்... ! நான் கேட்கறதுக்காக லீவு எடுக்க வேண்டாம். அவசியம்னா.. எடு..'' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.. ! ஆனால் மறுநாள் அவன் செய்த காரியம் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அதன் விளைவை அவள் அனுபவிக்க நேர்ந்தது.

* * *

சுழல் நாற்காலியை ஒரு திருப்புத் திருப்பி விட்டு சிரித்தார் சந்திரமௌலி.

கையில் போன். வாசலில் நின்ற உருவத்தைப் பார்த்தவுடன் ஆச்சரியம் தோன்றியது. உடனே இடக்கை யால் ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண்டு

''வாங்கோ....!'' என்றான்.

பாலச்சந்தர் உள்ளே நுழைந்தான்.

போனில் பேசியவர்களிடம் பதில் சொல்லிவிட்டு அவன் முகத்தை நிமிந்து பார்த்தான்.

''வாங்கோ மாப்பிளே ! அதிசயம்... ஆனால் உண்மை!'' என்றார்.

''ஆமா.... ! பர்மிஷன் போட்டுட்டு வந்தேன்'' என் றான்.

''அடடா ! நீங்க வந்த நேரம் சந்தியா... இல்லியே...!'' என்றார்.

''அவள் இல்லாத நேரம் பாத்துத்தான் வந்தேன்'' என் றான் முணுமுணுப்பாக.

இயல்பாக இருந்த அவரது முகத்தில் மாற்றம் தோன் றியது.

''ஓ...!'' என்றார் சுரத்தேயில்லாமல்.

''எங்க ரெண்டு பேர் கல்யாணத்துக்கு முன்னாலேயே உங்களிடம் பேசியிருக்கணும் போல இருக்கு..'' என் றான்.

''அதனால.. என்ன? எப்பப் பேசினா.... என்ன? நன்னா.. பேசுங்கோ...பேஷாப் பேசுங்கோ...'' என்றார்.

''பேசித்தான் ஆகணும்?!'' என்றான். அவர் எதிர் பாராத இரண்டு கேள்விகளைக் கேட்டான்.

சந்திரமௌலி ஒரு கணம் திகைத்தார். ''அதைப் பத்தி இப்ப என்ன? நேரம் வரச்சே பேசினாப் போச்சு...'' என்று சமாளித்தார்.

அவன் தீர்க்கமாக அவரைப் பார்த்தான்.

''இல்லே..! அப்படி விடறதுக்கில்லே! நேக்குத் தெரி யணும்'' என்றான்.

அவர் மௌனித்தார்.

''மாப்பிளே... இத வச்சுண்டு... ஏதானும்..''

''இல்லே சொல்லுங்கோ ! ஆனா... நேக்குத் தெரியணும்? என்றான்.

சொன்னார். அதற்குப் பிறகு அவன் மௌனத்தில் ஆழ்ந்து போனான். பத்து நிமிடங்களுக்கு மேல் அவர் பேசியதைக் கேட்டு விட்டு அதற்குப் பிறகு அவர் கேட்ட கேள்விகளுக்கு ஒன்றிரண்டு வார்த்தைகளிலேயே பதில் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

அவன் முதுகை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்து விட்டார் சந்திரமௌலி.

* * *

நாகராஜன் தனது காபினுக்குள் இருந்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எதிரெதிர் கேபின்களில் இருந்தார்கள் பாலச்சந்திரனும், நாகராஜும்.

எப்போதும் மலர்ச்சியாக இருக்கிற பாலச்சந்திரனின் முகம் இன்றைக்கு என்னவோ வாடிப் போய்க்கிடந்தது.

பியூன் காளி உள்ளே நுழைந்தான்.

''என்ன சார்... பொழப்பு நம்ம பொழப்பு'' என்று புலம்பினான்.

நாகராஜன் சிரித்துக் கொண்டே திரும்பினான்.

''ஏன்... உன் பொழப்புக் கென்னப்பா... நல்ல பொழப்பாச்சே! எல்லா செக்ஷன்லயும் பூந்து வெளியே வர்றே! நாங்களே எம்.டியைப் பார்க்கணும்னா... உன்னை தாண்டித்தான் போகப் போறோம்...'' என்றான்.

''ஆமா! கோவிலுக்குள்ளே போறவங்க எல்லாம் வாசப்படியை தாண்டித்தான் போறாங்க. அதுக்காக வாசப்படி உசத்தியாயிருமா?'' என்றான்.

'' ஆஹா...! சூப்பர் தத்துவம்ப்பா...!'' என்று சிரித்தான் நாகராஜன்.

காளியின் வாய் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தாலும் கொண்டு வந்திருந்த ஃபைலில் கையெழுத்து வாங்கினான்.

''இல்லைங்க.. சார்! வழக்கமா.. பெரிய தலைதான் கடிப்பாரு... இன்னைக்கென்னன்னா.. நம்ம பாலு அய்யாவும் கடிக்கறாரு...'' என்றான் மெல்லிய குரலில்.

ஃபைலை நோட்டம் விட்டுக் கொண்டே தலை நிமிராமல் ''கல்யாணம் ஆயிடுச்சுல்ல இனிமே அப்படித்தான்'' என்றான் நாகராஜன்.

''ஆமாங்க... சார்! வீட்ல சண்டை மாதிரித்தான் தெரியுது. முகத்தையும் பாருங்க... கடுப்பாத்தான் தெரியுது..'' என்றான்.

''சரி... மேனேஜர் பெல் அடிக்கறாரு... ஓடுப்பா.... வாசப்படி...'' என்றான் நாகராஜன்.

''வாசப்படியா?'' என்று விழித்தான் காளி.

''நீதானப்பா... உதாரணம்... சொன்னே?'' என்றான் நாகராஜன்.

''அய்யோ.. சார்! உங்ககிட்ட பேசும்போது பாத்துப் பேசணும். ஆமா சார்! நீங்க ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?''

''எல்லாம் வீட்டு மகாபாரதம்தான்!'' என்றான் நாகராஜன்.

அதற்குள்ளாக மேனேஜர் மறுபடியும் அழைக்கவே நகர்ந்து விட்டான் காளி.

வீட்டில் காலையில் நடந்த சம்பவம் நாகராஜன் மனத்தில் ஓடியது.

''அத்தை... குளிக்கப் போறேன். ஆபீசுக்கு நேரமா யிருச்சு... குழம்பு அடுப்பிலே கொதிக்குது... கொஞ்சம் இறக்கிடறீங்களா?'' என்றாள் பூங்கொடி.

''ஆமா... அதை இறக்கறியா. அதை ஏத்தறியான்னு இப்படி எடுபிடி வேலையெல்லாம் செய்யறதுக்கு... பேசாம நானே சமையல் பண்ணிடலாம்'' என்று கடித் தாள் நாச்சம்மாள்.

தங்கள் அலுவலகத்தில் உடன் வேலை செய்கிற மும்தாஜ் எங்க மாமியார் செய்த டிபன் என்று வகை வகையாகக் கொண்டு வருகிற நினைவு பூங்கொடிக்குள் ஓடியது.

''ஏன்...அப்படி சொல்றீங்க? மாமியார்ன்னா... செய்யக் கூடாதா? எங்க கூட ஆபீஸ்ல வேலை செய்யற கலீக்ஸ் எல்லாம் மாமியார் டிபன் செஞ்சு... தராங்கன்னு கொண் டுட்டுதானே வராங்க''.

''ஓஹோ... ! நான் அதெல்லாம் வேற செய்யணுமா...? கடைசிக்கு எடுபிடியா பண்ணிடுவே போல இருக்கே?''

''ஏன் ... மகளா இருந்தா பண்ணிக் குடுக்க மாட்டீங் களா?'' என்றாள்.

''என்னமோ.. அவசரம்... அவசரம்ன்னே.. இப்ப என்னன்னா... நின்னுகிட்டு வாயடிச்சிட்டிருக்கே?'' என்றார்.

''ஆமா... நின்னு பேசலேன்னாலும் மதிக்கறதில்லேம் பீங்க!'' என்று சொல்லிக் கொண்டே பாத்ரூமுக்குள் ஓடினாள்.

மகனும், தந்தையும் செய்வதறியாது பார்த்துக் கொண் டார்கள். பேச்சு அதோடு நிற்கவில்லை. அவளும் புறப்பட்டுக் கொண்டே பேசினாள். தாயும் அடுப்படியில் செய்து கொண்டே பேசினார்.

தாங்கள் தலையிட்டால் அழுகையாக வெடிக்கும் என்று புரிந்து கொண்ட நாகராஜன் தங்கள் அறையி லிருந்து பாத்ரூமில் புகுந்து கொண்டான். அப்பாவோ பின்னாலே செடிகளைக் கவனிக்கறேன் என்று நகர்ந்து விட்டார்.

இப்போது அது நினைவு வர யோசனையில் ஆழ்ந்து விட்டான் நாகராஜன்.

தொடர்ந்து நடக்கிற இந்த யுத்தத்துக்கு எப்படி முடிவு கட்டுவதென்று அவனுக்குப் புரியவில்லை. அம்மாவும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார். மனைவியும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாள். ஆனால் பாலச் சந்தர் வாழ்க்கையில் அப்படி எல்லாம் குழப்பங்களே வராது என்றுதான் எண்ணினான்.

ஏனென்றால் திருமணத்திற்கென்று இரண்டு கண் டிஷன்கள்தான் வைத்துக் கொண்டிருந்தான் பாலச்சந்தர்.

ஒன்று பெண் மிகவும் வசதி படைத்த குடும்பத்தில் இருந்து வேண்டாம் என்று ஒன்று. இன்னொன்று அவள் தன் அன்னையைப் பார்த்துக் கொள்கிறவளாக இருக்க வேண்டும் என்று. திருமணம் முடிந்த பின்னர் இரண் டொரு முறை அவர்கள் வீட்டுக்குப் போயிருக்கிறான்.

மாமியாரும், மருமகளும் அவ்வளவு பாங்காகப் பழகிப் கொண்டார்கள். பார்க்கப் பார்க்க ஆசையாக இருந்தது. தன் வீட்டில் ஒரு நாளும் அப்படியெல்லாம் நடக்காது என்று விரக்தியோடு எண்ணிக் கொண்டான்.

இப்போது அங்கேயும் பிரச்சினை ஆரம்பித்து விட்டதோ என்னவே?

பேருக்குக் கையில் ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு அவனது காபினுக்குப் போனான்.

''என்னடா... பாலு....? ஏன் ஒரு மாதிரியிருக்கே...'' என்றான்.

''ஒண்ணுமில்லடா !'' என்றான் பாலச்சந்தர்...

''ஒண்ணுமில்லேங்கற விதத்துலயே ஏதோ இருக்கிற மாதிரி இருக்கே?'' என்றான்.

பாலச்சந்தர் உச்சுக் கொட்டினான்.

''டேய்... ! தேடி வர்ற எக்ஸ்பர்ட்டைஸை உதறாதே! அனுபவசாலிங்க ஆலோசனை என்னைக்கும்... நல்லது...'' என்றான்.

பாலச்சந்தர் அவனது நகைச் சுவைக்குப் புன்னகைத் தான்.

''சொல்றேன்டா.. உன்கிட்ட சொல்லாம வேற யார் கிட்டே சொல்லப் போறேன்?'' என்றான்.

''என்னடா... மாமியார் மருமகள் பிரச்சினையா!'' என் றான் நாகராஜன் சாதுரமாக.

''இல்லப்பா... இது வேற மாதிரி..!'' என்றான்.

'சரி... வற்புறுத்த வேண்டாம் அவன் விரும்பும் போது சொல்லட்டும்' என்று வேறு ஏதோ விஷயம் பேசி விட்டு வந்தான் நாகராஜ்.

அன்று மாலை சந்திரமௌலியைச் சந்தித்து விட்டு வந்த அதிர்ச்சியிலே இருந்தான் பாலச்சந்தர் என்றால் நாகராஜ் வேறு மாதிரி மனநிலையில் இருந்தான்.

போன் ஒலித்தது.

எடுத்தான். அந்தப் புறமிருந்து அம்மா! மறுபடியும் வீட்டுக் கதையை ஆரம்பித்து விடுவாளோ என்ற அச்சத்தில்.

''அம்மா.. வீட்டு விஷயமெல்லாம் வீட்ல பேசிக்க லாம்மா ! ஆபீஸ்ல வொர்க் இருக்கு..''

''வீட்ல இருந்தாத்தானே... பேசுவே?'' என்றான்.

''ஏன் வீட்ல இல்லாம எங்கே போவே?'' என்றான் கடுப்புடன்.

''ஏன்... போக மாட்டோம்? இப்ப எங்கே இருக்கோம். தெரியுமா ! முதியோர் இல்லத்துல. நானும் அப்பாவும் வந்துட்டோம். இனிமே நீ நிம்மதியா உன் பொண்டாட்டி முந்தானையை பிடிச்சுகிட்டு அலைஞ்சுகிட்டிரு..'' என்றார்.

''அம்மா...!'' என்ன சொல்றே?'' என்றான் அதிர்ச்சி யுடன்.

''ஆமாடா ! பெய்ட் இல்லம். எல்லா வசதியும் இருக்கு... நிம்மதியா இருக்கப்போறோம்'' என்றாள்.

''அம்மா...!'' என்று அவன் பதறப் பதற அம்மா போனை ஆஃப் செய்து விட்டார்.

நாகராஜ் நிலை குலைந்து போய் அமர்ந்துவிட்டான்.

14



அடுப்படியில் ஆர்வமாக நின்று கொண்டிருந்தாள் சந்தியா.

கணவன் வருகிற நேரமாகிவிட்டது. இன்றைக்கு பெரியப்பாவிடம் பர்மிஷன் சொல்லிவிட்டு வந்தாள். என்னவோ தெரியவில்லை. கணவன் தஞ்சாவூர் போய் விட்டு வருகிறேன் என்று போய் வந்ததில் இருந்தே ஒரு மாதிரியாக இருந்தான்.

நேற்றே கனகேஸ்வரியிடம் பேசி. ''அம்மா... அவருக்கு என்னென்ன பலகாரம் பிடிக்கும் ஈஸியா செய்யற மாதிரி ஒண்ணு சொல்லுங்களேன் செய்யறேன்'' என்றாள்.

கனகேஸ்வரி மருமகளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''சொன்னா.. சிரிப்பியேடி..!'' என்றார்.

''இல்லே சிரிக்கலே.. சொல்லுங்கோ...!'' என்றாள்.

''கேசரி...'' என்றார்.

''ஐயோ! ரொம்ப சிம்பிளா சொல்றேளே.''

''இல்லடி பொண்ணே! நிஜம்மாவே அவனுக்குக் கேசரி பிடிக்கும். என்ன பதத்துல பண்றதுன்னு சொல்றேன்... செஞ்சு குடு...'' என்றார்.

அவரும் கவனித்தார். மகன் ஊருக்குப் போய் விட்டு வந்ததில் இருந்து சுரத்தில்லாமல் இருக்கிறான் என்று. அவரும் வாழ்ந்து முடித்தவர்தானே ரெண்டு பேருக்கும் ஏதோ ஊடல் போல இருக்கு. 'மருமகள் சமாதானம் செய்ய முயற்சிக்கிறாப் போல இருக்கு...' என்று புரிந்து கொண்டார்.

செய்கிற பதத்தை எல்லாம் விவரமாகச் சொன்னார். அது மட்டுமல்லாமல் மருமகள் செய்கிற போது கூடவும் நின்றார்.

செய்து முடித்தவுடன் ''சரிடிம்மா... ! நான் கோயிலுக்குப் போயிட்டு அப்படியே உங்காத்துக்கும் போயிட்டு வரேன்..'' என்று கிளம்பினார்.

புறப்பட்டவர் சும்மா போகாமல் உள்ளறையில் போய் இரகசியமாக மகனுக்கு போன் செய்தார்.

''டேய் ! பாலு ! உன் ஆம்படையா நோக்குப் பிடிச்ச பலகாரம் செஞ்சுண்டிருக்கா ! லேட் பண்ணாம வந்து சேரு...'' என்றார்.

''ம்.. !'' என்றான் பாலச்சந்தர். ஆனால் போனை வைத்த பின் யோசனை.

''அம்மாவே போன் செய்து சொன்னதற்குப் பிறகு போகவில்லையென்றாலும் வருத்தம். அம்மாவும் வீட்டில் காத்துக் கொண்டிருப்பார்'' என்ற எண்ணம் ஓடியது.

கடுப்புடன் புறப்பட்டான். இன்றைக்கு உண்மையில் நேரம் கழித்துத்தான் புறப்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

எங்கோ வகையாகச் சிக்கிக் கொண்டான் போல உணர்ந்தான். கோபத்தைக் காட்டவும் முடியாது. காட்டாமலும் இருக்க முடியாது. விஷயங்கள் நடந்த விதத்தைப் பற்றிக் கூட அவனுக்கு வருத்தம் இல்லை. தான் முட்டாள் ஆக்கப் பட்டோம் என்றுதான் பெரிய வருத்தமாக இருந்தது.

முன்னைப் போலக் கலகலப்பாகப் பேசவும் முடியவில்லை. பேசாமலும் இருக்கவும் முடியவில்லை. தலை போகிற அவஸ்தையாக இருந்தது. புறப்பட்டான்.

வீட்டுக்குள் கணவன் நுழைந்தது சந்தியாவுக்கு தெரிந்தது. அவளுக்கே ஆச்சரியம் தெருமுனையில் கணவன் திரும்பும்போதே அவளுக்குத் தெரிந்து விடும். ஏப்படியென்றே புரியவில்லை. அவ்வளவு தூரம் தன் மனம் கணவனிடம் ஒன்றிருந்தது புரிந்தது.

'மாமியார் வேறு இல்லை. அவர் இருந்திருந்தாலும் இங்கிதம் தெரிந்துதான் நடந்து கொள்வார். ஆனாலும் இருக்கிறார் என்ற உணர்வு ஒரு ஓரத்தில் இருக்கும். அதனால் அவர் வெளியே போயிருப்பதும் ஒரு விதத்தில் நல்லதுதான். என்னதான் அந்த அழகான தலைக்குள் அழுத்திக் கொண்டிருக்கிறது என்று கேட்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள்.

''தான்னன்னா...'' என்று பாடிக் கொண்டு லேசாக ஆடிக் கொண்டிருந்தாள்.

பாலச்சந்தர் உள்ளே நுழைந்தான். மனைவி சமையல் கட்டில் உற்சாகமாக ஆடிக் கொண்டு வேலை செய்வதைப் பார்த்தும் ஒரு கணம் மனம் நெகிழ்ந்தது. ஆனால்

அதே சமயம் விஷயங்கள் நினைவுக்கு வர கோபம் பொங்கியது.

''அம்மா.. அம்மா... !'' என்று குரல் கொடுத்தான்.

''வாங்கோ... வாங்கோ.. வந்துட்டேளா'' என்று உற்சாகமாக சமையல்கட்டில் இருந்து வந்த மனைவியைப் பார்த்தான்.

''அம்மா... எங்கே?'' என்றான் வெறுமையான பார்வையுடன்.

''அம்மா... கோவிலுக்குப் போயிட்டு எங்காத்துக்கும் போயிட்டு வரேன்னு போனா..'' என்றாள்.

''ம்..'' என்றான்.

''போங்கோ... ! கை கால் அலம்பிண்டு வாங்கோ.. ! உங்களுக்கு பிடிச்ச கேசரி... பண்ணியிருக்கேன்..'' என்றாள்.

''ஆமா.. ! எல்லாமே நேக்குப் பிடிச்சதாத்தான் நடக்கிறதோ... !'' என்று வாய் முணுமுணுத்தது. சந்தியாவின் காதில் விழவில்லை.

''என்ன சொல்றேள்?'' என்றாள்.

''ஒண்ணுமில்லே...!'' என்று இடத்தை விட்டு அகன்றான். கைகால் சுத்தம் செய்து கொண்டு வந்தான். சோபாவில் அமர்ந்து கொண்டான்.

அழகாக ஒரு கப்பில் பரிமாறி அவள் கொண்டு வந்து கொடுக்க வாங்கிக் கொண்டான். என்னவோ ஆசிரியருக்குப் பயந்து கொண்டு ஹோம் வொர்க் செய்கிற குழந்தை போல அமைதியாக உண்டான்.

சந்தியாவும் வந்து எதிரில் அமர்ந்தாள். அவள் முகத்தையே பார்க்காமல் ஏதோ இதுவும் தயிர் சாதமும்

ஒன்றுதான் என்பது போல அவன் உண்பதைப் பார்த்து அவளுக்குள் தவிப்பு.

''ஏன்னா..!'' என்று பேச்சுக் கொடுக்க ஆரம்பித்த போது அவன் சட்டென்று எழுந்தான். கிண்ணத்தைக் கொண்டு போய் சமையலறையில் உள்ள சிங்கில் அவனே வைத்து விட்டு மீண்டும் தனது அறைக்குப் போனான்.

சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு ''கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்'' என்று கிளம்பினான்.

சரேலென்று செருப்பை மாட்டிக் கொண்டு போய் பைக்கை எடுக்கிற கணவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

* * *

தூக்கம் பிடிக்காமல் எழுந்து அமர்ந்தான் நாகராஜ். அருகில் படுத்திருந்த மனைவியைப் பார்த்தான். அவளும் புரண்டு புரண்டு படுப்பதைப் பார்த்தான்.

கோபமாகவும் வந்தது. பாவமாகவும் இருந்தது. அவளும் இந்த அளவுக்கு விஷயம் போகும் என்று எதிர்பார்க்கவில்லை. ஏதோ வாய்ச்சண்டை நடக்கும். பிறகு வடிந்து விடும் என்றுதான் நினைத்திருந்தானே தவிர பெரியவர்கள் இப்படி ஒரு முடிவைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

தங்கள் படுக்கை அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சிட் அவுட்டுக்கு வந்தான் நாகராஜ்.

சிறிய அளவான வீடு. ஆனால் தேவைகளெல்லாம் நிறைவு பெறுகிற வகையில் அமைந்திருந்தது.

அப்பா அடிக்கடி இருமுவதோ அல்லது செருமுவதோ செய்வர். ஆனால் இப்போது அந்த சத்தம் கேட்காததே வீடு வெறுமையாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

அம்மாவிடம் இருந்து போன் வந்ததுமே அதிர்ந்து போனான் நாகராஜ்.

எந்த இடம் என்று தெரிந்து கொண்டு ஓடினான்.

வசதியான அறைதான். பெட்டி படுக்கைகளெல்லாம் இன்னும் பிரிக்கப் படாமலே இருந்தன.

அம்மா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அப்பா எதுவும் பேசவில்லை.

அவன் மௌனமாக ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான். கண்களில் கண்ணீர் நிறைந்தது.

''அப்பா... என்னப்பா.. இது..! பேச்சு... பேச்சா இருக்க இப்படிப் பண்ணீட்டீங்க?'' என்றான்.

அப்பா வருத்தமாகப் பார்த்து ''என்ன என்ன பண்ணச் சொல்றே?'' என்றார்.

''என்னப்பா... இப்படிச் சொல்றீங்க?'' என்றான்.

''வீடுன்னா.. வீடாக இருக்கணும். ரெண்டு பொம் பளைங்களும் இப்படி எதிரும் புதிருமா இருந்தா நாம என்ன செய்யறது ! விடு.. இப்பவுமே கொஞ்ச நாள் இப் படித்தான் போகட்டும்'' என்றார்.

'' வேறு ஏதாவது ஏற்பாடு செஞ்சிக்கலாமே'' என்றான்.

'' என்னத்தைச் செய்வே ! எனக்கு வர பென்ஷனுக்கு வேலைக்காரங்க வச்சுச் சமாளிக்க முடியுமா? ஏதோ இல்

லத்துல என்னத்தைப் போடறான்களோ அதை சாப்பிட் டுட்டு இருக்கோம்'' என்றார்.

''அப்பா.. ப்ளீஸ் ! கிளம்புங்கப்பா...'' என்றான். மறுபடி யும் அவர் உதட்டைப் பிதுக்கினார்.

''டெபாசிட் கட்டியாச்சுப்பா.. ! ஒரு தரம் உள்ளே நுழைஞ்சா... ஒன் மன்த் நோட்டீஸ் குடுக்காம.. வெளியே போக முடியாது..'' என்றார்.

நாகராஜ் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான்.

அப்பாவும் ஏதோ முடிவோடுதான் கிளம்பியிருக்கிறார் என்று தோன்றியது. வித விதமாகப் பேசியும் அவர்கள் பிடிவாதத்தை அவனால் மாற்ற முடியவில்லை.

முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு கிளம்பி னான்.

வீட்டுக்கு வந்தான். இறுகியிருந்தது அவன் முகம் பார்த்து மனைவி பயந்து போனாள்.

''ஏங்க... ! நான் இந்த அளவுக்குப் போகும்னு... நினைக் கலே...'' என்றாள்....

அவன் உச்சுக் கொட்டினான்.

''பாத்தீங்களா?'' என்றாள் கெஞ்சலாக.

''அங்க இருந்துதான் திரும்பி வரேன்'' என்றான்.

''நாம ரெண்டு பேரும் போய்க் கூப்பிடலாம் வாங்க'' என்றாள்.

அவள் இப்படிச் சொல்லவும் அவன் மனத்தில் கொஞ்சம் பாரம் இறங்கியது. வெறுமையாக அவளைப் பார்த்தான்.

''பிடிவாதமா இருக்காங்க.. பூங்கொடி...'' என்றான்.

உள்ளே போய்க் கையை அலம்பினான். மனைவி நீட்டிய காபியை வாங்கிக் கொண்டான்.

வாயருகே கொண்டு போனான். ''ஆமா.. ! உன் பொண்டாட்டி வக்கிற காபியை நீதான் மெச்சிக்கணும். ஒண்ணு சக்கரை தூக்கலா இருக்கும். இல்லேன்னா... சப்புன்னு ஒண்ணுமே இல்லாம இருக்கும்'' என்று நொடிக்கிற அம்மாவின் முகம் நினைவுக்கு வந்தது.

காபியை ஒரு நிமிடம் கீழே வைத்தான். தானே சற்றும் எதிர்பாராத விதமாக குலுங்கி குலுங்கி அழு தான்.

பூங்கொடியும் கதறி விட்டாள்.

'' ஏண்டி... ! நீதான் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கக் கூடாதா? இனி ரோட்ல போறவன் வரவனெல்லாம் கேள்வி கேட்பானே...'' என்று கதறுகிற கணவன் முகத் தைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டு கட்டிக் கொண் டாள்.

''நானும் இப்படி நினைக்கலையே ! ஏதோ குத்தலாகப் பேசுவாங்க... கோபமாப் பேசுவாங்க... ! நானும் பதில் குடுப்பேன். ஆனா... இப்படியாகும்னு நினைக்கலியே..'' என்றாள்.

மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டார்கள். ஆனால் விடிவேதும் ஏற்படவில்லை. இரவெல்லாம் புரண்டு புரண்டு படுத்ததுதான் மிச்சம்.

அந்த இல்லம் சற்று அருகில் இருந்தால் பரவா யில்லை பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது.

அலுவலகத்துக்கு போகிற வருகிற வழியில் இருந்தாவது நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

''எல்லாம் இறைவன் செயல்'' என்று ஒரு மாதிரி இறைவனிடம் ஒப்புக் கொடுத்து விட்டு சற்று கண்ணசந்தான்.

உறக்கத்திலும் கனவு வந்து அவனை தின்றது. தோளிலும் மார்பிலும் போட்டு வளர்த்த அம்மா, அப்பா தன்னோடு விளையாடிய நாட்களின் கனவு !

15



எப்போதும் ஆர்வமாக வேலை செய்யும் சந்தியா இன்று ஏனோ முகத்தில் சுரத்தில்லாமல் நடமாடுவதை கவனித்தார் சந்திரமௌலி.

''ஏம்மா, சந்தியா வீட்ல ஏதாவது'' என்று அவர் ஆரம்பிக்கும் முன்பே சந்தியா ''பெரியப்பா, அந்தக் கம்பெனியிலிருந்து செக் வரலை இல்ல?'' என்றாள்.

மகள் பேச்சை மாற்றுகிறாள் என்பதை பெரியப்பா புரிந்து கொண்டார். பாலச்சந்திரன் தன்னை வந்து சந்தித்ததைப் பற்றி சொல்லலாமா என்று யோசித்தார் அதே சமயம் தங்கள் சந்திப்பைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாமென பாலச்சந்திரன் சொல்லிவிட்டு போனது நினைவுக்கு வந்தது. ஆனால் வீட்டில் ஏதோ நடந்

திருக்கிறது என்பது புரிந்தது. இனிமேல் தாம் செய்வதற்கு எதுவும் இல்லை. எல்லாம் இறைவன் சித்தப்படிதான் நடக்கும். என்று எண்ணிக் கொண்டார். தானும் முக பாவத்தில் எதையும் காட்டாமல் ''ஆமம்மா செக்கு வரலை'' என்றார்.

தங்கள் தொழில் தொடர்பான விஷயங்கள் மட்டும் பேசிவிட்டு தனது காபினுக்குள் நுழைந்து கொண்டாள் சந்தியா

சந்தியா அந்தப்பக்கம் போனவுடன் சந்திரமௌலியின் அறையில் போன் ஒலித்து எடுத்தார். அந்தப் பக்கம் ஒலித்த குரலைக் கேட்டவுடன் அவர் முகம் மாறியது. ''என்னய்யா விஷயம்?'' என்றார். பதில் வந்தது.

அந்தப் பக்கம் ஏதோ சொன்னார்கள். ''சரி சரி இதெல்லாம் நேர்ல பேசணும். சந்தியா எங்கயாவாவது கேட்டு வைக்கப் போறா!'' என்றார்.

அதே நேரத்தில் சந்தியா கேட்டுக்கொண்டு தான் இருந்தாள். பெரியப்பா அறையினும் அவளது அறையிலும் ஒரே இணைப்பு யாராவது ஒருவர் இல்லாத போதும் அழைப்புக்கு தவறிப்போய் விடக்கூடாது என்பதற்காகவும் இந்த ஏற்பாடு.

சந்தியா தற்செயலாக போனை எடுத்தாள். பெரியப்பா குரல் கேட்டவுடன் வைத்திருப்பாள் ஆனால் ஏதோ தூண்டலில் தொடர்ந்து கேட்டாள். சந்தியா கேட்டு வைக்கப்போறா என்று சொன்ன வார்த்தைகள் அவளை துணுக்குறச் செய்தது பெரியப்பா எப்போதும் அவளிடம் எதையும் மறைக்க மாட்டார். ''உங்கபெரியம்மாடா...!'' என்று எல்லா விஷயத்தையும் அவளிடம்

கொட்டுவார். ''பெரியப்பா! எதுக்கு இதெல்லாம் எங்கிட்ட சொல்றேள்'' என்று அவளாக விலகினால் உண்டு. அப்படிப்பட்ட பெரியப்பா இப்போது எதை தன்னிடம் மறைக்கப் பார்க்கிறார் என்று அவளுக்குள் வியப்பு தோன்றியது. மேற்கொண்டு யோசிக்கவிடாமல் வேலைகள் அவளை உள்ளே இழுத்துக் கொண்டன.

இன்றைக்கு அவளே கொஞ்சம் லேட்டாகத்தான் வீட்டிற்குப் போனாள். கணவன் ஏன் தன்னிடம் பாராமுகமாக நடந்து கொள்கிறான் என்பதை இன்றைக்கு அவனிடம் கேட்டுவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டு காத்திருந்தாள்.

பாலச்சந்தர் வரும் போதே மணி ஒன்பது ஆகிவிட்டது அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை பொறுமையாகவே பரிமாறினாள். அவனும் பொதுப்படையாகவே அவளிடமும் அம்மாவிடமும் பேசினாள். அம்மாவுக்கு எதுவும் தெரிய வேண்டாமென்று நினைக்கிறான் என்பது புரிய அவளும் அதே நாடகத்தை நடித்தாள்.

தங்கள் அறைக்கு வரும்போது மணி பத்து ஆகி விட்டது. அவள் மெதுவாக '' என்ன, ஆபீஸ்ல ஏதாவது டென்ஷனா?'' என்றாள்.

''இல்ல'' என்றான் சுருக்கமாக.

''அப்புறம் ஏன் இப்படி இருக்கேள்?''

''எப்படி இருக்கேன்?''

''இல்ல எதையோ பறிகொடுத்தா மாதிரி நடமாடிண்டு இருக்கேள்?'' அவன் திரும்பி அவளை நேராகப் பார்த்தான்.

''இத பார்! சொன்னா நோக்கும் வருத்தம், நேக்கும் வருத்தம் விட்ரு'' என்றான். அவளும் நேராகப் பார்த்தாள் ''பரவால்ல சொல்லுங்கோ இப்படி என்னவோ ஏதோன்னு மனசு அலபாஞ்சுண்டே இருக்கிறதைக் காட்டிலும் அது என்னன்னு தெரிஞ்சுண்டுடலாம்.''

''நான் சொல்லறதா இல்லை ஆனால் ஒண்ணு சொல்றேன். கேட்டுக்கோ. என் மனசுல ரொம்ப வருத்தம். நிராசை! ஒவ்வொருத்தனுக்கும் வாழ்க்கைலே ஏதாவது ஒரு குறிக்கோள் இருக்கும். நேக்கும் இருந்தது எல்லாம் வீணாப் போச்சு.''

அவள் திகைத்துப் போனாள். என்ன சொல்ல வருகிறார் என்று அவளுக்குப் புரியவில்லை. கொஞ்சம் தயங்கி ''நான் அதுக்கு ஏதாவது ஒரு வகைல காரணமோ'' என்றாள்.

அவள் மறுபடியும் நேர்பார்வை பார்த்தான். '' நீதான் காரணம் என்று சொன்னா என்ன செய்வே?'' என்றான்.

அவள் அதிர்ச்சி அடைந்தாள். ''திருத்திப்பேன்'' என்றாள்.

''திருத்திக்கோ அப்புறம் பார்க்கலாம்'' என்றாள்.

''எதை திருத்திக்கணும்? சொல்லுங்கோ.''

''அதையும் நீயே கண்டுபிடி'' என்றான்.

அந்தப்புறமாகப் போய் முதுகைக்காட்டியபடி படுக்கையில் படுத்துக் கொண்டான்.

இதுவரை செல்லமாகவே வளர்ந்த சந்தியா சாட்டையடி பட்டாற்போல் நின்றாள்.

* * *

''வா.. வா.. டைம்க்குப் போனாத்தான் சாப்பாடு...'' என்றார் மெய்யப்பன். ஊள்ளூர அவருக்கு சிரிப்பு.

நாச்சம்மாள் அடிபட்டாற் போலப் பார்த்தாள். நல்ல ஹோம் தான். இருப்பவர்களெல்லாம் ஓரளவு வசதியானவர்கள் தான். ஆனால் எல்லாம் நேரப்படி நடக்க வேண்டும் குறிப்பிட்ட நேரங்களில் சாப்பிடப் போக வேண்டும்.

சாப்பிடும் இடத்தில் இருமக் கூடாது. ஏப்பம் விடக் கூடாது என்றெல்லாம் கண்டிஷன்கள். இப்போது நேரம் ஏழு மணி.

நாச்சம்மாள் தங்கள் வீட்டிலானால் எட்டு மணி எட்டரை மணி ஒன்பது மணி என்றுதான் சாப்பிடுவார். சில நேரங்களில் நடுராத்திரியில பசித்தால் கூட எழுந்து சாப்பிடுவார்.

வீம்பாக கிளம்பி வந்தாயிற்று. ஆனால் இங்கே இருக்கிற சட்டதிட்டங்களுக்குப் படிவதற்குள் போதும் போதும் என்றிருந்தது.

கணவரிடமும் எதையும் சொல்ல முடியவில்லை. எதைச் சொன்னாலும் ஒரே வரியில் பதில் சொல்வார்.

''நானா வரணும்னு சொன்னேன்? நீதானே வர ணும்னு அடம் பிடிச்சே!'' என்பார்.

அவருக்கு இந்தப் பசிப் பிரச்சினை எல்லாம் இல்லை. என்னமோ பதில் அப்படிச் சொன்னாலும் மனைவிக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்யத்தான் செய்தார்.

சற்று அருகிலே இருக்கிற பேக்கரியிலே பன், பிஸ்கட் என்று வாங்கி வந்து மனைவிக்காக வைத்திருந்தார். இரவு நேரங்களில் அதைத்தான் இப்போது நாச்சம்மாள் சாப்பிட்டார்.

'பாவம் அத்தைக்குப் பசிக்கும்' என்று பூங்கொடி எப்போதும் எதையாவது டைனிங் டேபிளில் வைத் திருப்பாள். எவ்வளவு சண்டை போட்டாலும் சரி மாமி யாருடைய இந்த மாதிரித் தேவைகளைக் கவனிப்பதில் குறை வைக்க மாட்டாள்.

ஓரிரு நாட்கள் அம்மா வீட்டுக்குப் போனாலும் கூட கணவனிடம் சொல்லி விடுவாள். அவனும் அம்மா வுக்காக இரண்டு தோசையாவது ஊற்றி வைத்து விடு வான்.

நாச்சம்மாளுக்கு இப்போது அதெல்லாம் ஒரு புறம் நினைவு வந்தது. வெளிப்படையாகக் கணவனிடம் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

முதல் நாள் மகன் வந்து பார்த்து விட்டுப் போனான். நிறைய திண்பண்டங்களை வாங்கிக் குவித்து விட்டுப் போனான்.

''அம்மா..! போதும் எதுக்கு இந்தக் கஷ்டம். கிளம்பு'' என்றான்.

''பரவால்லே...! இந்த அனுபவமும் கிடைக்கட்டும்'' என்றாள் நாச்சம்மாள் வீம்பாக. ஊள்ளூர ''ஏன் மருமகள் வந்து அழைக்கலாமே!'' என்ற எண்ணம்.

''அதைப் புரிந்து கொண்டாற்போல நாகராஜ்.

''பூங்கொடி நானும் வரேன்னுதான் சொன்னா... நான்தான்... நீ கோபமா இருக்கே! என்று அதையும் இதை யும் பேசி இங்க பிரச்சினை ஆயிடக் கூடாதேன்னு கூட்டிட்டு வர்லை...'' என்றான்.

நாச்சம்மாள் முகம் லேசாக மலர்ந்தது. ஆனால் காட் டாமல் அடக்கிக் கொண்டாள்.

''அம்மா... ! ஒண்ணு பண்றேன் ! நானும் அப்பாவும் இப்பவே ஹோம்காரவங்ககிட்டே ஒன் மன்த் நோட்டீஸ் குடுத்துடறோம். ரூம் வேண்ணா பூட்டிக் கிடக்கட்டும். பணம்தானே போனாப் போறது. வாம்மா...'' என்றான் கெஞ்சலாக.

நாச்சம்மாள் ஒன்றும் பேசவில்லை.

அப்பாவும், மகனும் போய் சொல்லிவிட்டு வந்தார் கள்.

மகன் புறப்பட்டுப் போனதற்குப் பிறகு நாச்சம்மாள் கணவனிடம் பார்த்தார்.

''எதுக்கு அதுக்குள்ள ஒத்துக்கிட்டீங்க?'' என்றாள்.

வந்த ஒரு மாதத்தில் கணவன் முகத்தில் கோபம் தெரிந்தது. ''விஷயம் தெரியாம உளறாதே நாச்சா ! இந்த ஹோம்ல முக்கியமான ஒரு கண்டிஷன் இருக்கு தெரி யுமா? நமக்கு உடம்பு நல்லா இருக்கற வரைக்கும் நாம இங்க இருக்கலாம். உடம்பு சரியில்லாமப் போனா சொந்தக்காரங்க வந்து கூட்டிட்டுப் போயிடணுமாம்'' என்றார்.

நாச்சம்மாள் இதை சுத்தமாக எதிர்பார்க்கவில்லை.. ''ஓ..!'' என்றார்.

''என்னைக்கிருந்தாலும் நாம பையன்கிட்டேதான் போயாகணும். அதை இப்ப செஞ்சா... என்ன சொல்லு...'' என்றார்.

நாச்சம்மாள் அடிபட்டாற் போல் மௌனமானார்.

''கோபம்தான் என்ன வேலையெல்லாம் செய்யறது. அன்றைக்கே கணவர் சொன்னார். எவ்வளவோ சொன் னார். தான்தான் கேட்கவில்லை.

பிடிவாதம் பிடித்து வந்தாயிற்று. அப்படி வரும்போது எந்த சாதக பாதகமும் தோன்றவில்லை. எப்படியாவது தங்கள் கோபத்தை காட்டிவிட வேண்டும் என்று தோன் றியது.

நேற்று வந்த உறவினர் வேறு ''நாச்சா உன் மருமக எவ்வளவோ தேவலை. நான் இத்தனைக்கும் ரெண்டு மருமக, ஒரு மகன்னு எல்லாரோடயும்தான் இருக்கேன். ஆனா... ஏன் அவளுக்குத்தானே செய்யறே ! இதை எனக்கு எழுதி வைன்னு ஏன் கேட்கறே? ரொம்ப மிரட் றாங்கடி ! சொத்தையெல்லாம் அனாதை ஆசிரமத்துக்கு எழுதி வச்சுருவேனு மிரட்டினதுக்கப்புறம்தான் பேசாம இருக்காங்க. நிறைய சொத்து வச்சிருக்கிற எனக்கே இந்தக் கதி. நல்லா யோசிச்சுக்க..'' என்று. அறிவுரை சொல்லி விட்டுப் போயிருந்தார்.

திடீரென்று நாச்சம்மாளுக்குத் தோன்றியது. ஒரு வேளை மருமகளும் வீம்பு பிடித்துக் கொண்டு வராமல் இருந்துவிட்டால்.

இருந்திருந்தாற் போல திடீரென்று அழுகின்ற மனை வியைத் திகைப்பாய் பார்த்துக் கொண்டு நின்றார் மெய்யப்பன்.

16



''என்ன கேட்டேன்?'' என்று முகத்தில் திகைப்புடன் பெரியப்பாவிடம் கேட்டாள் சந்தியா.

''அம்மா... ! நோக்கு என்ன ஆச்சு? மூணு தடவை யாக் கேட்டாச்சு...'' என்றார் சந்திரமௌலி.

''சாரி... பெரியப்பா...! நேக்கு வேறேதோ யோசனை?'' என்றாள் குற்றம் புரிந்தவளைப் போல.

பெரியப்பா மகள் என்ன விஷயம் என்று சொல்வாள் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவள் மேற்கொண்டு ஏதும் சொல்லவில்லை என்றவுடனே இங்கிதம் அறிந் தவர் போல.

''இருக்கறதுதாம்மா... குடும்பம்னு வந்துட்டாலே பிரச்சினைகள் இருக்கறதுதான்...'' என்றார்.

'இப்பப் பிரச்சினையே என்னன்னா... பிரச்சினை எதுக் குனே தெரியலையே... அதுதான் பிரச்சினை!' என்று எண்ணிக் கொண்டாள் சந்தியா. ஆனால் வாய் விட்டுச் வேறேதோ வார்த்தைகள் வெளியே வந்தன.

''பெரியப்பா ! ஒரு ஸ்டேஜுக்கப்புறம் நமக்கு வேண் டியவா கூட.. நம்மகிட்டே விஷயங்களை மறைச் சுடறா...!'' என்றாள்.

பெரியப்பா ஒரு நிமிடம் அவளை அலட்டிக் கொள் ளாமல் பார்த்தார். பிறகு சொன்னார்.

''அம்மா! வேண்டியவாளா இருந்து மறைச்சா.. அது உண்மையிலேயே உன்னோட நல்லதுக்காகத்தான் இருக்கும்...'' என்றார்.

'யு ஆர் இம்பாசிபிள் பெரியப்பா...' என்று மகள் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

''ஓ...கே...! பெரியப்பா...! என்னமோ கேட்டேளே.... அது என்னன்னு சொல்லுங்கோ?'' என்றாள்.

''அது வேற.... ஒண்ணுமில்லே.. ஆர்.கே. கம்பெனி ஃபைல்... வேணும்மா...'' என்றார்.

''கொண்டு வரேன் பெரியப்பா!'' என்று அதைத் தேடப் போனாள்.

தேடிக் கொண்டிருக்கும்போதுதான் அந்த எண்ணம் தோன்றியது. தன்னுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே ஒருவரிடம்தான் விடை இருக்கிறது என்று.

'இவரையெல்லாம் நம்பினா வேலையாகாது. நாமே இறங்க வேண்டியதுதான்' என்று முடிவு செய்து கொண் டாள்.

முடிவு செய்தது மட்டுமல்லாமல் அந்த ஒருவரை அன்றைக்கு மாலையே பிடித்தாள். கேள்விகளால் துளைத்தாள். முதலில் தயங்கினாலும் முடிவில் வாய் திறந்தார் பட்டாபி.

''அம்மா... ! இப்படியாகும்னே நினைக்கலே? நேடியா உன் ஆம்படையானே தேடிண்டு வந்துருவான்னே நினைக்கலையே!'' என்றார் பாவமாக.

பிரச்சினை தெரியாத வரைக்கும் தவிப்பில் இருந்த சந்தியா... பிரச்சினை துளி கிடைச்சதும் தெளிவானாள். ஆழமான குரலில் கேட்டாள்.

''போகட்டும்.. ! என்ன நடந்ததுன்னு தெளிவாச் சொல் லுங்கோ...'' என்றாள்.

பட்டாபி சொன்னார். பாலச்சந்தர் தன்னைத் தேடிக் கொண்டு வந்ததும் பாதி பயப்படுத்தியும் பாதி நயமு மாகப் பேசி நிறைய விஷயங்களைக் கறந்தது எல்லா வற்றையும் சொன்னார்.

''ம்... !'' என்று உள்வாங்கிக் கொண்டாள் சந்தியா. பிறகு ஒரு பெருமூச்சு விட்டாள்.

''சரி.. போகட்டும்.. விடுங்கோ.. ! இனி நான் பாத்துக் கறேன்...'' என்றாள்.

இன்று மாலை வீட்டுக்குப் போகும்போது தெளிவா கவே போனாள். தெம்பாகவே நடமாடினாள்.

கடந்த ஒரு வாரமாக இருந்தது போல் இல்லாமல் தெளிவாகவே நடமாடுகிற மனைவியை கணவன் சற்றே ஆச்சரியத்தோடு ஓரக்கண்ணில் பார்த்தான். சந்தியா எதையும் கண்டு கொள்ளவில்லை.

அன்றிரவு !

எப்போதும் அவன் வேலைகள் முடித்து விட்டு வருவ தற்குள்ளாக ஏதோ ரொம்பவும் உறக்கம் வந்து விட்டாற் போல் நடித்துக் கொண்டு படுத்து விடுகிற கணவன் அன்றைக்கு ஏதோ புத்தகத்தை விரித்துக் கொண்டு அமர்ந்திருந்ததை அவளும் பார்த்தாள். ஆனால் பார்க்கா தவள் போல தனது போர்வையை எடுத்தாள்.

அவன் அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் ''என்ன விசேஷம்!'' என்றான்.

அவள் திரும்பி அவனை நேராகக் பார்த்தாள்.

''என்ன... என்ன... விசேஷம்?'' என்றாள்.

''இல்லே... ! இன்னைக்கு மேடம் என்னமோ ரொம்ப தெம்பா நடமாடறாப் போல இருக்கு..'' என்றான்.

''ஆமா... ! முடங்கி உட்காந்து கெடப்பேன்னு நினைச் சேளா?'' என்றாள்.

''அதானே.... ! பெரிய நிர்வாகியாச்சே'' என்றான் கிண்டலாக.

அவள் பதில் பேசவில்லை.

''என்ன... நான் பேசிண்டேயிருக்கேன்..'' என்றான். பாலச்சந்தரின் தவிப்பு அவளுக்குள் ஆர்வத்தை ஏற்படுத் தியது. முகத்தில் ஒரு குமிழ் சிரிப்பு தோன்றியது.

''ஏதோ செய்யணுமில்லே ! வாழ்க்கையாச்சே ! பிரச் சினையும் சொல்ல மாட்டேளாம் ! ஆனா தீர்க்கவும் வேணுமாம்... அதான்...'' என்றாள்.

''ஓஹோ... ! என்ன செய்யப் போறே?''

''செஞ்சு முடிச்சுட்டு விளக்கம் சொல்றேன். அப்புறம் பேசிக்கலாம்... டூடெய்லா... பேசலாம் !'' என்றாள்.

தன் மனைவி தான் வைத்த சவாலை ஏற்றுக் கொண் டாற் போலத் தோன்றியது. வழக்கம் போல இடைவெளி விட்டு அந்தப் பக்கம் படுத்துக் கொண்டான். ஆனால் சற்றே சிந்தனை தோன்றியது.

ஒரு வேளை தான் மனைவிக்கு நியாயம் செய்ய வில்லையோ தோன்றியது. தான் போய்ப் பேசுகிற வேளையில் அவளது பெரியப்பாவும் தெளிவாகத் தானே பேசினார். அது மட்டுமல்லாமல் நேரடியாகப் பேசினார். கண்ணைப் பார்த்துப் பேசினார். குற்றம் செய்தவர்கள் யாரும் கண்ணைப் பார்த்துப் பேசமாட்டார்கள். இன் றைக்கு மனைவி பிரச்சினையின் நூலைப் பிடித்து விட்டாற் போலத் தோன்றியது. அவள் ஒருவேளை பிரச்சினையைக் கண்டு பிடித்து தன்னிடம் பேச்சு வார்த்தைக்கு வந்து நின்றால் தான் என்ன செய்யப் போகி றோம். அது பற்றி முடிவெடுத்துக் கொள்ள வேண்டிய கடமை தனக்கு இருக்கிறாற் போலத் தோன்றியது.

தனக்கென்று வைத்திருந்த இரண்டு கொள்கை களுமே உடைந்து போனாற் போலத் தோன்றத்தான் அவனுக்குள் கோபம் பொங்கியது. ஆனாலும் ஒரு வெடிப்புக்குப் பிறகு மனம் ஆறிய பிறகுதான் அடுத் தவர் பக்க நியாயங்களும் தெரியும் என்பார்களே அது போல் ஒரு மனநிலை தோன்றியது. எது எப்படியிருப் பினும் தன் மனைவியின் மேல் இப்போது அவனுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்தது.

பார்த்தவரையில் அவளிடம் எந்தக் குறை இருந் தாலும் சரி நடிக்கிற மனப்பான்மை இல்லை என்று தோன்றியது.

''ஓ.. கே ! கார்ட்ஸ் ஆர் ஆன் யுவர் டேபிள் ! பார்போம்'' என்று எண்ணிக் கொண்டான். புரண்டு படுத்தான்.

என்ன முயன்றும் ஆழ்ந்த தூக்கம் வரவில்லை. ஆனால் மனைவி நிம்மதியாகத் தூங்குவதைப் பார்த்து அவனுக்குள் குழப்பம்தான் மிஞ்சியது.

* * *

''நான் இன்னைக்கு லேட்டாத்தான் வருவேன்'' என்றாள் பூங்கொடி.

''ஏன்? உங்க அம்மா வீட்டுக்குப் போறியா?'' என் றான் நாகராஜ்.

''இல்லே ! அங்க போனா குழப்பம்தான் வரும்'' என்றாள்.

''ஏன்?'' என்றான்.

''இல்லே! எங்க அண்ணி உங்க மாமனார் மாமியார் போனாப் போகட்டும். அங்கயே இருக்க விடுங்கறாக !

ஆனா... எங்கப்பாவும் அம்மாவும் நியாயமில்லடி நீ செய்யறது. அவங்களைக் கூட்டிக்கிட்டு... வா அப்படிங் கறாங்க'' என்றாள்.

நாகராஜ் ஏதும் சொல்லவில்லை. தன் கைப்பையில் டிபன் பாக்ஸை எடுத்து வைத்தான்.

''பின்ன... எங்க போறே?'' என்றான்.

''நான் ஒரு தியான கிளாசுக்குப் போறேன்'' என்றாள்.

''தியான கிளாசுக்கா?'' என்றான் ஆச்சரியமாக.

''ஆமா... !'' என்றான்.

''எதுக்கு?'' என்றான்.

''இல்லே! என் பிரண்ட் வீட்ல இப்படித்தான் பிரச் சினை இருந்துச்சு. முதல்லயெல்லாம் புலம்பலாவே இருப்பா...! இப்ப அப்படியெல்லாம் புலம்பிறதில்லே எப்படீடி? என்று கேட்டேன்... தியானம் கத்துக்கிட்டாங் களாம். அதனால...''

''மத்தவங்களையெல்லலாம் மாத்திட்டாங்களா?'' என்றான்.

''இல்லே ! அவ சொல்றா ! வெளியுலகத்தை மாத்தறது நம்மால முடியாது. நாம மாறிக்கலாம். நம்ம மீட்புத் தன்மை உயருமாம் ! எல்லாத்தையும் வெளியாளா இருந்து பார்க்க ஆரம்பிச்சுடுவோமாம். கோபம் குறையு மாம். மாமியார் என்ன சொன்னாலும் சரி... நாம ரியாக் ஷன் காட்டினாத்தானே பிரச்சினை வரும் ! நாம அதை சாதாரணமா எடுத்துகிட்டா.. கொஞ்ச நாள்ல அவங்க கோபமெல்லாம் நீர்த்துத்தானே போகணும்ங்கறா...'' என்றாள்.

''ஓ... ! இந்தத் தியரி நல்லா இருக்கே?'' என்று ஆச்சரியமானான் நாகராஜ்.

''தியரிட்டிக்கலா... மட்டுமில்லை.. ! பிராக்டிகலாவே அவகிட்டே ரொம்ப சேன்ஜ். ஆபீஸ்ல கூட எல்லாத்தையும் ரொம்ப ஸ்போர்ட்டிவ்வா எடுத்துக்கறா. மனசு விட்டுச் சிரிக்கறா... ! முன்னேயெல்லாம் சும்மா புலம்பிகிட்டே இருக்கறதோட மட்டுமல்லாம வேலையை அடுத்தவங்ககிட்டே தள்ளி விடப் பார்ப்பா...! ஆனா இப்ப அப்படியெல்லாம் இல்லே! தன்னோட வேலையை இன்ட்ரஸ்ட்டடா பண்றா....'' என்றாள்.

''அப்படியா?'' என்று மேலும் ஆச்சரியமானாள் நாகராஜ். ''சரி... எப்படியோ... நல்லது... நடந்தாச் சரி... ஆனா.. எனக்கென்னமோ.. இதுக்கெல்லாம் மனசுதான் காரணம்னு தோணுது...'' என்றான்.

''இல்லைங்க... ! இப்ப டாக்டர்ஸும் கூட ஒத்துக்கறாங்க. ! சைன்டிஃபிக்கா... தியானத்துக்கு ஒரு இடம் இருக்கறதுங்கறதை ஒத்துக்கறாங்க...'' என்றாள். தனது கைப்பையில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தாள்.

''பாத்தீங்களா? தியானம் பத்தின புத்தகம்.''

நாகராஜ் மனம் நெகிழ்ந்து போனது.

''பரவாயில்லை...'' என்று தன் மனைவியைப் பாராட்டிக் கொண்டான்.

'பிரச்சினைகளை வளர்க்காமல் அதற்கான தீர்வுகளைத் தேடுகிறாளே' என மனம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

பூங்கொடி சொன்ன ஒரு விஷயம் அவன் சிந்தனையைக் கிளறியது. வெளியுலகத்தை மாத்த முடியாது. ஆனால்

வெளியுலகை நாம எதிர்கொள்கிற விதத்தை நாம மாத்திக்கலாம்னு சொன்னவுடனே இது வேண்ணா நடக்கிற மாதிரித் தெரியுதே என்று எண்ணிக் கொண்டான். நேரம் கிடைத்த போது அந்தப் புத்தகத்தை ஆழ்ந்து படித்தான். வியந்து போனான்.

''எதற்கும் அம்மா... அப்பாவைப் போய்ப் பார்த்து விட்டுப் போயிடலாம்'' என்று போனான்.

''வாப்பா...!'' என்று வரவேற்றார் அப்பா. எப்போதும் விஷயங்களை அழுத்தமாகவே எதிர் கொள்கிற அப்பா முகத்தில் வாட்டம் தெரிந்தது. கொஞ்சம் வருத்தத்தை ஏற்படுத்தியது.

''என்னப்பா?'' என்றான்.

அம்மா அதிசயமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். ''ஷ்'' என்ற அப்பா வா...'' வெளியே போய்ப் பேசலாம்...'' என்றார்.

வெளியே போனார்கள்.

''தம்பி! உங்கம்மாவால இங்க தாக்குப் பிடிக்க முடியாது. என்னமோ விளையாட்டா... நினைச்சுட்டு வந்துட்டா! அவங்கவங்க வீட்டுல இருக்கற சுதந்திரம் வருமா? வீட்டுலன்னா.. நீங்க ரெண்டு பேரும் வர்றதுக்குள்ள நாலு வீட்டுக்கு ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வருவா! பத்து கதையாவது கைவசம் வச்சிட்டு வம்பு பேசுவா! மருமக செய்வது பிடிக்கலேனா தானே ஏதோ சமைச்சு சாப்பிடுவா...! அதெல்லாம். இப்ப நடக்குமா?'' என்றார்.

''அப்பா... நீங்க எப்ப ரெடின்னாலும் நான் கூட்டிட்டுப் போக ரெடிப்பா!'' என்றான் நாகராஜ்.

''இல்லடா ! உள்ளுர மருமக வந்து கூப்பிடணும்னு அவளுக்கு ஆசை.''

நாகராஜ் புன்னகைத்தான். ''பூங்கொடி கண்டிப்பா. வருவாப்பா...!'' என்றான்.

''எனக்கு இன்னொரு விஷயம் வேற கவலையா இருக்கு. அந்தப் பொண்ணு வந்ததுக்கப்புறம் இவ அதையும் இதையும் பேசினா...'' என்றவர் தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல.

''இல்லே ! பேச மாட்டா ! இப்பக் கொஞ்சம் மாறி இருக்கா!'' என்றார்.

நாகராஜின் கண்கள் கலங்கியது.

''எதுக்குப்பா... இந்தப் பரிசோதனையெல்லாம். அது உங்க வீடுப்பா.. ! எப்ப வேண்ணா உரிமையோட நுழையலாம். இருந்தாலும் பூங்கொடியை நான் தயார் பண்ணிட்டு வரேன்'' என்றான். ஆனால் மனைவியும் சொன்னவுடனே அவள் சற்றும் தயங்காமல்,

''போலாம்! அத்தைதானே என்னவும் பேசட்டும் ! நா அமைதியா வாங்கிக்கறேன்'' என்ற போது அவன் உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுப் போனான்.



17

பொழுது விடிந்து விட்டது.

சந்தியா சுறுசுறுப்பாக எழுந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். எழுந்து அடுக்களைக்குள் போனாள். வேலை களை சுறுசுறுப்பாக ஆரம்பித்தாள். ஆனால் மனதுக் குள்ளே ஒரு சிரிப்பு எழும்பிக் கொண்டே இருந்தது. கண்களிலும் அந்த சிரிப்பு தொற்றிக் கொண்டது. நேற்று இரவு கணவனுடன் பேசிக் கொண்டு இருந்ததில் அவன் நன்றாக குழம்பிவிட்டான் என்பது தெரிந்தது.

இதோ ! அவனும் கூட எழுந்து வந்து விட்டான்.

பொதுவாகவே பாலச்சந்தர் அவர்கள் தனிமையின் போது ஒருவிதமாக சிரித்துக் கொண்டு இருப்பான்.

இருவரும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக் கும் போது அவரவர் வேலையில் அவரவர் இருப்பார்கள். இருந்தாலும் அவன் கண்களில் குறும்பு விளையாடிக் கொண்டு இருக்கும்.

ஒரு விதமாக சிரித்துக் கொண்டு அவ்வப்போது மனைவியை பார்த்துக் கொண்டு நடமாடிக் கொண்டு இருப்பான். இப்போது பாவமாக இருந்தது.

அந்த மாதிரி சிரிப்பும் சிரிக்க முடியவில்லை. இந்த மாதிரி சிரிப்பும் சிரிக்க முடியவில்லை. மனைவியிடம் பேசவேண்டும் போல இருந்தது போல ! சந்தியா வேகமாக முகத்தை திருப்பிக் கொண்டாள். கோபம் இல்லாமல்தான் ! கோபம் காட்டி என்ன செய்ய யோசித் துப் பார்த்தாள். தனக்கு இப்போது ஒரு முனை கிடைத்து விட்டது அந்த முனையைப் பிடித்துக் கொண்டு பிரச்சினையை எப்படி சரி செய்வது என்று யோசிக்க வேண்டும்.

கணவனுக்குத் தன் மேல் கோபம் எதையோ மறைத்து விட்டோம் என்று எண்ணுகின்றான்.

மறைத்தது உண்மைதான் ஆனால் மறைக்காமல் போயிருந்தால் என்னவாகி இருக்கும்.

'அதை அவனுக்கு எப்படி சொல்வது' அவசரப்பட வேண்டாம்.

காலம் கனியும். கணவனுக்கு ஆரம்பத்தில் கோபம் ஏற்பட்ட பொழுது கூட அவளுக்கு பயமாக இருந்தது.

மிகவும் கோபக்காரனாக இருப்பானோ. இந்த கோபம் அப்படியே விரிவடைந்து கொண்டே போய் வேறு ஏதாவது பிரச்சினைகளில் முடியுமோ என்றெல்லாம் பயந்து கொண்டு இருந்தாள். ஆனால் இந்த ஒரு வாரத்தில் அவன் கோபத்தை அவளிடம் மட்டுமே காட்டினான். தன் மனைவியின் மேல் கோபம் இருக்கிறது என்பதைக் கூட அவன் மற்றவர்களுக்கு தெரிகிற மாதிரி காட்டிக் கொள்ளவில்லை. அதனால் அவளுக்கு நம்பிக்கையுடன் தான் இருந்தது.

இப்போது எல்லாம் வருகிற செய்திகளை பார்த்தாலே பயமாக இருக்கிறதே போன வருடம் கல்யாணம் என்கிறார்கள் இந்த வருடம் பிரிகிறோம் என்கிறார்கள். அப்படி இப்படி ஏதாவது ஆரம்பித்து விடுவானோ என்று லேசாக மனத்தின் ஓரத்திலே ஒரு பயம் இருந்தது. இப்பொழுது அந்த பயம் சுத்தமாக போய்விட்டது.

அப்படி நினைத்திருந்தால் பிரச்சினையானவுடனே பெரிது பண்ணி இருப்பானே. தன்னிடம் மட்டும் தானே கோபம் காட்டுகிறான். அப்படியென்றால் மனதில் நம்மை விட்டுப் பிரிகிற எண்ணம் அவனுக்கு இல்லை. அதே சமயத்தில் இந்த பிரச்சினை என்ன? ஏது என்று பார்த்துவிட வேண்டும் என்று நினைக்கிறார் போலும்

என்று நினைத்துக் கொண்டு நீளமாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள். சரி பார்ப்போம் எப்படி இதை சரி செய்வது என்று எண்ணிக் கொண்டே வேலை செய்து கொண்டு இருந்தாள்.

காபியைப் போட்டுக் கொண்டு போய் கணவனிடத்திலே கொடுக்கப் போனாள்.

'ம்... கையிலே கொடுக்க முடியாதே! வாங்க மாட்டேனே.' அதனால் டேபிள் மேலே வைத்து விட்டு திரும்பி வந்துவிட்டாள்.

'எப்படா... காபி வரும்' என்று இருந்தவன் போல அவன் டபார் என்று காபியை கையில் எடுத்துக் கொள் கையில் ஓரக்கண்ணால் பார்த்து விட்டு போய் விட்டாள். போய் வேலைகளை தொடர்ந்து ஈடுபடும் போது தான் திடீரென ஞாபகம் வந்தது.

'எப்போதுமே அம்மா சீக்கிரம் எழுந்து வந்து விடுவார்களே இன்றைக்கென்ன இன்னும் காணவில் லையே' மணியைப் பார்த்தாள். ஆறரை மணி ஆகி யிருந்தது.

அதிகபட்சம் ஆறு மணிக்கு எழுந்து வந்து விடுவார் களே என்று எண்ணிக் கொண்டவள்,

வழக்கம் போல அவனிடத்தில் பேசுவது போல ''ஏன்னா என்ன ஆச்சு அம்மாவை இன்னும் காணலை'' என்றாள். தொடர்ந்து வேகமாக அம்மாவின் அறைக்கு போய் பார்த்தாள்.

அம்மா சோர்வாக அயர்ந்து படுத்துக் கொண்டு இருந் தார்.

''என்னது இது! அம்மா எப்போதும் இப்படி படுத்துக் கொண்டு இருக்க மாட்டார்களே!'' என்று எண்ணிக் கொண்டு நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

லேசாக ஜுரம் தெரிந்தது. உடனே ஓடி வந்து கணவனிடம் சொன்னாள்.

''அம்மாவுக்கு ஜுரம் அடிக்கறாப் போல் இருக்கு'' என்றாள்.

பாலச்சந்தர் உடனே தான் அவளிடம் பேசுவதில்லை என்ற விரதத்தையெல்லாம் கைவிட்டு விட்டு ''அப்படியா சொல்றே!'' என்று எழுந்து அவள் பின்னாலே போனான். அம்மாவின் அறைக்குள் போய் பார்த்தார்கள். பெரிய அளவில் இல்லையென்றாலும் லேசாக ஜுரம் இருந்தது. இவர்கள் கைவைத்து பார்த்தவுடனேயே அம்மா மெதுவாக கண்ணைத் திறந்தார்.

''தெரியலடா பாலச்சந்தர் கொஞ்சம் அசதியா இருக்கு. லைட்டா ஃபீவர் இருக்கும் போல இருக்கு'' என்றாள். ''ம்...'' என்றான் பாலச்சந்தர்.

''ஏம்மா கொஞ்சம் காபி மட்டும் போட்டுத் தறியா'' என்றார்.

''இதோம்மா'' என்று சந்தியா காபியை கலந்து கொண்டு போனாள். காபியை கலந்து எடுத்து கொண்டு இருக்கும் போதே பாலச்சந்தர் பின்னாலேயே வந்தான்.

''சந்தியா நான் ஆபீஸ்க்கு லீவு போடட்டுமா'' என்றான்.

சந்தியா, அவனை நிமிர்ந்து பார்த்து ''பாக்கலான்னா நீங்க போடலேன்னா நான் வேணா போடறதுனா போடறேன்'' என்றாள்.

அவன் தனக்குள்ளாகவே பேசிக்கொள்வது போல சொன்னான். ''இல்ல சந்தியா இன்னைக்கு ஆபீஸ்ல ஏதோ ஆடிட்டிங் வரதா இருந்தது. அதுதான் யோசிக்கறேன்.''

''இல்லன்னா நானே லீவு போட்டுடறேன்'' என்றாள்.

''ஒண்ணும் கவலைப்படாதேள் ! நான் பாத்துக்கறேன்'' என்றாள்.

பாலச்சந்தர் மனதில் நிம்மதி தோன்றியது.

'பரவாயில்லை மனைவியே பார்த்துக் கொள்கிறேன்' என்றதும்

''சந்தியா ஒண்ணு செய்யட்டுமா எங்க ஃபேமிலி டாக்டர் இதே தெருவில் தான் இருக்கார். காலையில் எட்டு மணிக்கெல்லாம் வந்துடுவார். நான் அம்மாவைக் கொண்டுபோய் காட்டிட்டு மெடிசின்ஸ் வாங்கி கொண்டு வந்து விட்டுடறேன்'' என்றான்.

''சரிங்கோன்னா ! அப்படி வேணா செய்யுங்கே, அதுக்குள்ற நான் சமையலை முடிச்சுடறேன். நீங்களும் ஆபீஸ் போகணுமே'' என்றாள்.

அதேபோல பாலச்சந்தர். அம்மாவை அழைத்துக் கொண்டு போய் டாக்டரிடம் காட்டிவிட்டு தேவையான மருந்துகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்கே கொண்டு வந்துவிட்டான்.

அம்மாவைக் கொண்டு போய் அறையில் படுக்க வைத்து விட்டு வந்த பொழுது சந்தியா பெரியப்பாவிடம் பேசிக் கொண்டு இருந்தாள். '' இல்ல பெரியப்பா, பாவம் அவங்களை தனியா விட்டு வர முடியாதில்லை. நான்

கண்டிப்பா கூட இருக்கணும். என்னதான் இருந்தாலும் மகளா இருந்தா இப்படி ஓடிப்போய் இருப்பாளா. நம்மளை பாக்காம ஆபீஸ்னு போயிருப்பாளா அப்படினு நினைச்சுக்க மாட்டாங்களா'' என்றாள்.

பாலச்சந்தர் நின்று கவனிக்க ஆரம்பித்தான். பெரியப்பா அங்கு என்ன சொன்னார் என்று தெரியவில்லை. இங்கே கலகலவென்று சிரித்தாள்.

''ஆமா பெரியப்பா மருமகள், அப்படினா என்ன நினைக்கிறேள்... மறுபடியும் வந்த மகள் அப்படினுதான் அர்த்தம். அதனால நீங்க என்ன சொன்னாலும் சரி என்ன முக்கியமான வேலை இருந்தாலும் சரி. இன்னைக்கு அட்ஜஸ்ட் பண்ணிப்பேளாம்'' என்றாள்.

மறுபடியும் ஒரு மௌனம் கொடுத்துவிட்டு பெரியப்பாவிடம் பதிலை வாங்கிக் கொண்டு திரும்ப ''ஒண்ணு செய்யுங்கோ பெரியப்பா அந்த கிளார்க் விஸ்வநாதன் இருக்காரோ இல்லையோ அவரையும் அந்த ஸ்டெனோ லதா பொண்ணு இருக்காளே அவளையும் அனுப்பி வையுங்கோ இங்கதான் பி.ஸி இருக்கறதே என்ன வேலை வேணுமா இங்கேயே செஞ்சுடறேன். இப்ப வேணாம் பெரியப்பா மத்தியானமா ஒரு கேப் இருக்குமே ஒன்றரைல இருந்து மூன்றரைக்குள் அனுப்பி வைக்கறேளா'' என்றாள்.

பாலச்சந்தர் காதில் விழாதவன் போல அறைக்கு வந்தான். வழக்கம்போல் கணவனுக்கு எல்லாம் தயாராக இருந்தது. எடுத்துக் கொண்டான். ஒரு வாரத்தில் செய்யாத அந்த வேலையைச் செய்தான். அது வேறொன்றும் இல்லை. ''போய்ட்டு வரட்டுமா சந்தியா!'' என்று நின்று சிரித்துவிட்டுப் போனான்.

சந்தியாவுக்கு என்னமோ சிறகு கட்டிக் கொண்டு பறந்தாற் போல இருந்தது.

மாமியாரைப் போய் உடனே கவனிக்க ஆரம்பித்தாள். நேரம் ஓடிவிட்டது. மாலையில் அனுமதி கேட்டுக் கொண்டு வந்தான் பாலச்சந்தர். வந்து பார்த்தால் வீடே நிறைந்தாற் போல் இருந்தது.

சந்தியாவின் அண்ணன் இராமநாதன் மணிமாலா, இருவரும் வந்து உடன் இருந்தார்கள். அம்மாவைப் போய் பார்த்தான். அம்மா ஆழ்ந்து உறங்கிக் கொண்டு இருந்தார்.

''ம்... ஒண்ணும் பயப்படாதேள் ! லேசான ஜுரம் தான். மத்தியானம் கூட எழுந்து உக்காந்து கொண்டுதான் இருந்தார். இப்பதான் கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுக்கிறேன்னு படுத்தார்'' என்றான் இராமநாதன்.

ஆதுரமாக மைத்துனரைப் பார்த்து சிரித்தான். பாலச்சந்தரும் அவனைப்பார்த்து புன்னகைத்துவிட்டு ''இல்ல! இல்ல! பயம் ஒண்ணுமில்லே நீங்கள்ளாம் இருக்கேளே பார்த்துப்பேள்ன்னு தைரியம்தான். என்ன நேக்கு ஆபீஸில் ஆடிட்டிங் இருந்தது. அதனாலதான் அம்மாவோட இருக்க முடியல. இருந்தாலும் நீ அவர்ஸ் பர் மிஷன் போட்டுட்டு வந்துட்டேன்'' என்றான்.

இந்த பதிலை சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அவன் மனதிற்குள்ளே தோன்றியது. இதையெல்லாம் தானே அம்மா எதிர்பார்த்தாள். இப்படி ஒரு மருமகள் வரவேண்டும். அவளை சுற்றிலும் மனிதர்கள் இருக்க வேண்டும். எப்போதும் குடும்பத்தில் நிறைய ஆட்கள்

நடமாடிக் கொண்டு இருக்க வேண்டும். என்று தானே சொல்லிக் கொண்டு இருப்பாள்.

அடிக்கடி சொல்லுவாள் ''பாலு ! நீ ஆபீஸ் போயிட் டேன்னா வீடே விரோச்சுன்னு கிடக்குதுப்பா. நேக்கு ஆத்துல இருக்கவே பிடிக்கறதில்லே. அதுக்காகவாக் கும் எங்கேயாவது அக்கம் பக்கம் போய் உட்காந்துட்டு வரது. எவ்வளவு நேரம்தான் வேலை இல்லாமல் இருக்கறது'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு இருப் பாள்.

சந்தியாவை திருமணம் செய்த பிறகு ஆட்கள் வருவதும் போவதுமாக வீடு நிறைந்துதான் இருந்தது. அதில் அவனுக்கு கொஞ்சம் மகிழ்ச்சிதான்.

இப்போது அம்மாவுக்கு உடம்பு சரியில்லையென்ற உடனேயே ஆளாளுக்கு பறந்து கட்டிக்கொண்டு வருவதை பார்த்தவுடன் மனதில் ஒரு நிம்மதி தோன் றியது.

ஒரு தடவை அம்மாவுக்கு நடந்தது நினைவுக்கு வந்தது. அண்ணன் வீட்டில் இருந்தபொழுது இப் படித்தான் ஒரு நாள் காய்ச்சல் வந்துவிட்டதாம். அப் பொழுது அண்ணன் மனைவி அண்ணனிடம் சொல் லிக் கொண்டிருந்ததை அம்மா சொல்லவில்லை. அண் ணனே சொன்னான். போனில் பேசும் போது சொன் னான்.

''பார்டா பாலச்சந்தர்! நன்னாயிருக்கும் போது நன்னா வேலை வாங்கிக்கறா உங்க மன்னி. ஆனால் இப் பொழுது காய்ச்சல் வந்துச்சோ இல்லையோ உடனே என்னண்டை வந்து சடஞ்சுக்கறா. இருக்கற வேலை

போதாதுன்னு உங்க அம்மாவை வேற நான் பார்த் துக்கணுமா, அவளுக்கு வேற ஹெல்ப் பண்ணனுமான்னு கேட்கறாடா! எப்படிடா இவள்ளெல்லாம் மனசே இல் லாமல் இருக்கா'' என்று தன்னிடம் பகிர்ந்து கொண்டது நினைவிற்கு வந்தது.

அம்மா பாவம் நிறைய சுமந்து இருக்கிறாள். தங்களுக் காக எவ்வளவு உழைத்திருப்பாள். தங்களை மேலே கொண்டு வருவதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டு இருப் பாள். ஆனால் இதையெல்லாம் வருகிற மருமகளுக்கு எப்படி புரியவைப்பது. அவர்களுக்கும் அந்த உணர்வு இருந்தால் தான் புரிந்து கொள்ள முடியும் என்று அண்ணன் வருத்தப்பட்டது நினைவுக்கு வந்தது. சொல்லப் போனால் சௌந்தரராஜன் கல்யாணராமனும் இப்படி மாறி மாறி புலம்பித் தான் திருமணம் செய்வது பற்றியே அவனுக்குள் ஒரு பயத்தை ஏற்படுத்தி இருந் தார்கள்.

இந்த சந்தியாவைப் பார்த்ததும் தான் மனது மாறியது. மறுபடியும் அவனுக்குள் சிந்தனைகள் மாறியது. உடனே அவன் மனமே அவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டது.

'அது சரி ஏதோ இரண்டு கண்டிஷன் வைத்து இருந் தாயே பாலு ! அதில் ஒன்று நன்றாகத் தானே நிறை வேறிக் கொண்டு இருக்கிறது. பிறகு ஏன் மனைவியிடம் கோபம் காட்டுகிறாய்?' என்று கேட்டது.

அவனுக்குள்ளே உறுத்தல் தோன்றியது உண்மை தானே.

தனக்கென்று இரண்டு எதிர்பார்ப்புகள் இருந்தன. அதில் ஒரு எதிர்பார்ப்பு நன்றாகத்தானே நிறைவேறிக்

கொண்டு இருக்கிறது ? அதற்குள்ளாக ஏன் மனைவியும் கோபம் காட்ட வேண்டும் என்ற உடனே இன்னொரு மனது சொன்னது. அப்படியெல்லாம் நினைத்துக் கொள்ளாதே ஆரம்பகாலத்தில் இப்படித்தான் கவனிப்பார்கள். போகப் போகத்தான் அவர்களுடைய உண்மையான குணம் தெரியும் என்றும் சொன்னது.

'சரி பார்க்கலாம்' என்று அப்போதைக்கு அந்த எண்ணத்தை மூட்டைக்கட்டி வைத்து விட்டு நினைவை நிகழ்காலத்திற்கு திருப்பினான்.

''என்ன ! அத்திம்பேர் நான் கேட்டுண்டே இருக்கேன் பதிலே வரக்காணோமே'' என்று சொல்லிக் கொண்டு இருந்தான் இராமநாதன்...

''ஓ! நான் ஆபீஸ்ல ஒரு ஃபைலை பத்தி நினைச்சுண்டு இருந்தேன். பரவாயில்லை பரவாயில்ல என்ன கேட்டுண்டிருந்தேள்?'' என்று மைத்துனனிடம் மனதைத் திருப்பினான்.



18

நாகராஜுக்கு நம்பவே முடியவில்லை. தன்னுடைய வீடா இது என்றிருந்தது.

வீட்டில் ஒரே அமைதி நிலவியது.

பூங்கொடி மிகவும் அமைதியாக வேலை செய்தாள். அதைக் காட்டிலும் ஆச்சரியம். தன்னுடைய அம்மா பூங்கொடியிடம் போய் அதிகமாக பேசாவிட்டாலும் கூட அவளது வேலைகளில் உதவியாக இருந்ததுதான். அப்பா வழக்கம் போல பேப்பரை கையில் எடுத்துக் கொண்டு சிட் அவுட்டில் அமர்ந்து கொள்கிறார். காலை நேரம் முழுவதும் பேப்பர் முழுவதும் படித்துவிட்டு பொழுது ஓட்டுவாரே அதே போன்று பொழுது ஓட்டிக் கொண்டு இருக்கிறார். இதெல்லாம் எத்தனை நாளைக்கு என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்போதும் இப்படி அமைதியாக இருந்திருந்தால் குழப்பங்களே வந்திருக்காது, அம்மாவும், அப்பாவும் பிரிந்து போயிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது என்று கூட எண்ணிக் கொண்டான்.

ஒரே வாரம் தான் !

நிலைமையில் மீண்டும் பழைய காட்சிகளின் சாயல் தென்பட்டது.

பூங்கொடி வழக்கம் போல ''அம்மா நான் குளிச்சிட்டு வந்தர்றேன் கொஞ்சம் அந்த ரசத்தை மட்டும் கூட்டி வச்சர்றீங்களா?'' என்றாள்.

அம்மா எழுந்து போனார்கள். முன்னைப் போல் சத்தம் போடவில்லை என்றாலும் கூட மீண்டும் அந்த முகத்திலே கோபம் தெரிந்தது.

அவளுக்குள்ளாகவே முணுமுணுத்துக் கொள்வாள். போலும் 'ஆமாம். இவளுக்கு வேலை செய்வதற்கு தான் என்னை கடவுள் பெத்துப்போட்டு வைச்சுருக்காளா' என்று முணுமுணுத்துக் கொள்வது தெரிந்தது.

உடனே அவனுக்குத் தோன்றியது. 'இந்த வாரம் மெதுவாக வாய்க்குள் முணுமுணுக்கிறாள். அடுத்தவாரம் வெளிப்படையாக பேசப் போகிறாள். மறுபடியும் சண்டை ஆரம்பிக்கப் போகிறது. இது என்னடா இந்த இராமாயணம் மகாபாரதத்தை எத்தனை நாட்கள் கேட்டுக்கொண்டு சகித்துக் கொண்டு சமாளித்துக் கொண்டு இருப்பது?' என்ற எண்ணம் தோன்றியது.

வழக்கம் போலவே அவன் கண்டுகொள்ளாதவன் போல போய் தன் வேலைகளை பார்க்க ஆரம்பித்தான். அப்பா மட்டும் லேசாகத் திரும்பி பார்த்து விட்டு திரும்பவும் பத்திரிகைக்குள்ளே கண்ணை ஓட்டினார்.

பூங்கொடி குளித்துவிட்டு வந்தவள், மாமியார் முகத்தை ஜாடையாக பார்த்தாள். மாமியார் முகத்தில் கோபம் தெரிந்தது நன்றாக புரிந்தது. ஆனால் கண்டு கொள்ளாதவள் போல தொடர்ந்து தன் வேலைகளை ஆரம்பித்தாள்.

மனதிற்குள்ளே சொல்லிக் கொண்டாள். அந்த தியான வகுப்பிலே என்ன சொன்னார்கள். அகங்காரம் கூடாது. நான் ஓர் பெரிய ஆள் என்னைப் போய் இப்படியெல்லாம் சொல்வதா, என்னைப் பற்றி இப்படி சொல்வதற்கு இவர்கள் யார். இவங்க ஆஃப்ட்டரால் மாமியார் தானே என்றெல்லாம் நினைத்துக் கொண்டால் தானே கோபம் வருகிறது. நம் வீட்டிலே அம்மா இப்படியெல்லாம் கோபித்துக் கொள்ளும் பொழுது நாம் பேசாமல் தானே இருந்திருக்கிறோம். அப்பொழுது எல்லாம் இப்படி கோபித்துக் கொள்வது இல்லையே. அம்மாகிட்ட திரும்பி கத்தியது இல்லையே. அதேதோ இயல்பான விஷயம் போலவும் நீ யென்னவோ

சொல்லிக்கிட்டு கிட என்றுதானே போகிறோம். அப்படியேன் மாமியாரிடம் நடந்து கொள்வதில்லை என்று எண்ணிக் கொண்டாள்.

வந்து பார்த்தாள். ரசத்தை கூட்டி அழகாக ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்திருந்தார் மாமியார். ''தேங்க்ஸ்மா! தேங்க்ஸ். பாத்திரத்திலேயே எடுத்து வைச்சுட்டீங்களா ரொம்ப தேங்க்ஸ்'' என்றாள் உற்சாகமாக.

நாச்சம்மாள் தன்னையறியாமல் ''பரவாயில்ல பரவாயில்லை, சின்ன வேலைதானே நீயும் பாவம். அவசரமா போற சரி சரி'' என்று சொல்லிவிட்டு மெதுவாக அந்தப் பக்கம் போனார்.

சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு இருந்த நாகராஜ் ஸ்தம்பித்துப் போனான். 'என்னடா இது! தன் மனைவி சாரி கேட்கிறாள். அம்மா வேறு பரவாயில்லை, பரவாயில்லை என்று சொல்கிறாள். ஓ..கோ! இது நம்ம வீடே இல்லை போல இருக்கிறதே' என்று கூட அவனுக்கு தோன்றியது.

மெல்லத் திரும்பி அப்பாவைப் பார்த்தான். அப்பாவின் முகத்தில் கூட அதே போன்ற உணர்வு பாவம் தோன்றியது.

'ம்... எல்லாம் இரண்டு மூணு மாசம் முதியோர் இல்லத்தில் இருந்து அவஸ்தைபட்டுட்டு வந்திருக்கின்றாள். அதனால இதெல்லாம் நடக்கிறது. பாக்கலாம் இது எத்தனை நாளைக்கு?' என்று எண்ணிக் கொள்வது போலவும் தோன்றியது.

தன் தலையில் தானே கொட்டு வைத்துக் கொண்டு ஏன் புத்தி இப்படியெல்லாம் போகிறது என்று எண்ணிக்

கொண்டு கிளம்பினான். டைனிங் டேபிளில் அமர்ந்த போது வழக்கம் போல் பூங்கொடி சாப்பாட்டை பரிமாறிக் கொண்டு சாதம் பிசைந்து அவனுக்கு டிபன் பாக்ஸில் வைத்துக் கொண்டு இருந்தாள்.

அந்த நேரங்களில் கண்ணில் படாமல் அந்தப் பக்கம் இந்தப்பக்கம் போய்க் கொண்டு இருக்கும் அம்மா, இன்றைக்கென்னவோ வந்து ''ஏம்மா பூங்கொடி டிபன் பாக்ஸ்ல எல்லாம் எடுத்து ரெடியா வைச்சுருக்கியா. நான் வேணா எடுத்துத் தரட்டுமா'' என்று கேட்டாள்.

''இல்லிங்கத்தை நானே எல்லாம் ரெடியா வைச்சுட் டேன்'' என்றாள். திரும்பப் போனவள் என்ன நினைத் தாளோ மகனுடைய பையைக் கொண்டு வைத்தாள். மருமகள் டிபன் பாக்ஸைபோட்டு வைத்ததை எடுத்து அவர்களுடைய பேக்கை அந்த பைகளில் வைத்தாள்.

பூங்கொடிக்கு சந்தோசம் அப்படி பொங்கிக் கொண்டு வந்தது போல ''பரவாயில்லமா விடுங்கம்மா, நீங்கள் ஏன் சிரமப் படறீங்க?'' என்றாள்.

நாச்சம்மாள் சட்டென்று திரும்பி பார்த்து புன்னகைத் தாள். ''விடு போ என்ன பெரிய வேலை இது? டிபன் பாக்ஸை எடுத்து பேக்குல வைக்கிறது ஒரு பெரிய வேலையா? நான் எடுத்து வைக்கிறேன். நீ போய் டிரஸ் பண்ணிட்டு வா போ. தலை வாரிக்க போ'' என்றாள். பூங்கொடிக்கு ஆச்சர்யமான ஆச்சர்யம் ஆச்சரியமாகவே பார்த்துக் கொண்டு தன் அறைக்கு போனாள்.

கணவனும், மனைவியும் வண்டியில் போய் கொண்டு இருக்கும் போது ''ஏங்க உங்க அம்மாக்கிட்டே ரொம்ப சேஞ்ச் தெரியுதில்லே?'' என்றாள்.

உடனே நாகராஜ் மெதுவாக புன்னகைத்தான். ஒன் றும் பேசவில்லை.

''இல்ல இன்னைக்கு அதிசயமா வந்து அந்த ஹெல்ப் பண்ணட்டுமா இந்த ஹெல்ப் பண்ணட்டுமானு கேட் டுட்டே இருந்தாங்களே! செய்யாட்டிக் கூட பரவாயில் லீங்க இந்த மாதிரி கேட்டுட்டு இருந்தாக் கூட நமக்கு ஒரு சந்தோஷமாக இருக்கில்லே'' என்றாள்.

''ம்...'' என்றான் நாகராஜ்.

பூங்கொடி தொடர்ந்து சொன்னாள். ''நான் அந்த தியான கிளாஸ்க்கு போனேன் இல்லங்க அங்க தான் சொன்னாங்க அகங்காரம் இருக்கக் கூடாது. நான் ஒரு பெரிய ஆளு, என்னை எப்படி இப்படி நடத்தலாம் என்று நினைக்கும் போதுதான் மத்தவங்க எதாச்சும் பேசினா கோபம் வருதாம். நாம் எல்லோரும் நம்மை ஸ்பெ ஷல்னு நினைச்சுக்கறோமாம். நாம சாதாரணமானவர் களன்னு நினைச்சுகிட்டா நமக்கு கோபங்களே வராதாம். அடுத்தவங்ககிட்ட எதிர்பார்ப்பு இல்லாம மனசை வைச்சுக்கிட்டா அவங்க செய்யும் போது சந்தோஷம் வருதா இல்லையா?'' என்றாள்.

நாகராஜுக்கு கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் போனது.

''பரவாயில்லையே ! மனைவி இப்படியெல்லாம் சிந்திக்க ஆரம்பித்து விட்டாளே ஓ..ஹோ இப்படியெல் லாம் சொல்லித் தராங்களா நான் வெறும் தியானம் தான்னு நினைச்சேன்'' என்றான்.

''இல்லீங்க தியானமும் சொல்லித்தராங்க கூடவே நம் மனசை எப்படி கையாளறதுன்னும் சொல்லித் தராங்க'' என்றாள்.

நாகராஜ் சிரித்தான். '' மனசா...? மனசை கையாள்றதா என்ன விளையாட்டுனு நினைச்சுட்டு இருக்கிறியா மனசுங்கிறது லேசுபட்ட விஷயம் இல்ல. அதப் போய் கொடையாம இருக்கிறவரைக்கும் நல்லது தெரியுமா'' என்றான்.

''அதென்னமோ உண்மைதான் நாமளா பார்த்து நம்ம அகங்காரத்தை அடக்கணும்னு முயற்சி பண்ணுனாதான் அது பிச்சுகிட்டு தறிகெட்டு ஓடுது. பாருங்களேன் நானே இன்னைக்கு சாரி கேட்கிறதுக்கு ரொம்ப யோசிச்சுதான் கேட்டேன்'' என்றாள்.

''ஆமாம், ஆமாம், ரொம்ப அதிசயமான நாடகமா இருந்ததுப்பா இன்னைக்கு. நீ சாரி கேட்கிற, அம்மா பரவாயில்லங்கறாங்க எப்பவுமே இப்படி நடக்குமா எனக்கு என்னமோ சந்தோஷமா இருக்கு'' என்றான்.

அவள் சிரித்தாள் ''எப்பவுமே இப்படி நடக்கணும் அப்படீன்னு தான் நான் நினைக்கிறேன். பாக்கலாம் நான் முடிஞ்ச வரைக்கும் முயற்சி செய்யப்போறேங்க. நான் காலையில என்ன தெரியுமா என் மனசுக்குள் சொல்லிட் டேன்? நம்ம அம்மா கோபமா கத்துனா எடுத்துக்கிறோமா நம்ம அம்மா தானேன்னு நினைச்சுக்கிறோம் இல்ல, இதே போல நம்ம அத்தை தானேன்னு நினைச்சுக் கிட்டேன். ஏன் மனசுக்குள்ள நானே சொல்லிட்டேன் பூங்கொடி இது தான் நீ இருக்கப் போற விடு, இது தான் உங்க அம்மா, இதுதான் உங்க அப்பா, இதுதான் ஆயுசுக்கும் உங்க அம்மா, அவங்க கோபமா ஏதாவது சொன்னாக் கூட பொறுத்துக்கோ. அப்படின்னு நானே சொல்லிக்கிட்டேன் தெரியுமா'' என்றாள்.

நாகராஜ் மறுபடியும் புன்னகைத்தான். ''அது சரி அது இயற்கையா வரணும் இல்ல. எத்தனை நாளைக்கு சொல்லி சொல்லியே சரி பண்ணிட்டு இருப்பே?'' என்றான்.

மனைவிக்கு கோபம் வருமோ என்று எண்ணினான். அவள் நல்ல முறையாக பேசும் போது நாம் இப்படி விமர் சிக்கிறோமே என்று தோன்றியது. ஆனால் பூங்கொடி நல்ல விதமாகத்தான் எடுத்துக் கொண்டாள்.

''ஆமாங்க அது கூட கரெக்ட்டுதான் தான், அது அம்மா! பொறந்ததில் இருந்தே அம்மா கூடவே இருந்ததால் அது இயற்கையாகவே அமைஞ்சிருச்சு. இவுங்க புதியவங்க தானே புதியவங்ககிட்ட பழகும் போது அது கொஞ்சம் இயற்கையா வராது. வரது கொஞ்சம் கஷ்டம் தான். ஆனா கொஞ்ச நாள் பயிற்சி கொடுத்துட்டே இருந்தா வந்துரும்னு எனக்கு தோணுது'' என்றாள்.

நாகராஜ் 'ஆமாம், ஆமாம், கரெக்ட்டுதான்' என்று ஒத்துக் கொண்டான்.

அவன் மனதில் தோன்றியது 'பரவாயில்லையே தியான வகுப்புகளில் இதெல்லாம் வேறு சொல்லித் தருகிறார்களா. ஆனால் கஷ்டம் என்னவென்றால் நேசிப் பதைக் கூட வகுப்புகளில் சென்று தெரிந்துகொள்ள வேண்டியிருக்கு, மாமியார் மருமகள் என்றாலே ஒருத் தொருக்கொருத்தர் ஆகாதவர் என்ற எண்ணம் நம் அடிமனதின் ஆழத்தில் பதிந்து விட்டது போலும், போதிக்கப்பட்டு விட்டது. அதை மாற்றுவது என்றால் கொஞ்சம் கஷ்டப்படத்தான் வேண்டும்.

ஒரு விதத்தில் சந்தோஷப்படலாம். தன்னுடைய மனைவி தன்னுடைய இயற்கையைப் பற்றி ஆராய

ஆரம்பித்துவிட்டாளே? அதுவே பெரிய விஷயம் தான் அதுமட்டும் இல்லாமல் அதை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாளே அது அதைவிட பெரிய விஷயம். இனிமேல் அவளை விமர்சிக்கக் கூடாது. அது எப்படி முடியும்? இது எப்படி முடியும்? இது நடக்காது என்று சொல்வதையே இப்போதில் இருந்து விட்டு விட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

மனைவியிடம் சொன்னான்.

''பூங்கொடி எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு'' என்று

''என்ன. என்ன சந்தோஷம்?'' என்றாள்.

'' இல்ல நிஜமாகவே வந்து நீ சராசரி பெண்ணில்லை. நல்ல பொண்ணுதான். என்னுடைய நிலைமையை புரிஞ்சுட்டு உன்னை அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்னு நினைக்கிற பாத்தியா இது பெரிய விஷயம். இந்த மாதிரி யோசிக்கறதே பெரிய விஷயம் பூங்கொடி. நடக்குதோ இல்லையோ எப்போ இப்படி யோசிக்கறீயோ அதுவே எனக்கு ஒரு நல்ல விஷயமா இருக்கு. அது மட்டும் இல்ல பரவாயில்லப்பா நம்ம வைஃப் நல்ல ஆளு தான்னு எனக்கு ஒரு திருப்தியாயிருக்கு.

இதுவரைக்கும் அம்மா எதாவது கோபமாக பேசினா கூட அம்மா பக்கம் தப்பிருந்தால் கூட முதல் எல்லாம் உன்மேல் கோபம் வரும். இனிமேல் புரிஞ்சுக்குவேன் என்று நினைக்கிறேன்'' என்றான்.

பூங்கொடியின் மனதில் மகிழ்ச்சி பொங்கியது.

''போதுங்க ! இதுதான் வேணும். நம்ம இரண்டு பேத்துக் குள்ள சண்டை சச்சரவு வந்தறக் கூடாது'' என்றாள்.

''கொஞ்சம் இந்த பார்க்கில் நிறுத்துங்களேன். கொஞ் சம் உங்ககிட்டே பேசணும்'' என்றாள். அவன் கையை திருப்பி கெடிகாரத்தை பார்த்தான். ''நேரம் இருக்கிறது பத்து நிமிடம் பேசினால் ஒன்றும் தவறில்லை'' என்று வண்டியை பூங்காவிற்குள் திருப்பினான்.

இரண்டு பேரும் அங்கே இருந்த பெஞ்சில் அமர்ந் தார்கள். பைக்கை பக்கத்தில் நிறுத்தினான்.

அப்போது பூங்கொடி சொன்னாள் ''ஏங்க இரண்டு மாசம் அத்தையும், மாமாவும் இல்லத்துல இருந்தாங் களே, எனக்கு அதை சொல்லக் கூட பிடிக்கலை. அப்ப நான் மட்டும் சந்தோஷமா இருந்தேன்னா நினைக் கறீங்க? ரொம்ப உறுத்தலாக இருந்தது. நீங்க மௌனமா அந்த கோபத்தை காட்டிக்கவும் முடியாம முழுங்கவும் முடியாம, மெல்லவும் முடியாம, எப்படி வேதனை பட் டுட்டு இருந்தீங்க அதைப் பார்த்து நானும் தான் வேதனைப் பட்டுட்டு இருந்தேன். என்னத்தை எடுத்துட்டு போறோம் வாழ்க்கையில எதையும் எடுத்துட்டு போறதில்லை.

உறவுகள் வந்து கொஞ்சம் கடினமான விஷயம் தான். ஆனா எதிர்பார்ப்புகள் இல்லாமல் ஏன் இருக்கக்கூடா துன்னு நானும் நினைச்சுக்குவேன்.

ஒவ்வொரு முறையும் உங்க அம்மா கோபமா பேசும் போதும் எனக்கும் கோபம் பொத்துட்டு வரும். இதை எப்படி சரி பண்ணப் போறோம்ன்னு நினைச்சுட்டு இருந்தேன். அதுக்காகத்தான் இந்த தியான வகுப்பு அது இதுனு தேடிப்போனேன். எனக்கு தேவையெல்லாம் உங்களுடைய நிம்மதிங்க. நீங்க நிம்மதியா இருக்கணும். அந்த நிம்மதிக்காக கொஞ்சம் இந்த மாதிரி சிரமங்களை சகிச்சுக்கிட்டா என்ன?'' என்றாள்.

நாகராஜ் பேச்செழாதவனாக அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவள் மேலும் தொடர்ந்தாள்.

''சகிச்சுக்கறது என்னங்க எவ்வளவோ பேரு வீட்ல மாமியார்கள் ரொம்ப கொடுமைப்படுத்துறாங்க. எவ்வளவோ கஷ்டப்படுத்துறாங்க. அதில சில ஆம்பளைங்க எல்லாம் பதிலே சொல்லாம நழுவிக்கிட்டு போயிடறாங்க. நம்ம வீட்டுல அத்தை கொஞ்சம் கோபமா படபடனு பேசறாங்க அவ்வளவுதான். மத்தபடி அவுங்களால எனக்கு எந்த தொல்லையும் இல்ல'' என்றாள்.

ம்... தனக்காக தன் மனைவியும் தான் உருகி இருக்கிறாள் என்ற எண்ணம் தோன்றியவுடனே அவனுக்குள் மகிழ்ச்சி அலைகள் பொங்கி எழுந்தது. பார்வையை சுற்றிலும் ஓடவிட்டான்.

அந்த பூங்காவில் விதவிதமான வடிவங்களில் செடிகளை வெட்டி வைத்திருந்தார்கள. மயில் போல, மான் போல ஏன் யானை போல கூட ஒன்று இருந்தது. அழகாக இருந்தது. மலர்கள் எல்லாம் சிரித்தாற் போல தோன்றியது. உலகமே திடீரென வெளிச்சம் ஆனாற் போல ரம்மியமாகத் தோன்றியது. எல்லாமே மனைவி தனக்காக தன் பங்கில் யோசித்து தன்னைத் திருப்தி படுத்த வேண்டும். நிம்மதியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று கவலைப்படுகிறாளே என்ற எண்ணத்தில் தோன்றியது தான் என்று புரிந்தது.

மனைவியை திரும்பிப் பார்த்து உள்ளத்து அன்பெலாம் முகத்தில் தெரிய புன்னகைத்தான். அதன் பிரதிபலிப்பு அவளுடைய முகத்திலும் தெரிந்தது.

''இல்ல பூங்கொடி அம்மாவும் கொஞ்சம் வேலை செய்யலாம். அம்மா இப்படியே இருந்தாங்கன்னா, அவுங்களுக்கும் ஏதாவது நோய் நொடினு வரும். நீ வந்ததில் இருந்தே எல்லா வேலைகளையும் உன் தலையில் போட்டு தான் நிம்மதியாக இருக்கிறது தான் அவசியம் என்று நினைக்கிறார்கள். மருமகள் வந்தாலே தனக்கு ரிடையர்மென்ட் என்று நினைக்கிறார்கள். அப்படியும் இருக்க வேண்டாம் இல்ல'' என்றான்.

பூங்கொடியின் முகத்தில் மறுபடியும் புன்னகை தோன்றியது. ''எல்லாம் மாறுவாங்க. முடிஞ்சதை செய்யட்டும். நீங்க நிம்மதியா இருங்க. மனசுல எதையும் வைச்சுட்டு புழுங்காதீங்க. உங்களுக்கு என்ன தோன்றினாலும் இந்த மாதிரி எங்கயாவது தனியா வைச்சு பேசிக்கலாம். உங்களுக்கு என்மேல என்ன குறை இருக்குது சொல்லுங்க ம்.. நானும் உங்க மேல என்ன குறை இருக்குனு சொல்லுவேன். நீங்களும் திருத்திக்கணுமாக்கும்'' என்றாள்.

அவன் மறுபடியும் சுற்றும், முற்றும் பார்த்தான். குறும்பாக சிரித்தான்.

''ம்... பார்க்கில வைச்சு இதெல்லாம் சொல்லிட்டு இருக்கிற வீட்லயா இருந்தா..'' என்று இழுத்தான்.

''ஏன் ! வீட்ல இல்லைன்னா என்ன ! இன்னைக்கு என்ன எப்படி இருந்தாலும் சாயங்காலம் வீட்டுக்கு தானே போகப் போறோம் பார்க்கலாம்'' என்றாள்.

கலகலவென்று சிரித்தாள். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு பிறகு கலகலவென்று சிரிக்கிற தன் மனைவியைப் பார்த்தவுடன் அவனுக்குள்ளும் மகிழ்ச்சி பொங்கியது.

''சரிம்மா, இங்க நின்னா சரிவராது'' என்று பைக்கை எடுத்தான்.

அன்று மாலை அவர்களுக்கு வீட்டிலே அதிசயம் காத்திருந்தது. எப்பொழுதும் கொஞ்சம் ஐந்து மணிக்கு மேல் ஆறு மணி ஆகிவிட்டாலுமே நாகராஜ் தன் மனைவியை பிக்கப் செய்து கொண்டு வருவான். அன்றைக்கு பூங்கொடி ஐந்து மணிக்கு போன் செய்து ''என்னங்க இன்னைக்கு ஆறரை மணி ஆகிவிடும் போலிருக்கிறது. நீங்க வந்து கூட்டிட்டு போய்டறீங்களா?'' என்றாள்.

''சரி வரேன்!'' என்றான்.

சாயங்காலம் வரும்போது அவளையும் பைக்கில் ஏற்றிக் கொண்டு வீட்டுக்கு வந்து இறங்கினார்கள்.

வழக்கமாக அப்படி தாமதமாக வரும்பொழுது அவள் காதுபட நாச்சம்மாள் தன் கணவனிடம் சொல்லுவாள். ''பாருங்க ! ஐய்யாவும், அம்மாவும் ஏதோ புரோகிராம் போட்டுட்டு எங்கயோ போய் சுத்திட்டு வர்றாங்க'' என்று.

'நல்லதுதானே' என்று அவர் உள்ளுர எண்ணிக் கொள்வார். புன்னகைத்து சமாளிப்பார்

அலுவலகத்தில் அதிகவேலை, அதிகபளு இதை வேறு கேட்க வேண்டியிருக்கே ! என்று கோபமாக வரும் பூங்கொடிக்கு கணவனைப் பார்த்து முறைப்பாள்.

அவன் கண்ணை சிமிட்டுவான். ''சரி விடு!'' என் பதை போல சைகைகளில் சமாதானம் காட்டுவான்.

கொஞ்சம் முறைத்துக் கொண்டே தான் அறைக்கு போவாள். ஆனால் இன்றைக்கு அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தபோது நாச்சம்மாள் தன் கணவனிடம் கேட்டுக்கொண்டு இருந்தாள்.

''என்னங்க ஆறு மணி ஆறரை ஆயிடுச்சு. இன்னும் காணல்லை இவங்களை'' என்று.

அப்போது கணவர் சொன்னார் ''என்ன ஆபீஸ் வேலைன்னா விளையாட்டுனு நினைச்சியா. இந்த மேனேஜ்மெண்ட் குடுக்கிற சம்பளத்துக்கு மேல இரண்டு பங்கு வேலை வாங்கிருவாங்கடி .அவுங்க அவுங்க மேலதிகாரிகள்கிட்டே நல்ல பேரு வாங்கணும் என்பதற்காக எவ்வளவு புழியணுமோ புழிஞ்சுருவாங்க. நானும் பட்டுருக்கேனே? கரெக்டா அஞ்சு மணி அடிக் கறதுக்கு முன்னாடி ஏம்பா இந்த ஃபைலை மட்டும் பாத் துட்டு போயிறேன். ஒரு பத்து நிமிஷத்து வேலைம் பாங்க. ஆனா பத்து நிமிஷத்திலயா முடியும்? குறைஞ்சது ஒரு மணி நேரமாவது ஆகும். பூங்கொடியையும் போய்க் கூட்டிக்கிட்டு வருவானோ என்னமோ'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போது இவர்கள் இருவரும் நுழைந் தார்கள். ''இங்க பார் வந்துட்டாங்க'' என்றார்.

''வந்தீங்களா? சரி சரி என்னடா இன்னும் இரண்டு பேரையும் காணமே இனி இதுக்கு மேல இவ எப்படி பஸ்ல வருவா அப்படீன்னு யோசிச்சிகிட்டு இருந்தேன்.'' என்றார் நாச்சம்மாள்.

கணவனும் மனைவியும் கஷ்டப்பட்டு ஒருவர் ஒரு வர் பார்ப்பதை தவிர்த்துக் கொண்டார்கள்.

அதைவிட இன்னொரு ஆச்சர்யம் வெடித்தது. ''இங்க பாரு பூங்கொடி கிச்சடி பண்ணி வெச்சுருக்கேன். நீ போய் கை கால்களை அலம்பிட்டு வந்து இரண்டு பேரும் சாப் பிடுங்க. சாப்பிட்டுட்டு நல்லாயிருக்கான்னு சொல்லு. ஏன்னா ரொம்ப நாளாச்சு பாரு சமையல் பண்ணி!'' என்றார்.

பூங்கொடி ஆணி அடித்தாற் போல் நின்று விட்டாள்.

''அத்தை நீங்க எதுக்கு பாவம்'' என்று சொல்லிய வுடனே நாச்சம்மாள் கோபமாக முகத்தை வைத்துக் கொண்டே ''இங்க பாரு. பூங்கொடி இந்த மாதிரி சொல் றதை விடு இப்படி சொல்லிச் சொல்லியே தான் என்னை கெடுத்து வைச்சிருக்கிற. நானும் என்னால முடிந்ததை செய்யறேன் என்ன'' என்றார்.

''ஐயோ! நல்லா செய்யுங்க அத்தை நானா வேண் டான்னு சொல்றேன்.'' என்ற பூங்கொடி சிரித்துக் கொண்டே அவர்கள் அறைக்குப் போனாள். நாச்சம்மாளும் கன காரியமாக வெகுவேகமாக சமையல் அறைக்கு போனாள்.

நாகராஜ் ஆச்சர்யமாக தன் தந்தையை பார்த்தான். பக்கத்தில் போய் நின்று மெல்லிய குரலில் ''அப்பா இது என்னப்பா இது? இது எத்தனை நாளைக்குப்பா நடக்கும்!'' என்றான்.

அவர் சிரித்தார். ''நடக்கும்பா, எல்லாம் நடக்கும் பேசாம இரு. முதியோர் இல்லம் எவ்வளவு பெரிய பாடத்தை கொடுத்திருக்குன்னு தெரியுமா உனக்கு? நீங்க இரண்டு பேரும் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக் குங்க அப்பா'' என்றார்.

தந்தையை பார்த்து சிரித்தான். ''அப்பா நீங்க என் னோட அப்பா. அவுங்க என்னோட அம்மா. அட்ஜஸ்ட் என்னப்பா பண்றது? அவளும் அட்ஜஸ்ட் பண்ணிக் குவா. வாங்க கவலையே படாதீங்க. அப்பா சூடான கிச்சடி வேற ரெடியா இருக்கு'' என்றான்.

போனான், போனவனை அப்பா கூப்பிட்டு ''கிச்சடி நல்லாத்தான் இருக்கு. இருந்தாலும் கொஞ்சம் ஒகோன்னு புகழ்ந்திரு. அப்பத்தான் நாளைக்கும் டிபன் கிடைக்கும்.

அம்மா செஞ்சா நல்லா செய்வாடா உனக்கு தெரியாதா கொஞ்சம் ஐஸ் வெச்சுக்கோ'' என்றார்.

மகன் சிரித்துக் கொண்டே அறைக்கு போவதை நிறைவாகப் பார்த்தார்.

நாச்சம்மா கனகாரியமாக தட்டுக்களை டேபிளில் கொண்டு வந்து வைப்பதையும் ஜக்கில் இருந்து டம் ளருக்கு தண்ணீர் ஊற்றுவதையும் பார்த்துக் கொண்டு இருந்தார்.

'இது இப்படியே போய்விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்று எண்ணிக் கொண்டார் காலம் அப்படி நினைக்க வேண்டுமே?

19



நாகராஜின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை மிகவும் ஆர்வத்துடன் பார்த்தான் பாலச்சந்தர்.

தன் வீட்டில் நடந்த அந்த மாற்றத்தை மிகவும் உற் சாகமாக விவரித்தான் நாகராஜ்.

''நம்பவே முடியலடா! அம்மா நேத்து டிபன் பண்ணி வச்சாங்க. மாமியாரும், மருமகளும் ரொம்ப ஒத்துமையா யிட்டாங்க. இரண்டு மூணு நாளாவே இது இன்னும் எத்தனை நாளைக்கு நடக்குமோன்னு ஒரு கவலை இருந்தது. ஆனா நேத்திக்கு எனக்குத் தோணுச்சு

அநேகமா இந்த மாற்றம் நிலையாத்தான் இருக்கும்னு'' என்றான்.

''அப்படியே நினை! அதுதான் நல்லது!'' என்றான் பாலச்சந்தர்.

''ஏன்.. சந்தர்! யாராவது ஒருத்தர் மொதோ அடி எடுத்து வச்சதுமே விஷயம் முடிஞ்சுருது இல்லே! முதல்ல ஈகோவை விட்டுக் குடுக்கறது யார்ங்கறதுதான் எல்லா வீட்லயும் உள்ள பிரச்னையே! பரவாயில்லை! எங்க வீட்ல என் வைஃப் முதல் அடி எடுத்து வச்சா..'' என்றான்.

மகிழ்வாக மேலும் சற்று நேரம் பேசி விட்டுத் தன் இருக்கைக்குப் போனான். உணவு இடைவேளையின் போது பாலச்சந்தரின் இருக்கைக்கு வந்து தன் வீட்டில் நடந்த மாற்றங்களை மகிழ்வாகப் பகிர்ந்து கொண்டான்.

பேச்சு வாக்கில் அவன் சொன்ன அந்த வாக்கியம் அவன் மனதில் மீண்டும் ஒலித்தது.

''முதல்ல ஈகோவை விட்டுக் கொடுக்கறது யார்ன்னுதான் பிரச்சினையே...'' என்ற வாக்கியம்தான் அது!

''உண்மைதான்!''

தன்னுடைய பிரச்சினையும் அதுதானோ ! பிரச்சினை தன்னிடத்தில்தானோ! விஷயங்களை ஒரு கட்டத்திற்குள் வைத்துக் கொண்டு அதுபடியே நடக்கவும் வேண்டும் என்று நினைத்தால் நடக்குமோ!

நேத்து முன்தினம் வீட்டில் நடந்த விஷயம் வேறு நினைவுக்கு வந்தது.

இரவு ஒன்பது மணியிருக்கும்

திடீரென்று அண்ணன் சௌந்தரராஜனும் மன்னியும் வந்திறங்கினார்கள்.

''என்னடா அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்னயே ! அதுதான் கிளம்பினோம். அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்னவுடனே உன்னோட மன்னி ''கிளம்புங்கோ ! நாம போலாம் அவா ரெண்டு பேரும் வேலைக்குப் போறவா ! கஷ்டப்படுவா ! உங்களுக்கும் லீவு நிறைய இருக்கே ! போட்டுட்டு வாங்கோன்னு ஒரே வற்புறுத்தல்'' என்றான்.

தம்பியை நேராகப் பார்த்தான் !

பாலச்சந்தருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அண்ணன் கிண்டல் செய்கிறானா சீரியஸாகப் பேசுகிறானா.. என்று தெரியவில்லை. அவனும் எதையும் காட்டிக் கொள்ளாமலேயே தொடர்ந்து பேசினான்.

''அடடா ! லேசான ஜுரம்தான் ! நீங்க வந்தது சந்தோஷம்தான். ஆனா, இங்க சந்தியாவோட பிரதர் வீட்டுல இருந்து டெய்லி வந்தர்றா தெரியுமோ?'' என்றான்.

''இருக்கட்டும்! நாங்களும் எங்க கடமையைச் செய்ய வேண்டாமோ! நான் பத்து நாள் டேரா போடறதா முடிவு பண்ணிட்டேன். மன்னி குழந்தைகளை அவா அம்மா ஆத்துல விட்டுட்டு வந்திருக்கா...!'' என்றான் சௌந்தர் ராஜன்.

மங்களா மன்னி அம்மாவை விழுந்து விழுந்து கவனிப்பதைப் பார்த்து அவனுக்குள் சிரிப்பு. ஆனால் வெளியே காட்டிக் கொள்ளவும் இல்லை.

சௌந்தரராஜன் மட்டும் அவனிடம் தனியாக ''அம் மாவையாடா கவனிக்கறா அம்மாவோட பத்து லட்ச ரூபாயைக் கவனிக்கறாடா..'' என்று கிசுகிசுத்தான்.

உண்மைதான் ! அந்தப் பத்து லட்ச ரூபாய் அம்மா வுக்கு புதிய அந்தஸ்தை தேடித்தான் தந்தது. இல்லா விட்டால் கல்யாணராமனும், நீரஜாவும் தினமும் போன் செய்து விசாரிப்பார்களா என்ன?

''ஓ.. ! மங்களாக்கா... வந்துருக்காளா? நானும் வரட் டுமா?'' என்று நீரஜா தினமும் பேசினாள்.

''இல்லல்ல.. நாங்கதான் இருக்கோமே . நீங்க வேற எதுக்கு? நாங்களே பாத்துப்போம்'' என்று மங்களா அவ சரமாக பதிலைச் சொன்னாள். அம்மா மட்டும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

அப்போதுதான் அவனுக்குள் தனது மனைவியைப் பற்றிய இன்னொரு விதமான நல்ல எண்ணமும் தோன் றியது.

தனது சகோதரரைப் பற்றி யோசனை செய்து கொண் டிருந்த அதே நேரத்தில் சௌந்தரராஜனும் தன்னைப் பற்றித்தான் யோசிக்கிறான் என்று அவனுக்குத் தெரிந் திருக்கவில்லை.

சௌந்தரராஜன் வந்ததில் இருந்து யோசனையில் ஆழ்ந்திருந்தான். ''ஏதோ மிஸ்ஸிங்'' என்று தோன்றியது.

தங்கள் ஊருக்கு வந்திருந்தபோது தம்பிக்கும் தம்பி மனைவிக்கும் இருந்த இணக்கத்தில் ஏதோ குறைந் திருக்கிறது என்று அவன் உள்ளுணர்வு சொல்லியது.

இத்தனைக்கும் தங்கள் முன்னால் அப்படியொன்றும் இழைந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் ஒரு சின்னப்

புன்னகையில், மற்றவர்கள் அறியாத ஒரு பார்வைப் பரிமாற்றத்தில் அன்பு பரிமாறிக் கொள்ளப் படுவதை அவன் கவனித்திருக்கிறான். இப்போது அந்த மாதிரி விஷயங்கள் அவர்களுக்கிடையே குறைந்திருக்கிறாற் போலத் தோன்றியது.

ஆசை அறுபது நாள் ! மோகம் முப்பது நாள் ! என்று சொல்வார்களே அப்படி இருக்குமோ.. ! சேச்சே ! அப்படியெல்லாம் கிறுக்குத் தனமாக நடந்து கொள்பவன் அல்ல தம்பி. வாழ்க்கை புரிந்தவன். மனப்பக்குவம் உள்ளவன்.

கொஞ்சம் தனிமை கிடைக்கிற நேரங்களில் கூட அவர்கள் பேசி கொள்வதைத் தவிர்க்கிற மாதிரியே தோன்றியது.

தங்கள் வீட்டுக்கு வந்த மூணு பெண்களிலும் வைத்து இந்த சந்தியாதான் நல்ல பக்குவம் வாய்ந்த பெண் என்று ஒரு நிறைவு அவனுக்கு இருந்தது. எதையோ சொல்லி தம்பி தன் வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்று தோன்றியது.

அதற்கேற்றாற் போல ஒரு விஷயம் முதல் நாள் நடந்தது.

மங்களாவும் சந்தியாவும் அமர்ந்து பூச்சரம் தொடுத்து கொண்டிருந்தார்கள்.

''ஃப்ரிட்ஜிலே வை ! மணிமாலா வந்தா கொஞ்சம் கொடுப்பியாம்'' என்று சொல்லிக் கொண்டே மங்களா எழுந்து ஏதோ காரியமாகப் போனாள்.

கையிலே பூப்பந்து எடுத்துக் கொண்டு சந்தியா நகர்ந்தாள்.

திடீரென்று எதிரே பாலச்சந்தர் வந்தான் !

சந்தியா கொஞ்சம் திடுக்கிட்டுப் போனாற் போலத் தெரிந்தது. பூப்பந்து கை நழுவிக் கீழே விழுந்து விட்டது.

இரண்டு பேரும் ஒரே சமயம் தலை குனிந்து பூப்பந்து எடுக்க முயற்சிப்பார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால் இரண்டு பேருமே ''நீ குனிகிறாயா இல்லையா? நீயே குனிந்து எடுத்துக் கொள்ளேன்'' என்பது போல நின் றார்கள்.

அது மட்டுமல்லாமல் பாலச்சந்தர் முகத்தை இறுக்க மாக வைத்துக் கொண்டு இடத்தை விட்டு நகர்ந்து விட்டான்.

அப்போது சௌந்தரராஜன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் பிறகு யோசித்துப் பார்த்த போது ஏதோ சரியில்லை என்று தோன்றியது. அதற்குப் பிறகு தொடர்ந்து கண்காணித்த போது அது உறுதிப் பட்டுவிட்டது.

எங்கே பிரச்சினை என்று யோசிக்க ஆரம்பித்தான். சட்டென்று பிடிப்பட்டது.

பட்டாபி தன்னிடம் போனில் பேசியதற்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறாற் போலத் தோன் றியது.

அதற்குப் பிறகு அவன் சும்மா இருக்கவில்லை.

* * *

ஆர்வத்துடன் கேட்பது இப்போது நாகராஜன் முறை யாக இருந்தது.

தன் மனத்துப் பிரச்சினைகளை நாகராஜிடம் சொல்ல லாம் என்று காலையிலேயே முடிவெடுத்துக் கொண் டான் பாலச்சந்தர்.

நாகராஜ் பிரச்சினையை அணுகுகிற விதத்தில் ஒரு பக்குவம் இருந்தாற் போலத் தோன்றியது. நல்லவன். யாரிடமும் தனது விஷயங்களை சொல்லமாட்டான் என்றும் தோன்றியது.

மாலை புறப்படுகிற நேரம் வந்தது. நாகராஜிடம் போய்,

''நாகராஜ் உனக்கு அவசரமாகப் போக வேண்டுமா? நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்'' என்று கேட்டான்.

''தாராளமா...! வா.. பேசலாம்..!'' என்றான் நாகராஜ்.

தன் மனத்துக் குழப்பங்களையெல்லாம் அவனிடம் கொட்டினான் பாலச்சந்தர்.

விவரமாகக் கேட்டுக் கொண்ட நாகராஜ் ''ம்..'' என்று இழுத்தான்.

''அது சரி..! நான் இப்ப ஒரு கேள்வி கேக்கறேன் பதில் சொல்லு...!'' என்றான்.

''கேளு...!''

''நீ மனசில வச்சிருந்த இந்த ரெண்டு கண்டிஷன் களையும் பெரண்ணு வீட்டுக்காரங்ககிட்டே சொன் னியா?'' என்று.

''இல்லே... ! கண்டிஷனாச் சொல்லலே. இதுதான் என்னோட எண்ணம்கற மாதிரி சந்தியாகிட்டே ஜாடை மாடையாச் சொன்னேன்..'' என்றான்.

''ம்.. ! இப்ப உனக்கு என்ன பிரச்சினை? நீ எதிர் பார்த்த அளவுக்கு அந்த பொண்ணு நடந்துக்கறதில் லையா?

''ஐயய்யோ...! அப்படியெல்லாம் இல்லே..! சந்தியா அவ அளவுக்கு ரொம்ப நல்லாத்தான் நடந்துக்கறா..! ஆனா.. எனக்குத்தான் நான் என்னமோ ஏமாத்தப் பட்ட மாதிரி இருக்கு!'' என்றான்.

நாகராஜ் தீவிரமான குரலில் சொன்னான்.

''சந்தர்! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே! நாம எதிர்பார்க்கற மாதிரியே எல்லாம். கிடைக்காது கிடைக்கறதுக்கேற்ப நம்ம எதிர்பார்ப்பை மாத்திக்க வேண்டியதுதான் அதிலயும் நீ சொல்றதெல்லாம் பார்க் கும்போது உன் நிலைமை ஒன்றும் ரொம்ப மோசமாத் தெரியலே..! நீயாத்தான் குழம்பிக்கறேன்னு தோணுது..'' என்றான்.

''அப்படியா... சொல்றே..!'' என்றான் பாலச்சந்தர் உள்ளடங்கிய குரலில்.

அதே சிந்தனையில் புறப்பட்டுப் போனான். வீட்டிற் குப் போனால் அங்கேயும் அவனுக்குள் கேள்விக் கனைகள் காத்திருந்தன.

சௌந்தரராஜன் மிகவும் சீரியஸான முகத்தோடு அமர்ந்திருந்தான்.

''அண்ணா..! காபி சாப்பிட்டாச்சா?'' என்று உற்சாக மானவன் போலக் கேட்டான்.

''ம்... ம்.. எல்லாம் ஆச்சு... நீ காபி சாப்பிட்டுட்டு வா..! நாம கொஞ்சம் வெளியே போலாம்.. ! உன் கிட்டே பேசணும்...!'' என்றார்.

பாலச்சந்தர் ஒரு நிமிடம் விழித்தான். ஆனால் பத்து நிமிசத்தில் உடை மாற்றிக்கொண்டு வந்தான்.

பக்கத்தில் இருந்த பார்க்குக்குப் போனார்கள்.

''பாலு.. ! உனக்கும் உன் வைஃப்புக்கும் நடுவில என்னதான் நடக்குது?'' என்றான்.

''ம்.. ! என்ன நடக்கும்? எல்லாம் யூஷுவலாப் போயிட் டிருக்கு...!'' என்றான்.

''வேண்டாம்டா.. பாலு! மழுப்பாதே! நேக்குத் தெரி யும்! நீங்க நம்மாத்துக்கு வந்திருக்கப்பவும் பார்த்திருக் கேன். இப்பவும் பார்க்கறேன். ஏதோ சரியில்லைன்னு தோணறது'' என்றார்.

அதற்கு மேல் பாலச்சந்தரால் மழுப்ப முடியவில்லை. சற்று நேரம் முகத்தைத் தொங்கப் போட்டாற் போல அமர்ந்திருந்தான். பிறகு சொன்னான்.

'' எல்லாம்.. அந்தப் பட்டாபி மேட்டர்தான். நீதானே அண்ணா... ஆரம்பிச்சு வச்சே...!'' என்றான் மனத்தாங்க லுடன்.

''அப்படிப் போடு...!'' என்றான் சௌந்தரராஜன். பிறகு ஒரு பெருமூச்சு விட்டு ''நினைச்சேன்... கதை இப்படித்தான் போகும்னு...'' என்றார்.

''ஆமா... நீ கிளப்பி விட்டுட்டே.. அதுக்கப்புறம் சும்மா இருக்க முடியுமா? நான் கிண்டிக் கிளற ஆரம் பிச்சேன். அது எங்க போய் முடிஞ்சுது தெரியுமா?''

''எங்க போய் முடிஞ்சுது?'' என்றான்.

பாலச்சந்தர் சொன்னான்.

''ம்..'' என்று சிந்தனையுடன் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டான் சௌந்தரராஜன் பிறகு சொன்னார்.

''ம்..! இருக்கட்டும் ! அதைப் பற்றிப் பேசினியா?''

''என்னத்தைப் பேசறது? நேக்கென்னவோ நம்மளையெல்லாம் முட்டாள் பண்ணி பெரிய நாமம் சாத்திவிட்டா... அவா..ன்னு தோணறது.''

''ஏண்டா.. அப்படி நினைக்கறே ! பேசிட்டுத்தானே முடிவு பண்ணனும்? அதுக்குள்ள நீயா எப்படி முடிவுக்கு வரலாம்? என்ன ஏதுன்னு சொல்லாம கோபம் காமிச்சா? அந்தப் பொண்ணு அதைப் பற்றி எதுவும் கேட்கலையா?''

''கேட்டா?''

''என்ன சொன்னே!''

''நேக்குக் கோபம்கறது உண்மைதான். ஆனா அதுக்கான காரணத்தையும் நீயே கண்டுபிடின்னேன்.''

''இது நல்ல ஜோர்டா ! காரணத்தையும் அவளே கண்டு பிடிக்கணுமா? கண்ணைக் கட்டிக் காட்டவிட்ட மாதிரி..! பாத்த வரைக்கும்... நல்ல பொண்ணா இருக்கா? பர்ஃபெக்ஷன் ஐடியலாஜின்னு வச்சுண்டு வாழ்க்கையைக் கெடுத்துக்காதே..'' என்றார்.

பாலச்சந்தர் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''என்ன பேசறீயா?'' என்றான்.

''ம்.. பார்க்கறேன்...'' என்றான் பாலச்சந்தர். பாலச்சந்தர் பார்க்கமாட்டான் என்று தோன்றியது.

இருவரும் வீட்டிற்குத் திரும்பும் போது மௌனமாகவே வந்தார்கள்.

தங்கள் தெருவில் நுழைகிறநேரம் சௌந்தரராஜன் சொன்னான்.

''இல்லேன்னா.. ஒண்ணு செய் ! நேக்கும் பர்மிஷன் குடு.. நான் டீல் பண்றேன்..!''

பாலச்சந்தர் லேசாகப் பதை பதைத்தாற் போலப் பார்த்தான்.

''எதுக்குண்ணா.. பர்மிஷன் எல்லாம் கேக்கறே?''

''இல்லடா! என்ன இருந்தாலும் புருஷன் பொண்டாட்டி விவகாரமாச்சே... ! சட்டுன்னு- நுழைஞ்சுறப் படாதில்லே...!''

''இல்லல்ல! அப்படியெல்லாம் நினைக்கலே! நீ என்ன இருந்தாலும் என்னோட வெல்விஷராச்சே..! டீல் பண்ணு..! நேக்குத்தான் கோபம் இருக்கிறதாலே அவகிட்டே துணிஞ்சு பேச முடியலே! பேச்சு ஏதானும் தப்பாப் போயிருமோனு இருக்கு..!'' என்றான்.

''ஆமா..! பாத்துத்தான் பேசணும். ரொம்ப டெலிகேட்டான மேட்டர்..! முள் மேல சேலையைப் போட்ட மாதிரி பாத்து டீல் பண்ணனும்'' என்றார்.

''என்னமோ.. செய்..! என் வாழ்க்கையை உன்னண்டை ஒப்படைச்சுட்டேன்..'' என்றான் பாலசந்தர்.

தம்பியை பார்த்து சௌந்தரராஜன் புன்னகைத்தாலும் கொஞ்சம் உள்ளுர பயமாகத்தான் இருந்தது.

'உண்மைதான்..! தம்பி தன் வாழ்க்கையையே ஒப்படைக்கிறான். பார்த்துப் பத்திரமாகத்தான் கையாள வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான்.

20



''திடீரென்று திருவண்ணாமலைக்குப் போற!'' என்ன விசேஷம்?'' என்றான் பாலச்சந்தர்.

பொங்குகிற பாலின் மேல் கவனம் வைத்திருந்த சந்தியா ஆச்சரியத்துடன் திரும்பினாள். பாலச்சந்தர் முகத்தில் வழக்கமான புன்னகை இடம் பெற்றிருந்ததைப் பார்த்து அவளுக்குள் ஆச்சரியம்.

''இல்லே! பெரியப்பா ரொம்ப நாளா சொல்லிட்டிருப்பார். வருஷத்துக்கொருதரமாவது திருவண்ணாமலை போகணும் குழந்தே? போயே ரெண்டு மூணு வருஷமாயிடுத்துன்னு..! ரெண்டு நாளைக்கு முன்னாலே பேச்சு வாக்கிலே ''அம்மா கூட திருவண்ணாமலை போகணும்னு சொல்லிண்டிருந்தா அப்படீன்னேன், உடனே கார் ஏற்பாடு பண்ணிட்டார்.''

''பௌர்ணமிக்குத்தானே நிறையப் பேரு போறா..'' என்றான்.

''ஆமா.. ! கிரிவலம் வர்றவா.. நிறையப்பேரு பௌர்ணமிக்குத்தான் போவா.. ஆனா.. இப்பக் கொஞ்சம் கூட்டமில்லாம இருக்கும். நிம்மதியா தரிசனம் பண்ணப் போறோம்ன்னார்'' என்றார்.

ஒருவேளை அம்மாவுக்கு சௌகரியங்கள் குறைவாக இருக்கலாம்னு கணவர் நினைக்கிறாரோ என்று தோன்ற திரும்பி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''அதெல்லாம்.. கவலைப் படாதீர்கள்? பெரியப்பா எங்க போனாலும் பக்காவா அரேன்ஜ்மெண்ட்ஸ் பண்ணிடுவார். அதிலும் பொம்மனாட்டிகளெல்லாம் கூட வர்றான்னா.. ரொம்பக் கேர்ஃபுல்லா பாத்துப் பார்த்து செய்வார்'' என்றாள்.

''ம்.. !'' என்றான்.

அவள் பாலைக் காய்ச்சி காபியைக் கலந்து அவன் கையில் கொடுத்தாள். ஏனோ சமையலறையை விட்டு நகராமலே நின்று கொண்டிருந்தான். ஏதோ பேச நினைக்கிறான். ஆனா அதிலே தயக்கமும் தெரிந்தது.

பிறகு மெல்லத் தயங்கியபடி அவன் டைனிங் டேபிள் சேரில் போய் அமர்ந்தான்.

''நீயும் வந்து உட்காரேன்...!'' என்றான்.

அவளிடமும் ஏதோ தயக்கம் இருந்தது. ஆனா வந்து எதிரில் அமர்ந்தாள்.

''ஆபீஸ் பொறுப்பெல்லாம் மூணு நாளா உன் கிட்டயா கொடுத்திருக்கா?!'' என்றான்.

''ம்..!'' என்றாள். பிறகு அவனைப் பார்த்தாள்.

''மேஜர் டெஸிஷன் எல்லாம் பெரியப்பா வந்ததுக் கப்புறம்தான் எடுப்போம். இப்போ நான் மெயின் டெனன்ஸ் மட்டும்தான்'' என்றாள்.

என்னவோ தெரியவில்லை. பெரியப்பா குடும்பத்தினர் எல்லாரையும் அழைத்துக் கொண்டு திருவண்ணா

மலை செல்லத் திட்டம் போட்டார். அவளுடைய மாமி யாரையும் சேர்த்துக் கொண்டார்.

சௌந்தரராஜன் போய்ப் பத்து நாட்கள் ஆகி இருந்தது. அம்மா இப்போது கொஞ்சம் தேறி இருந்தார். அதனால் அவரும் உற்சாகமாகப் புறப்பட்டார்.

சந்தியாவுக்கு ஆபீஸ் முடிந்தவுடன் வீட்டுக்குத்தான் வந்தாக வேண்டிய நிலை. ஏனென்றால் அவளுடைய அம்மா, சகோதரன் இராமநாதன், மணிமாலா குழந்தை என்று எல்லாரையும் கிளப்பி விட்டார்.

அவளும் பாலச்சந்தரும் மட்டும்தான். அதனால் வீட்டுக்கு வந்தாக வேண்டிய நிலை. மிகுந்த தயக்கம் தான். ஏனென்றால் கணவனோடு தனியாக மூன்று நாட்கள் இருந்தாக வேண்டுமே என்றிருந்தது.

''திருவண்ணாமலையில அப்படியென்ன விசேஷம்!'' என்றான் பாலச்சந்தர்.

''பெரியப்பாவுக்கு ரொம்பப் பிடிச்ச இடம். நிறைய ஞானிகள் உலாத்தின பூமி அது. குகை நமச்சிவாயர். குரு நமச்சிவாயர் .ரமணர். விசிறி சாமியார்ன்னு திரு வண்ணாமலையில தங்கினவா நிறையப் பேரு, உலகத் துக்கு தெரிஞ்சவங்கனு இல்லாம நிறையப் பேரு சித்தர்கள் அங்கே உலாவறாளாம் ஞானத் தபோதனர் களை வாவென்று அழைக்கும் மலைன்னு பாட்டே இருக்காம். பெரியப்பா அடிக்கடி சொல்வார்'' என்றாள்.

''ம்ஹூம்..! நீயும் ஆன்மீகம் பக்தி நிறையப் படிப் பியோ? !'' என்றான்.

''ஆமா.. !'' என்றாள் உற்சாகமாக.

''நம்ம நாட்ல இருக்கற மாதிரி ஆன்மீக விஷயங்கள் இருக்க முடியாது. இத்தனை வறுமைக்கு இடையிலயும் நம்ம மக்கள்ட்டே ஒரு நம்பிக்கை இருக்குன்னா... அதுக்குக் காரணம் ஆன்மீகம்தான்'' என்றாள்.

பாலச்சந்தர் குபீரென்று சிரித்தான்.

''இல்லே! என்னத்துக்கு சிரிக்கறேள்!'' என்றாள் கொஞ்சம் மனத்தாங்கலுடன்.

அவன் உடனே அவசரமாகச் சொன்னான்.

''இல்லல்லே! நீ சொன்னதுக்கு சிரிக்கலே. ஆன்மீகம் என்னத்துக்குப் பயன்படறதோ இல்லையோ ஒரு முக் கியமான விஷயத்துக்கு நாகராஜ் வீட்ல பயன்பட் டிருக்கு.. அதை நினைச்சேன். சிரிப்பு வந்துடுத்து...'' என்றான்.

கிட்டத்தட்ட இரண்டு மாதத்திற்குப் பிறகு அவன் இயல்பாகப் பேசுவதில் அவளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. அந்த உற்சாகம் மனசில பொங்க.

''என்னவாம்?!'' என்றாள்.

''இதைக் கேளு! சந்தியா! நாகராஜோட அம்மா எப்ப வுமே போர்க்கொடி தூக்கிட்டிருப்பாளே... அவ நடுவிலே கொஞ்ச நாள் முதியோர் இல்லம் கூட போயிட்டாளே...! நான் சொன்னேனோ?'' என்றான்.

அவள் கையிலிருந்த டம்ளரைத் தடவியபடி மேஜையைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்.

''இல்லே! நீங்க சொல்லலே...! பூங்கொடி ஒரு நாள் வழியில பார்த்துச் சொன்னா?'' என்றாள்.

'இத்தனை நாள் நீங்க என்கிட்டே எங்கே சரியாகப் பேசினேள்?!' என்ற குற்றச் சாட்டு லேசாக தொனித்தது. அவன் கண்டு கொள்ளாதவன் போலத் தொடர்ந்தான்.

''சரி.. அதை விடு ! இப்ப நான் சொல்றதைக் கேளு! முதியோர் இல்லம் போயிட்டுத் திரும்பி வந்துட்டாளோ இல்லையோ! இப்ப மாமியாரும் மருமகளும் ரொம்ப இணக்கமாம்...!''

'' ஓஹோ... !'' என்றாள்.

''நாகராஜோட வைஃப் இல்லே ! தியான வகுப் புக்குப் போனாளாம். பேசற விதமே மாறியிருக்காம். மாமியாரம்மா போர்க்கொடி தூக்கினதும் இவா சரண்ட ராயிடறாளாம். எதிர்த்தாத்தானே சண்டை வலுக்கும். இப்போ அவன் அம்மாகிட்டேயும் நல்ல சேஞ்ஜ் தெரி யறதாம்'' என்றான்.

''நானும் கூட தியானம் செய்யறேன்'' என்றாள்.

''ம்.. ! அப்படியா!''

''ஆமா.. ! நீங்க எழுந்துக்கறதுக்கு முன்னாடியே முடிச் சுடுவேன்'' என்றாள்.

அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''அதனாலதான் ஆபீஸ் டென்ஷன் வீட்டு டென்ஷன் எல்லாத்தையும் தாங்க முடியறது?'' என்றாள்.

''ஆமா.. ! ஆனாலும் ரொம்பவே டென்ஷன் தாங் கிண்டுட்டே பாவம் ! எங்கயானும் வெளியே போயிட்டு வர்லாமா?'' என்றான்.

''எங்கே?''

''கோயிலுக்குப் போலாம் வா..!'' என்றான்.

புறப்பட்டார்கள்!

நடுவில் எதுவும் மனஸ்தாபம் இருந்தாற் போலவே காட்டிக் கொள்ளாமல் கணவன் கடந்த நாட்களைப் போல நடந்து கொண்டதில் அவளுக்கு ஒரே ஆச்சரியம்!

வாசலுக்கு வந்தவுடனே நின்ற பாலச்சந்தர் திரும்பி அவளிடம் ''ஏன்.. சந்தியா ! ஃபார் எ சேஞ்ஜ் உன்னோட வண்டியில போலாமா?'' என்றான்.

ஒரு நிமிடம் திகைத்துப் போன அவளே ''போலாமே...!'' என்றாள்.

போனார்கள்!

போகிற வழியில் சாதாரணமாகவே அமர்ந்து கொண்டு வந்தான்.

கோவிலிலும் பொதுப்படையாகவே பேசினார்கள். பிரகாரம் சுற்றி வந்த போது அவள் கொஞ்சம் அமைதி யாகவே வந்தாள்.

திடீரென்று அவன் மனதில் சிந்தனை ஓடியது வெளிப்படையாகவும் கேட்டான்.

''ஆமா ! இந்த தியானம், தியானம்கறே அதைப் பத்தி சொல்லேன்...'' என்றான்.

'' தியானம்கறது மனசை உள்நோக்கித் திருப்பறது. அதாவது உள்ளுலகப் பயணம். நாம எப்பவுமே வெளி யுலகம் கவலைகள், காசுபணம்னு இருக்கமே அதி லிருந்து கொஞ்சம் விலகறது..'' என்றாள்.

''அதனால என்ன நடக்கும்!''

''என்ன நடக்கும்னா.. எல்லாத்தையும் சாட்சியா இருந்து பார்க்கறோம்...'' என்றாள்.

''சாட்சியா இருந்து பார்க்கறதுன்னா..?''

''நம்ம மனசையே, நம்ம எண்ணங்களையே அவுட் சைடரா இருந்து பார்க்கறது. அப்படிப் பார்க்க பார்க்க நம்மளோட எண்ணங்களோட அளவு குறையும். டி.பி. எஸ்.ங்கறா அதாவது தாட் ஃபர் செகண்ட் எண்ணங்கள் நிறைய இருக்கும்போதுதான் நமக்கு எல்லாத்திலயும் ஒரு படபடப்பு, அகங்காரம்.. இந்த மாதிரி உணர்வுகள் ஏற்படுதாம். சாட்சியா இருந்து பார்க்கும்போது ஒரு நிதானம் வரும்..'' என்றாள்.

''அது சரி..! சாட்சியா உட்காந்துகிட்டா காரியம்லாம் யார் பாக்கறதாம்...?''

''அங்கதான் இருக்கு விஷயமே! சாட்சியா இருந்து பார்க்க ஆரம்பிச்சுட்டா... இன்னும் காரியங்களை நன்னாப் பண்ணுவோம். கோபம் வராது. இமோஷனல் அப்ரோச் இருக்காது..'' என்றாள்.

மனைவி சொல்வதிலும் ஏதோ விஷயம் இருக்கிறாற் போலத் தோன்றியது. 'கடந்த கால நாட்களில் தான் கோபம் காட்டிய போது கூட மனைவி நிதானமாக நடந்து கொண்டதற்கு தியானம் ஒரு காரணமாக இருக்குமோ?'

இதை சூழ்நிலையில் வேறு பெண்ணாக இருந்திருந்தால் அழுது, சோகமாக நடமாடி அல்லது சண்டை போட்டாவது பிரச்சினையைக் கிளப்பியிருப்பாளே ! ஆனால் இவள் பொறுமையாக அவளே சொன்னது போல ஏதோ வேடிக்கை பார்க்கிறவர்களைப் போலத் தானே நடந்து கொண்டாள். மெதுவாகத் தனது சந்தேகத்தை வெளியிட்டான்.

''அது சரி ! அப்படி இருந்து பழகிட்டா.. வாழ்க்கையில பிடிப்பு இல்லாமல் போயிராதா?'' என்றான்.

''இல்லே ! அப்பத்தான் காரண காரியம் புரிஞ்சு நடப் போமாம்! அதனாலே எல்லாமே நல்லபடியா இன்னும் பெட்டராக் கூட நடக்குமாம்..'' என்றாள்.

அவன் அமைதியாகக் கேட்டு கொண்டான். பிரகாரம் சுற்றிய பின் அமர்ந்தார்கள். அதே மயிலாப்பூர்க் கோவில்.

முன்பொருமுறை தேங்காய் உடைத்தபடி நிமிர்ந்த போது எதிரிலே சந்தியா வந்தாளே அந்த நினைவு வந்தது.

''அப்புறம்.. இந்தக் கோயிலைப் பற்றி எதுவும் விசேஷம் இல்லையா?'' என்றான்.

''நிறைய இருக்கே! இங்கே ஞானசம்பந்தர் பாடின பாட்டு ஒன்று இருக்கு தெரியுமா! அதுல மாசம் மாசம் பௌர்ணமி அன்னைக்கு நடக்கற விழாக்களைப் பற்றி சொல்லியிருக்கார்... தெரியுமா?''

''ஆமா! அந்தக் கதை கேள்விப்பட்டிருக்கேன். பூம்பாவைங்கற பெண்ணை சம்பந்தருக்குக் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும்கறதுக்காகவே வளர்த்தாரே அவங்க அப்பா! ஆனா.. அந்த பொண் பாம்பு கடிச்சு இறந்தர்றா. அவங்கப்பா... அந்தப் பொண்ணோட சாம்பலைப் பாதுகாத்து வச்சிருக்காரு. சம்பந்தர் வந்து பதிகம் பாடி அந்த பொண்ணை உயிர்ப்பிக்கறாரு. அந்தக் கதைதானே!'' என்றான்.

''ஆமா!'' அந்த பதிகத்துல ஒவ்வொரு பாடலும் ''போதியோ.. பூம்பாவாய்ன்னு முடியும்'' என்றாள் சந்தியா.

தொடர்ந்து சிந்தனையுடன் ''நம்ம பெரியவா.. நிறைய விஷயங்களை யோசிச்சு யோசிச்சுப் பண்ணி யிருக்கா தெரியுமா? பொதுவா பௌர்ணமி அன்னைக்கு மனவெழுச்சி அதிகமா இருக்கும். அந்த சமயங்கள்ல இறை சிந்தனையில் மனசு செல்லணும். அது மட்டு மில்லே தெய்வத்தோட சம்பந்தப் படுத்தி விழான்னு வச்சாத்தான் மக்கள் வெளியில வருவாங்க..! நம்ம விழாக்கள் நிறைய பௌர்ணமியில வரும் தெரியுமா?''

''ஆமா..! சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம்..னு அப்படின்னு மாசம் ஒரு ஃபங்ஷன்'' என்றாள்.

நேரம் போனதே தெரியவில்லை.

திரும்பி வரும்போது சாதுவாக வரவில்லை. பாலச் சந்தர். வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மனைவி யின் மேல் முழுமையாகச் சாய்ந்தான்.

சந்தியா கொஞ்சம் திணறித்தான் போனாள். கணவன் ஏதோ நோக்கத்தோடுதான் இப்படியெல்லாம் செய் கிறான் என்று தெரிந்தது.

பல நாட்களுக்குப் பிறகு தாங்கள் இருவர் மட்டுமே வீட்டில் இருக்கப் போகிறோம் என்பது வேறு அவ ளுக்குள் குறுகுறுப்பை ஏற்படுத்தியிருந்தது.

இப்படியெல்லாம் நடப்பதன் மூலமாக கணவன் வெள்ளைக் கொடி பிடிக்கிறானோ என்று தோன்றியது. எதுவாக இருந்தாலும் சரி.. அவரே சொல்லட்டும்' என்று எண்ணிக் கொண்டாள். 'ஆனால் பிரச்சினை அப்படியே இருக்கிறதே! அது பாட்டுக்கு இருக்கட்டும். நாம் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று சொன்னால்... என்ன செய்வதாம்?' என்று வேறு தோன்றியது.

'நெருடலாகத்தான் இருக்கும்..! வாழ்க்கைன்னா... அப்படித்தான் இருக்கும்!' என்று எண்ணிக் கொண்டாள்.

வீட்டுக்கு வந்தார்கள்!

வழியிலேயே ''டிபன் வாங்கிக்கலாம்... சந்தியா!'' என்று ஹோட்டலில் டிபன் வேறு வாங்கி கொண்டு வந்தான்.

வீட்டுக்கு வந்ததும் சந்தியா ஏனோ மௌனமாகவே நடமாடினாள்.

அளவாகவே பேசிக் கொண்டு சாப்பிட்டார்கள். ''ஆத்துலயே டிபன் செஞ்சிருக்கலாம்! பாருங்கோ.. ஆறிப் போயிருக்கு...'' என்றாள்.

''பரவால்லே! ஒரு நாள் இப்படி சாப்பிட்டா... என்ன ஆயிடப் போறது? ஆபீஸ்லயும் நோக்கு வேலை'' என் றான்.

''சரி..!'' என்று இழுத்தாற்போலச் சொல்லிவிட்டு அவன் படுக்கையறைக்குச் சென்றுவிட்டான்.

சந்தியா அதை அங்கே வைத்து, இதை இங்கே வைத்து என்று முடிந்த வரை நேரம் கடத்தி விட்டு அறைக்குப் போனாள்.

அவன் கையில் ஏதோ புத்தகத்தை வைத்துக் கொண்டு காத்திருந்தான். அவள் நைட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு திணற அவன் எழுந்து அவள் அருகில் வந்து நின்றான்.

''ஏன் சந்தியா! என்னென்னமோ தெரிஞ்சு வச்சிருக் கியே! இதை நேக்குச் சொல்லு!'' என்றான்.

''எதை?!'' என்றாள்.

''இல்லே ! ஒரு ஹஸ்பெண்ட் எப்படியெல்லாம் வைஃப்கிட்டே மன்னிப்பு கேட்கலாம்.. சொல்லு...!'' என்றான்.

அவள் திகைத்தாள். பிறகு சட்டென்று சிரித்தாள்.

''அதையும் நீங்களே கண்டுபிடிங்கோ!'' என்றாள்.

தன் மனைவி தன் பாடத்தைத் தனக்கே படிப்பதைக் கண்டு புன்னகைத்தபடி இன்னும் சற்று நெருங்கினான்.

''கண்டு பிடிக்கறேன்'' என்று முணுமுணுத்தான். சிரித்தான்.

21



''வா...வா..! ருக்மணி'' என்று உற்சாகமாக வரவேற்றார் நாச்சம்மாள்.

''வர்றேன்ப்பா... வர்றேன்...'' என்று புன்னகைத்தபடி வந்தார் ருக்மணி.

''வாங்க..'' என்று வரவேற்றார் அப்பா.

''ம்... இப்பத்தான் பார்க்கவே நல்லாருக்கு ! இருக்கறது ஒரே பையன். அவனை விட்டுட்டு எதுக்காக பிரிஞ்சு இருக்கிறது?'' என்று சொன்னார் ருக்மணி.

''அது அப்படித்தான்...!'' என்று இயல்பாக ஏற்றுக் கொண்டார் நாச்சம்மாள்.

''பையன் மேலே நமக்கும் அதிகாரம் இருக்கில்லே..!'' என்றார்.

''அதிகாரம் இருக்கோ.. இல்லியோ.. அன்பு இருக்கே'' என்றர் நாச்சம்மாள்.

''அது அப்படித்தான்'' என்றார் ருக்மணி.

''எல்லாம் மருமகளுக பண்ற வேலை'' என்றார் ருக்மணி.

நாச்சம்மாள் ''எல்லாப் பக்கமும் தப்பு இருக்கலாம். நாமதான் அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்'' என்றார்.

இந்தப் பேச்சுகளையெல்லாம் கண்டும் காணாதவர் போல கேட்டுக் கொண்டிருந்தார் அப்பா. அவருக்கு கவலையாகப் போய்விட்டது.

'என்னடா... இந்த அம்மா... வந்த வேலையைப் பார்த்துக்கிட்டுப் போகாம... பூதம் கிளப்பி கிட்டு இருக்கு. இப்பத்தான் எல்லாம் ஒருவழியா நல்லபடியா போயிட்டிருக்கு' என்று எண்ணிக் கொண்டார். உடனே இன்னொன்றும் தோன்றியது.

'பேச்சு இப்படியே நடக்கட்டும். நம்மாளு எப்படி ரியாக்ட் பண்றாங்கறதை வச்சுக்கிட்டு நாமளும் ஒரு முடிவுக்கு வரலாம் இல்லே' என்ற எண்ணமும் தோன்றியது.

''உனக்கு விஷயம் தெரியுமா? நானெல்லாம் எங்க வீட்ல ரொம்பக் கணக்காத்தான் வச்சுக்கறது. ரெண்டு மூணு சொத்து என் போல இருக்கற மாதிரி வச்சிருக்கேன். அதுக்காவாவது நம்மளைத் துரத்தமாட்டாங்க இல்லே..'' என்றார்.

''அது சரி...! வர்றவ நம்மை விட சொத்துக்காரியா இருந்தா... நம்ம ரெண்டு மூணு வீடு... ஒண்ணும் அவங்களுக்குப் பெரிய விஷயமா இருக்காதில்லே..'' என்றார் நாச்சம்மாள்.

''ஆஹா... மனைவி விவரமாப் பேசுகிறாளே'' என்று தோன்றியது. அப்படி யோசிக்கும் போதே நாச்சம்மாள் மேலும் தொடர்ந்தார்.

''இப்ப.. எங்க பூங்கொடிக்கே அவுங்கப்பா... இப்பவே ஒரு வீடு எழுதி வச்சிருக்காரு..'' அதுக்காக அவ அங்கே போயிடறாளா.. என்ன?'' என்றார்.

'அப்படிப் போடு...!' என்று மெச்சிக் கொண்டிருந்தார் மெய்யப்பன்.

வந்த உறவினருக்கு காபி போட்டுக் கொடுத்தார் நாச்சம்மாள்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அதையும் இதையும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''வா... ருக்மணி..! பேசிக்கிட்டே டிபன் பண்ணிடலாம்'' என்று எழுந்தார் நாச்சம்மாள்.

''டிபனா...! நீதான் செய்வியா? ஏன் மருமக வந்து பண்ண மாட்டாளா?'' என்றார் ருக்மணி.

''வந்து பண்ணுவா ! பாவம் பஸ் பிடிச்சு அலைஞ்சு வருதுங்க. ! அதான் நானே பண்ணிடறது. ஏதோ.. நம்மால முடிஞ்சது..'' என்றார் நாச்சம்மாள்.

''ஓஹோ..!'' என்று கேட்டுக் கொண்டாள் ருக்மணி. அப்போதைக்கு ஒன்றும் பேசவில்லை. ஆனால் சும்மா யிருக்கவுமில்லை.

ருக்மணி நாச்சம்மாளின் ஒன்று விட்ட சகோதரர் மனைவி. ஒரே பகுதியிலேயே வளர்ந்தவர்கள் என்பதால் இருவருக்குமிடையே சிநேகமும் உண்டு. ஆனால் நாச்சம்மாளுக்கும், ருக்மணிக்கும் அடிப்படையில் ஒரு விஷயத்தில் பெரிய வேற்றுமை உண்டு.

நாச்சம்மாள் எப்போதும் அடுத்த வீட்டு விஷயங் களை அலச மாட்டார். ஆனால் ருக்மணிக்கு அடுத்த வீட்டு விஷயங்களை பேசுவதில் அலாதி இன்பம். அதனால் ருக்மணிக்குப் பலவிதமான பட்டப் பெயர்கள் உண்டு.

''நியூஸ் பேப்பர்'' ''தண்டோராமாமி!'' என்று விதவித மான பெயர்கள். அதுபற்றியெல்லாம் ருக்மணிக்கு கவலையும் இல்லை.

எப்படியும் எல்லா உறவினர்கள் வீட்டுக்கும் இரண்டு மாதத்துக்கு ஒருமுறையாது ''விசிட்'' அடித்து விடுவார். யாரும் ருக்மணியைப் பகைத்துக் கொள்ளவும் மாட் டார்கள்.

''ஐயோ.. ! ருக்கு வந்தா.. நல்லதனமாப் பேசி.. காபி டிபன்னு குடுத்து அனுப்பிடணும். இல்லே. நம்ம வீட்ல நடக்கறது நடக்காதது எல்லாத்தையும் கலந்து கட்டி கதை பண்ணிடுவா.. ஈரைப் பேனாக்கி பேனைப் பெரு மாளாக்கிடுவாப்பா..'' என்று எல்லா உறவினர்களும் பயந்து கொள்வார்கள்.

இத்தனை பிரச்சினைகள் இருந்த போதும் ருக்மணி எப்படியோ தன் மருமகள்களைக் கட்டுப்பாட்டில்தான் வைத்திருந்தார். நாச்சம்மாளின் முந்தைய நடத்தைக்கு ருக்மணி போன்றவர்களின் தூபதீபங்களும் கூட ஒரு காரணமாக அமைந்தன.

இன்றைக்குப் பூங்கொடியும், நாகராஜும் ஐந்து மணிக்கே வந்து சேர்ந்தார்கள்.

''வா.. வா.. பூங்கொடி....'' என்று உற்சாகமாக வரவேற்றார் ருக்மணி.

''வாங்கம்மா... எப்ப வந்தீங்க?'' என்று பூங்கொடியும் உற்சாகமாகத்தான் வரவேற்றாள்.

''பரவால்லே.... ! கெட்டிக்காரிதான். மாமியாருக்கு... நல்லாத்தான் டிரெயினிங் குடுத்து வச்சிருக்கே..! வாற துக்கு முன்னாடியே பயந்துகிட்டு டிபன் செஞ்சு வச் சுடறாளே'' என்றார் ருக்மணி.

இதை எதிர்பார்க்காத பூங்கொடி ஒரு நிமிடம் திகைத் தாள். அதற்குள் நாகராஜ் குறுக்கிட்டு,

''அப்படி ஏன் நினைக்கறீங்க அத்தை, பூங்கொடி அம்மாவை எதுவும் செய்ய வேண்டாம்னுதான் சொல்வா..! அம்மாதான் சும்மாவே இருந்தா உடம்புக்கு நல்ல தில்லேன்னு இழுத்துப் போட்டுகிட்டு செய்வாங்க! ரெண்டு பேரும் ஒத்துமையா இருக்கும்போது நாம ஏன் குறுக்கே பேசிக் கெடுக்கணும்னு நானும், அப்பாவும் தலையிடறதில்லே'' என்றான்.

'நீயும் குறுக்கே புகுந்து பேசிக் கெடுக்காமல் போய்ச் சேரு' என்ற தொனி அதில் இருந்தாலும் ருக்மணி அதையெல்லாம் புரிந்து கொண்டதாகத் தெரிய வில்லை.

''சரி... வா! நம்ம ரூமுக்குப் போயிரலாம்'' என்று இழுத்துக் கொண்டு போனார் நாச்சம்மாள் அங்கே போனதற்குப் பிறகும் ருக்மணி சும்மாயிருக்கவில்லை.

''ஏன்... நாச்சம்மாள்..! உன் மகனுக்குக் கல்யாணம் ஆயி... ரெண்டு மூணு வருஷம் ஆச்சு இல்லே... ! என்ன... ஒரு பூச்சி... புழுவைக் காணோம்'' என்றார்.

பூங்கொடி கணவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவன் கவலை தோய்ந்த முகம் பார்த்து அவளுக்குள் பரிவு தோன்றியது.

''கவலைப் படாதீங்க! நான் அட்ஜஸ்ட் பண் ணிடறேன்'' என்று கண்களாலேயே அபயம் அளித்தாள்.

அதற்குப் பிறகுதான் நாகராஜின் முகத்தில் நிம்மதி தோன்றியது.

அதே நேரத்தில் நாச்சம்மாள் சொல்கிற பதிலும் அவர்கள் காதில் விழுந்தது.

''பொறக்கட்டும்..! மெதுவாப் பொறக்கட்டும்.. ! அவங்களுக்கென்ன வயசா ஆயிடுச்சு...'' என்று.

''அப்படி நினைக்காதே! சில பேரு இப்படித்தான் முதல்ல வேண்டாம் வேண்டாம்னு தள்ளி வக்கறாங்க. அப்புறம் வேணும் வேணும்கறப்ப கிடைக்கணுமே...'' என்றார் ருக்மணி.

மெய்யப்பனுக்குக் கடுமையான கோபம்! ''போம்மா எந்திரிச்சு!'' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளி விட வேண்டும் போல இருந்தது. ஆனால் நாகரீகம் என்று ஒன்று இருந்ததே. கோபத்தை மறைத்துக் கொண்டு.

''ஏம்மா...! எங்கயோ கோயிலுக்குப் போகணும்னு சொன்னியே...!'' என்று குரல் கொடுத்தார்.

ஒரு வழியாக ருக்மணி புரிந்து கொண்டாரோ என் னமோ.

''சரி.. நானும் கிளம்பறேன்...'' என்றார்.

நாச்சம்மாள் அதோடு பேசாமல் இருந்திருக்கலாம். வழியனுப்புகிறேன் பேர்வழி என்று காம்பவுண்டு கேட் வரை போனார். போனவர் சும்மாயிருக்கவில்லை.

தீவிரமான முகபாவத்தோடு இரண்டு பேரும் கையை அசைத்து அசைத்துப் பேசுவது ஒரு மௌனப் படம் போலத் தெரிந்தது.

டைனிங் டேபிளில் அமர்ந்து டிபனைக் கொறித்த பூங்கொடியும், நாகராஜும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''கிடக்குதுங்க ! பொழப்புக் கெட்டதுங்க ! நீ ஒண்ணும் கண்டுக்காதம்மா...!'' என்றார் மெய்யப்பன்.

''வரட்டும்... கேட்கறேன்...!'' என்று கறுவினார்.. ''இல்ல மாமா...! ஒண்ணும் கேட்காதீங்க.. ப்ளீஸ்'' என்றாள் பூங்கொடி.

''பின்னே... என்னம்மா... ஒரு குடும்பம் நல்லா இருந்தா இந்த மாதிரி லேடீஸ்க்குப் பிடிக்காதே... வந்துருவாங்க வேட்டு வைக்க..!'' என்றார் மனத்தாங்கலுடன்.

''அதான் மாமா.. சொல்றேன். இப்பத்தான் எல்லாம் சரியாயிட்டிருக்கு...! இதோட விட்டுடுவோம்...'' என்றாள்.

ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் கிட்டத்தட்ட கால்மணி நேரத்துக்கு மேல் நின்று பேசி விட்டு வந்த நாச்சம்மாள் அதைப் பற்றி ஒன்றுமே பேசவில்லை.

நிலைமையில் சங்கடத்தைத் தவிர்ப்பதற்காக நாகராஜும் பூங்கொடியும் தங்கள் அறைக்குப் போய்விட்டார்கள்.

மெய்யப்பன் எதையோ முணுமுணுப்பாகக் கேட்பதையும் நாச்சம்மாளும் ஏதோ முணுமுணுப்பாய் பதில் சொல்வதையும் அவர்கள் அறிந்தார்கள். ஆனால் எதையும் அறிந்தாற்போலக் காட்டிக் கொள்ளவில்லை.

அன்றிரவு !

முகம் வாடியிருந்த மனைவியை விதவிதமாகத் தேற்றினான் நாகராஜ்.

''விடு.. பூங்கொடி... ! அப்பா எல்லாம் மேனேஜ் பண்ணிப்பார்'' என்றான்.

''ஷ்சு'' என்று உச்சுக் கொட்டினாள் பூங்கொடி. ''இதுக்குத்தான் நான் முன்னமேயே சொன்னேன்'' என்றாள்.

''எதை !''

''குழந்தையைத் தள்ளிப் போட வேண்டாம்னு... ! பாருங்க... ! எங்க அம்மா வீட்ல கூட அம்மா... ஜாடை மாடையாக ஏதோ கேட்க ஆரம்பிச்சுட்டாங்க...'' என்றாள்.

நாகராஜ் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''ஓ..கே...! விடு..! முடிவை மாத்திக்கலாம்'' என்றான்.

பூங்கொடி மகிழ்ச்சியானாள்.

அடுத்த இரண்டு நாட்களில் அவளை மேலும் மகிழ்ச்சியாக்கக் கூடிய சம்பவமும் ஒன்று நடந்தது.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை !

அடுத்த காலனியில் இருந்த அம்மன் கோவிலுக்குப் போனாள்.

அதே காலனியில்தான் ருக்மணியும் குடியிருந்தார். 'அந்த அம்மா கண்ணில் படக்கூடாதே!' என்று நினைத்துக் கொண்டுதான் போயிருந்தாள். ஆனால் கண்ணில் பட்டாள்.

இவளைப் பார்த்தவுடன் ''என்ன பூங்கொடி! கோவிலுக்கு வந்தியா?'' என்று நேராக இவளை நோக்கி வரவும் பூங்கொடிக்கு வேறு வழி இல்லாமற் போயிட்டு.

''ஆமாங்கம்மா...!'' என்று பதில் சொன்னாள்.

''சாமி கும்பிட்டுட்டு வா! உன்கிட்டே பேசணும்'' என்று காத்திருக்கவும் பூங்கொடிக்கு இன்னும் கடுப்பாகப் போனது. ருக்மணி விடாமல் காத்துக் கொண்டிருந்தார். ''வா.. உட்காந்து பேசலாம்'' என்றார்.

அமர்ந்தார்கள்!

''பாரு... ! பூங்கொடி.. உங்க மாமியார் முதியோர் இல்லத்துக்குப் போயிட்டு வந்தாலும் வந்தா. நல்லா பயந்து போயிருக்கா...'' என்றார்.

பூங்கொடி 'இந்த அம்மாவிடம் விஷயங்களை வாங்க வேண்டுமே ஒழிய வெளியே விடக்கூடாது' என்பதில் தெளிவாக இருந்தாள்.

''ஏன் அப்படிக் சொல்றீங்க?'' என்றாள்.

''பின்னே? அவ காதுல விழுந்துடப் போகுதுன்னு என்னைக் கூட்டிட்டுப் போய் 'இத பாரு... இனிமே அவ மனசு நோகறாப் போல பேசாதேன்னு' ஒரே கெஞ்சல் தான்'' என்றார்.

பூங்கொடி அந்த அம்மாவிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்ப வரும்போது அவள் மனதுக்குள் நெருடல்!

'நம்ம அத்தை எதுக்காக இந்த அம்மாகிட்டே கெஞ்சணும்' என்று உள்ளுக்குள்ளே வருத்தம். ஆனால் வீட்டுக்கு வந்ததும் அதற்கு விடை கிடைத்தது.

வீட்டுக்குள் நுழைகிற சமயம் மாமனார் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஏன்.. நாச்சம்மா! நீயும் மருமககூடப் போயிருக்கலாம்... இல்லே அந்தக் காலனியிலதான் ருக்மணி இருக்கு..! நம்ம மருமககிட்டே ஏதாவது வாயைப் பிடுங்கப் போகுது..''

நாச்சம்மாள் அதற்கொரு பதிலைச் சொன்னார். ''பேசுவாளா? இனிமே பேசவே மாட்டா! அன்னைக்குக் காம்பவுண்ட் கிட்டே நின்று என்ன பேசினேன்னு நினைக்கறீங்க! இனிமேக் கொண்டு எங்க குடும்ப விஷயத்தில் தலையிடாதேன்னு புடிச்சு வாங்கு வாங்குன்னு வாங்கிட்டேன் இல்லே!'' என்றார்.

பூங்கொடிக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. உள்ளே மகிழ்ச்சியும் பொங்கியது.

ருக்மணி சொன்ன பொய் அவளுக்கு முக்கியமாகத் தெரியவில்லை. தன் மாமியாரிடம் தெரிந்த மாற்றம் தான் முக்கியமாகப் பட்டது.

மகிழ்ச்சியாக உள்ளே போனாள். அவள் வந்ததும் அவர்கள் பேச்சை நிறுத்திக் கொண்டதும் கூட அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

தன் மாமியார் தன்னை விட்டுக் கொடுக்காமல் நடந்து கொண்ட பக்குவம்தான் அவள் மனதில் மேலோங்கியது.

அன்றிரவு!

கணவனிடம் பகிர்ந்து கொண்டாள். ''அப்படியா.. ! பரவாயில்லையே !'' என்றவன் சிந்தனையுடன் மேலும் சொன்னான்.

''ருக்மணியத்தை மாதிரிப் பெண்கள் இந்த விஷயங்களை எவ்வளவு தூரம் புரிஞ்சு செய்யறாங்கன்னு தெரியலே! ஒரு சுவாரசியத்துக்காக எதையோ பேசிடறாங்க..! அது எவ்வளவு தூரம் குடும்பங்களை பாதிக்குதுன்னு.. அவங்களுக்கு புரியறதில்லே! பக்குவமில்லாத ஆட்கள்கிட்டே எதையோ பத்த வச்சுட்டாங்கன்னா.. அது புகைஞ்சு... விஷ்வ ரூபம் எடுத்து பெரிய அளவுக்கு பிரச்சினை பண்ணிடுதுன்னு பாவம் அவங்களுக்குப் புரியறதில்லே...'' என்றான்.

''ஆமாங்க! நல்ல வேளை! அத்தை தெளிஞ்சுட்டாங்க...''

''அம்மா... முந்தி பேசின பேச்சுக்கெல்லாம் இந்த மாதிரி ஆட்கள்தான் காரணமா இருந்திருக்கணும். அம்மா முதியோர் இல்லத்துல இருந்தப்ப புரிஞ்சுகிட்டிருப்பாங்க.. ஆஹா ஓஹோ.. நாங்கள்ளாம் இருக்கோமில்லனு ஏத்தி விட ஆளுங்க எல்லாம் என்ன பண்ணியிருப்பாங்க. சும்மா எப்பவாவது ஒரு தரம் போய்க் பார்த்துட்டு வந்திருப்பாங்க! நல்ல வேளை இப்பவாவது ஸ்டெடியா இருக்காங்களே..'' என்றான்.

''அது சரி.. அதுல ஒரு பாயிண்ட் நாம ஏத்துக்க வேண்டியதுதான் !''

''எந்த பாயிண்ட்?!''

''வாரிசுக்கான காலம் வந்தாச்சுங்கற அந்தப் பாயிண்ட்?

அவள் சிரித்தாள்.

'' ஓ...கே ! பாயிண்ட் நோட்டட்'' என்றான்.

22



கலகலவென்று சிரித்தார்கள் பாலச்சந்தரும், சந்தியாவும்.

வெளியூரில் இருந்தார்கள். கொச்சினுக்கு வந்திருந்தார்கள்.

''பேக் வாட்டர்ஸ்'' என்று குறிப்பிடப்படும் அந்த நீர்நிலைப் பகுதியில் படகில் போய் வந்தார்கள். அப்போது சந்தியா சொன்னாள்.

''ஏன்னா... கொஞ்ச நேரம் அமைதியா இந்தக் தண்ணியிலே டிராவல் பண்ணினா.... மனசு ரொம்ப அமைதியா ஆகும்...'' என்றாள்.

உண்மைதான். அமைதியான அந்தப் படகில் பயணத்தை அனுபவித்தார்கள். பெரிய பெரிய கப்பல்கள் பார்த்தார்கள்.

போய் இறங்கிய இடம் மிக அருமையான ஒரு தீவைப் போல இருந்தது. பல்வேறு மாதிரிகளில் இருந்த அந்த வீடுகளை ரசித்துப் பார்த்தார்கள்.

பூங்காவில் அமைதியாக அமர்ந்தார்கள். பாலச்சந்தர் குபீரென்று சிரித்தான்.

''கெட்டிக்காரிதான் நீ... ! என்றான்.

''என்னவாம்..?!'' என்றாள்.

''இல்லே ! பிரச்சினையையே நான் சொல்லலே... கோபிச்சுண்டுட்டேன். அலட்டிக்கவே இல்லையே?!'' என்றான்.

''நான்தான் பிரச்சினையைக் கண்டு பிடிச்சுட் டேனே...'' என்றாள். அவன் ஆழ்ந்த குரலில் சொன் னான்.

''இல்ல.. சந்தியா ! நீ பிரச்சினையைக் கண்டுபிடிக் கலே..'' என்றான்.

''பட்டாபி அங்கிள் மேட்டர்லதானே உங்களுக்குக் கோபம்?'' என்றாள்.

''அது உண்மைதான் ! அது கோபம்தான் ஆனா.. பிரச்சினை வேற...'' என்றான்.

சொல்லும் போதே தன் சகோதரன் தன்னிடம் பேசி யது நினைவுக்கு வந்தது.

* * *

''என்னடா... உன்னோட பிரச்சினை'' என்றான் சௌந்தர ராஜன்.

''நான் நினைச்சது எதுவும் நடக்கலே?'' என்றான் பாலச்சந்தர் ஆழ்ந்த வருத்தத்தோடு.

''நீ என்ன நினைச்சேனு யார்கிட்டயாவது சொல்லி யிருக்கியா?'' என்றான்.

பாலச்சந்தர் திகைத்தான். உண்மைதான்..! தனக்கு என்ன வேண்டுமென்று தான் யாரிடமும் சொல்லவே யில்லையே? அப்புறம் எப்படி வருத்தப் பட முடியும்.

சௌந்தரராஜன் முகத்தில் ஆதரவான ஒரு புன்னகை மலர்ந்தது.

''சரி.. விடு... ! அப்படி நோக்கு என்னதான் வேணும்னு நினைப்பு?'' என்று கேட்டான்.

''அண்ணா...! மேரேஜ்ன்னு வர்றப்ப ரெண்டு விஷயம் நான் மனசுல வச்சிருந்தேன்!'' என்றான்.

''ம்... சொல்லு...!''

''இல்லண்ணா.. ! ஃபேமிலி லைஃப்ன்னு வந்ததுக்கப் புறம் நீயும், கல்யாணமும் படற பாட்டைப் பாத்து நான் நொந்து போயிட்டேன். அதனால நான் கல்யாணம்னு பண்ணும்போது ரெண்டு கண்டிஷன் மனசுல வச்சிருந் தேன்...'' என்றான்.

''ம்... !''

''முதல் கண்டிஷன் பொண்ணு வசதி குறைவான வீட்டுப் பொண்ணா... இருக்கணும். ரெண்டாவது அந்த பொண்ணு நம்ம அம்மாவைத் தன் தாயா ஏத்துண்டு பாத்துக்கறவளா... இருக்கணும்...'' என்றான்.

சௌந்தரராஜனின் முகம் கன்றியது. தம்பியின் வாழ்க்கையில் வீசிய அந்தப் புயலுக்குத் தானும் ஒரு காரணம் என்பது புரிந்ததால் ஏற்பட்ட வெட்க உணர்வு அவர் முகத்தில் தோன்றி மறைந்தது.

''சாரிண்ணா.. ஓப்பனாப் பேசுன்னு நீ சொல்றே. அத னால பேசறேன்...'' என்றான்.

''பரவாயில்லை... பரவாயில்லை... பேசு!'' என்றார்.

''அம்மா... இங்க பத்து நாள் அங்க பத்து நாள்ன்னு அலைஞ்சது நேக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு. இங்கயே இருன்னு சொன்னாலும் அம்மா கேட்க மாட்டேங்கறா... அப்பத்தான் சந்தியாவை நான் ஸ்டேஷன்ல பாத்தேன். அம்மா மேல அவ காட்டின அக்கறை நேக்கு ரொம்பப் பிடிச்சது....''

''ம்...!''

''அம்மாவும் அதைப் புரிஞ்சுண்டு ஸ்டெப் எடுத்தா. ஜாதகம் எல்லாம் வேற பொருந்தி வந்துச்சு.அதைக் காட்டிலும் அவ அம்மா வீடுன்னு அவ காட்டின வீடு நம்ம வசதிக்கேத்த மாதிரி இருந்தது. அதான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன்.''

''ம்..!''

''ஆனா.. கல்யாணத்துக்கப்புறம்.. திடீன்னு பட்டாபி அங்கிள் வந்து அம்மா பேர்ல பணம் போட்டப்ப கூட நேக்கு டவுட் வர்லே. ஆனா பட்டாபி அங்கிள்கிட்டே அவ்வளவு பணம் இல்லேன்னு சொன்னவுடனே நேக்குக் கொஞ்சம் கவலையாப் போச்சு..''

'' ஆமடா ! நேக்கும்தான் ஏன்னா... சின்ன அமௌன்ட் இல்லயே! பத்து லட்சம்கறது லேசான அமௌன்ட் இல்லையே! கண்டிப்பா அதோட ரிஷி மூலம் தெரியத் தானே வேணும்?'' என்றான்.

''ஆமாமா... ! அது தப்புன்னு நான் சொல்லலே.. அதுக்காகத்தான் கும்பகோணம் போனேன். போனா அவர் சொல்றார் அந்தப் பணத்தை ஏற்பாடு பண்ணினது சந்தியான்னு. ஷாக்காயிட்டேன். சாதாரண நடுத்தரக் குடும்பத்துப் பொண்ணுக்கு எப்படி அவ்வளவு பணம் ஏற்பாடு செய்ய முடியும்னு. அப்புறம் ஊருக்கு வந்த வுடனே இன்னொரு ஷாக் காத்துண்டு இருந்தது.''

''ம்...!''

அந்தக் காட்சியை சகோதரனிடம் விவரித்தான் பாலச் சந்தர்.

* * *

''வாங்கோ... வாங்கோ... மாப்பிள்ளை...'' என்று வரவேற்றார் சந்திரமௌலி.

இறுக்கமான புன்னகையுடன் தலையசைத்தான் பாலச்சந்தர்.

''உட்காருங்கோ...!'' என்று உபசரித்தார்.

அமர்ந்தான். காபிக்கு சொன்னார்.

''ம்... சொல்லுங்கோ!'' என்பது போல பாலச்சந்தரைப் பார்த்தார்.

பாலச்சந்தர் தொண்டையைச் செருமிக் கொண்டான்.

''மாமா! எந்த உறவும் நிலைக்கணும்ன்னா... அந்த உறவுகளுக்குப் பின்னாலே பொய்கள் இருக்கக் கூடாது..'' என்றான்.

சந்திரமௌலி அதிர்ந்து போய்ப் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில்.

''நல்லது! இப்போதைக்கு இந்த ஸ்டெட்மெண்டுக்கு என்ன அவசியம் வந்துச்சு?'' என்றார்.

''வந்துருச்சு... அதான் வந்தேன். சந்தியா இல்லாத நேரம் பாத்து'' என்றான்.

சந்திரமௌலி ஆழமாக, மௌனமாகப் பார்த்தார். அவனே தொடர்ந்தான்.

''மாமா ! பட்டாபி மாமாவுக்கு வந்த பத்து லட்சம் எப்படி வந்துச்சுன்னு கொஞ்சம் தெளிவாச் சொன் னேள்ன்னா பரவாயில்லே?!'' என்றான்.

அவன் முகம் தெளிந்தது.

''ஏம்பா.. ! நான்தான் கொடுத்தேன்!''

''பத்து லட்சத்தைத் தம்பி மகளுக்கு அப்படித் தூக்கிக் கொடுப்பேளா?'' என்றான்.

''என்ன இப்படிக் கேட்கறேள்...?''

''சும்மா... வா.. போன்னே பேசுங்கோ.''

''ஓ...கே... சந்தியா யார்னு தெரியுமோ...? நேக்குத் தத்துப் பொண். என்னோட சட்டப்படியான வாரிசு... !'' என்றார்.

அவன் மேலும் அதிர்ந்து போனான்.

''இது வேற இருக்கோ?'' என்றான்.

அவன் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியைப் பார்த்து அவரே கொஞ்சம் கலங்கித்தான் போனார்.

''ஏன்... நேக்கு முதல்லயே சொல்லலே!'' என்றான்.

அவர் காரணம் சொன்னார். உண்மையில் அந்தக் காரணம் அவன் மனத்தில் இனிமையாக இறங்கியிருக்க வேண்டும். ஆனால் இருந்த கோபத்தில் அந்த செய்தி இறங்கவில்லை. அது பெரிய தவறாகவே தோன்றியது.

''நிறைய மறைச்சுருக்கேள்?!'' என்றான்.

''இது பத்தின கேள்வியே வர்லையேப்பா... கேள்வி வந்து அதுக்கப்புறம் மறைச்சிருந்தா நீ சொல்றது நியாயம்!''

அவனால் பதில் பேச முடியவில்லை. தன்னுடைய முக்கியமான கண்டிஷன் சரிந்து போனது பற்றி இப் போது சகோதரனிடம் பகிர்ந்து கொண்டான்.

''அது சரி.. நீ அந்தப் பொண்ணைக் கோபிச்சுக்கற திலே எந்த நியாயமும் இல்லே. வசதி குறைவான பெண் தான் வேணும்னு நீ எங்களண்டையே சொல்ல லையே?'' என்றான்.

''ஆமா.. ! ஆனா.. அப்படியொரு ஐடியா நேக்கு மன சுல இருந்துச்சு. அதுசரி... எங்களுக்குள்ளே பிராப்ளம்னு நீ எப்படிக் கண்டுபிடிச்சே?''

''அது சரி... போ ! கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேணும். எங்காத்துக்கு வந்தப்போ உங்களுக்குள்ளே இருந்த அன்னியோன்னியம் குறைஞ்சுட்டா... மாதிரி நேக்கு ஒரு எண்ணம். அதனாலதான் உன் வைஃப் கிட்டே பேசினேன்.''

''அவகிட்டே பேசினியா?''

''ஆமா ! அதுக்குள்ளே அவ பட்டாபியைக் காண் டாக்ட் பண்ணிப் பேசியிருக்கா !''

''ஓ.... !''

''ஆமா ! நீ அவ ஆபீசுக்கு வந்துட்டுப் போனப்புறம் அவளோட பெரியப்பா பட்டாபியைக் கூப்பிட்டு பேசியிருப்பார் போல. ஏதோ ஒன்று ரெண்டு வார்த் தைகள் அவ காதுல விழுந்திருச்சு. பட்டாபிங்கற பேர்

காதில் விழுந்துருச்சு. அது மட்டுமில்லாம கும்ப கோணம் மாயவரம்னு நீ போயிட்டு வந்ததுக்கப்புறம் தானே உன் நடத்தையில மாறுதல் தெரிஞ்சுதாம். ரெண்டையும் முடிச்சுப் போட்டுப் பார்த்துட்டு அவ ஒரு முடிவுக்கு வந்திருக்கா.''

''ஓஹோ...!''

''பட்டாபி... நீ வந்து விசாரிச்சதை ஒத்துண்டிருக்கார். அப்புறம் நான் சொன்னேன். விசாரிக்கத் தானேம்மா... வேணும்? பத்து லட்சம்ங்கறது ஒரு ஈஸி அமௌன்ட் இல்லே! அது எங்கேயிருந்து அவருக்கு வந்ததுன்னு தெரியணுமோ இல்லியோ?'' ன்னேன்.''

''அதுக்கு அவ என்ன சொன்னா?''

''சொன்னா... ஒரு காரணம் சொன்னா?''

''என்னவாம்!'' என்றான் பாலச்சந்தர் ஆர்வத்துடன்.

சௌந்தரராஜனின் முகம் கன்றியது. ஒரு நிமிடம் சங் கடமான மௌனம் நிலவியது. பாலச்சந்தர் காத்திருந் தான். குரலைச் செருமிக் கொண்டு பேசினார் சௌந்தர ராஜன்.

''அத்திம்பேர் கோபிச்சுக்காதேள்! மங்களா அக்காவும் சரி, நீரஜா அக்காவும் சரி அடிக்கடி என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிண்டிருந்தா. ஆமா! நம்ம மாமியார் பொழச்சுப் பொழச்சு என்ன வச்சுண்டிருந்தா. ஒத்த வீடு வச்சுண்டிருக்கா. அதை என்னன்னு பிரிக்கிறது? பிரிச்சா... என்னத்தை கிடைக்கும். அஞ்சு லட்சம் பத்து லட்சம்ன்னு காஷாவாவது வச்சிருக்காளா அதுவும் இல்லேன்னு அடிக்கடி சொல்லுவா அம்மாவை நினைச்சா நேக்குக் கஷ்டமா இருந்துச்சு. ஆஃப்டர் ஆல் பத்து லட்ச

ரூபா பணம்தான் அம்மாவுக்கு மதிப்புத் தேடித் தரும்னா. அதை நாம ஏன் ஏற்பாடு செய்யக் கூடாதுன்னு தோணிச்சு...'' என்றாள்.

பாலச்சந்தர் அண்ணனின் சங்கடத்தையும் குற்ற உணர்ச்சியையும் புரிந்து கொண்டு குறுக்கிடாமல் கேட்டான். மிகக் கவனமாகத் தன் மனத்து உணர்வுகளை முகத்தில் காட்டாமல் மறைத்துக் கொண்டான்.

''அதான்... பெரியப்பா நேக்கு நிறைய நகை போட றேன்னார். நான் வேண்டாம்னுட்டேன். என் பேர்ல சின்ன வயசுல அவர் போட்டு வச்சிருந்த டெபாசிட் எல்லாம் மெச்சூர்ட் ஆகி பத்து லட்சம் வந்துச்சு. ஒரு எல்.ஐ.சி. பாலிஸியும் மெச்சூர் ஆச்சு. எல்லாத்தையும் சேர்த்து அம்மா பேர்ல போடலாம்னு யோசிச்சப்போ தான் பட்டாபி மாமா கண்ல பட்டார். அப்பாவுக்கு அவரை நன்னாத் தெரியும். அதான் பட்டாபி மாமா கொடுக்கற மாதிரி ஏற்பாடு பண்ணினோம். அப்படீங் கறா....'' என்றார்.

''ஓ...!''

''ஆமா.... ! ஆனா.. கொஞ்ச யோசனைக்கப்புறம் நான் சொன்னேன் சரிம்மா... எந்த நோக்கத்துல நீ செஞ் சிருந்தாலும் சரி... இனி அந்த ஏற்பாட்டை உடைச்சர் லாம்ன்னேன். ஏன் அத்திம்பேர்ங்கறா..''

''இல்லம்மா... ! இப்ப என் வைஃப்பும் கல்யாணோட வைஃப்பும் பணத்துக்காகத்தான் அம்மாவை விழுந்து விழுந்து உபசரிங்கறாங்கறது வெட்கக் கேடான விஷ யம்தான். ஆனா... அந்த உபசரிப்புக்கும் பின்னாடி எதிர்

பார்ப்பு இருக்கோ இல்லியோ... நாளைக்கு அவா... ஷேர் எதிர்பார்ப்பாளே...'' என்றார்.

தொடர்ந்து தனக்கும் தம்பி மனைவிக்கும் நடந்த பேச்சு வார்த்தையை விவரித்தார்.

''தெரியும்'' என்றாள் சந்தியா.

''அப்புறம்.. எப்படி டெபாசிட்டை ஷேர் பண்றது?''

''இருக்கட்டும் அத்திம்பேர் ! உங்களுக்கு ஒன்று தெரியுமோ? பெரியப்பா பெரிய அறக்கட்டளை ஒண்ணு பண்ணப் போறார். அதுக்கு மட்டும் ட்வென்ட்டி ஃபைவ் லாக்ஸ் ஒதுக்கியிருக்கார் தெரியுமோ, அப்படியிருக்கச்சே... ஃபாமிலிக்காக இது கூட செய்யக்கூடாதா.. என்ன? நம்ம ஃபாமிலியில இருக்கறவாளுக்குத் தானே அது பயன்படப் போகுது...''

''இருந்தாலும்...!''

''ப்ளீஸ்! அத்திம்பேர்! அம்மாவுக்கு இப்பக் கிடைச்சிருக்கிற இந்த அந்தஸ்து இப்படியே இருக்கட்டும் அதை எக்காரணம் கொண்டும் பறிக்காதேள்..''

''ஆனா... ஒரு விஷயம்மா!''

''சொல்லுங்கோ...!''

''கண்டிப்பா.. நீ பாலுவை சம்மதிக்க வைக்கணும். அவனுக்குத் தெரிவிக்கணும். அவன் சம்மதம் இல்லாம அவனைக் கலந்துக்காம இனிமே நீ எதுவும் செய்யப் படாது.''

''ஆகட்டும் அத்திம்பேர்...! நானே அவரண்டை எல்லா விஷயமும் சொல்லிடறேன். அவரோட சம்மதம் இல்லாம எதுவும் நடக்காது சரியா?''

தனக்கும், சந்தியாவுக்கும் நடந்த உரையாடலை அண்ணன் விளக்கமாகக் கூறியதை பாலச்சந்தர் இப்போது கூறி முடிக்க சந்தியா ஆர்வமாகக் கேட்டாள்.

''அத்திம்பேர்... அப்படியே ஒப்பிச்சுட்டார் போங்கோ..!'' என்று சிரித்தாள்.

''என்னோட சம்மதம் இல்லாம எதுவும் நடக்காதுன்னு சொன்னயாம். அப்படி என்னோட சம்மதம் கேட்டுத்தான் எல்லாம் நடக்கறதா'' என்று குறும்பாகச் சிரித்தான்.

தன்னை அவன் சீண்டுவது புரிய அவளும் குறும்பாகச் சிரித்தாள்.

''எல்லா விஷயத்துக்கும் நீங்க வாய் விட்டு சம்மதம் சொல்ல வேண்டியதில்லேன்னா.. ! சொல்லாமலே கூட உங்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு நேக்குத் தெரியும்'' என்றாள்.

''சமத்து...!'' என்று செல்லம் கொஞ்சினான் கணவன்.

''அதிருக்கட்டும்! நேக்கு வேற ஒண்ணு சொல்றேளா!''

''என்ன விஷயம்?''

''இல்லே ! திடீர்ன்னு மன்னிப்பெல்லாம் கேக்கறேன்னு ஆரம்பிச்சேன்? அது எப்படி?''

''அதுக்கும் சௌந்தர் அண்ணாதான் காரணம்!''

''ஓஹோ...!''

''ஆமா...! என்னை வாங்கு வாங்குன்னு வாங்கித் தள்ளிப்பிட்டார். ஏண்டா.. இப்படி குணவதியான பொண்ணு

கிடைச்சிருக்கப்ப தாங்கி வச்சுக்குவியா? வுட்டுட்டு டார்ச்சர் குடுக்கறே.. உன்னோட முதல் கண்டிஷன் அம்மாவை நன்னாப் பார்த்துக்கணும்கறதுதானே.. பாரேன். இந்த ரெண்டு மூணு நாளா.. குடும்பமே கொண்டாடி வச்சுக்கறா... இன்னும் என்ன வேணுமாம்ன்னார்...!

''ஆமாண்ணான்னு நானும் அசடு வழிஞ்சேன்.

''அதுதான் எப்பவும் வழியுமே?''

''ஆமாடி பொண்ணே ! இந்த அசடு வழியற பழக்கமே உன்னை ரயில்வே ஸ்டேஷன்ல பாத்ததுக்கப்புறம் வந்ததுதானே.''

''அது சரி... கதையெல்லாம் முடிஞ்சதா?''

''இப்போதைக்கு.. முடிஞ்சது...! ஆனா... இன்னும் இருக்கு..''

''இருக்கு...!'' என சிரித்தவன் மேலே அவளைப் பேசவிடவில்லை.

உண்மையிலேயே கதை முடியத்தான் இல்லை.

23



பாலச்சந்தர் வேலையில் முழுகியிருந்தான். கணக்கில் ஏதோ ஒரு பிரச்சினை. ஒரு லட்ச ரூபாய் உதைத்

தது. அதைக் கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பை அவனிடம் கொடுத்திருந்தார்கள்.

இந்த மாதிரிப் பிரச்சினைகள் ஏற்படும்போது அவன் தலையில் கட்டி விடுவார்கள். அவனும் மறுப்பதில்லை. தன்னால் முடியும் என்பதனாலேதான் கொடுக்கிறார்கள் என்று மகிழ்வாகவே ஏற்றுக் கொள்வான்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் போராடிக் கண்டுபிடித்தான். அக்கவுண்டன்ட்..... கண்டு பிடித்துக் கொடுத்து விட்ட மகிழ்ச்சியாக விசலடித்துக் கொண்டு தனது இருக்கைக்கு வந்தான்.

உணவு நேரம் நெருங்கி விட்டது. மனைவி அவனுக்குப் பிடித்த புளியோதரை செய்து கொடுத்திருந்தாள்.

தேனிலவு முடிந்து நான்கு நாட்களுக்கு முன்னேதான் வந்திருந்தார்கள். தான்தான் தேவையில்லாமல் குழம்பிக் கொண்டு விட்டோம் என்று அவனுக்குப் புரிந்து போயிருந்தது.

சந்தியா உண்மையிலேயே அற்புதமான பெண் என்று புரிந்திருந்தது. சிறு வயதிலேயே தந்தையை இழந்திருந்ததாலோ என்னவோ அவளும் சரி, இராமநாதனும் சரி மிகவும் பொறுப்புணர்வுடன் இருந்தார்கள்.

பெரியப்பா மிகவும் வற்புறுத்தித்தான் அதுவும் சிறு வயதிலேயே தத்தெடுத்துக் கொண்டிருந்தார் என்று புரிந்தது. ஆனால் அந்த செல்வம் பற்றிய உரிமையுணர்வோ, பெருமையுணர்வோ அவளுக்குள் இல்லை என்றும் புரிந்திருந்தது. எப்போதுமே அந்த செல்வம் தன்னுடைய நடையுடை பாவனைகளை பாதிக்காத

விதத்தில்தான். அவள் நடந்து கொண்டிருந்தாள் என் பதும் புரிந்தது. அதனால் அவன் கோபமெல்லாம் வடிந் திருந்தது.

இப்போது வீட்டில் அமைதியான சூழ்நிலை ஏற்பட் டிருந்தது. முன்னைப் போலவே அந்நியோன்யமாக இருக்க ஆரம்பித்திருந்தார்கள். அதனால் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு பாலச்சந்தர் இப்போது ஆதர வாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க ஆரம்பித்திருந் தான்.

புளியோதரையை ரசித்து உண்டு விட்டுத் தன் இருக்கைக்கு வந்தான். எப்போதும் அவனும் நாகராஜும் தான் ஒன்றாகச் சாப்பிடுவார்கள். இன்றைக்கு நாகராஜ் காலை நேரம் லீவு கேட்டிருந்தான். பிற்பகல்தான் வரு வானாம்.

தன் கையில் இருந்த துவாலை துடைத்தபடி இருக் கைக்கு வந்து ஒரு வினாடி கூட இருக்காது. நாகராஜ் வந்து சேர்ந்தான். முகத்தில் ஏனோ சந்தோஷம் பொங்கி வழிகிறாற் போல இருந்தது.

''பாலு...!'' என்றான் உற்சாகமாக.

''சொல்லுப்பா...!'' என்றான் பாலச்சந்தர்.

''அநேகமா... நமக்கு வாரிசு உருவாயிட்டாப்ல போல இருக்கு...'' என்றான்.

''ரியலி!'' என்று பாலச்சந்தரும் மகிழ்ச்சியானான்.

''ஆமா...! பூங்கொடி என்னமோ காலையில வாடி யிருந்தாப்ல! ஹாஸ்பிடல் போனோம். இன்னும் கன் ஃபர்ம் ஆகலே! ஆனா.. ஆயிடும்னு எதிர்பார்க்கிறோம்'' என்றான்.

''அதெல்லாம்... ஆயிடும்..'' என்று மகிழ்ச்சியோடு சொன்னான் பாலச்சந்தர்.

அதே சமயம் செல்போன் ஒலித்தது. எடுத்தான்.

அந்தப் புறம்... கேட்ட குரலில் ஆச்சரியமானான்.

போனை ஆஃப் செய்த போது முகத்தில் சிந்தனை தெரிந்தது.

''என்னப்பா!'' என்றான் நாகராஜ்.

''க்கும்! நீ காலையில லீவு! நான் இப்ப லீவு...!'' என்றான்.

* * *

''ஏன்... பாலு.. ! இந்த பொண்ணை என்ன பண்றது?'' என்றார் சந்திரமௌலி.

அவர் முகத்தில் கவலை மண்டியிருந்தது.

அவனுக்கு வந்த போன் சந்திரமௌலியிடம் இருந்து தான் வந்திருந்தது.

''பாலு ! உடனே வாப்பா. ! உன்கிட்ட கொஞ்சம் பேச ணும்!'' என்றார் சந்திரமௌலி.

அவர் குரலில் தெரிந்த கவலையும் பதட்டமும் கண்டுதான் அவன் விடுமுறை கேட்டு வந்திருந்தான்.

''ம்....!'' என்று இழுத்துக் கொண்டான் பாலச்சந்தர்.

தேனிலவு முடிந்து வந்தவுடனே சந்தியா பெரியப்பா விடம் பேசினாள்.

''பெரியப்பா.. ! என்னை இந்த பந்தத்திலிருந்து விடுவிச் சுருங்கோ...'' என்றாள்.

''எந்த பந்தத்திலிருந்து?'' என்றார் சந்திரமௌலி. அவரது புருவங்கள் சற்றே ஏறியிருந்தது.

''அதான் உங்க அடாப்டட் டாட்டர்ங்கற பந்தத்தி லிருந்து?''

அவர் முகம் வாடியது !

''ஏம்மா? இந்தக் கிழவனையும், கிழவியையும் பேரண்ட்ஸா ஏத்துக்க முடியலையா?'' என்றார் ஆழ்ந்த வருத்தத்துடன்.

அவள் ஆழ்ந்த வருத்தத்துடன் அவரைப் பார்த்தாள்.

''அப்படியில்ல... பெரியப்பா ! சட்டப்படி உங்கள் வாரிசாயிருந்து உங்க சொத்தை அனுபவிச்சாத்தான் நான் உங்க மகளா? நான் எப்பவும் உங்க மகள்தான். ஆனா... சொத்து மட்டும் வேண்டாம்... !'' என்றாள்.

''ஏன்?!''

அவள் ஒரு நிமிடம் மேஜை விளிம்பைப் பார்த்தபடி இருந்தாள். பிறகு சொன்னாள்.

''பெரியப்பா ! எங்காத்துக்காரர் தான் மேரேஜ் பண்ற பொண்ணுக்கு வசதியிருக்கக்கூடாதுன்னு ஒரு பாலிஸி வச்சிருந்தாராம். இப்ப நான் உங்களோட வாரிசுன்னு தெரிஞ்சதுக்கப்புறம் கொஞ்சம் அன்ஈஸியா ஃபீல் பண் றார். அதை அப்படியே விடப் படாதோன்னா.. ! நாளாக ஆக காம்ப்ளெக்ஸ் டெவலப் ஆயிடுத்துன்னா... என் வாழ்க்கைக்கே பிரச்சனை வந்துடுமான்னு நேக்கு பயமா இருக்கு...'' என்றாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லம்மா ! மாப்பிள்ளை யோட அண்ணன் சௌந்தரராஜன் என்கிட்டே பேசி னார். முதல்ல குழப்பம் இருந்ததாம். ஆனா இப்பத் தெளிவாயிடுச்சுங்கறாரே...'' என்றார் பெரியப்பா.

''இல்ல பெரியப்பா ! இந்த மாதிரி பிரச்சினை எல்லாம் எப்ப வெடிக்கும்னு சொல்லவே முடியாது'' என்றாள்.

சந்திரமௌலி ஒன்றும் பேசவில்லை. ''சரிம்மா... ! யோசிப்போம்!'' என்று அப்போதைக்கு அவள் வாயை அடைத்துவிட்டார்.

பிற்பகலில் ''ஆடிட்டர் ஆபீஸ்ல ஒரு முக்கியமான வேலையிருக்கு... போயிட்டு வாம்மா'' என்று அனுப்பி வைத்து விட்டுத்தான் பாலச்சந்தருக்கு போன் செய்தார்.

அவன் முகத்தில் சங்கடமான பாவம் நிலவியது பிறகு சொன்னான்.

''சரி... மாமா ! முதல்லே நேக்கு சந்தியா பேர்ல கொஞ்சம் கோபம் இருந்தது. அவள் சாதாரண குடும் பத்துப் பொண்ணா இருந்தா நன்னாயிருக்கும்னு நான் நினைச்சது உண்மைதான். ஆனா.. இப்போ.. சந்தியாவை நான் புரிஞ்சுண்டுட்டேன். அதனால.... திஸ்ஸ் இருக் கறபடியே போகட்டும். ஒன்றும் மாற்றம் வேண்டிய தில்லை...'' என்றான்.

''ஆனா... அவ கன்வின்ஸ் ஆகலையே!'' என்றார்.

''நான் பேசறேன்...!'' என்றான்.

சந்திரமௌலி உற்சாகமானார்.

''நிஜமாவாப்பா?'' என்றார்.

''ஆமா.. மாமா! கண்டிப்பா... பேசறேன்!''

''அப்ப இப்பவே வரச் சொல்லிட்டா?'' என்றார் உற் சாகமாக.

''வேண்டாம்.... நான் ஆத்துல வந்தாப் பேசிக்கறேன்'' என்றான்.

சந்திரமௌலி நிம்மதியானார். ஆனால் அந்தக் காரியம் அவன் சிந்தித்தாற்போல லகுவாக இருக்க வில்லை.

* * *

''சந்தியா ! நாம நாகராஜ் ஆத்துக்குப் போயிட்டு வர்லாம். கொஞ்சம் சீக்கிரமா வர்றீயா?'' என்றான் பாலச்சந்தர்.

''அதுக்கென்ன... போலாமே?'' என்றாள் சந்தியா. உற்சாகமாக.

தான் பிற்பகல் விடுமுறை எடுத்துக் கொண்டதை சந்தியாவிடம் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டான் பாலச்சந்தர்.

நாச்சம்மாளும், மெய்யப்பனும் மிகவும் அன்புடன் வரவேற்றார்கள்.

பூங்கொடியின் முகத்தில் கொஞ்சம் களைப்புத் தெரிந்தது. கூடவே நாணமும் கூட

அவள் முகத்தில் தெரிந்த மாற்றம் சந்தியாவின் மனதுக்குள்ளே ஆச்சரிய ரேகைகளைப் பதித்திருந்தது.

''வாழ்த்துக்கள்!'' என்றாள் உற்சாகமாக.

பூங்கொடியின் முகத்தில் வெட்கம் மின்னி மறைந்தது.

''அதுக்குள்ளே சொல்லிட்டார் ! இன்னும் கன்ஃபார்ம் ஆகலே ! நாற்பத்தஞ்சு நாள் போகணும்கறாங்க'' என்றாள்.

''அதெல்லாம் ஆயிடும்!'' என்றாள் சந்தியா.

''டாக்டருங்க... என்னத்தை சொல்றது?'' அனுபவ சாலிங்கிட்டே கேட்டோம். எல்லாரும் அப்படித்தான் சொல்றாங்க...'' என்றார் நாச்சம்மாள்.

பூங்கொடியை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் நகர விடாமல் மாமியார் தாங்குவதைப் பார்த்து சந்தியாவின் முகத்தில் சிரிப்பு.

கடந்த நாட்களில் நாகராஜின் வீட்டில் நடந்த குழப் பங்களையெல்லாம் பாலச்சந்தர் சந்தியாவிடம் வருத்தத் துடன் பகிர்ந்து கொண்டிருந்தான். அதனால் விஷ யங்கள் இவ்வளவு விரைவாக மாறிய விதம் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது.

நாச்சம்மாள் சந்தியாவிடம் திரும்பிச் சொன்னார்.

''இல்லம்மா.. ! முதல்ல ஒரு மூணு மாசம் ஜாக்கிர தையா இருக்கணும். அப்புறம்... பிரச்சினையில்லை'' என்றார்.

சந்தியா மையமாகத் தலையை அசைத்து வைத்தாள்.

தாங்கள் வாங்கி வந்திருந்த இனிப்பு பாக்கெட்டை நாச்சம்மாளிடம் நீட்ட அவர் புன்னகையுடன் ''மருமக கிட்டே குடும்மா..!'' என்றார் அவர்.

நாகராஜ் முகத்தில் ஒரு பெருமிதம், மகிழ்ச்சி. மொத் தத்தில் அந்த குடும்பத்தைப் பார்க்கப் பாந்தமாக இருந்தது.

''எங்களுக்கு ஸ்வீட் வாங்கிக் குடுக்கறது இருக்கட்டும் நீங்க எப்ப ஸ்வீட் நியூஸ் சொல்லப் போறீங்க?'' என் றான் நாகராஜ்.

''நீ சீனியர் ! நீயே இப்பத்தான்'' என்று அவன் முடிக்கு முன்பே நாகராஜ் குறுக்கிட்டான்.

''இந்த விஷயத்துல எங்களை ஃபாலோ பண்ணா தீங்க. ! சீக்கிரமா பிளான் பண்ணுங்க..'' என்றான்.

''ஆமா... சந்தியா ! இயர்லியர் தி பெட்டர் ! உங்களுக் குப் பிரச்சினையும் இல்லை. எல்லா பக்கமும் பெரிய வங்க நிறைய இருக்காங்க!குழந்தையை நல்லா வளர்த்துக் குடுத்துடுவாங்க. எங்களுக்கும் எங்க அத்தையும், மாமா வும் கைட் பண்ணிடுவாங்கன்னு ஒரு தைரியம்தான்'' என்றாள் பூங்கொடி.

''பின்னே ! அதை விட்டா வேற வேலை என்ன? அதுக் காகத்தானே காத்துகிட்டு இருக்கோம்'' என்றார் நாச்சம் மாள்.

மெய்யப்பன் கூடத் தலையிட்டு ''ஆமாப்பா ! குழந்தை பெத்துக்கறதை தள்ளிப் போடாதீங்க...'' என்றார்.

சந்தியாவும், பாலச்சந்தரும் வெட்கத்துடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சரி... டிபன் சாப்பிட்டுத்தான் போகணும்'' என்று நாச் சம்மாள் டிபன் செய்ய சாப்பிட்டுவிட்டுத்தான் கிளம்பி னார்கள்.

திரும்ப வரும் வழியில் ''ஏன், சந்தியா.. உங்காத்துக் குப் போயிட்டுப் போவோமா?'' என்றான்.

''ம்.. !'' என்றாள் உற்சாகமாக.

வீட்டில் நுழையுமுன்பே குழந்தை மீரா ஓடி வந்தாள்.

''ஹை... ! அத்தை ! மாமா !'' என்று தாவிக் கொண்டாள்.

பாலச்சந்தர் அள்ளித் தோளோடு தூக்கிக் கொண் டான். தன் கையில் இருந்த ஸ்வீட் பாக்கெட்டைக் கையிலே கொடுத்தான்.

''மாமா! அம்மாவும் அப்பாவும் இப்பத்தான் உங்களைப் பத்திப் பேசிண்டிருந்தா...'' என்றாள்.

''என்னண்ணா...! என்னமோ எங்களைப் பத்திப் பேசிண்டிருந்தேளாம்'' என்றாள்.

''ஆமா! சந்தியா வந்துட்டுப் போயி ரெண்டு மூணு நாளாயிருத்தேன்னு.. சொல்லிண்டிருந்தேன். அதுவு மில்லாம.. இப்பல்லாம் சந்தியா ஃப்ரீக்வன்ட்டா.. வர் றதேயில்லைன்னு சொல்லிண்டிருந்தேன்'' என்றார்.

''ஆமாண்ணா! ஆபீஸ் வொர்க் கொஞ்சம் அதிகம்'' என்றாள்.

உண்மையில் தனக்கும், தன் கணவனுக்கும் இடையே உறவுச் சுமுகம் குறைந்து போக காலகட்டத்தில் அதிக மாக வருவதைக் தவிர்த்திருந்தாள். ஏனென்றால் மணி மாலா அவளுக்குத் தோழியைப் போல. பேச்சுவாக்கில் தங்கள் நிலைமையைச் சொல்லிவிடக் கூடாதே என்று பயம். உறவு சுமுகமானதற்குப் பிறகு கணவனுக்காகத் காத்திருப்பதற்கும், அவனைக் கவனிப்பதற்குமே அவ ளுக்குப் பொழுது சரியாக இருந்தது. அதைச் சொல்ல முடியுமா, அதனால் ஆபீஸ் வொர்க் என்று சப்பைக் கட்டு கட்டினாள்.

''அத்தை! எங்க ஸ்கூல்ல சுரேஷ் இருக்கானோ இல் லியோ அவாத்துல தம்பிப் பாப்பா... பொறந்திருக்கு. நேக்கும் தம்பிப் பாப்பா... வேணும்'' என்றாள்.

எல்லாரும் சிரித்தார்கள்!

''மன்னி.. ! மீரா என்னமோ கேட்கறாளே!'' என்றாள் சந்தியா.

''போ... சந்தியா! ஒண்ணே போதும்!'' என்றாள் சந்தியா.

''இல்லல்லே! கண்டிப்பா... உடன்பொறப்புன்னு ஒன்று இருக்கணும் மன்னி! இருபது முப்பது வருஷத்துக்கு முன்னாடி... நிறைய பேர் ஒண்ணே போதும்னு முடிவு பண்ணினா. ஆனா, இப்ப ரொம்ப பேர் வருத்தப்படறா..'' என்றாள் சந்தியா.

''அதென்னமோ... நிஜம்தான்'' என்றார் இராமநாதன்.

சற்று நேரம் இருந்து விட்டுக் கிளம்பினார்கள். வீட்டுக்குப் போய்த் தனிமை கிடைத்த நேரத்தில் பாலச்சந்தர் மனைவியைப் பார்த்து குறும்புாகச் சிரித்தான்.

''என்ன சந்தியா... ! இன்னைக்கு எங்கே போனாலும் குழந்தை, குழந்தைன்னு ஒரே குழந்தை பத்தின பேச்சாவே இருந்துச்சு... இல்லே...!'' என்றான்.

''ஆமான்னா..!'' என்று அவளும் அவன் முகம் பார்த்து சிரித்தாள்.

''நமக்கு வேற எல்லாரும் அட்வைஸ்! என்ன பண்ணலாம்... சொல்லு...'' என்றான்.

''என்ன பண்றது! குழந்தை வேணும்னு கடவுள் கிட்டே வேண்டிக்க வேண்டியதுதான்..'' என்றாள் அவளும் குறும்புச் சிரிப்புடன்.

''ம்ஹூம்...! அப்படியா... அது மட்டும் போதுமா?'' என்று நெருங்கி நின்று சிரித்தான்.

அவளும் இயல்பான மகிழ்வுடன் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''சந்தியா!'' என்றான் ஆழ்ந்த குரலில்.

''ம்..!'' என்றாள்.

''நமக்கு எப்படி ஒரு குழந்தை வேணும்னு ஆசையிருக்கோ.. அது மாதிரி தன் தத்து மகள் தன் மகளாவே இருக்கணும்னு உங்க பெரியப்பா நினைக்கறதுல தப்பில்லையோன்னா...!'' என்றான்.

அவள் சந்தேகமும் அதிர்ச்சியுமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் கண்ணமர்த்திச் சிரித்தான்.

24



சந்திரமௌலி, இராமநாதன், மணிமாலா, பாலச்சந்தர் மற்றும் சந்தியா என ஒரு சிறிய சபை அங்கே கூடியிருந்தது.

இந்தக் கூட்டத்திற்குக் காரணம் பாலச்சந்தர். இதற்கு சந்தியாவை ஒப்புக் கொள்ள வைக்க அவன் பெரும்பாடு பட்டுப் போனான்.

''வேண்டாம்... ! எப்பப் பணக்காரப் பொண்ணு வேண்டாம்னு நினைச்சேளோ அப்ப அந்த பணம் நமக்கு வேண்டாம்!'' என்று ஒரே பிடியாய் நின்றாள்.

பாலச்சந்தர் புன்னகைத்தான்.

''ஒத்துக்கறேன்...''

''அதுதான் நல்லது...'' என்றாள் சந்தியா வெற்றிப் புன்னகையுடன்.

''எதை ஒத்துக்கறேன்னு... கேட்க மாட்டேயா?'' என்றான்.

''எதை?'' என்றாள் அவன் கேள்விக் குறியாக.

''நான் நினைச்சது தப்புங்கறதை ஒத்துக்கறேன்..'' என்றான்.

அவள் திகைத்தாள்.

''ஆமா.. சந்தியா ! பணக்காரப் பெண் குணக் கேடுள்ளவளா இருப்பான்னு நான் எப்படி நினைக்கலாம். அது தப்புத்தானே. அது மட்டுமில்ல சந்தியா.. நீ அப்படிப்பட்ட பெண்ணில்லைங்கறதை நிரூபிக்கவாவது நீ உன் பெரியப்பாவோட தத்து மகளாவே இருக் கணும்...'' என்றான்.

அவள் திகைப்பு மேலும் அதிகமாகியது. ஏழைப் பெண் குணவதியா இருந்துடுவான்னோ.. பணக்காரப் பெண் குணவதியா இருக்க மாட்டான்னோ.. நாம எப்படிச் சொல்றது?'' என்றான்.

''இன்னொரு காரணமும் இருக்கு...'' என்று அவனே தொடர்ந்தான்.

உங்க பெரியப்பாவும், பெரியம்மாவும் உன் மேல உயி ரையே வச்சுண்டிருக்கா... ! அவாகிட்டேயிருந்து உன்னைப் பிரிக்கறது எந்த விதத்திலயும் நியாயமில்லே...'' என்றான்.

அவள் சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு.

''தேங்க்ஸ்ன்னா...'' என்றாள் நெகிழ்ச்சி நிறைந்த குரலில்.

''எதுக்கு?''

''எதுக்கா? என் மேல நம்பிக்கை வச்சேளே.. அதுக்கு.''

''கரெக்ட்! உன் மேலே நேக்கு நம்பிக்கையிருக்குன்னு காட்டறதுக்காகவே நான் உங்க பெரியப்பாவண்டே சம்மதம் சொல்லிட்டேன்.''

அதற்குப் பிறகும் மனைவி சிந்தனை வசப்பட்டவளா கவே இருப்பதைக் கண்டு அவன் கேட்டான்.

''என்ன இந்த தலைக்குள்ளே என்னமோ ஓடிண்டே... இருக்கு?''

''ஆமான்னா.. ! நன்னா யோசிச்சுப் பாருங்கோ நான் மட்டுமே பெரியப்பாவண்டை சொத்தை வாங்கிண் டுட்டா நன்னா இருக்குமா? எங்கப்பா நேரங்காலம் பாத்து உதவி செஞ்சாருங்கறது உண்மைதான். அப் படின்னா அந்த உதவியினால கிடைத்த பலன்லே... எங்கண்ணாவுக்குப் பலன் இருக்கணுமோ இல்லியோ...'' என்றாள்.

''ஆமா... !'' என்றான் பாலச்சந்தர்.

''அது மட்டும் இல்லன்னா ! எங்க பெரியப்பாவுக்கும் பிரதர்ஸ் இருக்காக... ! ரெண்டு பேரு ! பெரியப்பாவும் கஷ்டப்பட்ட காலத்துல அவங்க ரெண்டு பேரும் கொஞ்சம் வசதியாத்தான் இருந்தார்கள். ஹெல்ப் பண்ணியிருக்கலாம். பண்ணலே.... ! அந்தக் கோபம் பெரியப்பாவுக்கு.''

''நியாயம்தானே!'' என்றான்.

''நியாயம்தான் ! ஆனா... இப்ப அவா கொஞ்சம் கஷ்டப் பட்டுண்டிருக்கா ! ரெண்டு பேராத்துலயும் ரெண்டு பொண்கள் கல்யாணத்துக்கு இருக்கா... நான் மட்டும்

சொத்தை வாங்கிண்டுட்டா.. அவா மனசுக்குள்ளே பாவம் வஞ்சுண்டிருப்பாளோன்னா!

''ஆமா.. !'' என்றான்.

சற்று நேர அமைதிக்குப் பிறகு ''அப்ப என்ன பண்ணலாம்னு... சொல்லு...!'' என்றான்.

''எல்லோருக்கும் நல்லது. நடக்கறமாதிரி என்னவாவது செய்ங்கோ.. !'' என்றாள்.

''தேங்க்ஸ்...!'' என்றான்.

''எதுக்கு?'' என்று அவள் விழித்தாள்.

''என்னை.. நம்பி.. பொறுப்பை ஒப்படைக்கறியே அதுக்கு?''

''இதென்னடா... வம்பாப் போச்சு...! உங்களை நம்பி என்னையே ஒப்படைச்சிருக்கேனாம்...!'' என்று சிரித்தாள்.

அப்போதைய பேச்சு நினைவுக்கு வர இப்போது சிரித்துக் கொண்டான் பாலச்சந்தர்.

''சொல்லுங்கோ.. மாப்பிளே... ! நீங்க பார்த்து என்ன முடிவு செய்தாலும் சரி'' என்றார் சந்திரமௌலி.

''சொல்றேன்...! எல்லாரும் ஒத்துக்கணும்'' என்றான்.

''எது வேண்ணா... சொல்லுங்கோ! ஒத்துக்கறேன் சந்தியா.. என்னோட தத்துப் பொண் இல்லேன்னு மட்டும் சொல்லீடாதீங்கோ...!'' என்றார் சந்திரமௌலி.

பாலச்சந்தர் சிரித்தான்.

''இல்லல்லே.... ! அதுல எந்த மாற்றமும் இல்லே!'' என்றான்.

'அப்பாடா!' என்பது போல் சந்திரமௌலியும் கோமதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அதைப் பார்த்து பாலச்சந்தரும், சந்தியாவும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்தார்கள்.

''சரி... வேறென்ன.. ஏற்பாடு... சொல்லுங்கோ?'' என்றார் சந்திரமௌலி.

''மாமா உங்க மொத்த சொத்தையும் மூணு பங்கா பிரிங்கோ...!'' என்று ஆரம்பித்தான்.

எல்லோரும் ஆர்வமாகக் கேட்க ஆரம்பித்தார்கள்.

''ம்...!'' என்றார் சந்திரமௌலி.

''உங்க பாகத்தை இராமநாதனுக்கு.. கொடுத்துடுங்கோ... மாமி பேர்ல உள்ள பாகத்தை அவா பிரதர்ஸ் ஆத்துக்குன்னு பிரிச்சுக் கொடுத்துடுங்கோ... அப்புறம் சந்தியா... பேர்ல இருக்கறது அவளுக்கே இருக்கட்டும்'' என்றான்.

சந்திரமௌலியும், கோமதியும் சற்று நேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கோமதியே வாய் திறந்தார்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் வேண்டாம் ! எங்கண்ணாக்கள் ரெண்டு பேரும் உதவி செய்தது மட்டுமில்லே... பரிகாசம் வேற செஞ்ச.. ! ஆமா.. ! இவரு பெரிய இன்டஸ்ட்ரியலிட்டா வரப் போறாராக்கும்.. ! ஏதாவது கடையில போய் வேலை செய்ய வேண்டியது தானேன்னு பேசினா... அப்படியிருக்கச்சே.. இவரோட உழைப்போட பலன் அவாளுக்குப் போறது நியாயமில்லே'' என்றார்.

சந்திரமௌலி ஒன்றும் பேசவில்லை. பாலச்சந்தர் குறுக்கிட்டான்.

''மாமி! அது அப்பத்த கதை! இப்ப அவா ரெண்டு பேராத்துலயும் கல்யாணத்துக்குப் பொண்கள் இருக்காளாமே! கல்யாணம் பண்ணிவைக்க வசதி இல்லாம திண்டாடறாளாமே!''

''அதென்னமோ... நிஜம்தான்!'' என்றார் சந்திர மௌலி.

''ரெண்டு பொண்கள் இப்படிக் கல்யாணத்துக்காகத் திண்டாடிண்டிருக்கச்சே.. நாம மட்டும் எப்படி எல்லாச் சொத்தையும் வாங்கிண்டு சந்தோஷமா இருக்கறதுங் கறா... சந்தியா... நியாயம்தானே...!'' என்றான் பாலச் சந்தர்.

சற்று நேரம் மௌனம் நிலவியது.

சந்திரமௌலி இராமநாதனிடம் ''ஏப்பா... நீ என்ன சொல்றே?'' என்றார்.

''பெரியப்பா ! நானும் மணிமாலாவும் பார்வையாளர் கள் மட்டும்தான். நீங்களும் சந்தியாவும் என்ன முடிவு செஞ்சாலும் சரி..'' என்றான்.

''ரொம்ப யோசனைக்கப்புறம் நாங்க ரெண்டு பேரும் அந்த முடிவுக்கு வந்தோம்'' என்றான் பாலச்சந்தர்.

சற்று நேர வாத விவாதங்களுக்குப் பிறகு பெரியப் பாவும், பெரியம்மாவும் ஏற்றுக் கொண்டார்கள்.

பேசுவதற்கு நேரம் கிடைத்த போது இராமநாதனிடம் பாலச்சந்தர் சொன்னான்.

''இராமநாதன்... ஒரு நாள் கூட தங்கைக்கு மட்டும் இப்படி ஒரு வாழ்க்கை கிடைச்சுதேன்னு நீங்க பொறாமைப் பட்டதில்லயாம். அந்தப் பரந்த மனசுக் காவது எங்கண்ணாவுக்கு பங்கு கிடைக்கணும்னு உங்க சிஸ்டர் என்னண்டை பெரிய அளவில் ரெகமண்டேஷன்.''

இராமநாதன் நெகிழ்ந்து போனான். எதுவுமே நடக்காதது போல சந்தியா இயல்பாக நடமாடிக் கொண்டிருப்பதை இருவரும் ஒரு நெகிழ்வுடன் பார்த்தார்கள்.

* * *

சந்தியா மும்முரமாக துணிமணிகளை பீரோவுக்குள் அடுக்கி வைப்பது போல் பாவனை செய்து கொண்டிருந்தாள்.

பாலச்சந்தர் ஒரு குறுகுறுப்புடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். கண்களில் குறும்பு மின்னியது.

அடுக்கி முடித்ததற்குப் பின் என்ன செய்வதென்று தெரியாமல் விழிப்பவள் போல் நின்றாள்.

அவன் கடகடவென்று சிரித்தான்.

''இனிமே செய்யறதுக்கு ஒண்ணுமில்லைன்னு நினைக்கறேன்'' என்றான்.

அவள் முகம் சிவக்க அவனைப் பார்த்தாள். ''இல்லன்னா. இன்னைக்கு ஒரு மாதிரியாப் பாத்துண்டிருக்கேள்...'' என்றாள்.

அவன் சிரித்தான். மெல்ல அருகில் இழுத்துக் கொண்டான்.

''இத்தனை நாள் இப்படிப் பார்க்கலியேன்னுதான் நீ வருத்தப்படணும்'' என்றான்.

அவள் அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள்.

''என்ன விசேஷம்?'' என்றாள்.

''என் வாழ்க்கையே இனிமே விசேஷம்தான். அதை நா இத்தனை நாளாப் புரிஞ்சுக்கலேங்கறதுதான் வருத்தம்...''

''போனாப் போறது போங்கோ...! எதுக்காக இப்படி வருத்தப்படறேள்?''

''போனாப் போறதுன்னு விடமுடியாதோன்னா...!'' என்றான் உண்மையான வருத்தத்துடன்.

அவள் குபீரென்று சிரித்தாள்.

''குழப்பம் இப்பவே வந்தது நல்லதாப் போச்சுன்னா குழப்பங்களை முதல்லயே தீத்துட்டோம்னா... அப்புறம் வாழ்க்கை முழுக்க சந்தோஷம்தானே...!'' என்றாள்.

''சமாதானம் சொல்றே...!'' என்றான் லேசான வருத்தத்துடன்.

அவள் மெல்ல அவன் தலையைத் தடவிக் கொடுத்தவள் சொன்னாள்.

''பாருங்கோன்னா... உங்களோட குழப்பத்துக்கும் பிரச்சினைக்கும் நீங்க மட்டுமே காரணம் இல்லன்னா...!'

அவன் நம்பாதவன் போல அவளைப் பார்த்தான். அவள் அன்பு நிறைந்த புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

''ஆமான்னா.. ! ஏற்கனவே உங்காத்துக்கு வந்தவாளால கொஞ்சம் சோகமான அனுபவங்கள்.அதனாலே நீங்க என்னையும் அதே ஸ்கேல்ல வச்சுப் பாத்துட்டேள்..'' என்றாள் ஆறுதல் போல.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''ஆமா...! அப்படித்தான் ஆகிப் போச்சு!'' என்றான்.

''சரி.. விடுங்கோ...'' அதையே நினைச்சுண்டு இந்த நிமிஷத்தை நாம ஏன் கெடுத்துக்கணும்?'' என்றாள்.

அவளும் அவன் தலையைக் கலைத்துவிட்டாள். பிறகு சிரித்தாள்.

''ஆமா... ! நீ ஏன் இப்படி வித்தியாசமா... இருக்கே?'' என்றான்.

''எப்படி?''

''பத்துப் பைசா கூட அடுத்தவங்களுக்கு குடுக்கா தேங்கேன்னு சொல்ற பொண்களைத்தான் பொதுவாப் பார்க்கறோம். நீயானா.. தியாகம் பண்றே!'' என்றான்.

''இல்லன்னா ! எவ்வளவு வசதியைத்தான் நாம ஒருத்தரே அனுபவிப்போம்? என்னத்தைக் கொண்டு போகப் போறோம். இருக்கற வரைக்கும் எல்லோர்க்கும் பங்கு போட்டுக் குடுக்கறதுல என்ன தப்பு?'' என்றாள்.

''அது உண்மைதான்!'' என்றான் அவனும் திடீரென்று நினைவு வந்தவன் போல ''சந்தியா...! மாமா என்னண்டே ஒன்று சொன்னார். அவரு இருக்கற வீடு.. மட்டும் நோக்குத்தானாம். ஏன்னா.. அது நீ வளர்ந்த வீடாம்.

அதுக்கு மட்டும் நாம எந்த மறுப்பும் சொல்லக் கூடாதாம். நானும் சரின்னுட்டேன்'' என்றான்.

அவள் சற்று நேரம மௌனமானாள். பிறகு கேட்டாள்.

''எப்படின்னா... திடீர்னு மாறினேள்?'' என்றாள்.

''வேற ஒண்ணுமில்லே ! உன் மேல நேக்கு நம்பிக்கை வந்துட்டா... மத்ததெல்லாம்.. ரெண்டாம் பட்சம்தான்..'' என்றான்.

''தாங்க்ஸ்...!'' என்று அவள் நெகிழ்ந்தாள்.

''பணமாக கொட்டி அபிஷேகம் செய்தாலும் உன்னோட அடிப்படை குணம் மாறாது. எளிமையாத்தான் இருப்பேன்னு நேக்குப் புரிஞ்சுப்போச்சு... வேற என்ன வேணும்?'' என்றான்.

அந்த மாதிரி ஒரு ஸ்டேட்மெண்ட்டுக்கு கொடுக்க வேண்டிய பரிசை அவள் கொடுத்தாள்.

''வாசமலர்த்தேன் பொண்ணே... நீ..!'' என்றான் அவன்.

அவள் வெட்கத்துடன் சிரித்தாள்.

''வர்ணனையாக்கும்?'' என்றாள்.

''ஆமா... ! அர்த்தமுள்ள வர்ணனையாக்கும் !''

''என்ன அர்த்தமாம்?''

''மலருக்குள்ள தேன் இருக்கு ! வாசம் வெளிப்படையாத் தெரியறது. ஆனா உள்ள இருக்கற தேன்ல இனிமை இருக்கோன்னா! அதப் புரிஞ்சுக்கலேன்னா... புரிஞ்சுக்காதவாதானே தப்பு செய்யறா... அது மாதிரித்தான்...'' என்றான்.

''இப்படியெல்லாம் கூட யோசிப்பேளா?'' என்றாள்.

''ஏன் யோசிக்க மாட்டேனாக்கும்?'' என்றான் அவன்.

அவள் மறுபடியும் சிரித்தாள்.

''வாசமலர்த்தேனே!'' என்று மறுபடியும் சொன்னவன் மேலும் சொன்னான்.

''அம்மாவுக்குப் பேரனோ... பேத்தியோ வேணுமாம். நமக்குக் கூட அடுத்த பிராஜக்ட் அதுதான்.''

''ஏன்னா. கொஞ்சம் இடைவெளி கொடுக்கலாமா?''

''ம்... ! ஆனா.. ரொம்ப வேண்டாம்!'' என்று இரு பொருளில் சொல்லி மறுபடியும் அருகில் இழுத்துக் கொண்டான். இழைந்து கொண்டே சொன்னான்.

''நாகராஜ் விஷயத்துலயும் சரி, என் விஷயத்துலயும் சரி... திடீர்த் திருப்பங்கள் தான். அம்மாவுக்காக நீ யோசிச்சு... டெபாசிட் ஏற்பாடு பண்ணினவுடனே நேக்குக் கொஞ்சம் சந்தோஷம். ஆனா... மறைச்சுட்டியேன்னு கோபம். அப்புறம் அண்ணா பேசினவுடனேதான் நோக்கு இருக்கற அக்கறை புரிஞ்சுது...''

''விடுங்கோ..! எதுக்கு... எல்லாத்தையும் மறுபடி மறுபடி அலசிட்டு இருக்கணும். இனிமே என்ன நல்லது செய்ய முடியும்னு.. பார்க்கலாம்!'' என்றாள்.

''ஆமா...!'' ஆரம்பிச்சுடுவோம்...!'' என்று சிரித்தான்.

அவள் செல்லமாக ஒரு குட்டு வைத்தாள்.

''வர வர குதர்க்கமா நிறையப் பேசறேள்?''

''நீ ஏன் அப்படி எடுத்துக்கறே?''

''அதானே!'' என்று அவனோடு சேர்ந்து சிரித்தாள்.

''இத பாருங்கோ! பெரியவா... எல்லாம் ''லிவ் இன் தி பிரசன்ட்ங்கறா...''

''அப்படிங்கறே? அப்ப நிகழ்காலத்துக்கு வருவோம்'' என்றான்.

வந்தார்கள். அதனாலேயே எதிர்காலம் அவர்களுக்காக பல நல்ல விஷயங்களை வைத்துக் கொண்டு காத்திருந்தது. நல்ல மனங்களுக்குக் கிடைக்க வேண்டிய எல்லா நன்மைகளும் இனிமேல் அவர்களுக்குக் கிடைக்கப் போகிறதல்லவா? நாமும் வாழ்த்துவோமா?